# புது வைரம்




புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



# மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# வைரவிழா மலர்

1955 60 2015

# M/PUTHUKKUDIYIRUPPU CENTRAL COLLEGE

## Diamond Jubilee

28.07.2015

தலைப்பு - புதுவைரம்

மலர்க்குழு - திரு. சி.சுப்பிரமணியேஸ்வரர் (அதிபர்)
திருமதி சி.இ. ரஞ்சித்குமார்
திருமதி ம. மங்களகுமரன்
திருமதி சா. யோகதாஸ்
திருமதி ம. சத்தியமூர்த்தி
திருமதி ஜ. சின்னராசா
திரு. க. சுதாகரன்
திரு.ப. இராகுலன்
திரு. வை. நவதரன்
திரு. சி. பீதாம்பரம் (உ.க.ப)
திரு. இ.செல்வநாயகம் (சிறி - அதிபர்)

ஆலோசகர்கள் - திரு. ச. நாகரத்தினம்
(ஓய்வுநிலை பி.க.ப)
திரு பொ. பேரின்பநாயகம்
(ஓய்வுநிலை பி.க.ப)

பதிப்புரிமை - மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
புதுக்குடியிருப்பு

பதிப்பு - 2015. 07. 28

பிரதிகள் - 500

வெளியிடுவோர் - மத்திய கல்லூரி மு/ புதுக்குடியிருப்பு

அச்சுப்பதிப்பு - எவகிறீன் பதிப்பகம்,
693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் - 300

## தூரநோக்கு

**மாற்றமடைந்து வரும் உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமை மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்**

## Vision

To build up a society with balanced personality to face the challenges of the changing world


## இலட்சிய நோக்கு

**நவீன கல்வியின் குறிக்கோளை அடையும் வகையில் கிடைக்கக் கூடிய அனைத்து வளங்களையும் வினைத்திறனுடையதாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்தி நேரான மனப்பாங்கு ஆக்கத்திறன் அறிவு சார் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் மாணவர் சமூகத்தை உருவாக்குவோம்.**

## Mission

To produce a students' society that builds up positive attitudes, creativity and knowledge economy in order to achieve the objectives in education utilizing all the available resources effectively and efficiently

## பாடசாலையின் தாபகரும் முதல் அதிபரும்



## அமரர் மு. நேசரத்தினம்

## 15-01-1955 தொடக்கம்


மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் இன்றைய அதிபர்



பிரதி அதிபர் கல்வி நிர்வாகம்



பிரதி அதிபர் கல்வி அபிவிருத்தி











# மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மரகதத் தூண்கள்



## பள்ளியின் தொடக்க காலத்தில் ஆசான்களாகச் சேர்ந்து
## அரும்பணியாற்றியோர் வரிசையில்.....



அமரர்
நா. மகாலிங்கசிவம்



அமரர்
கா. தம்பாபிள்ளை



**திருமதி வ.மகாலிங்கசிவம்**



திரு. க. சிதம்பரப்பிள்ளை



திரு. ச. சண்முகம்

# பாடசாலைக் கீதம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
புதுமையோடு இலங்கி வாழ்கவே
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
அன்புடன் போற்றி செல்வமேற்றிடும்
தங்கும் அரசின் முகமையை தழைத்து
பொங்குமார்வத்துடன் பிள்ளைகள் பயின்றிடும்
(புதுக்குடியிருப்பு)

கலைஞானம் மெஞ்ஞானம் விஞ்ஞானம் கற்போம்
விவசாயம் கைப்பணி விளையாட்டும் கற்போம்
தலைமைசேர் அதிபரை குரவரை மதிப்போம்
தலைமையின் காலத்துக் கௌரவம் காப்போம்
(புதுக்குடியிருப்பு)

அடவிசூழ் பதியதன் அணிவிளக்காமெனக்
களனி சூழ் வயல் களம் முத்தென விளங்கும்
அலை கடல் மணலிலும் அனேக காலம்
அரிய சேவைகளை ஆற்றிட வேண்டும்.
(புதுக்குடியிருப்பு)

# தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த
நில மடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ் பரத கண்டமதில்
தக்க சிறு பிறைநுதலும்
தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமு மதிற் சிறந்த
திராவிட நற்றிரு நாடும்
அத்திலக வாசனை போ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைதளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையாள முந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலக வழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுவோமே

மனோன்மணியம்
சுந்தரம்பிள்ளை

# மலரின் உள்ளே....


| | | |
|---|---|---|
| 01. | அதிபரின் இதயத்திலிருந்து | 01 – 03 |
| 02. | பாடசாலையின் வரலாற்றுக் கண்ணோட்டம் | 04 – 31 |
| 03. | மாணவர் ஊற்றுக்கள் | 32 – 80 |
| 04. | ஆசிரியர்களின் தேடல்கள் | 81 – 167 |
| 05. | பாடசாலையில் பயின்றோரின் சிந்தனையிலிருந்து | 168 – 230 |
| 06. | கடல்கடந்து வந்த கருத்தாடல்கள் | 231 – 256 |
| 07. | மாணவர் சாதனைகள் | 257 – 260 |
| 08. | நன்கொடைகள் | 261 |
| 09. | மாணவர் மன்றங்கள் | 262 – 263 |
| 10. | நன்றிப் பகிர்வு | 264 |




# வைரவிழா மலர்க் குழுவின் சிந்தனையிலிருந்து


மாணவர்களை எதிர்கால இயங்குதிறன் மிக்க மனிதர்களாக உருவாக்கும் பணியில் பாடசாலைகளின் பங்கு மகத்தானதாகும். வாழ்வதற்கான திறன்களையும் மானிட உயர் பண்புகளையும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் கலைக்கூடங்களாக திகழும் கல்லூரிகளின் வரலாறுகள் கல்விப் புலங்களில் என்றென்றும் நின்று நிலைபெறுவனவாகும். இவ் வகையில் முல்லையின் முத்தாகவும், புதுவையின் சொத்தாகவும் இலங்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இன்று கல்வி, கலை, விளையாட்டு போன்ற செயற்பாடுகளில் வரலாறு காணாத வெற்றிகளைப் பெற்று, சமூகத்துடன் இணைந்து கல்விமான்கள் பலரை உருவாக்கி, புதுப்பொலிவோடு தனது வைர விழா ஆண்டிற் காலடி பதித்து, புகழாரம் சூடி நிற்கின்றது.

காலதேவனின் சுழல் சக்கரத்தின் மாற்றம், எமது கல்லூரியை முதுமக்கள் தாழிக்குள் முடக்கிவிட முனைந்த போதிலும் , சர்வவியாபகச் சரித்திர வேர்கள் ஆழப்பதிந்ததால் சண்ட மாருதத்தைக் கடந்து, நிமிர்ந்து துளிர்விட்டு இன்று வீறுநடை போடுகின்றது. எமது ' புதுவைரம் ' நங்கை, பெரியோர்கள், புலம்பெயர் உறவுகள், பழைய மாணவர்களின் வாழ்த்துச் செய்திகளுடனும், துறைசார் வல்லுநர்களின் கனதியான கட்டுரைகளுடனும், ஆசிரியர்களின் தேடல் பொக்கிசங்களுடனும், மாணவர்களின் உள்ளார்ந்த சிந்தனைத்தூறல்களுடனும், கற்றல் பெறுபேறு, இணைபாடவிதான பதிவுகளுடனும் கல்லூரி முற்றத்திலே பவனி வருகின்றாள். தீவிர தேடலும், ஆழமான வாசிப்பும் மொழிக்கையாட்சியை செழுமைப்படுத்துகின்றன. கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றின் தனித்துவமான அடையாளங்களை உலகமயமாக்கல் சிதைக்கும் தருணத்தில் சுய அடையாளங்களைக் கட்டிக்காக்கும் தேவை வலுப்படுகின்றது. எனவே கல்விச் சமூகம் இத்தகைய சஞ்சிகைகளை உருவாக்கி தமது தனித்துவத்தை தக்கவைத்துக் கொள்ளல் காலத்தின் கடப்பாடாகும். சுயவிம்பங்களைச் சிதற விடாமலும், நவீன கருத்தியல்களை மறுதலிக்காமலும், மாணவ சமூகத்தை வழிப்படுத்த “புதுவைரம்” போன்ற மலர் வெளியீடுகள் பகைப்புலமாக அமையும் என்பது திண்ணம்.

இங்ஙனம் எம் கல்லூரி புதுவை மண்ணிலே காத்திரமான முறையில் தடம் பதித்து, கார்மழையாய்ப் பொழிந்து, நாடறியும் வித்தகர்களைப் பிரசவிக்க வேண்டும். கடந்த கால நினைவுகளைக் கரைபுரண்டோட வைத்து, நிகழ்காலத்தில் அவற்றை நிமிர வைத்து, எதிர்காலத்திற்கான சிந்தனைகளைத் தரும் எம் கல்லூரி வைரமாகி பட்டை தீட்டி புது மெருகுடன் அறிவொளி வீசிக் கொண்டிருக்கும் இந்நாளில் மென்மேலும் ஒளிவிட்டுப் பிரகாசித்து வருடந்தோறும் மலர வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

மலர்க்குழு

## மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 60வது ஆண்டின் நிறைவும் வைரவிழா மலர் வெளியீடும்.



## ஆசிச் செய்தி

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தனது அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவை வெகு விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் இவ் விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள வைர விழா மலரிற்கான ஆசிச்செய்தி ஒன்றை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

1955களில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் பதியப்பட்ட ஒரு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 1962ல் அரச பாடசாலையாக ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து இப்பாடசாலையும் உள்வாங்கப்பட்டது.

2005ம் ஆண்டில் கல்லூரித் தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட இப்பாடசாலை சுமார் 1500 மாணவர்களையும், (ஆண், பெண் இருபாலார்) 65 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு மத்திய கல்லூரியாக இன்று திகழ்கின்றது. இக்கல்லூரியின் பௌதீக வளங்கள் போதுமானதாக இல்லாத போதும், இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நிதி உதவியுடன் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிந்தேன். இது ஒரு முன்மாதிரியான செயற்பாடாகும். அரசாங்கத்தின் அனுசரணையை என்றென்றுங் காத்திராமல் எமது கல்லூரிகளை நல்ல நிலைக்கு உயர்த்த எம்மாலான சகல உதவிகளையும் வழங்க நாம் யாவரும் ஒன்றுபட வேண்டும். எமது ஒருமித்த செயல் வடமாகாணத்தையே விரைவில் மாற்றி அமைக்க உதவும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

இக்கல்லூரி இன்னும் பல வளங்களையும் பெற்று கல்விச் செயற்பாட்டில் முதலிடம் வகிக்கக்கூடிய ஒரு சிறந்த முதற்தரக் கல்லூரியாக மிளிர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்,
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

இயற்கை வளங்களையும் தமிழர்களின் பாரம்பரிய அம்சங்களையும், வீரம் செறிந்த தமிழர்களின் வரலாற்றுத் தடங்களையும் ஒருங்கே பெற்ற வன்னி மண்ணின் மகுடமாம் முல்லை மண்ணில் புதுக்குடியிருப்பு பிரதேசவாசிகளின் கல்விக்கு வித்திடும் மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தின் வடுக்களின் வலிகளைத் தாங்கிய முக்கிய பிரதேசமாக காணப்படும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மத்தியில் அமையப்பெற்ற பாடசாலை அழிவுகளை சந்தித்தாலும் ஆலமரமாய் வானளாவி வளர்ந்து வருகிறது என்றால் மிகையாகாது. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய கிராமமாக இருந்த புதுக்குடியிருப்பு பிரதேசம் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கத்தினரால் 1955.01.15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1962ம் ஆண்டு அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. மிகத்துரித வளர்ச்சி கண்டு இப்பொழுது கல்லூரியாக பத்து ஆண்டுகள் தடம் பதித்துள்ளது. பழைய மாணவர்களின் மகத்தான அனுசரணையால் சமாதான காலத்திலே 2005ம் ஆண்டுப் பகுதியில் ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை பெரும் செலவிலே வன்னிப் பிரதேசத்திலே ஓர் அழகான கேட்போர் கூடமாக அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். உக்கிரப் போரின் வடுக்கள் சுமந்த ஒரு கட்டடமாக காட்சி அளிக்கும் இக்கட்டடத்தை செப்பனிடுவதற்கு எல்லோரும் உதவ வேண்டும் என இம்மலரூடாக கேட்டுக் கொள்கின்றேன்.

ஈழ வரலாற்றில் சோகப் போரில் இறுதியாக மூச்சு விட்ட கிராமங்களில் ஒன்று. சொந்த ஊரில் வாழ முடியாமல் மிகச் சொற்ப தூரத்தில் உள்ள மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், ஈற்றில் முள்ளிவாய்க்கால் வரை இவ்வூர் மக்கள் இடம்பெயர்ந்து சென்று மீள்குடியேற்றலின் பின் 2011ம் ஆண்டு பிரதேச வாழ் மக்களுக்கு தனது கல்விச் செல்வத்தினை வழங்குவதற்கு இப்பாடசாலை முனைப்புடன் செயற்பட்டமை யாவரும் அறிந்த ஒன்றே.

இங்கு நிழல் பரப்பிக் கொண்டிருந்த ஆலமரங்கள் பலவற்றை இன்று காண முடியாதுள்ளது. நிழல் பரப்பி நிற்கும் ஆலவிருட்சம் இன்னும் பல ஆண்டுகள் மாணவர்களுக்கு நிழல் பரப்ப விருட்சத்தை பேணி பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும்.

வைரவிழாவை எட்டும் இக்கல்லூரி தனது வயதிற்கேற்ப ஞானம் நிறைந்ததாக காட்சியளிக்க வேண்டும் எனவும் வைரவிழா சிறப்பாக நடைபெறவும், விழாவின் போது வெளியிடப்படும் மலர் சிறந்த வண்ணம் வெளிவரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. குருகுலராசா,**
கௌரவ. கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடமாகாணம்.



# வாழ்த்துச் செய்தி

மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வைரவிழா மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு கல்லூரியின் வளர்ச்சியில் அறுபதாவது ஆண்டை எட்டும் போது இக் கல்லூரியானது பலவிதமான தடைக் கற்கள் வெட்டி அகற்றப்பட்டு பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் ஒளிர்ந்து கொண்டிருக்கிற காலமாகக் கருதப்படும்.

இயற்கையான ஆழிப் பேரலையின் இடர்பாடுகளையும் உள்நாட்டு செயற்கை அனர்த்தங்களின் போதான போராட்டங்களையும் இடப்பெயர்வுகளையும் கடந்து வந்த பாதையானது இக் கல்லூரியின் பட்டறிவுப் பாதையாகும்.

ஒரு சாதாரண பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு மகா வித்தியாலயமாக உள்ளீர்க்கப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் மாணவர்களை கல்விசார் புலமையிலும் விளையாட்டு கலாசார பண்புகளிலும் வாண்மை அடையச் செய்ததன் விளைபவனாக இப்பாடசாலையானது தரம் உயர்த்தப்பட்டு 2006 இல் மத்திய கல்லூரியாகி இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் கலை வர்த்தக துறைகளில் பட்டதாரிகள் உருவாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறதை அறியக் கூடியதாக உள்ளது.

2009 இல் ஏற்பட்ட கொடிய உள்நாட்டு அனர்த்தம் இப் பாடசாலையையும் மிகுந்த பாதிப்புக்குள்ளாக்கியது. 2011 இல் மீள் குடியமர்வின் போது நான் இம் மாவட்டத்தின் அரசாங்க அதிபராக கடமையாற்றிய வேளை இக் கல்லூரியானது மீண்டு எழுவதற்கும் பாதிக்கப்பட்ட மாணவச் சமுதாயத்திற்கு புத்துயிர் அளித்து அவர்களின் கல்விச் செயற்பாட்டோடு உளஉடல் வாண்மை விருத்திக்குமாக ஆத்மார்த்தமான அர்ப்பணிப்போடு செயலாற்றியமை குறிப்பிடத்தக்கது.

முதற்தர பாடசாலைகளுள் ஒன்றாக தரமுயர்த்தப்பட்டு ஆயிரம் பாடசாலைகளுள் ஒன்றாக கருதப்பட்டு மகிந்தோதய திட்டத்தின் கீழ் 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பம் கணனிசார் அறிவிலும் மாணவர்களை புலமை அடையச் செய்து வைரவிழாவினை கொண்டாடும் வண்ணம் முன்னேறி உள்ளமை போற்றப்பட வேண்டியது ஒன்றாகும்.இக் கல்லூரியானது இன்னும் பல சாதனைகள் படைத்து முன்னேறி நூற்றாண்டுகள் கடந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மாணவ சமுதாயத்திற்கு ஒளிவிளக்காக விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

அ. பத்மநாதன்.
பிரதம செயலாளர்

## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அறுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் வைரவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் பதியப்பட்டு 1962 இல் அரச பாடசாலையாக மாற்றப்பட்டு தற்போது 1AB தரமுடைய பாடசாலையாக. உயர்வு பெற்றுள்ளது.

கல்வியே மாணவர்களுக்கு இன்றியமையாத சொத்தாகும். கல்வி மூலம் அறிவும், நல்லொழுக்கமும், சமூக விழுமியங்களை மதித்து நடக்கும் உயர்பண்பும் உருவாக்கப்பட வேண்டும். சமூக உருவாக்கத்தின் அடித்தளமாக பாடசாலைகள் ஒழுங்கமைக்கப் படுவதுடன் முன்னுதாரணமாகவும், சமூகப்பற்றுடனும் செயற்பட வேண்டும்.

இப்பாடசாலையின் வைரவிழா மலரை வெளியிடுவதனூடாக பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்பாடசாலை கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் மென்மேலும் உயர்வடைந்து பல கல்விமான்கள், உயரதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற்பிரஜைகள் போன்றோரை உருவாக்கி மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல சாதனைகளைப் படைக்கவும், எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ. இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.

## அகவை அறுபதில் அடிபதிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கற்றல் கற்பித்தல்சார் சேவைகளில் அறுபது ஆண்டுகளை எட்டியிருப்பதையிட்டும் அதையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் சிறப்புற மலரவும் எனது இதய பூர்வமான நல்லாசிகளை வழங்குவதில் மனநிறைவடைகின்றேன்.

இலங்கையில் பாடசாலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கல்வி வளர்ச்சி உலக நாடுகளின் தரத்திற்கு படிப்படியாக உயர்வு கண்டு இன்று கல்வியறிவு வீதத்தில் முன்னணி வகிக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாக விளங்குவதற்கு பாடசாலைகளின் அர்ப்பணிப்பான சேவைகளே ஆணிவேராக இருந்துவருவது யாவரும் அறிந்த ஒன்றாகும்.

மாணவர் சமூகம் நல்ல வழியில் சென்று உயரியதும் உன்னதமான இலட்சியங்களின் சிகரங்களை எட்டி அங்கு வெற்றிக் கனி பறிப்பதற்கு வித்திடும் கற்றல் கற்பித்தல் சேவைகள் அரச சேவைகள் அனைத்திலும் உன்னதமானவை. அவை விலைமதிப்பற்றவை. இத்தகைய சேவையினை வழங்கும் பாடசாலை சமூகத்தினை எந்தவொரு மாணவர் சமுதாயமும் நன்றி மறவாது இதயத்தில் வைத்து பூஜிப்பார்கள் என்பது திண்ணம்.

பாடசாலையின் தரமும் சேவையும் மாணவர் தொகையினையோ அல்லது கட்டுமான வளங்களையோ அடிப்படையாகக் கொண்டு அளவிடுவதை விட ஆண்டு தோறும் பயன் பெற்று வெளியேறும் பயனாளிகளின் பெறுபேற்றின் மூலமே பாடசாலைகளின் வெளியீட்டு மட்டங்களையும் பாடசாலை சமூகத்தின் அர்ப்பணிப்பான சேவையின் உண்மைத் தன்மையினையும் அளவிட்டுக் கொள்ளமுடியும்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முதல்தரப் பாடசாலைகளில் ஒன்றாக அமைவதோடு, ஆண்டு தோறும் கணிசமான மாணவர்களை பல்கலைக்கழக கல்விக்காகவும், உயர் கல்விக்காகவும் வெளியேற்றி வருவதோடு விளையாட்டு மற்றும் கலை சார்ந்த விடையங்களிலும் சாதனைகளைப் புரிந்து வருவது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.தொடர்ந்து வரும் காலங்களிலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கும் மாணவ சமுதாயத்தினை உரிய முறையில் உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு இம்மலர் மற்றும் விழா சிறப்புற அமைய உழைத்த அதிபர், ஆசிரியர் மற்றும் பாடசாலை சமூகத்தினரிற்கும் பாராட்டினையும் ஆசியினையும் தெரிவித்து கொள்கின்றேன்.

திருமதி . றூபவதி கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு

# வாழ்த்துச் செய்தி



மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியினது வைர விழாவினையொட்டி வெளியிடப்படும் வைரவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை IAB பாடசாலையாக, மத்திய கல்லூரியாக தரமுயர்ந்து தலைநிமிர்ந்து நிற்கின்றது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 2009 ஆம் ஆண்டு இப்பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டபோதும் மீண்டும் 05.09.2011 இல் தனது சொந்த இடத்தில் மீள் இயங்க ஆரம்பித்துள்ளது. தற்போது ஏறத்தாழ 1500 மாணவர்களைக் கொண்டு இப்பாடசாலை இப்பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியினை வழங்கி வருகின்றது.

க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) பரீட்சைகளில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். 2014 ஆம் ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சையில் மூன்று மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் அதி விசேட சித்தி (A) பெற்று சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இணைபாடவிதான செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டி வருகின்றனர்.

வைரவிழா காணும் இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களுக்கு சிறப்பான கல்விச் சேவையினை வழங்க வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

## மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின்
## வைர விழா மலருக்கு ஓர் வாழ்த்துச் செய்தி



சோலைகளும் வயல்களும் கடலும் சூழ்ந்துள்ள இயற்கை எழில் கொண்ட அழகிய மாவட்டமாம் முல்லைத்தீவில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு என்னும் நகரத்தில் புராதன வரலாற்றுடன் கிராமத்தின் மத்தியில் எழில்மிகு தோற்றத்துடன் பல வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், கல்விமான்களையும், சட்டவல்லுனர்களையும் பிரசவித்து கம்பீரத்துடன் காட்சியளிக்கும் மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வைர விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மனமகிழ்ச்சியடைகின்றேன்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அரச பாடசாலையாக மாற்றப்பட்டு 1C பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு கடந்த 40 வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புகழ்பூத்த 1AB பாடசாலையாக சாதி, சமய, பொருளாதார வேறுபாடு இன்றி மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து எதிர்கால வாழ்விற்கு ஒளியேற்றிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை வரலாற்றுச் சிறப்பு மிக்க பாடசாலையென்றால் மிகையாகாது

"வேதம் ஓதிடும் வேதியர்க்கு ஓர்மழை
நீதிமன்னர் நெறிமுறைக்கு ஓர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே"

என்ற விவேகசிந்தாமணியின் பாடலுக்கு ஏற்ப தனது ஆட்சி முறையும் நாட்டு நிலையும் நல்லபடி உள்ளது என்பதை உறுதிப்படுத்தி நேர்மனப்பாங்கும் உயரிய சிந்தனையும் கொண்ட தலைமைத்துவம் இப்பாடசாலைக்கு கிடைத்திருப்பது ஓர் வரப்பிரசாதம் ஆகும்.

இப் பாடசாலையின் வைர விழாவில் இங்கு கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவரும் கல்வியிலும் , ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் சிறந்து ஓங்கவும் "காலம்" கண்ணுக்கு தெரியாது சரித்திரம் படைக்கும். பற்பல இன்பதுன்பம் வந்து போகும். நிலைத்து நின்று அரும்பணி செய்ய அதிபர் , ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

இல 25/147
மடுத்தாய் இல்லம்.
புதியமூர் வீதி.
மன்னார்

திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன்
உதவிச் செயலாளர்
கல்வி அமைச்சு
வடமாகாணம்

# வைரவிழாக் காணும் வைடூரியமே வாழ்க ...........



அடிக்குமேல் அடிவாங்கி துடிதுடித்து நின்றாலும் குடியதுக்கு வைரமாய் மத்தியில் மிளிர்ந்து நிற்கும் மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியை இந்நாளில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். என் தந்தை தாய் கட்டி வளர்த்த பாடசாலை. ஏன் நான் கூட உரிய பாடசாலையில் கற்பித்தலில் கால் கொண்டவள் என்ற வகையில் அறுபது வயதை உரிமையுடன் வாழ்ந்த பூரண உரிமை உண்டென்பதை இந்நேரத்தில் கூறுவதில் ஆனந்தமடைகின்றேன். ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையாக பிறந்து மகாவித்தியாலயமாக வளர்ந்து இன்று மத்திய கல்லூரியாக நிமிர்ந்து மாவட்டத்தில் சாதனை படைக்கும் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையினை திரும்பிப் பார்க்க வேண்டும். திரு கு. வி. செல்லத்துரை, திரு அ.க. மகாலிங்கம், திரு ச. நாகரத்தினம், திரு பி. கே. சிவலிங்கம் இன்று திருசி.சுப்பிரமணியேஸ்வரன் என்று சமூகத்தில் போசிக்கப்பட்ட அதிபர்களின் திறந்த சேவை கல்லூரியின் உயர்வுக்கு கிடைத்த சில பக்கங்களாகும். அது போல முழுநாள் சேவை சேவைகளை வழங்கிய பல ஆசிரியர்களை எங்கள் தந்தை அந்தக் காலத்தில் கூறியிருக்கிறார்.

அமரர் கா. தம்பாபிள்ளை, திரு க. சிதம்பரப்பிள்ளை, அமரர் திரு நா. மகாலிங்கசிவம், திரு.ச.சண்முகம் என்று அடுக்கிக் கூறுவார். இவ்வாறு இறந்தும் இறவாத சேவையாளர்களின் அர்ப்பணிப்புக்கள் கோடி பெறுமதியான சொத்துக்களை பாடசாலைக்கு கொடுக்கும் சமூகம், மற்றும் கிழக்கு, மேற்கு, தெற்கு மூன்று பக்கமும் ஆசியும், அருளும் கொடுக்கும் விநாயகர், முருகன், சூசையப்பர் ஆலயங்கள் இவையாவற்றையும் மத்திய கல்லூரியின் அறுபதாண்டு விழாவில் நினைவு கூறவேண்டியது எமது கடமையாகும். இதே மாவட்டத்தில் பிறந்து இதே மாவட்டத்தில் கல்வி கற்று இதே மாவட்டத்திற்கு சேவையாற்றும் போது என் தந்தை தாய் வளர்த்த பாடசாலைக்கு வைரவிழா ஆசி வழங்குவது வாய்ப்பிலும் வாய்ப்பாகும். பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டவல்லுனர்கள், மற்றும் கல்விமான்களை ஒழுக்க சீலர்களைப் பிரசவித்த மத்திய கல்லூரி என் சேவைக்கு மதிப்பெண் வழங்கி வரும் செயல் போற்றப்பட வேண்டியது.

சாதாரண, உயர்தரங்களில் உயர் சித்தி வீதங்களைப் படைத்து சிறப்புக்கு உரமூட்டும் பள்ளிகளில் முக்கிய பாடசாலையாக மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளங்குகின்றது என்பதனைப் பெருமையுடன் இந்த இடத்தில் கூறி வைக்கின்றேன் மேலும் அடுத்து வரும் பவளவிழா, நூற்றாண்டுவிழா கொண்டாடும் காலங்களில் மேலும் இக் கல்லூரி உயர்ந்து சர்வ கலை பயிலும் கூடமாக மாறும். புதுக்குடியிருப்பின் எழுச்சிக்கு சிகரமாக மத்திய கல்லாரி நிற்கும் என்று வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியுண்டு, மட்டுமல்ல இந்நாளில் உள், வெளி சமூகத்தை ஒன்றிணைத்து பாடசாலையை அவர்கள் உள்ளங்களில் பதிய வைத்து சகல உதவிகளையும் பெற்று நிறைவான ஒரு வைரவிழாவையும் புதுவைரத்தையும் படைக்கும் ஆற்றல் போற்றப்பட வேண்டிய விடயமாகும். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என்று அனைவரும் ஒரு குடையின் கீழ் நிற்பதற்கு அணுகு முறைகளை ஆரோக்கியமாக கையாண்ட அதிபர் மற்றும் உள் அமைப்புக்களையும் இந்த இடத்தில் பாராட்டுகின்றேன்.

திருமதி உ. முனீஸ்வரன்.
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு

# வாழ்த்துச் செய்தி



புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் கல்வி ஊற்றாகத் திகழும்மத்திய கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் வைரவிழாக் காணும் இந்நேரத்தில் கல்லூரியின் பணிகள் மென்மேலும் மலர வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். பிரதேசத்தில் கல்விப் பணியோடு கலைப்பணியையும் முன்னெடுத்துச் செல்லும் இக்கல்லூரி முல்லை மாவட்டத்தில் முதல் தரமான கல்விச் செயற்பாடுகளில் முத்திரை பதித்துள்ளது.

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டை முன்னெடுத்துச் சென்று பல பட்டதாரிகளை சமூக சேவைக்கென அர்ப்பணித்து செயற்பட வைத்து தாயாக துலங்குகின்றது. அறுபதாவது அகவை கண்டு பூரித்து நிற்கும் மத்திய கல்லூரியின் மக்கட் செல்வங்கள் தன் அன்னையைப் பெருமைப்படுத்தும் வகையில் அடி கோலியிருக்கும் இவ் விழாவில் எனது காலத்திலே நடைபெறுவதையிட்டு நான் பெரும் மகிழ்வடைகிறேன். கல்லூரியின் கல்விச் சமூகமும் மாணவச் செல்வங்களும் ஒன்றுகூடித் தொடுத்திருக்கும் வைரவிழா மலர் பல்வேறு பிரதேசத் தகவல்களைத் தாங்கிய ஒரு சஞ்சிகையாக அமைந்துள்ளது. இவ் விழா கல்லூரியைப் பெருமைப்படுத்துவதோடு, விழா மலர் பிரதேசக் கல்வித் துறையின் ஆவணமாகவும் மலர்ந்திருக்கிறது. இவ்வகையில் கல்லூரியின் பெரு வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உழைக்கும் பாடசாலைக் கல்விச் சமூகம், மாணவச் செல்வங்கள், பிரதேச நல்லுள்ளங்கள் அனைவரையும் பாராட்டி விழா சிறப்புறவும் மலர் வனப்புறவும் இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

பிரதேசசெயலாளர்
புதுக்குடியிருப்பு.

# உளரின் அறிவுப் பெட்டகம்



மு/புதுக்குடியிருப்பின் அறிவுப் பெட்டகமாக அன்றும் இன்றும் இருந்து வருவது புது/மத்திய கல்லூரியாகும். எங்கள் ஊர்வாழ் மக்கள் நெறி பிறளாமல் வாழ்வதற்கும் ஒழுக்க விழுமியங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் நன்றி உணர்வுடன் எம் ஊர் இருப்பதற்கும் நிர்வாக மற்றும் அறிவியல் துறைகளில் தேசிய பற்றிலும் உலகிலும் எம்மவர் வாழ்வதற்கும் வளஞ்சேர்த்த கூடம் புது /மத்திய கல்லூரிதான் என்பதை அடித்துக் கூறுவதில் தயங்கவில்லைஅவ்வாறான அறிவுப்பெட்டகத்துக்கு இன்று அறுபது வயது நிரம்பும் போது பாடசாலையின் அபிவிருத்திக் குளுவின் செயலாளராக நானிருப்பதுவும் உருவாகும் புது வைரமலருக்கு வாழ்த்து அறிவிப்பதும் ஒரு பேறாகக் கருதுகின்றேன். எத்தனையோ இழப்புக்கள் எமது பாடசாலைக்கு வந்தது. எமது பாடசாலை வளம் பலமுறை நிர்மூலமானது. ஆனாலும் பாடசாலை விழவில்லை. அன்றன்று இருந்த அதிபர்களின் தியாகத்தாலும் சமூகத்தின் ஒத்துழைப்பாலும் பாடசாலை நிமிர்ந்து நிற்கின்றது. 2009 இடப்பெயர்வின் பின் 2011ம் ஆண்டு நாம் வருகின்ற போது பாடசாலை பல அழிவு கண்டு நின்றது. ஆனாலும் அதிபர் திரு சி. சுப்பிரமணியேஸ்வரன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஒன்றுபட்டு நின்றார்கள். இதனால் சாதாரண விடயத்திலும் மீண்டும் உரிய அடையாளத்தைப் பெற்று விட்டோம். இந்த வேளையில் தான் அறுபதாவது ஆண்டும் வந்திருக்கின்றது. பொன் விழா மண்டபம் சிதைந்து இருப்பதனால் அதில் கைவைத்து திருத்தி விழா எடுக்க முடியாது பாடுபட்டோம். எம் கண்ணீர் அறிந்து புலம்பெயர் பழைய மாணவர்கள் நிதியீட்டம் செய்தார்கள். அதனால் பொன்விழா மண்டபமும் பொலிவு பெற்று வைரவிழா மலராக புதுவைரமும் உதயமாகிறது. இவையாவும் எதிர்கால உயர்வுக்கான அடையாளமாகும் என்று வாழ்த்தி நிற்கின்றோம்.

ச. அமிர்தலிங்கம்
பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர்
மத்தியகல்லூரி
மு / புதுக்குடியிருப்பு



# ஆசிச் செய்தி

நல்ல மரத்துக்கு நடுவைரம் எவ்வளவு முக்கியமோ எவ்வளவு பெறுமதியோ அதுபோல நாம் பிறந்த புதுக்குடியிருப்புக்கு மத்திய கல்லூரி நடுவைரமாக மிளிர்கிறது. அந்த நல்ல செய்தியை அறுபது அவை கண்ட இந்நாளில்அந்த கல்லூரியில் கற்று இன்று புதுக்குடியிருப்பு வைத்தியாசாலை அதிகாரியாக சேவை செய்யும் நான் சொல்லுகின்ற போது உவகை அடைகிறேன். கல்லூரி நல்ல சமூகத்தை உருவாக்கியிருக்கிறது.நல்ல விளைவை காலகாலம் தந்து கொண்டு இருக்கிறது. நல்ல விழுமியங்களை தந்து இருக்கிறது. அந்த வகையில் எம் ஊரின் சிறப்புக்கள் சாதனைகட்டு மத்திய கல்லூரியே மத்தியில் அமைந்திருந்து சேவை செய்கிறது என்பந்த மறக்க முடியாது.பலபல உற்பத்திச் சாலைகளை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் உயிர் உள்ளவர்களின் உற்பத்தி பொருளாக வருடாவருடம் பிரசவிக்கும் எம் கல்லூரி தான் தேய்ந்து தாக்காரை வளர்த்த கதையை மீட்டுப் பார்க்க வேண்டும் பல கல்விமான்களை, பல பல வைத்தியர்களை, பொறியிளாலர்களை, கணக்காளர்களை, சட்டவாளர்களை, அதிபர்களை ஆசிரியர்களை, உயர் நிர்வாகிகளை, உற்பத்தி செய்த கல்லூரி இன்று 60 வயதிலும் இடம் பெயர்வினால் முடமாகிய நாளிலும் மாவட்டத்தில் உச்ச சாதனையை தொடுகிறது என்றால் அதன் அடித்தளம் அதற்காக அர்ப்பணிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் சமூகம் யாவற்றையும் மீட்காது விட முடியாது.

பெற்ற தாயாக, தந்தையாக நாம் கற்ற பாடசாலையை மதிக்கும் பலர் அன்றும் வாழ்ந்தார்கள். இன்றும் வாழக்கறிஞர்கள். கோடி பெறுமதியான தம் காணிகளை ஈர்ந்து அதன் சிறப்புக் கண்டு ஆனந்தம் அடைபவர் எத்தனை பேர்? பாடசாலையில் அதிபராக ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பின்பும் இன்று வரை கற்ற பாடசாலைக்காக உயிர் கொடுக்கவும் சித்தமாய் உள்ள புத்திஜீவிகள் எத்தனைபேர், இவர்களை பார்க்கும் போது எம் கல்லூரி வைரம் தான் என்ற சிந்தனை சாட்சி சொல்கிறது. நாங்கள் ஏழ்மையில் தான் பிறந்தோம் வாழந்தோம் ஆனாலும் அண்ணனையும் என்னையும் வைத்திய கலாநிதியாக்கவும் இன்று மாவட்ட மக்களுக்கு சேவை செய்யவும் நான் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் செயளாலராக இருந்து சேவை செய்வதற்கும் மூல காரணமாக இருந்த நான் கற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியே. இதற்காக இன்றும் என்றும் கல்லூரியை பெற்ற தாய்க்கு நிகராக மதிப்பேன். என்று கூறுவதில் மகிழ்வடைகிறேன்.

வைத்திய கலாநிதி
ப.சத்தியரூபன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்.

## " வைரவிழா " வாழ்த்துச் செய்தி
## பழைய மாணவர் சங்கம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
## ஐக்கிய இராச்சியம்

ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையாக அவதரித்து, மகா வித்தியாலயமாக நடை பயின்று, மத்திய கல்லூரியாக இன்று மகுடம் சூடி வன்னி மண்ணிற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் அன்னையே! நீ ஆறு தசாப்தங்களாய் ஆற்றி வரும் அரும் பணிக்காய் எம் பாடசாலைச் சமூகத்தால் கொண்டாடும் வைர விழா இனிதே நடந்தேற இறைவனைப் பிரார்த்தித்து, உன் ஆசி வேண்டி எம் வாழ்த்தினைத் தெரிவித்து உன் மணி விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் ஐக்கிய இராச்சியம் வாழ் பழைய மாணவர் நாம் அகமகிழ்வடைகின்றோம்.

அறிவூட்டி எமக்கெல்லாம் ஆலயமாய் விளங்கிய அன்னையே உனக்கு " வைரவிழா " என்கின்ற செய்தி எம் செவிகளில் தேனாய்ப் பாய்ந்து ஆனந்தத்தையும் பெருமிதத்தையும் அடைய வைத்தது. அன்று நாங்கள் சீருடை தரித்து உன் மடி தவழ்ந்த நாட்கள் மனக்கண் முன்னே காட்சியாய் விரிகிறது. மாணவர்களாகிய நாங்கள் கல்வியோடு நற் பண்புகளைக் கற்கவும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்துவிளங்கவும் சமூகத்தில் நல்ல மாந்தர்களாக தேசமெல்லாம் மதிக்கப்படுவதற்கும் காரணமானவள் நீயே தாயே. இவற்றிற்கு மேலாக நாம் கடந்து வந்த பாதைகளில் எண்ணில்லாத் தடைகள் ஏராளம் சவால்கள் எது வந்த போதெல்லாம் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து முன்னேறிச் செல்லும் மன உறுதியினை தந்த தாயே உனைப் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

எம் வாழ்வின் வசந்தத்திற்கு வழி காட்டிய தாயே உனக்கு வைரவிழா வாழ்த்துக்களை எமது ஆன்மாவின் உயிர்ப்பிலிருந்து காணிக்கையாக்குகின்றோம். எம்மை நன் மனிதராக்கிய நீ விண்ணோக்கி உயர்வடைய எமது உளம் கனிந்த வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம். தரணியில் உம் குழந்தைகளாகிய நாம் தளராது தலை நிமிர வழி செய்து வாழ்வு தந்த அன்னையே நீ வாழ்க. பாரினிலே நீ எண்ணில்லா விழாக்கள் கண்டு இமயமாய் புகழ்வடைந்து என்றும் சிரஞ்சீவியாக எங்கள் தாய் மண்ணில் நிலைத்து வாழ இந்நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

மணிவிழா காணும் எங்கள் மாட்சிமை கொண்ட அன்னையே அன்று முதல் இன்று வரை மட்டுமன்றி என்றென்றும் நன்றியுடன் உன் விழாக்கள் காணுவதற்காய் அரும்பாடுபட்டு நிற்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், பெரியோர் மற்றும் உன் பணிக்காய் உலகமெங்கும் ஊற்றெடுத்த சங்கங்கள் அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டிலா மகிழ்வடைந்து மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்க ! வாழ்க !! வாழ்க !!! நம் கல்லூரி வானுயர வாழியவே !!!!

பழைய மாணவர் சங்கம்,
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
ஐக்கிய இராச்சியம்

# ஆசிச் செய்தி

வைரவிழா காணும் எமது கல்லூரிக்கு வாழ்த்துக்கள் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். எமது கல்லூரியானது இன்று பல்வேறு கட்டங்களைத் தாண்டி நிமிர்வு கொண்டிருப்பது பெருமிதம் கொள்ள வைக்கின்றது.

சோதனைக் காலங்கள் யாவையும் சாதனைக் காலங்களாக மாற்றி சரித்திரத்தின் பதிவுகளோடு முன்னோக்கிச் செல்கின்றது யாவரும் அறிந்ததே.

கல்வி, விளையாட்டு என்னும் நிலைகளையும் தாண்டி போட்டிமிக்க இவ்வுலகின் அத்தனை துறைகளிலும் மாவட்டம், தேசியம் தாண்டியும் சர்வதேசம் வரையிலும் சாதனை மனிதர்களை உருவாக்கியது என்பது இன்று மட்டுமல்ல என்றும் இனிக்கும், நெஞ்சில் கனக்கும்! தாயகம் தாண்டிய எங்கள் தவிப்புகள் தலைவலியாய தாண்டிடநெஞ்சினை முட்டும் இனிய நினைவுகளால் எங்கள் கல்லூரி நெஞ்சில் நிறைகின்றது.

புலம்பெயர்ந்து வாழ்கின்ற போதும் புலன் இழந்து போகாதவர்களாக, மண்வாசனையோடும் அதன் வழியே கண்ணென எண்ணும் எம் கல்லூரி கனவுகளோடும் கரிசனையோடும் தொடர்ந்தும் இணைந்திருப்போம். எமது கல்லூரியின் சாதனைக் கோலங்களைத் தாங்கி வருகின்ற செய்திகளுக்காக அலைபேசி வழியே காத்திருப்போம். அதற்காக நாங்கள் எப்போதும் கரம் கொடுப்போம். இனிய வனப்புகளோடு புதிய புதிய வர்ணங்களால் பூத்துக் கொள்ளுங்கள். வனங்களை இழந்தவர்களானாலும் என்றும் வாசம் வீசுவோம். உங்கள் வனப்புகளில்.

புதுக்குடியிருப்பு பழைய மாணவர் சங்கம்.
பிரான்ஸ்

# ஆசிச்செய்தி

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் வன்னி மண்ணில் முன்னோடியாகத் திகழும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தனது சேவையில் அறுபது ஆண்டுகளை பூர்த்தி செய்து இன்று வைர விழாவைக் கொண்டாடுகின்றமை மிகவும் உணர்வு பூர்வமாகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் இருக்கிறது.

கடந்த யுத்த அனர்த்தத்தின் போது செல்வீச்சுக்களில் இருந்தும் விமானங்களின் குண்டு வீச்சுக்களில் இருந்தும் பதுங்கு குழிகளுள்ளும் மரங்களின் கீழும் பிள்ளைகளைக் காப்பாற்றி கற்பித்தலை மேற்கொண்ட இக் கல்லூரியின் அதிபரும் ஆசிரியர்களும் இறைதூதர்களாகவே தெரிந்தனர். இழப்புக்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுத்தே எமது பிள்ளைகள் கல்வியைத் தொடர வேண்டிய நிலை இருந்தது.

பின்னர் நடந்த கொடூர யுத்தத்தினால் இடம் பெயர்ந்து போன பிள்ளைகள் வவுனியாவில் உள்ள பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்த போது அந்த பாடசாலைப் பிள்ளைகளை விட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிப் பிள்ளைகள் கல்வியில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றதையும் அதன் காரணமாகவோ என்னவோ பின்னர் வவுனியாவில் உள்ள பாடசாலைகளில் இருந்து எமது பிள்ளைகள் வெளியேற்றப்பட்டு தனியான பாடசாலைகள் இயங்கியமையும் வேதனையோடு நாமறிந்தோம்.

எந்த இடர் வந்த போதிலும் மனமுடையாதும் தங்கள் இலட்சியத்தில் உறுதியாகவும் இருந்து கற்றலைத் தொடர்ந்து மீண்டும் புதுக்குடியிருப்புக்கு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது பற்றை மூடியதும் இடிபாடுகளடைந்ததுமான பாடாசாலை வளாகத்தினுள் தற்காலிக கொட்டகைகள் அமைத்து கற்றலை மேற்கொண்டு இன்று சிறந்த பௌதீக ஆளனி வளங்களோடு தனது அறுபதாவது வருடத்தை பூர்த்தி செய்து நிற்கிறது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

கற்றலில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வன்னியில் மிளிர்ந்து கொண்டிருக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மென்மேலும் வளர்ந்து எமது பிரதேசத்திற்கு ஒளியூட்டும் கல்லூரியாய் பிரகாசிக்க சுவிஸ் நாட்டின் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

முு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
சுவிஸ் கிளை




**இடமிருந்து வலம் இருப்பவர்கள்**

திரு வி. இரவீந்தர், திரு செ. கு. கைறேகன், திரு பா. கார்த்தீபன், திரு கெ. இளவேந்தன், திரு .கி. கஜந்தன், திரு இ. சிவகுமரன்,திருவ.பிரபாகரன், திரு.தா.மங்களரூபன், திரு.க. சுதாகரன், திரு த. தயாபரன் (பிரதி அதிபர் ) திரு.சி. சுப்பிரமணியேஸ்வரன்(அதிபர்), திரு அ. டொன்பொஸ்கோ, (பிரதிஅதிபர் ), திரு ந. ஜோதிலிங்கம், திரு வை. ஜெயராஜா, திரு ந. குமரவேல், திர ப. தயாளதாசன், திரு சி. சுதன், திரு பு. சுரேந்தர், திரு.ச.நிரூபன், திரு வி. அனுரதன், திரு வை. நவதரன்

**இடமிருந்து வலம் நிற்பவர்கள் முன்வரிசை**

திரு ம. தரணிதரன், திருமதி இ. சதீஸ்குமார், திருமதி N. S ஞானராணி, செல்வி வி. கௌசல்யா, செல்வி ச. சுபாசினி, திருமதி பி. கரிகரன், திருமதி.மி. ஜெயசுதன், திருமதி சா. ரகுபரன், திருமதி சா. சண்முகலிங்கம், திருமதி சி. ரஞ்சிதகுமார், செல்வி கோ. ஞானப்பழம், திருமதி.ம.மங்களகுமரன், திருமதி அ. யூட் டொலஸ், திருமதி ய. சின்ராசா, திருமதி ஸ்ரீ. அழகேந்திரம், திருமதி சா. யோகதாஸ், திருமதி.கி.ரதிகுமார், திருமதி அலோஜியஸ், திருமதி ஸ்ரீ. தவரட்ணம், திருமதி. தி.கருணாகரன், திருமதி ப. செல்வநாகம், திருமதி.ம.சத்தியமூர்த்தி, திரு நி. விஜிந்தன்

**நிற்பவர்கள் பின்வரிசை இடமிருந்து வலம்**

திருமதி சோ. கர்சன், செல்வி க. கிருவின், திருமதி நி. டொன்பொஸ்கோ, செல்வி கு. சிவயோகலட்சுமி, திருமதி கி. இளங்குமரன், செல்வி.கி.சிந்துஜா, திருமதி ச. நவரட்ணம், செல்வி வ. சுதர்சினி, செல்வி ப. மிதிலா, செல்வி உ. உமையாள், செல்வி செ. சகானா, செல்வி.ச.சுவர்ணா, திருமதி சா. கெங்காதரன், செல்வி சி. அபிசாதானா, செல்வி ம. விஸ்ணுமீரா, செல்வி உ. சியாமளா, செல்வி இ. ஜயபாலினி, செல்வி அ. கிருசிகா, செல்வி கோ. சசிரேகா, செல்வி சி. ஆன்சோபிகா, செல்வி சௌ. ஜெயசுகி, திரு ப. ராகுலன், திரு ஸ்ரீ. அனிஸ்ரன்

# அதிபரின் இதயத்திலிருந்து .....

" கல்வி மக்களின் பிறப்புரிமை " என்னும் கோட்பாடு வலுப்பெற்று இன்று உலக நாடுகள் அனைத்திலும் அதன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன. அனைவருக்கும் கல்வி என்னும் சுலோகம் உலகளாவிய ரீதியில் ஓங்கியொலித்து அதன் பயணத்தின் இலக்கை எய்திவிட முயன்ற 21ம் நூற்றாண்டு நிறைவடைந்து , " அனைவருக்கும் தரமான கல்வி " என்னும் புதிய நூற்றாண்டின் கல்விச் சுலோகத்தின் வழி இன்றைய கல்வி நடவழக்கைகள் எல்லா நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்வியின் பழமைப் பாரம்பரியமும், நிகழ்கால நவீன போக்குகளும், எதிர்கால நோக்கங்களும் (vision) பற்றி அனைத்து நாடுகளும் சிந்தித்து செயற்பட்டு வருகின்ற இன்றைய கால கட்டத்தில் கல்வி வழங்கும் நிறுவனங்களான பாடசாலைகள் தமக்கேயுரிய பாரம்பரியக் கலாசாரங்களுடனும், தர மற்றும் வள ரீதியான ஏற்றத்தாழ்வுகளுடனும் ஒரே இலக்குடைய கல்வி அபிவருத்தியை நோக்கிப் போராடிக் கொண்டிருக்கின்றன. பாடசாலையின் கீர்த்தி நாமங்கள் (GOOD WILL) காரணிகளின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்ற போதிலும் சில கல்லூரிகளின் கீர்த்தி நாமங்களுக்கு சமூக நோக்குடைய வலுவான காரணிகள் அடிப்படையாக அமைகின்றன. இவ்வகையில் முல்லை மண்ணில் முழுமதியாய் பிரகாசிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் கீர்த்தி நாமம் முற்றுமுழுதாக சமூகமேம்பாட்டினை, சமத்துவத்தினை, சாமானியப்பண்பினை அடிப்படையாகக் கொண்டு விளங்கி வந்துள்ளதென்பது இதன் வரலாற்றினையும் , வளர்ச்சிப் போக்குகளையும் பார்க்கின்ற போது உணர்ந்து கொள்ளலாம்.

இக்கல்லூரியானது அதன் உருவாக்கத்திலேயே நல்ல கனதியான காரணத்தையும், சிறப்பான திட்டமிடலினையும், ஏற்றத்தாழ்வற்ற சமூக நோக்கினையும் கொண்டதாக அமைந்து இவ்வாண்டுடன் 60 ஆண்டுகள் நிறைவு செய்து எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விடயம். இத்தகைய நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரித்தாய் இதுவரை ஆயிரக்கணக்கான கல்விசார் அறிஞர்களை உருவாக்கி இன்னும் கல்விப்பணியில் அனைவரும் வியக்கும் வண்ணம் சாதனை படைத்துக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

நான் இந்த பாடசாலையைக் பொறுப்பேற்று இந்த ஆண்டுடன் 10 வருடங்கள் ஆகின்ற நிலையில் பாடசாலையானது எத்தகைய உயர்நிலை பெற்றுள்ளது என்பதனை நான் கூறவேண்டிய தேவையில்லை பாடச்செயற்பாடுகளின் முன்னேற்றம், இணைபாடவிதான செயற்பாடுகளின் முன்னேற்றம், பாடசாலைச் சமூகம் பாடசாலையுடன் ஐக்கியமாகச் செயற்படும் விதம் அனைத்தையும் கொண்டு அறிவீர்கள். இக்கல்லூரியானது நகர்ப்புறக் கல்லூரிகள் போல உயர்வு பெற்று மிளிர்வதற்கு பழைய மாணவன் என்ற நிலையில் நான் என்னாலான அனைத்து அர்ப்பணிப்புக்களையும் செய்து எதனையும் திட்டமிட்டு திணைக்களத்தினதும், பாடசாலைச் சமூகத்தினதும், புலம்பெயர் உறவுகளினதும் ஒத்துழைப்புடன் செய்வதற்கு தயாராக இருக்கின்றேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இக்கல்லூரியானது தனது 60 ஆண்டு கால வரலாற்றில் கடந்து வந்த பாதைகள், அழகும், இன்பமும், தளர்வும், துன்பமும் நிறைந்தவையாகும். சமூக நீதிக்கல்வியில் கொள்கை வழி உருவாக்கம் பெற்ற இக்கல்லூரியின் வளர்ச்சியும் தளர்ச்சியும் எமது கல்விச் சமூகத்தின் வளர்ச்சியினையும் தளர்ச்சியினையும் பறைசாற்றும் பல ஏற்ற இறக்கப் பாதைகளின் மத்தியில் இன்று இக்கல்லூரி மீண்டும் எழுந்து , கல்விச் சமூகம் விழிப்புற்று மேற்கொள்ளும் ஆக்க முயற்சிகளால் வெற்றியின் திசை நோக்கி வீறுநடைபோடுகின்றது.

2006இல் கல்லூரியைப் பொறுப்பேற்றதன் பின் தரம் 9, 11, 13 (A/L) கல்விப்பெறுபேறுகள் படிப்படியாக உயர்ந்து சென்று, இன்று தேசிய மட்டத்தில் இடம்பெறும் அளவிற்கு சாதனை படைத்துள்ளது. உதாரணமாக2006 இல் 30% ஆக இருந்த க.பொ.சா/த. பெறுபேறு 2014 இல் 66% ஆக உயர்ந்துள்ளது. அதே போல் 2006 இல் 50% ஆக இருந்த க.பொ.உ/த. பெறுபேறு 76% ஆக உயர்ந்துள்ளது. இங்ஙனம் சித்தி வீதம் அதிகரிப்பதற்கு ஆசிரியர்களின் அயராத முயற்சியும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும், புலம்பெயர் உறவுகளின் ஒத்தாசைகளுமேயாகும்.

குறிப்பாக 2012 ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலேயே 9A சித்தியை எமது பாடசாலையே பெற்றுக்கொண்டது. தொடர்ந்து 2013 இல் இரண்டு மாணவர்களும், 2014 இல் மூன்று மாணவர்களும் 9A சித்தியை பெற்று எமது கல்லூரிக்கு பெருமயீட்டியுள்ளனர். க.பொ.உ/தரத்தில் பல்கலைக்கழகத்திற்கு கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகளில் வருடாவருடம் 46 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுக் கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

எமது கல்லூரியானது இணைபாடவிதான செயற்பாடுகளிலும் அதி உன்னதமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றது. உதாரணமாக விளையாட்டுத்துறையில் உபமாகாணம், மாகாணம், தேசியம் வரை சென்று எமது மாணவச் செல்வங்கள் பெருமை தேடித் தந்ததை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். குறிப்பாக 2006 இல் எமது கல்லூரி மாணவர்கள் தடைதாண்டல், தட்டெறிதல் நிகழ்வுகளில் தேசியம் வரை சென்றமையும், 2007 இல் 100m, தடைதாண்டல், தட்டு, ஈட்டியெறிதல் நிகழ்வுகளில் தேசியம் வரை சென்றமையும் 2014 இல் 400m, 400m, தடைதாண்டல் நிகழ்வுகளில் தேசியம் வரை சென்றமையும் கல்லூரி படைத்துக் கொண்டிருக்கும் சாதனைகள் என்பதை யாவரும் அறிந்த விடயமே.

தமிழ்த்தினப் போட்டி, சமூகவிஞ்ஞானப் போட்டி, ஆங்கிலதினப் போட்டிகள், பொது போட்டிகள், விவாதப் போட்டிகள் போன்ற போட்டிகளிலும் எமது மாணவர்கள் தமக்கென தனியான இடத்தைப் பெற்றுள்ளனர். குறிப்பாக அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் 3ம் இடம் பெற்றமையும் இருமொழி ஆணைக்குழுவினால் நாடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் வடமாகாணத்திலேயே சிறந்த பேச்சாளர் என்ற விருதும், இரண்டாம் இடமும் கிடைத்தமையும் இக்கல்லூரி இக்கால கட்டத்தில் பெற்ற மிகப் பெரிய சாதனையாகும்.

கல்லூரியின் வளங்கொள் விருத்தியான பௌதீக விருத்தியினையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். மூன்று மாடிகளின் மீள் உருவாக்கம், இரண்டு மாடிக் கட்டடத்தின் புனர்நிர்மாணம், பிரான்ஸ் கட்டட புனர்நிர்மாணம், விஞ்ஞான ஆய்வுகூடம், ஆசிரியர் விடுதி, நூல் நிலையம், மைதானம் என்று எங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான அத்தியாவசிய பௌதீக வளங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கும் மேலாக ஐக்கியராட்சிய பழைய மாணவர்கள் தாயக பழைய மாணவர்கள் பங்களிப்பால் அழிவுற்ற நிலையிலிருந்த பொன்விழா மண்டபம் 60 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதும், அத்துடன் 50 இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு பஸ் ஒன்றை கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்ய இருப்பதும் இவ்விடத்திலே குறிப்பிட வேண்டியுள்ளது. அத்துடன் கல்லூரிக்கான மைதானம் மாணவர்களின் நலன்கருதி பாதுகாப்புப் பிரிவினரால் முழுமையாகச் செப்பனிடப்பட்டுள்ளமையும் நினைவு கூரவேண்டியதே.

2007 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலத்திற்கும் எமது கல்லூரிக்குமிடையிலான கடின பந்து துடுப்பாட்டப் போட்டி (வன்னிப்பெரும் சமர்) 2007 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட 5 வது தடவையாக நட்புறவுடன் இடம்பெற்று இன்று வெற்றியின் திசை நோக்கிச் செல்கிறது. இக் கால கட்டத்திலேயே சிறந்த ஒரு ஆடுகளமும் அமைக்கப்பட்டமை நினைவு கூரத்தக்கது.

எமது புலம்பெயர் உறவுகள் கல்லூரியின் மீது கெண்ட அன்னியோன்னியத்தாலும் கலை மாலை நிகழ்விற்கு என்னை லண்டனுக்கு அழைத்து கல்லூரியின் வளர்ச்சி, வைரவிழா தொடர்பாகக் கலந்துரையாடியதுடன் இதற்கான நிதி உதவிகளையுத் வழங்கினர். இதனால் எமது உறவுகள் மேம்பட்டது. ஆரம்பத்தில் எமது கல்லூரியை நிர்வகித்த அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் சேவையினை நினைவு கூரும் அதே வேளை இன்று வரை எமது கல்லூரியில் சேவையாற்றும் ஆசிரியர்களினதும், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள், புலம்பெயர் எமது உறவுகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் முழுமையானதும் ஒன்று பட்டதுமான முயற்சியே எமது கல்லூரியை ஒரு உன்னதமான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதென்றால் அதுமிகையல்ல. ஒட்டு மொத்தமாக ஊரே இன்று ஒன்றுபட்டு நிற்கின்றது. புலம்பெயர்ந்த உறவுகள்வைரவிழாவில் கலந்து கொள்கின்றார்கள். ஆலமரச்சோலையும் அழகான என் குழந்தைகள் அறிவைத் தேடி ஓடுகின்றார்கள் அறிவை வழங்க ஆசிரியர்கள் பிள்ளைகளை அழைக்கிறார்கள் பெற்றோர் அதனைக் கண்டு பூரிக்கிறார்கள். இவற்றைக் கண்ட பூரிப்புடன், உயர் பேறுகளைக் கண்ட பூரிப்புடன், புதிய பொன்விழா மண்டபத்தைக் கண்ட பூரிப்புடன் நானும் இருக்கிறேன் என்ற செய்தியை மனம் திறந்து தெரிவிக்கிறேன்.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம்

முல்லைக்கல்வி வலயத்திலே புதுக்குடியிருப்புக்குக் கோட்டப் பாடசாலைகளில் மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி தனக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்று வரலாற்றுப் புகழ் நாயகியாக அறுவது வயதைப் பூர்த்தியாக்கி வைரவிழாக்காணும் பள்ளியாக இன்று பிரகாசிக்கின்றாள். கற்றல் பேறுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஒழுக்க விழுமியங்களிலும் எமது கல்லூரி மாபெரும் வரலாற்றுச் சாதனை படைத்து வைரவிழா கொண்டாடும் இவ்வேளை அதன் கடந்த கால வரலாற்றுச் சுவடுகளை நினைத்துப் பார்ப்பது சாலப்பொருத்தமானது. சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை என்ற பெயருடன் ஆரம்பித்து மு / புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் என தரமுயர்த்தப்பட்டு, இன்று மத்திய கல்லூரி எனப் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்பதையிட்டு நாம் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியடையும் இவ்வேளை இதன் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள் எண்ணிலடங்கார். அவர்களை இயன்றளவு அடையாளப்படுத்துவதும் பள்ளியின் தோற்றத்தையும் படிமுறையான வளர்ச்சிக் கட்டங்களையும் நினைத்துப் பார்க்க வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாக உள்ளது. அறுபது ஆண்டு காலத்துக்குள்ளேயே இப்பள்ளிக்கூடம் உருவாக்கிய கல்விமான்கள் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றமை இக் கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது. நல்லொழுக்க சீலர்களையும் வைத்திய கலாநிதிகளையும் பொறியியல் நிபுணர்களையும் வணிக முகாமைத்துவ விற்பன்னர்களையும் சட்ட வல்லுனர்களையும் கலைப்பட்டதாரிகளையும் திட்டத்துடன் கூடிய சிறந்த நிர்வாகிகளையும் உருவாக்கி யாழ்ப்பாணத்திற்கு நிகராக கல்விமான்களை உருவாக்கித் தந்த பெருமை இக்கல்லூரிக்கே உண்டு. இத்தகைய பெருமை பெற்ற இக்கல்லூரியின் வரலாற்று தடங்களை நோக்குவோமாயின்,

**பொன்விழா மலரிலிருந்து.....**

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இவ்வூர் ஒரு சிறிய கிராமமாகவே இருந்தது. போக்குவரத்து வசதிகளில்லாது பிற இடங்களிலிருந்து துண்டிக்கப்பட்ட

பாதைகள் எதுவும் சீராக இல்லாத பகுதி. மாரி காலமென்றால் ஆறுகள் எல்லாம் பெருக்கெடுத்து ஓடும். நடந்துதானும் பிற இடங்களுக்குச் செல்ல முடியாதிருக்கும். பரந்தனுக்கோ, ஒட்டுசுட்டானுக்கோ செல்லவேண்டுமாயின் பெருவனத்தைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். யானை, கரடி, புலி என்னும் வனவிலங்குகளின் பயம், துணையின்றி யாரும் தனியாகச் செல்ல முடியாது. கால் நடையாகத்தான் யாவரும் செல்வது வழக்கம். மிக அருமையாக மாட்டு வண்டிப் பிரயாணமும் இடம்பெற்றதுண்டு. ஆனாலும் மக்கள் சுகமாக சுதந்திரமாக வாழ்ந்து வந்தார்கள். பால் பழத்திற்குக் குறைவில்லை. தேனைப் பானைகளிலும், கரைக்குடுவைகளிலும் வகிடு கட்டி வைத்திருப்பார்கள். ஆடிப்பாடி மகிழ்வோடு மக்கள் வாழ்ந்தார்கள். கூத்து, குடமூதல், வசந்தன், கோலாட்டம் என்ற ஆட்ட வகைகளும் அவ்வப்போது இடம்பெற்றன. சித்திரை வருடப்பிறப்பென்றால் கொண்டாடத்திற்குக் குறைவேயில்லை. ஆனாலும் கல்வியறிவு பெற்றவர்கள் மிகக் குறைந்தவர்களே. 1950 ஆம் ஆண்டிற்கு முன் ஐந்தாம் தரம் வரை கல்வி கற்கக் கூடிய இரு பாடசாலைகள் இருந்தன. என்றாலும் ஐந்தாம் தரம் கற்றாலும் கற்றவர்கள் அறிவில் நிறைந்தவர்கள்.

ஐரோப்பியர் காலத் தொடக்கத்திலிருந்து யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் மக்கள் கற்கக் கூடியவாறு மூலை முடுக்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் அமைந்திருந்தன. ஆங்கிலேயர் ஆட்சியில் இறுதியிற் கூட இங்கு பெரிய கல்விக்கூடம் நிறுவப்பட்டவில்லை. இப்பாடசாலை நிறுவியதிலிருந்து ஐம்பது ஆண்டு காலத்தில்தான் இவ்வூர் மக்களின் கல்வி கண் திறக்கப்பட்ட கால்ம். கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சீ.சீ.த.க பாடசாலை ஐந்தாம் தரம் கல்விப்போதனையை நடத்தி வந்தது. 1927 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட றோ. க. பாடசாலையும் அவ்வாறே. இவை றோமன் கத்தோலிக்க திருச்சபைகளால் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் முகாமைத்துவத்தில் இயங்கி வந்தமையால் சைவ மதக்கல்வி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை. சைவப் பெருமக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த இப்பகுதியில் சைவ மதம் கற்பிக்கப்படாமை பெரும் குறையாக இருந்தது. குறிப்பிட்ட பாடசாலைகளில் சைவ மதம் கற்பிக்குமாறு பலராலும் வேண்டுகை விடுக்கப்பட்ட போதும் அப்பாடசாலைகளின் முகாமைத்துவத்தினால் அது நிராகரிக்கப்பட்டது. அமரர்களான மு.நேசரத்தினம், அழகரத்தினம், ஆழ்வாப்பிள்ளை போன்றோர் சீ.சீ.த.க பாடசாலையின் அதிபர்களாக பதவி வகித்தவர்கள்.

அமரர் மு. நேசரத்தினம் அவர்கள் சீ. சீ. த. க. பாடசாலையின் அதிபராக பதவி வகித்த காலத்திற்றான் கல்வி வளர்ச்சிக்கான கால்கோள் இடப்பட்டதெனலாம். இவர் இப்

பாடசாலையின் அதிபராக பதவியேற்ற காலத்திலிருந்து புரட்சிகரமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. ஐந்தாம் தரம் வரை இருந்த பாடசாலையை திடீரென வகுப்பேற்றங்கள் செய்து தரம் 6, 7, 8 என வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் தரம் ஐந்துடன் படிப்பை முடித்து கொண்ட சிலர் வந்து சேரலாயினர். அக்காலத்தில் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பொன்னையா ஆசிரியர் அவர்களும் நியமனம் பெற்று இப்பாடசாலைக்கு வந்தமையால் எஸ்.எஸ்.சி. வரை வகுப்புக்களை நடத்தக் கூடியதாக இருந்தது. திரு. சி. பொன்னையா ஆசிரியரை இவ்வூர் மக்கள் யாரும் மறக்க முடியாது. பல பாடங்களைக் கற்பிக்கக் கூடிய வல்லமையுடையவர். இதனால் 1952 இல் எஸ். எஸ். சி. பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய மாணவர்களுள் திரு. க சிதம்பரப்பிள்ளை உட்பட மூவர் சித்தியடைந்தனர். இது புதுக்குடியிருப்பு வரலாற்றில் ஒரு திருப்புமுனையெனலாம். துணிகரமாகத் திடீர் திடீரென வகுப்புக்களை உயர்த்தி அனுமதி பெற்றுத்தந்த பெருமை அமரர் நேசரத்தினம் அவர்களுக்கேயுரியது. அத்துடன் சிறந்த முறையில் பல பாடங்களைக் கற்பித்த பொன்னையா ஆசிரியர்கள் மூவராவது சித்தியடைய வழிவகுத்தார்.

இவ்வேளையிற்றான் சமயக்கல்வி புகட்ட வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஊர்ப்பெருமக்கள், சைவப் பாடசாலை அமைக்க வேண்டுமென அவாவுற்று அதில் முனைப்பாக ஈடுபட்டார்கள். சைவ சமய பாடமாவது கற்பிக்குமாறு சீ. சீ. த. க. பாடசாலை முகாமையாளர் ஆஸ்ரிக்கன் நவரத்தின் அவர்களை கந்தசாமி கோவில் நிருவாகத்தில் இடம்பெற்ற அமரர்களான மார்க்கண்டு – செல்லையா, கந்தையா முருகுப்பிள்ளை, சி. தம்பிப்பிள்ளை ஆகியோர் யாழ்ப்பாணம் சென்று கேட்டபோது "இப்பாடசாலை மூடப்பட்டாலும் எக்காரணம் கொண்டும் இப் பாடசாலையில் சைவ சமய பாடம் கற்பிக்க அனுமதிக்க போவதில்லை" என்று கூறிவிட்ட வேளையில் அமரர் மு. நேசரத்தினம் அவர்கள் மிசனரிமாரோடு ஏற்பட்ட முறுகலின் காரணமாக பளைப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டார். இவ்வேளையில் சைவப் பாடசாலை அமைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த கந்தசாமி கோவில் நிருவாகத்தினர் அமரர் மு. நேசரத்தினம் அவர்களைக் கண்டு தம் விருப்பத்தைத் தெரிவித்தனர். இந்நேரத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரும் பின்தங்கிய கிராம பகுதிகளில் புதிதாக சைவப் பாடசாலைகளை அமைத்துக் கொண்டிருந்தார்கள். ஊர்ப் பிரமுகர்களும் அமரர் நேசரத்தினம் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதன் முகாமையாளரான அமரர் இராசரத்தினம் அவர்கள் புதுக்குடியிருப்பில் சைவப்பாடசாலை அமைக்க இசைந்ததோடு மட்டுமல்ல திரு. மு. நேசரத்திம அவர்களையே அதிபராக நியமிப்பதாகவும் உடன்பட்டார்.

சைவப்பாடசாலை அமைப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல் முதற்பணியாக மேற்கொள்ளப்பட்டது. இது பற்றித் தீர்மானிப்பதற்காக கோவில் முன்றலில் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, ஊர்ப்பிரமுகர்கள் பலர் அக்கூட்டத்திற்குச் சமுகமளித்தனர். முகாமையாளர் (இந்துபோட்) இராசரத்தினம் அவர்களும் வருகை தந்தார். முதலில் கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள இன்ற்ய மத்திய கல்லூரி அமைந்துள்ள இடத்தில் பாடசாலை அமைப்பதெனத் தீர்மானித்த போதும் பின்னர் அது கைவிடப்பட்டு, மாத்தனைச் சேர்ந்த குமரேசா என்பவரால் கந்தசாமி கோவிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சந்திக்கு அண்மையிலுள்ள இரண்டு ஏக்கர் காணியில் பாடசாலை அமைப்பதென உடன்பாடு காணப்பட்டது.

நல்லதொரு நாளில் கும்பம் வைத்து கற்பூரம் கொழுத்தி பற்றைக்காடு வெட்டும் பணி தொடக்கி வைக்கப்பட்டது. சைவமக்கள் பலரும் காடே அதிரும் படியாக ஒன்றிணைந்து காடு வெட்டித் துப்பரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. பின்னர் துப்பரவு செய்த இடத்தில் 120' x 20' அளவு கொண்ட கொட்டில் கட்டவும், அதிபருக்கான விடுதியொன்று அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை அமைக்கும் பணியில் இவ்வூர் சைவப் பெருமக்கள் பலர் ஈடுபட்டாலும் அவர்களுள் அமரர் காசிப்பிள்ளை தம்பாபிள்ளை அவர்களின் பணி சொல்லிலடங்காது. பாடசாலை கட்டுவதற்கான சிரமதானப் பணியில் முன்னின்று உழைத்ததோடு 69 உழவுயந்திப் பெட்டி மணல் ஏற்றிக் கொட்டவும் அமரர் தம்பாபிள்ளை அவர்கள் பாடுபட்டார். அவரின் வண்டில் மாடொன்று எப்போதும் வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது. எனவே இப்பள்ளியின் ஆரம்பகர்த்தாக்களில் அமரர் கா. தம்பாபிள்ளை அவர்கள் என்றும் நினைவு கொள்ளத்தக்கவர் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் ஆசிரியராகப் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

சைவப் பாடசாலையொன்று உருவாவதற்கும், தொடர்ந்தும் மேற்கொண்ட பணிகள் வளர்வதற்கும் காரணமாக இருந்த சைவப் பெருமக்கள் பலரை இங்கு குறிப்பிடாமலிக்க முடியாது. அவர்களுள் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் திரு. பொன்னையா – இராசசிங்கம், திரு. க. சங்கரப்பிள்ளை, திரு. பொ. பாலசிங்கம், திரு. சி. சிதம்பரப்பிள்ளை, திரு. சின்னர் – சின்னத்தம்பி அவர்களும் அமரர்களான திரு. மா. செல்லையா, சி. தம்பிப்பிள்ளை, கா. சின்னத்தம்பி, சி. கதிரிப்பிள்ளை, வீ. இளையதம்பி, பொ. முருகுப்பிள்ளை, செ. வல்லிபுரம்பிள்ளை, வ. சி. தம்பையா, திரு. சி. சரவணமுத்து,

திரு. க. முருகுப்பிள்ளை ஆகியோரும் இவர்களோடு ஆசிரியப் பணியோடு பள்ளியின் வளர்ச்சிக்குமாகப் பாடுபட்ட அமரரான திரு. மு. நல்லையா அவர்களும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு. ச. சண்முகம், திரு. க. முருகுப்பிள்ளை ஆகியோரும் இவர்களோடு ஆசிரியப் பணியோடு பள்ளியின் வளர்ச்சிக்குமாகப் பாடுபட்ட அமரரான திரு. மு. நல்லை அவர்களும் இன்றும் வாழந்து கொண்டிருக்கின்ற திரு. ச. சண்முகம், திரு. க. சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் குறிப்பிடக் கூடியவர்கள்.

ஓய்வு பெற்ற அதிபர் திரு. ச. சண்முகம் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர். எண்கணித பாடத்தை இவர் சிறப்புறக் கற்பித்துள்ளார். எஸ். எஸ். சி., க.பொ.த. சாதாரண பரீட்சைகளில் அதிகமான மாணவர்கள் எண்கணித பாடத்தில் விசேட, திறமைச் சித்திகள் பெற இவர் காரணமாக இருந்துள்ளார். இவருடைய கற்பித்தல் திறமையால் பிற்காலத்தில் பலர் ஆசிரியர்களாகவும், பட்டதாரிகளாகவும் வரமுடிந்தது.

ஓய்வு பெற்ற ஆசிரியரான திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்களும் இப்பாடசாலையை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆசிரியராக இருந்து அர்ப்பணிப்பான சேவையாற்றியுள்ளார். தொடக்கப் பணிகளுக்கெல்லாம் தோளொடு தோள் கொடுத்து உதவியவர். முகாமைத்துவ நிருவாகத்தில் ஆரம்பத்தில் மாதாந்தம் ரூபா 25/= மட்டும் சம்பளமாகப் பெற்று கற்பித்தவர் என்றால் அவர் சேவையை மதிப்பிட முடியும். தமிழ், சைவம், வரலாறு, விஞ்ஞானம் போன்ற பாடங்களைத் திறம்படக் கற்பித்தவரும் கூட. தன்னலம் கருதாத அர்ப்பணிப்பான சேவையால் பிற்காலத்தில் பலர் ஆசிரியர்களாகவும், பட்டதாரிகளாகவும் வரமுடிந்தது. இறுதி வரை இவர் அதிபர் பதவி ஏற்காமல் ஆசிரியராகவே பணிபுரிந்து ஓய்வுபெற்றார்.

அமரர் த. குமாரசிங்கம் அவர்களையும் இப்பள்ளியின் வரலாற்றில் மறக்க முடியாது. தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பள்ளியின் ஆரம்ப பணிகளில் பெரும் பங்கெடுத்தவர். இவரும் இவரின் பாரியார் மங்கையற்கரசி அவர்களும் நீண்டகாலம் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள்.

அமரர் திரு. நா. மகாலிங்கசிவம் அவர்களை இவ்வூரவர் எளிதில் மறக்க மாட்டார்கள். பல ஆண்டுகளுக்கு முன் அமரராகி விட்ட இவர்கள் பாடசாலை மீது அளவற்ற பற்று கொண்டிருந்தார். தொடக்க காலத்திலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியப் பணியாற்றியுள்ளார். பண்டிதத் தமிழ் இவரது வாயிலிருந்து ஊறி வரும்.

காரணம் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சீடர். சைவமும், தமிழும், இலக்கியமும் இவ்வூரிலே வளர்ச்சியுற வழிவகுத்த பெருந்தகை. எஸ். எஸ். சி., க. பொ. த. சாதாரண பரீட்சைகளில் தமிழ், சைவம் ஆகிய பாடங்களில் அதிகமானோர் விசேட திறமைச் சித்திகளைப் பெற்றுத் தேற வழிவகுத்தவர். சில காலங்களில் எண்கணித பாடம் கூடக் கற்பித்துள்ளார். அவருடைய பாரியார் திருமதி வள்ளியம்மை அவர்களும் தொடக்க காலத்திலிருந்து நீண்ட காலம் ஆசிரியையாகப் பணிபுரிந்தவர்.

சுருங்கக் கூறின்

- சமயக் கலிவயை நயத்துடன் கற்பித்தமை
- சைவ வமயாதார சிவாகம முறையினை நடைமுறைப்படுத்த ஆவன செய்தமை.
- சமயக்குரவர் பெயர்களை இல்லங்களூடாக பாடசாலைக்குக் கொண்டு வந்தமை.
- வீடுவீடாகச் சென்று மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பாடுபட்டமை
- இலக்கியத்தை நயக்கும் பாங்கைவன்னியில் முதல் முதல் கொண்டு வந்தமை
- யாப்பு இலக்கியத்தை தன் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தமை.
- ஆலயங்கள், பாடசாலைபாட்டு, ஊஞ்சல் பாட்டு,பாடசாலைக் கீதங்களை ஆக்கிக் கொடுத்தமை.
- அவ்வப்போது தலைமை ஆசிரியருக்கு ஆலோசகராக இருந்தமை.
- இந்த வகையில் அமரர் நா. மகாலிங்கசிவமும் அவர் மனைவியாரும் ஊரிலிருந்து அன்னியப்படாமல் நீண்ட நோக்குடன் சேவை செய்தார்கள். முன்பு யாழ்மாவட்டத்திலிருந்து வருகை தந்த ஆசிரியர் பலரும் வன்னி வாழ்வுக்கு பொருத்தமான இடம் இல்லை என்று திரும்பி விட்டார்கள். ஆனாலும் அந்தவழி செல்லாது அமரர் நா. மகாலிங்கசிவம் வன்னியில் வாழத் தலைப்பட்டமையும், வன்னியிலிருந்து சிவபதமடைந்தமையும் ஆரம்ப ஆசிரியையுமான வள்ளியம்மை இன்றுவரை இங்கே இருந்து சமூகத்திலிருந்து விடுபடாமல் வாழ்வதும் சமூகப் பணிகளை முன் நின்று உழைப்பதும் போற்றுதற்குரிய செயலாகும்.

இப்பாடசாலையின் வரலாற்றில் அமரர் மு. நேசரத்தினம் அவர்களின் காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இப்பாடசாலையின் தாபகரும் முதல் அதிபரும் இவரே. குடும்பமாக இங்கு இருந்து பள்ளியை வளர்த்தவர். 01.01.1995 இல் பாடசாலை மங்கலகரமாக இவர் தலைமையில் திறக்கப்பட்டது. அமரர் மகாலிங்கசிவம், சிற்றம்பலம், ஞானமணி, சுந்தரி, தவமணி ஆகிய ஆசிரியர்களும் தொடக்க நாளன்றே வந்திறங்கினார்கள். தொடக்க நாளன்று ஊரே விழாக் கோலம் பூண்டது. முகாமையாளர் அமரர் இராசரத்தினம் நாடாவை வெட்டி பாடசாலைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். அன்றிலிருந்து சைவ மணம் கமழத் தொடங்கியது. தேவாரம்,

திருவாசகம் ஓதப்பட்டன. அன்றைய தினம் சீ. சீ. த. க. பாடசாலையிலிருந்து அரைவாசிக்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். தொடர்ந்து படிப்படியான பல மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

மாணவர்கள் பலர் அங்கிருந்து வெளியேறுவதை தடுக்க சீ. சீ. த. க. முகாமைத்துவம் பல வழிகளை கையாண்டது. அதிலொன்று தான் முன்னர் அதிபராக இருந்த திரு. அழகரத்தினம் அதிபர் அவர்களை மீண்டும் அப்பாடசாலைக்கு அதிபராக நியமித்தது. அவருடைய செல்வாக்கு சீ. சீ. முகாமைக்கு ஓரளவு உதவியது. இங்குள்ள சைவ மக்களில் பிரிவினை ஏற்பட அவருடைய செல்வாக்குப் பயன்பட்டது. சில பெற்றோர் தமது பிள்ளைகளைத் தொடர்ந்தும் சீ. சீ. த. க. பாடசாலையிலேயே கற்க விட்டார்கள். ஆயினும் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட அப்பிள்ளைகளும் இங்கு வரத் தொடங்கினார்கள். இதனால் பிற்காலத்தில் சீ. சீ. த. க பாடசாலை 5 ஆம் தரத்துடன் மட்டும் இடை நிறுத்தப்பட்டது. அது மட்டுமன்றி சைவ சமய பாடமும் அங்கு போதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் சீ. சீ. த. க பாடசாலை மூடப்படாது இன்றுவரை இயங்கி வருகின்றமை கல்வி வளர்ச்சிக்கு உதவியதொன்றெனக் கூறலாம். சீ. சீ. த. க. பாடசாலை பிற்காலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை என்ற நாமம் பெற்று இன்று வரை வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடங்கும் போது இப்பாடசாலை "மீனாட்சி வித்தியாசாலை" எனப் பெயர் கொண்டிருந்த போதும் சிறிது காலத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை எனப் பெயர் கொண்டது. 5 ஆம் ஆண்டு தைத்திங்கள் முதலாம் திகதி ஆரம்பித்திருந்த போதும் 15.01.55 இலிருந்து முகாமையில் பதிவு செய்யப்பட்டது. அதன்படியே இப்பாடசாலையின் தாபக தினம் 15.01.55 எனக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

முதல் ஆறு வருட காலத்தில் இப்பாடசாலை மூன்று அதிபர்களைக் கண்டது. அமரர்களான மு. நேசரத்தினம், வே. நமசிநாயம், பண்டிதர் ஆ. சின்னத்துரை ஆகியோரே அவர்கள். "நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்" என வேகமாக இப்பாடசாலை வளரத்தொடங்கியது. எஸ். எஸ். சி. பரீட்சைக்கு 1960 வரை பல மாணவர்கள் தோற்றி சித்தியடைந்தார்கள். 1960 இல் க.பொ.த. சாதாரண பரீட்சை எனத் தொடங்கிய போது மேலும் பல மாணவர்கள் சித்தியடைந்தனர். பண்டிதர் சின்னத்துரை அவர்கள் சிறந்த அதிபர் மட்டுமல்ல சிறந்ததோர் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். தமிழ், சைவம் ஆகிய பாடங்களை முறையாகக் கற்பித்து பல மாணவர்கள் விசேட திறமைச் சித்திகளைப் பெற காரணமானார்.

இக் காலப் பகுதியில் இதற்கு முன்னர் குறிப்பிட்ட ஆசிரியர்களை விட அமரர் மு. நல்லையா அவரது பாரியார் அன்னம்மா ஆசிரியை அவர்களும் குறிப்பிடக் கூடியவர்கள். இவர்கள் இருவரும் பல பாடங்களை ஒருங்கே கற்பிக்கும் ஆற்றல் நிறைந்தவர்கள். தம்பதியினராக இங்கு வாழ்ந்து கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்கள். பாடசாலை நேரத்திற்கு புறம்பாக மாலை நேரம், சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்புக்கள் நடத்தினார்கள். அமரர் மு. நல்லையா அவர்கள் பாடசாலை பௌதீக வளர்ச்சியிலும் பெரும் பங்கெடுத்தவர்.

மாணவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க கட்டட வசதிகள் மேலும் செய்யப்பட வேண்டியிருந்ததால் ஊர்ப் பெருமக்களின் உதவியுடன் கொட்டில்கள், நிரந்தர கட்டடங்கள் என அமைக்கப்பட்டன. ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து வீடு வீடாகச் சென்று கும்மி, கோலாட்டம் ஆகிய நிகழ்வுகளை நடத்தி பணம் சேகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. திரு. செ மற்றாஸ்மயில், திரு. இ. இரத்தினசிங்கம், யோ. தாமோதரம்பிள்ளை ஆகிய மாணவர்கள் ஆடல் பாடலகளில் ஈடுபட்டு பணம் சேகரிக்க உதவினார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பள்ளி தொடங்கும் நேரம், மாணவர்கள் எல்லோரும் கந்தசாமி கோவிலுக்குச் சென்று சிவபுராணம் ஓதி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் மாணவர்களின் ஒழுக்கம், பத்தி என்பன வளர்ச்சியுற்றன. ஆரம்பகாலத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த பொன்.தியாகராசா, திரு.ச. முத்தையா, தண்ணீரூற்று கைலாயபிள்ளை, மகாலிங்கம், முள்ளியவளையைச் சேர்ந்த தர்மலிங்கம் ஆகியோரும் குறிப்பிடக் கூடியவர்கள்.

இலங்கை முழுவதிலும் உள்ள தனியார் பாடசாலைகளெல்லாம் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போது 1962 ஆம் ஆண்டில் இப் பாடசாலையும் அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் படிப்படியாக கட்டங்கள் பல அமைக்கப்பட்டதோடு மாணவர் தொகையிலும் அதிகரிப்பு காணப்பட்டது.

இக்காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். கட்டட, தளபாட வசதி கிடைக்க இவர் அவ்வப்போது ஆவன செய்தார்.

அடுத்துவரும் பத்து ஆண்டு காலத்தில் குறிப்பிடக் கூடிய அதிபர்கள் கரவெட்டியைச் சேர்ந்த திரு. வ. தங்கராசா புங்குடுதீவைச் சேர்ந்த திரு. கு. வி,

செல்லத்துரை, வட்டுக் கோட்டையைச் சேர்ந்த திரு. என். வேலுப்பிள்ளை மற்றும் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு. அரியரத்தினம் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள். இக்கால கட்டத்தில் பாடசாலையின் தரம் உயர்ததப்பட்டு மு / புதுக்குடியிருப்பு ம. வி. என நாமம் பெற்றது. இங்குள்ளவர்கள் க.பொ.த. உயர்தர வகுப்புக் கற்க முடியாதிருந்த குறை, 1964 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டு க. பொ. த. உயர்தரக் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதோடு 1C தரத்திற்கு பாடசாலை வந்தது.

கு. வி. செல்லத்துரை அதிபராகப் பணியாற்றிய காலம் வரலாற்றில் முக்கியமானதோர் காலகட்டத்தைக் குறித்து நிற்கின்றது. இவரது சேவைக் காலத்தில் மகா வித்தியாலயம் பல துறைகளிலும் வளர்ச்சி நிலையைக் கண்டது. கு. வி. என்றால் குறித்ததை விடாதவர் என அப்போயை பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள், புகழ்ந்து பாராட்டினார். இவருடைய காலத்தில் அனேகமான கட்டடங்கள் கட்டப்பட்டன. 120' X 20' அளவுடைய நிரந்தரக் கட்டடம் சிறிய விஞ்ஞான ஆய்வுகூடம், அதிபர் விடுதி என்பன கட்டப்பட்டன. கல்வி வளர்ச்சியில் இவர் காட்டிய அக்கறை அளப்பரியது. மகா வித்தியாலயமான பின்னர் 1 ஆம் தர அதிபராக, தகுதியான ஒருவராக, ஆளுமையுடையவராக கு. வி. செல்லத்துரை அவர்கள் பதவி வகித்தமை குறிப்பிடக் கூடியது. க. பொ. த. உயர்தர வகுப்பு ஆரம்பித்து முதல் தடவையாக சித்தியடைந்து 1968 ஆம் ஆண்டு திரு. அ. மரியாம்பிள்ளை என்பவர் பல்கலைக்கழகம் புகுந்தார். திரு. சி. ஆறுமுகம், திரு.ச. நாகரத்தினம் அடுத்த ஆண்டு திரு. பொ. பேரின்பநாயகம் ஆகியோர் இங்கிருந்து பல்கலைக்கழகம் புகுந்தனர். எனவே, இப்பாடசாலையில் தொடர்ந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுந்து பட்டதாரிகளாக வரக் கூடிய நிலையை அமரர் கு. வி. அவர்களே ஏற்படுத்தித் தந்தார் என்பது இப்பாடசாலை வரலாற்றிலிருந்து நீக்கமுடியாத சம்பவம். க. பொ. த. உயர்தர வகுப்பில் இக்காலத்தில் கனகையன், கதிரவேலு போன்ற ஆசிரியர்கள் சிறப்பாக கற்பித்தார்கள். மேலும், கந்தப்பிள்ளை, வல்லிபுரம், குணசீலன். அரியரத்தினம் என ஞாபகப்படுத்தக் கூடிய ஆசிரியர்களும் சிறந்த முறையில் கற்பித்தார்கள்.

இதன் பின் வேலுப்பிள்ளை, அரியரத்தினம் ஆகியோர் தொடர்ந்து பாடசாலையைத் தளராது நடத்திய அதிபர்களாவர். புமுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் 1974 – 1985 ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் அ. கா. மகாலிங்கம் அவர்கள் அதிபராக இருந்த காலமாகும். இக் காலத்தில் அவரும் அவருடைய மனைவியும் இதயசுத்தியுடன் முழு நேரமும் பள்ளியின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள்

என்பதை த நிரூபிக்க பல சாட்சியங்கள் என்றும் சான்று பகரும். மேலாக பழைய மாணவர்கள் லண்டனுக்கு அழைத்து அவரைக் கௌரவித்தமையும், வைத்தியர், பொறியியலாளர், அதிகாரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் இன்றும் அவரை மானசீகத்துடன் மதிப்பதும் அவரை அகங்குளிர வைப்பனவாகும்.

1. **பாடசாலையின் நிர்வாக கட்டுமானம் உறுதி பெற்றமை.**
2. **க. பொ. த. உயர்தரம் வர்த்தக, விஞ்ஞானப் பிரிவு உருவானமை.**
3. **ஆய்வுகூட வசதிகள் செய்தமை.**
4. **கலை, விஞ்ஞானம், விவசாயத் துறைகளில் மாணவர் பல்கலைக்கழகம் புகுந்தமை**

ஆகிய பல சிறப்புகளைக் கொண்ட காலம் இக்காலமென்பதை அவர் என்றும் கூறியது கிடையாது. ஆனால், பாடசாலைச் சமூகம் பல இடங்களில் இவ் அம்சங்களை ஆவணப்படுத்தியுள்ளது. வெளியிட்டிருக்கின்றது. இச்சிறப்புக்கள் உண்மையில் வளர்ந்திருக்குமானால் அதற்கு அவரோடு வேறும் பலர் காரணமாவார்.

1955 இல் இருந்து வளர்ந்து வந்தமை கல்விப் பசியுடைய ஒழுக்க சீலர்களான
**மாணவர்கள்,**
**வாண்மைச் சிறப்புடைய ஆசிரியர்கள்,**
**விழிப்பான பாடசாலைச் சமூகம்,**
**ஊக்குவிக்கும் கல்வி நிர்வாகம்,**
**தெளிவான பழைய மாணவர்கள்**

என்பவர்களின் கூட்டு முயற்சியால்தான் இக்காலத்தில் பல சாதனைகளைப் படைக்க முடிந்துள்ளது என்பதை என்றும் மறக்க முடியாது. இதனால் இக்காலத்தில் கல்விச் சிறப்பு, பௌதீகவள இணைப்பு, ஆசிரியரின் ஒத்துழைப்பு, பெற்றோர் ஒத்துழைப்பு, இணைப்பாடச் செயற்பாடுகள், புறக்கிருத்திய நிகழ்வுகள், சாதனைகள் என்றவகையில் விரிக்க வேண்டிய தேவை உள்ளது.

## கல்வி அபிவிருத்தி

கல்வி அபிவிருத்தி என்பது உடன் அடையப்படுவதொன்றல்ல. பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து பல தியாக சேவை நல்கிய அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்களால் அறிவு, திறன், மனப்பாங்குச் சிறப்புடன் மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக இருந்தார்கள். இவர்களைக் கல்விபுலத்துக்கு அழைப்பது இலகுவாக

இருந்தது. 1972 இல் நடைமுறைக்கு வந்த புதிய கல்விச சீர்திருத்தம் தொழில் முன்னிலைப் பாடங்களுக்கு முன்னுரிமை அளித்ததுடன், 10 பாடங்களை அறிமுகம் செய்தது. இதனால் ஆசிரிய வளங்களைத் தேடுவது சிரமமாக இருந்தாலும் அன்று பணி செய்த கல்வி அதிகாரிகள் எம் பாடசாலையை தேடுவாரற்ற கூடமாக விட்டு விடவில்லை. வவுனியாவில் அமைந்த கல்விப் பணிமனையின் அதிகாரியான அமரர் திரு. சிமியாம்பிள்ளை அவர்கள் மாணவர் தொகை, பாடவிதானம் என்பவற்றுக்கு இணங்க ஆசிரிய ஆளணியினரைத் தருவதற்கு என்றும் தவறவில்லை. மட்டுமல்ல துறைசார்ந்த, சிறப்புடைய, வாண்மையுடைய ஆசிரியர்களை தந்துதவியமையை மறக்க முடியாது. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட அனைத்துப் பாடங்களுக்கும் சிறந்த ஆசிரியர்களைத் தந்ததால் 1974 – 1975 ஆம் ஆண்டு ஆண்டுகளில் க.பொ.த. (சா /தர) பெறுபேறுகள் மாவட்டத்திலேயே மிக உச்சமாக அமைந்தது.

**இரட்டை அலகு விஞ்ஞானகூடம் (க.பொ.த. (உ/த) கட்டிமுடிக்கப்பட்டமை)**

**1977 இல் தே. க. சா. பரீட்சையில் அதிக மாணவர் நல்ல பெறுபேறுகளைப் பெற்றமை.**

இவ்விரு காரணங்களாலும் இதுவரை இருந்து வந்த உயர்தர கலைதுறையுடன் உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிக்க துணையாக அமைந்தன. இக் காலத்தில் உயிரியல் விஞ்ஞான, பௌதிக விஞ்ஞான பட்டாரிகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பெறுவது சிரமத்திலும் சிரமமாகும். இதனால் விஞ்ஞான உயர்தரத்தை கல்விப் பணிமனை பெற்றுத் தரத் தயங்கியது. இருந்தும் இரண்டு பாடம் அதிபர் திரு. அ. கா. மகாலிங்கம் அவர்கள் கற்பிக்க உறுதி கூறியமையால் கல்வியதிகாரி சிமியாம்பிள்ளையவர்கள் கல்வி அமைச்சிலிருந்து விஞ்ஞான உயர்தரத்துக்கான அனுமதியைப் பெற்றுத்தந்தார். இந்த நிலையில் அதிபர் இரு பாடங்களையும், ஆசிரிய வளங்களில் இருந்து ஏனைய பாடங்களையும் போதிக்க ஆவன செய்ய தேசிய உயர்தர சான்றிதழ் வகுப்பு 1977 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் மருத்துவம், பொறியியல், பற்சிகிச்சை மருத்துவம், விவசாய விஞ்ஞானம் போன்ற பிரிவுகள் வாயிலாக பல்கலைக்கழகத்துக்கு பிரவேசிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. HNCE தொடங்கிய முதல் அமர்விலேயே முதல் அமர்விலேயே மாணவன் சந்திரசேகரம் ஏபிரகாம் 2A, 2B தரங்கள் பெற்று அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 30 வீதத்துக்குள் வந்ததால் மருத்துவப் பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் செல்வி ச. பாசமலர் என்பவர் அதே ஆண்டில் விவசாய விஞ்ஞான பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். செல்வன் யேசுதாஸ் அடுத்த ஆண்டில்

மருத்துவப் பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு அடுத்த அடுத்த ஆண்டுகளில் பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானப் பட்டதாரிகள் உருவாவதற்கு மிகவும் சிரமப்பட்டு ஆரம்பித்த உயர்தர விஞ்ஞான வகுப்பு பெரிதும் உதவியது.

விஞ்ஞான உயர்தரத்தை உயர்த்தப் பாடுபட்ட அதே நேரம் இருந்து வந்த உயர்தர கலை, வர்த்தகப் பிரிவின் உயர்ச்சியினையும் கவனத்தில் கொண்டு பொருத்தமான பழைய மாணவர்களே ஆசிரியர்களாக முழு நேரமும் சேவை செய்தார்கள். அத்தோடு யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து விரிவுரையாளர்களை அழைத்துவந்து விசேட வகுப்புக்களை நடத்தியதால் உயர்தர கலை, வர்த்தகப் பெறுபேறுகளும் சிறப்பாக அமைந்தன.

## பௌதிக வள விருத்தி

"அதிபர் என்பவர் பள்ளிச் சமூகத்திற்கும் கல்வி நிர்வாகத்திற்கும் பாலமாக அமைபவர்." இரு தொகுதிகளையும் முரண்பட விடாது இருபக்கத்திலும் உச்ச பயனை பாடசாலைக்குக் கொடுப்பதிலிருந்து அதிபரின் முகாமைச் சிறப்பை அறியலாம். வவுனியாவில் கல்விப் பணிமனை அமைந்திருந்தாலும் எம் பாடசாலைக்கு தேவையான தளபாடம், கட்டடம், கற்றல் உபகரணம் என்பவற்றை மாணவர் தொகைக்கு ஏற்ப தாரளமாக வழங்கியமையை இங்கு குறிப்பிடாமல் விட முடியாது. கட்டட அபிவிருத்திக்குப் போதுமான காணி வசதி இல்லாத போதும் உள்ள காணியில் கட்டடங்களை அமைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. காணி போதாத காரணத்தினால் அயலில் உள்ள காணிகள் சிலவற்றை சுவீகரிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. மேற்சொன்ன பௌதிக வளங்களுடன் நெசவு உபகரணங்கள், நூல் நிலைய புத்தகங்கள், மனையியல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், காரியாலயத்திற்கு தேவையானவையும், நீர் இறைக்கும் இயந்திரம், நீர்த்தொட்டி, விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப்பொருட்கள் என்பவற்றையும் மனையியல்கூடத்தையும், வகுப்பறை மண்டபத்தையும் இக்காலத்தில் நிறுவி கற்றல் கற்பித்தலுக்கான தடைகள் நீக்கப்பட்டன. இதனால் செயன்முறை கற்றல், தேடிக்கற்றல் என்பன இலகுவாக இருந்தன.

## ஆசிரியரின் பங்களிப்பு

"ஆசிரியர்கள் புதிய உலகின் திறவுகோல்கள்" "ஆசிரியர் சமூக நட்சத்திரங்கள்"

என்ற கோட்பாடுகளை பணிபுரிந்த ஆசிரியின் சேவைகளில் காணமுடிந்தன. அவர்களின் பங்களிப்பு அன்று அபரிமிதமாக கிடைத்தது. தமக்கான சிறப்புத் துறைகளோடு தம்மிட பொதிந்திருந்த இதர ஆற்றல்களையும் மாணவர்கட்கு பெற்றுக்கொடுத்து சாதனை படைக்க ஆசிரியர்கள் அயராது பாடுபட்டார்கள். இயல், இசை, நாடகத்துறையென்றும், விளையாட்டுத்துறை யென்றும், பலவழிகளில் மாணவர்கள் தனியாகவும், கூட்டாகவும் திறன்களைப் பெற்றார்கள். உதைபந்தாட்டம், சுவட்டுமைதான நிகழ்வு, இசை, நாடகப் போட்டிகளில் மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் சாதனை செய்தமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். யாழ் விஞ்ஞான சங்கத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் விஞ்ஞான வினா விடைப் போட்டியில் முன்னணியில் நின்றமையும் 1981 இல் மனித உரிமை நிலையத்தால் நடாத்தப்பட்ட வினா விடைப் போட்டியில் பங்கு பற்றி தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை பரிசாக பெற்றமையும் இங்கு குறிப்பிடக் கூடிய விடயங்களாகும். இவற்றுடன் புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு அரசின் பணம் வரத் தாமதித்த வேளையிலும் தமது பணத்தைப் போட்டு ஆய்வுகூடத்தைக் கட்டி அதன்பின் அரச பணத்தை ஆசிரியர்கள் பெற்ற வரலாறும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் மூலம் வருடா வருடம் இராப்போசன விருந்து வழங்கும் பழக்கத்தை வளர்ந்தவர்கள் ஆசிரியர்கள் என்ற வகையிலும் அக்காலத்து ஆசற்ற ஆசிரியர்களை இவ் வைரவிழா மலரூடாகவும் வாழ்த்துகின்றோம்.

**பெற்றார், பழைய மாணவர் ஒத்துழைப்பு:-**

ஒரு பாடசாலையை காவு கொள்ளும் தூண்களாக இருப்பவர்கள் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்களாவர். இத்தூண்களின் இணைப்பின் சிறப்பிலேதான் பாடசாலை அபிவிருத்தி தங்கியிருக்கின்றது. அந்தவகையில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் பெற்றோர், பழைய மாணவர்கள் தூர சிந்தனையுடன் பாடசாலை அபிவிருத்தியில் அக்கறை கொண்டு உளைத்தார்கள். அமரர்.கா. தம்பிப்பிள்ளை முன்னாள் கிராம சபைத் தலைவர்களான பொ. பாலசிங்கம், சி.சிதம்பரப்பிள்ளை என்போர் இவர்களுள் குறிப்பிடக் கூடியவர்களாவர். பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம், பழைய மாணவர் சங்கக் கூட்டம் என்பவற்றில் அனைவரும் கலந்து கொள்வது, ஆலோசனை கூறுவது, அயலில் உள்ள காணிகளைச் சுவீகரிப்பதற்கு உதவுவது மற்றும் ஓய்வுபெறும், இடமாற்றம் பெறும் ஆசிரியர்களைப் பாராட்டுதல், பாடசாலை வெற்றிகளைக் கொண்டாடி மாணவர், ஆசிரியர்களை உற்சாகப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் பாடசாலையின் அபிவிருத்திக்கு வழிகாட்டல்களாக அமைந்தன.

இவ்வாறான வரவேற்கக் கூடிய நன்றியை நினைக்கும் பண்புகளை அண்மையில் லண்டனில் அவதானித்ததை குறிப்பிடாமல் விடமுடியாது. ஐக்கிய இராச்சியத்தில் வாழும் புது / ம. வி பழைய மாணவர் சங்கம் அதிபர் திரு. அ. கா. மகாலிங்கம் அவர்களை 2004 இல் அழைத்துக் கௌரவித்தது. அங்கு அவர்கள் வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும், நன்றி நவில்பவராகவும் வாழ்ந்து கொண்டு தாம் படித்த பாடசாலைக்கும், கிராமத்துக்கும் உதவும் பரோபகாரிகளாக இருந்திருக்கின்றார்கள்.

## இணைபாடவிதான செயற்பாடுகள்:-

மாணவர் திறன்களை வெளிக்கொணர்தல், பாடசாலைச் சமூகத்தை பாடசாலையுடன் இணைத்தல், மாணவர்களுக்கு வெளிக்கள அறிவை வளர்த்தல் என்பவற்றுக்காக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசளிப்பு விழா, பெற்றோர்தின விழா, பொருட்காட்சி, சுற்றுலா என்பவை வருடாவருடம் திட்டமிட்டு நடாத்தப்பட்டதுடன் பாராட்டுப் பெற்ற சம்பவங்களும் நிறையவுண்டு. எடுத்துக்காட்டாக 1977 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட விஞ்ஞான பொருட்காட்சி பிராந்திய ரீதியாகவும். தேசிய ரீதியாகவும் பரிசும் பாராட்டும் பெற்றமை குறிப்பிடக் கூடிய விடயமாகும். அதில் புகையிரத நிலையம், நிலையத்திலிருந்து புகையிரதம் தன்னியக்க முறையில செய்தல், குருதிச்சுற்றோட்டம் என்ற காட்சிகள் வவுனியாவில் கொண்டு சென்று பாராட்டுப் பெற்றதை மறக்க முடியாது. அது போல் வரலாற்று, விஞ்ஞான, சமயச் சுற்றுலா என்பன குறிக்கோள்களை அடைந்தமை மறக்கமுடியாத சம்பவங்களாகும்.

## புறக்கிருத்திய செயற்பாடுகள்:-

"மாணவனை சூழலுக்கான பண்பாட்டு விழுமியத்துடன் சமூக மயமாக்குதல் ஆசிரியர் கடமை".

இந்த நோக்கு பள்ளியில் நிறைவேற வேண்டுமானால் அதிபரின் திட்டமிடலுக்கு ஆசிரியர், மாணவர் உரிய முறையில் உதவுதல் வேண்டும். அந்த ஒற்றுமை எமது பள்ளியில் விசுவாசத்துடன் இருந்ததால் பல புறக்கிருத்திய செயற்பாடுகள் சிறப்பாக நிறைவேறின.

1975 ஆம் ஆண்டில் இங்கு உதவி ஆசிரியராகப் பணி புரிந்த திரு.த.சண்முகசுந்தரம், திரு. க. சரவணபவன் என்போருடைய ஒத்துழைப்பால் வன்னிவள நாட்டுக் கலைவிழா ஒன்று நடாத்தப்பட்டது. பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி அ.சண்முகதாஸ், கலாநிதி. சி. மௌனகுரு ஆகியோர் வருகைதந்ததால் விழா சிறப்புற

நடைபெற்றது. அண்ணாவிமார், நாட்டார் வழக்கியல் கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இதனோடு 1982 இல் பாரதி நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிலும் பேரறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கியுள்ளனர்.

1984 இல் நடைபெற்ற வன்னித் தமிழாராய்ச்சி மகாநாடும் இக்காலத்தில் குறிப்பிடக் கூடிய நிகழ்ச்சியாகும். மூன்று நாட்களாக நடைபெற்ற விழாவில் ஒரு நாள் விழா எமது பாடசாலை முன்றலிலும், மண்டபங்களிலும் நடைபெற்றது. ஆய்வரங்கு, ஊர்வலம், அரங்க நிகழ்வுகள் அமைந்தன. அதிபராகிய திரு. அ. கா. மகாலிங்கம், ஆசிரியர் திரு. க. சரவணபவன், பெரியார் திரு. கா. தம்பாபிள்ளை ஆகியோர் செயற்குழுவில் இடம்பெற்று விழா வெகு விமரிசையாக நடத்த உழைத்துள்ளார்கள். பாடசாலை மன்றல் வாழைகளாலும் மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இந்திர விழா போல காட்சியளித்தது.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் 1985 – 1994 ஆம் ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் பலதாலும் வேறுபட்டு சிறப்படைந்த காலம் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இதே பாடசாலையில் படித்து இதே பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் புகுந்து பழைய மாணவர் திரு. ச. நாகரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலம் இக்காலம் ஆகும். சூழல் தெரிந்த, சூழலில் வாழ்பவர்களைத் தெரிந்த, கல்வியின் உயர்வின் அவசியம் உணர்ந்த தன்மைகளை இக்காலங்களில் பல இடங்களில் கண்டோம். இலங்கை இராணுவத்தின் அதி உக்கிர தாக்குதல் காலமும் இந்திய இராணுவத்தின் அத்துமீறல் காலமும் இக்காலமாக இருந்தாலும் ஆலுக்கும், மாவுக்கும் கீழ் பாடசாலையை நடாத்திக் கொண்டும் கல்வி அபிவிருத்தியில் காட்டிய அதீத அக்கறை பெறுபேறுகளில் நற்திருப்தி அளித்ததை ஈண்டு குறிப்பிடாமல் விட முடியாது. கல்வி அபிவிருத்தியுடன் பௌதிகவளச் சேர்ப்பு, பண்பாட்டு விழுமியப் பங்களிப்பு என்று இக்காலம் பாடசாலைக்கு பலவகைகளில் பெருமை தேடிக் கொடுத்தது.

**கொத்தணி மூலாதாரப் பாடசாலை:–**

1986 இல் நடைமுறைக்கு கொத்தணியமைப்பு முறையில் எமது பாடசாலை மூலாதாரப் பாடசாலை என்பதுடன் அதிபராக இருந்த திரு. ச. நாகரத்தினம் அவர்கள் கொத்தணி அதிபராகவும் இருந்தார். 13 பாடசாலைகளுக்கும் 240 ஆசிரியர்களுக்கும் 5280 மாணவர்களுக்கும் தலைமைப்பள்ளியாகவும் அதிபர், கொத்தணி அதிபராகவும்

இருப்பதென்பது சிறப்பான ஒரு விடயந்தான். இதன் மூலம் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் மாவட்டத்தில் முக்கிய மூன்று பாடசாலைகளுள் ஒன்றாக கணிக்கப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து இடம்பெற்ற போர்களாலும் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகளாலும் பள்ளியின் அனைத்துக் கட்டுமானங்களும் சிதைவு கண்டன.

1985 – 1986 ஆம் ஆண்டுகளில் இலங்கையரசின் அகோரப் போர் எங்கள் மண்ணில் நடந்து கொண்டிருந்தது. அதற்கு எதிர்நீச்சல் போட்டாலும் 1987 இல் வந்த இந்திய அமைதிப்படை பாடசாலையை நடைபெறவிடாது தடுத்து பாடசாலையை முகாமாக்கி புதுக்குடியிருப்பை சூனியப் பிரதேசமாக ஆக்கியது. மக்கள் சிதறி ஓடினார்கள். பாடசாலை கட்டடம், தளபாடம், ஆவணங்கள் யாவும் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. இவ்வாறான ஆறு மாத கால இருளை நீக்க அதிபரும் உதவி அரசாங்க அதிபர் திரு. இராஜரட்ணம் அவர்களும் கிராம சேவையாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அயராது பாடுபட்டார்கள். அதன் பயனாக 18.04.1988 இல் புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலையில் தற்காலிகமாக பள்ளி ஆரம்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பின் 1988 யூலை மாதத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு இடம் பெயர்ந்து 1988 செப்ரெம்பரில் தற்போதைய இடத்துக்குப் பாடசாலை நகர்த்தப்பட்டது.

இக்காலத்தில் தற்காலிக் கொட்டகைகள் அமைத்து தேவைகள் நிறைவு செய்ததை விட 33 ஏக்கர் அறுதிக் காணிகளை மக்களிடம் பெற்று நிலையான ஒரு தளம், மைதானம் என்பவற்றை பாடசாலைக்கு பெற்றமை அதிசிறந்த பணியெனக் கூறலாம். இவ்வாறு பல கோடி ரூபா பெறுமதியான காணிகளைப் பெற அல்லும் பகலும் உழைத்த பல பெரியாரை சுட்டியுரைக்காமல் விடமுடியாது. திரு. வீ. கனகசுந்தரசுவாமி (கிராம சேவையாளர்), திரு. வே. பரமலிங்கம் (கிராம சேவையாளர்), அமரர் மு. தர்மலிங்கம் (பா. அ. செயலாளர்), திரு. தா. சண்முகநாதன் (வட்டவைத் தலைவர்), திரு. த.வேலுப்பிள்ளை (சமாதான நீதிபதி) போன்ற பல நலன்விரும்பிகள் அதிபருடன் தோளோடு தோள்நின்று உழைத்தார்கள். குறிப்பாக வீ. கனகசுந்தரசுவாமி அவர்கள் காணியுரிமையாளர்களின் வீடுகளுக்கு இரவு பகலாகத திரிந்து சம்மதம் பெற்றதுடன் தற்காலிக் கொட்டகை அமைப்பதற்கும் அயராது பாடுபட்டார்.

அரச நிருவாகத்தை ஈர்த்து பாடசாலையை வளர்த்தல் முகாமையின் அதி சிறந்த பண்பாகும். இந்தப் பணியில் அதிபர் திரு. ச. நாகரத்தினம் அவர்கள் உச்சமட்டப் பயனைக்

கண்டவர் என்பது வரலாற்று உண்மையாகும். அரசாங்க அதிபர் பொன்னம்பலம், உதவி அரசாங்க அதிபர் இராசரத்தினம், கல்விப் பணிப்பாளர்களான சிரோன்மணி இராசரத்தினம், எஸ். எஸ். மனோகரன், உதவி அரசாங்க அதிபர் செ. தயானந்தா என்போர்கள் எங்கள் பாடசாலைக்கு கணிசமான பணி செய்தவர்கள். அந்தந்த நேரத்தில் அவர்களை அழைத்து பள்ளியின் அவலநிலையைக் காட்டி தற்காலிக நிரந்தர கட்டடங்களையும் நூல் நிலையம் என்பவற்றையும் ஆக்கி, இக்கட்டான நிலையிலும் பாடசாலையை விழவிடாது திறமையுடைய நிருவாகத்துடன் வளர்த்த பெருமைக்கு பாடசாலைச் சமூகம் அதிபர் ச. நாகரத்தினம் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்படுகிறது.

அவரது நிருவாகம் வித்தியாசமானது. உறவுகள், மாணவர்கள், நண்பர்கள் தான் ஆசிரிய வளமாகக் கொண்டாலும் அனைவரையும் ஒரு கோட்டில கணித்து எல்லாரிடமும் அதிகூடிய பயனைக் பெற்று பள்ளிக்குக் கொடுத்தார் என்பதை அன்றைய பெறுபேறுகள் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. அரச அதிகாரிகளிடம் உதவி பெறுவது மட்டுமல்ல அரச சார்பற்ற நிறுனங்களிடமும் பெற்றாரிடம் நல்லுறவு இக் காலத்தில் காணப்பட்டது. றெட்பானா நிறுவனம் ஒரு அரை நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்கவும் பாடசாலை அபிவித்திச் சபை பல தற்காலிக கொட்கைகள் அமைத்துக் கொடுத்தமையும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மேலாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் லெப். தினேஸ் தலைமையில் மைதானம், கலையரங்கு என்பவற்றை வேகமாக ஆக்கி பள்ளித் தேவைக்கு உடன் வழங்கிய பெருமை விடுதலைப்புலிகளுக்கு உண்டு. அதை ஒருங்கமைத்த பாடசாலை நிர்வாகமும் இந்த இடத்தில் பாராட்டுப் பெறுகின்றது.

போரும் இடப்பெயர்வும் ஆக்கிரமிப்பும் என்று இக் காலத்தில் புதுக்குடியிருப்பு அல்லற்பட்டாலும் அங்கு அமைந்த மகா வித்தியாலயத்தின் கல்விப் பெறுபேறுகள் ஆட்டம் காணாமலே இருந்தன. க. பொ. த. சாதாரண தரப் பெறுபேறுகளும் உயர்தர பெறுபேறுகளும் மாவட்டத்தில் தலைநிமிர்ந்து நின்றதை யாரும் மறக்க முடியாது. ஆசிரியர்கள், மாணவர்களை வீடுகளில் கூட்டிக் கற்பிக்கவும் பொது இடங்களில் கற்பிக்கவும் அன்றைய முகாமை வழிசெய்தமை நற்பெறுபேறுகளுக்கு ஓர் காரணமாகும். 1987 இல் ச. புவனேந்திரன், வீ. சுதாகரன் ஆகிய இருவரும் மருத்துவ பீடத்திற்கு தெரிவானமையும் ப. ரகுபரன் பொறியற் துறைக்கு தெரிவாகியமையும் 1989 இல் ஜே.இருதயநாதன், ச. சொலமன் ஆகிய இருவரும் மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டமையும் பி. ஆனந்தராசா, அ. அன்ரன் அருள்ராஜ் பொறியற் துறைக்கு

தெரிவானமையும் சாதனைகளுள் சிலவாகும். நாட்டுப் பிரச்சினை ஒரு புறம், ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை மறுபுறமாக இருந்தாலும் கல்விக் கூடத்தின் வெளியீடுகள் திருப்தியாக அமைந்தன.

இவ்வாறு நிருவாகம் செய்த அதிபர் திரு. ச. நாகரத்தினம் அவர்கள் 05.01.1994 இல் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்று இன்று முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக திட்டமிடற் பிரிவுக்கு இருந்து வருகிறார். அவர் எங்கிருந்தாலும் பிறந்த கிராமம் படித்த பாடசாலை, பட்டம் பெற வைத்த பள்ளி ஆகிய எம் மத்திய கல்லூரியை வளர்க்க என்றும் உழைப்பார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

05.01.1994 இல் அதிபராக இருந்த திரு. ச. நாகரத்தினம் அவர்கள் கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியுயர்வு பெற்றதால் சிரேஷ்ட ஆசிரியராக இருந்த திரு. பெ. க. சிவலிங்கம் அவர்கள் அதிபராக அமர்த்தப்பட்டார். 10 ஆண்டுகளுக்கு மேல் அதிபராக இருக்கும் திரு. பெ. க. சிவலிங்கம் அவர்கள் காலத்தில் பள்ளிக்குரிய பௌதிக வளங்கள் அதிகமாகக் கிடைத்தமையும் வியைாட்டு, இணைபாடவிதானம், கல்வி அபிவிருத்தி என்று பள்ளி பல நிலைகளிலும் வளர்ந்து வந்தமையும் சிறப்பான நிலைகளாகும். இன்று முற்றுப் பெற்ற கேட்போர் கூடமும் எமது மாவட்டத்திலேயே அதி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற வைரவிழாவும் முகாமையின் ஆற்றலையும், தொடர்பாடற்திறனையும் எடுத்துக்காட்டுகின்றன.

## பௌதிக வள விருத்தி:

100' x 18' அரை நிரந்தரக் கட்டடம் (1995) – இதற்கான நிதியை 'றெட்பானா' தொண்டர் நிறுவனம் வழங்க திரு. தா. சண்முகநாதன், த. வேலுப்பிள்ளை என்போர் முன் நின்று முற்றுப் பெற வைத்தார்கள்.

100' x18' அரை நிரந்தக் கட்டடம் (1995) – இதற்கான நிதியை கல்வித் திணைக்களம் வழங்க பொதுமக்கள் முன்னின்று முற்றுப் பெற வைத்தார்கள்.

பல தற்காலிக கொட்டகைகளை கச்சேரி, உதவி அரசாங்க பணிமனை தந்துதவியுள்ளமை.

80' x 20' அரை நிரந்தரக் கட்டடம் (1997) இதற்கான நிதியைய கல்வித் திணைக்களம் வழங்கப்பட்டது.

100' x 20' அரை நிரந்தரக் கட்டடம் (2000) இதற்கான நிதியை கல்வித்

திணைக்களம் வழங்கப்பட்டது.

நிலையான கிணறு – இதற்கான நிதியை CARE நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

120' x 25' – 2 கட்டடம் (2004) இதற்கான நிதியை நிக்கோட் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

விஞ்ஞான ஆய்வுகூடம் (உயர்தரம்) இதற்கான நிதியை மாகாண கல்வி (2004) அமைச்சால் வழங்கப்பட்டது.

கணினி அறை (2005) மாவட்டப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து கட்டப்பட்டது.

இருமாடி கட்டடத்தொகுதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் 1988 இல் ஆரம்பிக்கப்பட்டாலும் 2005 இல் நிக்கோட் நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்பட்டது.

நூல் நிலையம் இன்று பூர்த்தியாகும் நிலையுள்ளது.

இவ்வாறான அரச, தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட பௌதிவளங்களை விட காலத்தின் அவசிய தேவை கருதி புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர் சங்கங்கள் பலவகையான கட்டட வளங்களுக்கான நிதியுதவியை வழங்கி வந்துள்ளார்க்ள. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டுப் பழைய மாணவர் சங்கம் 100' x 20' நிரந்தரக் கட்டடத்தைக் (2000) கட்டித் தந்துள்ளது.

இதேபோல ஐக்கியராச்சியத்தில் வாழும் எங்கள் பழைய மாணவர்கள் பின்வரும் வசதிகளையும் கட்டடங்களையும் அமைத்துத் தந்துள்ளார்கள்.

மலசலகூடம் (இரு தொகுதி 2001)
நீர்த்தாக்கியும், நீர் விநியோகமும் (2004)
மதிலும் அழகான முகப்பும் (2005)
முன் மாதிரியான பொன்விழாக் கலையரங்கம் (2005)

இதேபோல அதிகமான உபகரணத்தொகுதிகள் அரசினாலும், தொண்டர் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. அவற்றுள் குறிப்பிடக் கூடியவை:

நூல் நிலைய உபகரணங்களும் புத்தகங்களும் (1995) புதுக்குடியிருப்பு உதவி

அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன.

கணினி – 03 (2002) மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டது.

கணனி – 01 தமிழ் தகவல் தொழிநுட்ப நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

கணினி – 01 தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் வழங்கப்பட்டது.

50000 ரூபா பெறுமதியான உபகரணம் சி. தவராசா (இலண்டன்) அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

50000 ரூபா பெறுமதியான புவியியல் புத்தகங்கள் அமரர் சி. ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக அன்பளிப்புச் செய்யப்பட்டன.

50000 ரூபா பெறுமதியான தொலைக்காட்சி பெட்டியும் அதனோடிணைந்த இதர பொருட்களும் வடகீழ் பழைய மாணவர் சங்கத்தால் வழங்கப்பட்டன.

சாதாரணமான தர உள்ளீட்டுக்குள்ளான உபகரணங்களை விட மேலதிகமாகக் கிடைக்கப் பெற்ற உபகரணத் தொகுதிகளே இவையென்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை சார்கல்வி அபிவிருத்தியை நோக்கும்போது க. பொ. த. (சா/த) தரத்தில் மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளை பெற்றமையும் ஏனைய காலங்களைப் போலவே வருடா வருடம் பல்கலைக்கழகத்திற்குப் பல துறைகளுக்குமான மாணவர்களை மத்திய கல்லூரி அனுப்பிக் கொண்டிருப்பதும் பாராட்ட வேண்டிய விடயமாகும். மருத்துவத்துறை, பொறியியல் துறை, வர்த்தகத்துறை, கலைத்துறை, நுண்கலைத்துறை என்று பல்துறைகளில் பள்ளி சாதனை படைத்து வந்தது. இவ்வாறு இணைபாடவிதான செயற்பாடுகளிலும் இக்காலத்தில் மத்திய கல்லூரி முன் மாதிரியாக விளங்குகின்றது. உதாரணமாக 1995 இல் மாவட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் ே போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மத்திய கல்லூரி இன்று வரை அந்த இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான விளையாட்டுச் சாதனைகளில் உச்சமாக 2004 இல் அகில இலங்கை ரீதியான மெய்வன்மை விளையாட்டுப் போட்டியில் 400, 800m ஓட்ட விளையாட்டுப் போட்டியில் 2 ஆம், 3 ஆம் இடங்களை எமது பாடசாலை மாணவன் ஒருவன் பெற்றுக்கொண்டமை மாவட்டத்திலேயே முதற்சாதனை.

இவ்விளையாட்டுச் சாதனைகளை விட அகில இலங்கை இந்துமாமன்றம் நடத்திய பேச்சுப் போட்டியில் பாடசாலை மாணவி ஒருவர் முதலாம் இடத்தை

பெற்றமையும் 1999 இல் மனிதவுரிமை வழக்கறிஞர் சங்கத்தால் நடாத்தப்பட்ட அகில இலங்கைக்கான கட்டுரைப் போட்டியில் மாணவர் ஒருவர் 1 ஆம் இடத்தைப் பெற்றமையும் நல்ல சான்றுகளாகும்.

பாடசாலை அதிபருடையதும், ஆசிரியர்களதும், கூட்டுழைப்பால் பெற்றார்கள், நலன்விரும்பிகள், உள்நாட்டில் வாழும் பழைய மாணவர்கள், புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் என்று பலரது உதவிகள் பாடசாலைக்கு சேர்க்கப்பட்டுள்ளன. ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், கனடா நாட்டில் வாழும் எம் பழைய மாணவர்கள் இன்று தாம் கற்ற பாடசாலையில் அதிக பங்காற்றுவதற்கு அதிபர், ஆசிரியர்கள் நல்லதொரு உறவுப் பாலமாக விளங்கி வருகின்றார்கள். பாடசாலையுடன் இயங்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் கூட தம் கண்ணென கல்விக்கூடத்தை மதிப்பதற்கு பாடசாலை முகாமை சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. இவ்வாறான அனுகூலச் செயற்பாடுகள் பல சிறப்புற்று இருப்பினும் இடப்பெயர்வு, அகதிமுகாம், இடைத்தங்கல் முகாம் என்று எமது பாடசாலை பல வேளைகளில் செயலிழந்தமையும் அதனால் பின்னடைவு கண்டதையும் சொல்லாமல் விடமுடியாது.

1995 – யாழ்ப்பாண இடப்பெயர்வால் பாடசாலையில் மக்கள் தஞ்சமடைந்தார்கள். இதனால் 1996 பெப்ரவரி பாடசாலை நடைபெறவில்லை.

1996 பெப்ரவரிக்கு பின்பும் பகலில் மாணவர்கள் படிப்பது இரவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்குமிடமாகவே பாடசாலை இருந்தது. இந்த இடப்பெயர்வால் மாணவர் தொகை திடீர் அதிகரிப்பை பெற்றது. இதனால் தற்காலிக கொட்டகை. மரங்களுக்குக் கீழ் வகுப்பு என்ற நிலையிருந்தது.

1997 இல் ஜெயசிக்குறு நடவடிக்கையால் மீண்டும் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலையை முகாமாக்கினர்.

ஒலுமடு தமிழ் வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் என்பன எங்கள் பாடசாலையில் இயங்கிய காரணத்தால் பாடசாலை பல நெருக்கடிகளைச் சந்தித்தது.

2004 / 12/26 ஏற்பட்ட ஆழிப்பேரலை அழிவினால் முல்லைத்தீவு மக்கள் எமது பாடசாலையில் 2005 / 02 ஆம் மாதம் வரை தங்கியிருந்தார்கள். இதனால் பாடசாலை

இயங்கவில்லை. எனவே நாட்டின் போரும், இயற்கை அழிவும் எமது கல்லூரிக்கு பல இடர்பாடுகளை கொடுத்தாலும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றார், பழைய மாணவர்கள் முனைப்புடன் நின்று பள்ளியை விழவிடாது பாதுகாத்தார்கள். இக்காலங்களில் கூட க.பொ.த. சாதாரண, உயர்தர பெறுபேறுகளோ; விளையாட்டு, தமிழ்த் தினப் போட்டிமுடிவுகளோ வழமைக்கு மாறாக இருக்கவில்லை. மேலும் திருப்தி தந்ததாகவே உணரப்படுகின்றது.

இதேவேளையில தற்போதைய அதிபர் திரு. பெ. க. சிவலிங்கம் அவர்கள் மேற்படிப்பிற்காக பாடசாலையை விட்டுச் சென்ற 26.10.2002 – 25.04.2004 வரை அப்போதைய உதவி அதிபராகவிருந்த திருமதி. ல. குணசிங்கம் அவர்கள் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். அக்காலத்தில் பாடசாலையின் அனைத்து நடவடிக்கைகளிலும் தளர்வு ஏற்படாது கண்ணுங்கருத்துமாய் அதிபர் பதவியை ஆற்றியுள்ளார்.

பொன்விழாவுக்கான கால்கோள் முயற்சிகள் இவருடைய பதவிக் காலத்தில்தான் இடப்பட்டன. பொன்விழா தொடாபான குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அக்குழுக்களுக்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

**பொன்விழாவிற்கான வரலாறு முற்றுப் பெற்றது.**

# தற்கால நிலை

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 2006.02. 26 ஆம் திகதி முதல் இன்றுவரை அதிபர் திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன் சேவை செய்து வருகிறார். இந்த 9 வருடங்களும் எம் பாடசாலைக்குரிய சோதனைக் காலம் என்பதை எவரும் மறந்து விடமுடியாது. 2006 – 2008 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலம் உக்கிரமாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலம். அது போல் 2009 – 2011 ஆம் ஆண்டுகாலம் இடைத்தங்கல் முகாமுக்குள் அதாவது செட்டிகுளத்தில் எம் பாடசாலை மூழ்கியது 2011. இற்றைவரை மீள்குடியேறி எஞ்சிய எச்சங்களிலிருந்து கல்லூரியை கட்டி எழுப்பிய காலமாகும். இந்த அசௌகரிகமான 9 ஆண்டுகளிலும் தாக்குப்பிடித்து இன்றும் மீளவும் பழைய நிலைகளுக்கு மேலால் கல்லூரியை கொண்டுவந்த பெருமை அதிபரையும் ஆசிரியர்களையும் சமூகத்தையும் சாரும். உண்மை, நீதி, நிறுவன விசுவாசம், இரவு பகலான சேவை, சமூக உறவு என்ற விழுமிய வழிகளின் ஊடாக கல்லூரியை அதிபர் கொண்டு செல்கின்ற விதத்தை சாதாரண காரியமாக எண்ணிவிட முடியாது. இக்கால கல்லூரியின் வளர்ச்சிகளை அறிய சில சுட்டிகள் இருக்கின்றன. அரச பரீட்சைகள், சமூக உதவிச் சுட்டி, சமூகமதிப்பெண் என்பவற்றை கொண்டு கல்லூரியை அளவிட க. பொ. த சாதாரண தர பெறுபேறுகளை நோக்கும் போது

| | | |
|---|---|---|
| 2006 | - | 30% |
| 2007 | - | 36% |
| 2008 | - | 38% |
| 2009 | - | 40% |
| 2010 | - | - |
| 2011 | - | 38.9% |
| 2012 | - | 38.6% |
| 2013 | - | 61% |
| 2014 | - | 66.4% |

இந்த சித்திவீதங்களை நோக்கும் போது பெறுபேற்று நிலை உயர்ந்து வந்தாலும் 2013, 2014 இல் சடுதியாகச் சித்தி வீதம் அதிகரித்திருப்பதைக் காணமுடிகிறது. போரில்லா சூழலும் அதிபர், ஆசிரியர்களின் அயராத முயற்சியும் திட்டமிடலும் பகுப்பாய்வும், சீர்செய்தலினாலும் தான் இந்த உயர்வுகளை காண முடிகிறது. இந்த நிலை 2015, 2016 களில் மேலும் உயருமென நம்பப்படுகிறது.

க. பொ. த. உயர்தரத்தை நோக்கும் போதும் இந்த சாதாரண தரத்துக்கான வீச்சுவீதம் பின்பற்றப்பட்டு இருக்கின்றது.

2006 - 60%
2007 - 50.2%
2008 - 55.1%
2009 - 60.4%
2010 - 66.5%
2011 - 73.4%
2012 - 74.8%
2013 - 75.2%
2014 - 76.2% என்ற சித்திவீதம் அமைகிறது. கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை என்ற துறைகளினூடாக மொத்தக் கணிப்பில் மேல்வரும் சித்தி கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீத அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு கீழ்வரும் அடிப்படையில் மாணவர்கள் சென்றார்கள்.

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கணிதம்** | *02* | *04* | *07* | *01* | *06* | *11* | *07* | *04* | *13* |
| **உயிரியல்** | *08* | *10* | *06* | *05* | *05* | *13* | *06* | *03* | *09* |
| **கலைப்பிரிவு** | *11* | *20* | *21* | *11* | *12* | *14* | *04* | *08* | *07* |
| **வர்த்தகம்** | *06* | *14* | *09* | *04* | *10* | *12* | *04* | *07* | *09* |

இதனை மேலும் நுணுக்கமாக நோக்கின்,

| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பொறியியல்** | - | *04* | *07* | *01* | *04* | *04* | *03* | *04* | *05* |
| **மருத்துவம்** | *01* | *02* | *03* | *01* | *01* | *02* | *01* | *01* | *01* |

இவ்வாறாக கல்விச் சாதனைகள் பதிவிலுள்ளது. இவற்றை நோக்கும் போது இடர்பட்ட காலத்தில் இந்த பாடசாலையில் அர்ப்பணிப்பான கற்றல், மேற்பார்வை இருந்திருக்கிறது என்பதை விட புது / மத்திய கல்லூரி முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னணிப் பாடாசாலையென்பதை நிறுவியிருக்கிறது.

பாடசாலைகளை அளவீடு செய்வதற்கு கணிசமாக அல்லது குறிகாட்டியாக அமைவது இணைபாடவிதான செயற்பாடுகளாகும். விளையாட்டு, கலைவிடயம் இதனுள் முக்கியமானது. விளையாட்டுத் துறையைப் பொறுத்து உப மாகாணம், மாகாணம், தேசியம் என்பன உயர்நிலை சான்றுகளாகும். 2006 – இன்றுவரை பல மாணவர்கள் தேசிய நிலைக்கும் பல மாணவர்கள் மாகாணநிலைக்கும், உபமாகாண நிலைக்கும் சென்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார்கள்.

2006 இல் – கல்லூரி மாணவர்கள் தடைதாண்டல், தட்டெறிதல், நிகழ்வுகளில் தேசியம் வரை சென்றுள்ளார்கள். அவ்வாறே

2007 – 100m ஓட்டம், தடைதாண்டல், தட்டு, யவலின் தேசிய மட்டம் வரை சென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். அதுபோல

2008 இல் – மாகாண மட்டத்தில் உதைபந்து 1ம் இடமும் பான்ட் அணி 2ம் இடமும் பெற்று சாதனை பதித்தது.

| | | | |
|---|---|---|---|
| 2012 இல் – | லை. லோகதர்சினி | 400m கேடில்ஸ் | மாகாணம் |
| | S. யாதவன் | யவலின் | |
| 2013 – | S. விதுஸ்ரன் | 110m கேடில்ஸ் | மாகாணம் |
| | | 400m கேடில்ஸ் | |
| | | 400m ஓட்டம் | |
| 2014 – | S. விதுஸ்ரன் | 400m கேடில்ஸ் | மாகாணம் |
| | | 400m ஓட்டம் | |
| | S. டிலக்சனா | 400m ஓட்டம் | |
| | P. விஜயசன் | 500m ஓட்டம் | |
| 2015 – | S. விதுஸ்ரன் | 400m ஓட்டம் | மாகாணம் |
| | | 400m கேடில்ஸ் | |
| | S. கஜர்தா | 400m கேடில்ஸ் | |
| | S. டிலக்சனா | 800m ஓட்டம் | |
| | | 1500m ஓட்டம் | |
| | | ½ மரதன் ஓட்டம் | |

இவ்வாறான மாகாணச் சாதனைகட்குப் பின்னால்

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு மாணவன் | S. விதுஸ்ரன் | 400m ஓட்டம் | | |
| | | 400m கேடில்ஸ் | | தேசியம் |
| மாணவி | S. டிலக்சனா | 400m ஓட்டம் | | |

தேசியத்துக் சென்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்ததை நினைக்காமல் விட முடியாது.

விளையாட்டுக்கள் தவிர்ந்த இதர அறிவியல் சார்ந்த போட்டிகள் சார்பாக

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S. மதுரன் | – | 2015 | விவசாயப் போட்டி | – | தேசிய மட்டம் |
| T. சாகித்தியன் | – | 2015 | சித்திரப் போட்டி | – | தேசிய மட்டம் |
| குழு நிகழ்வு | – | 2015 | கணித வினாடிவினா | – | மாகாண மட்டம் |
| | | 2014 | பண்ணிசை | – | மாகாண மட்டம் |
| குழு | – | 2014 | ஆங்கில நாடகம் | – | மாகாண மட்டம் |
| குழு | – | 2014 | வணிகப் போட்டி | – | மாகாண மட்டம் |

மேல்வரும் சாதனைகளை கல்லூரி பதித்துள்ள.

போரும், இடப்பெயர்வும், இடர்பாடுகளும் மாணவ ஆசிரியர் மன உழைச்சல்கள் இருந்தாலும் கல்லூரியின் உயர்பேறுபெற்று தக்கவைக்கப்பட்டு இருக்கிறது. அதிபர் திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன் மற்றும் பிரதி அதிபர்களான திரு.A.டொன்பொஸ்கோ, திரு.ச.தயாபரன், அவர்களது அர்ப்பணிப்பு கூட்டு முயற்சி, அனைத்து ஆசிரியர்களதும் நிறுவன பற்றுறுதி இழந்ததை ஈடுசெய்ய வேண்டுமென்ற தாராள சிந்தை என்பவற்றால்தான் கல்லூரியின் நிறை குறையாமல் அதிகரிக்கும் வீதத்தில் கொண்டு செல்லப்பட்டது. மற்றும் இன்றைய அதிபர் காலத்தில் கல்வி இணைபாடவிதானச் செயற்பாட்டுச் சிறப்புகளை விட

- இதர பாடசாலை சமூக தொடர்பு
- கல்லூரி ஆசிரிய ஆளணிகளுடன் பேதமற்ற தொடர்பு
- உன்னத சமூக நிறைவான தொடர்பு
- கடல் கடந்து வாழும் பழைய மாணவர் தொடர்பு.

✠ வலய மாகாண மட்ட நல்ல இடைத்தொடர்பு

✠ ஊட்டல் பாடசாலைகளுக்கிடையிலான தொடர்பு

✠ நேர முகாமை

✠ வளப் பங்கீட்டு முகாமை

✠ நிர்வாக, நிதிப்பகிர்வு முகாமையென்று பலவற்றிலும் வாண்மையோடு நிர்வாக அணி இயங்கியதால்,

- கிளிநொச்சி ம.வியுடன் துடுப்பாட நட்பு தோன்றியிருக்கிறது.
- அழிவுகட்கு உட்பட்ட பிரான்ஸ் மண்டபம், பொன்விழா மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.
- இலண்டன், சுவிஸ், பிரான்ஸ், பழைய மாணவர் சங்கங்கள் புத்துயிர் பெற்று கல்லூரித் தேவைகளை நிறைவு செய்ய வந்துள்ளது.
- உள்ளக பெற்றோர் பழைய மாணவர்கள் நூறுவீதம் கல்லூரி வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ளனர்.
- லண்டனில் வாழும் பழைய மாணவர்களான த. இன்பவரன், தி. கேதீஸ்வரன் 5000000 ம் ரூபா பெறுமதியான ஒரு சொகு பேரூந்தை எடுத்து தர முன்வந்துள்ளனர்.
- கல்விப் பெறுபேறுகளில் மாவட்டத்தில் முன்னணியில் கல்லூரி பிரகாசிக்கின்றது.
- இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தேசிய மட்டச் சாதனைகளை பாடசாலை ஈட்டியிருக்கின்றது.
- அழகாகத் திட்டமிடப்பட்ட உள்ளூர், கடல் கடந்த உறவுகளை இணைத்து திறன் வளர்க்கும் வைர விழாவாகவும் இரு இலக்கியங்களும் தோற்றியிருக்கின்றமை
- தொழில்நுட்ப அலகு உள்வாங்கப்பட்டுள்ளது.
- மற்றும் புதுக்குடியிருப்பின் பூர்வகம் ஆவணப்படமாயும், வரலாற்று நூலாகவும் வெளிவருகிறது.
- பாடசாலை சார் வரலாறு ஆவணப்படம் வெளிவருகிறது.

இவ்வாறான சாதனைத் தேடல் திரட்டல்கட்கு சமூகம், பழைய மாணவர்கள், புலம்பெயர் பழைய மாணவர்கள், கல்லூரி தலைவரை லண்டனுக்கு அழைத்திருந்தார்கள். அவரும் சென்று கல்லூரிக்கு பெருமை தேடி வந்தும் இவ்வாறாக வைரவிழாக் காணும் எம் கல்லூரி இன்று பூவோடும் பொட்டோடும் புன்னகையுடனும் பிரகாசிக்கிறது. இதற்காக அதிபர், நிர்வாகத்தை, ஆசிரியர் குழாத்தை, கல்லூரி சார் சபைகளை, சங்கங்கைள மதிப்பிடும் கோட்ட வலய பணிப்பாளர்களை நெறிப்படுத்தும் வடமாகாணத்தை வடமாகாண கல்வி அமைச்சரை இந்நேரத்தில் சமூகம் நன்றியுடன் நோக்குகிறது.

லலிதாவதி குணசிங்கம் அவர்களின் சேவை பதில் அதிபர் என்பதை விட அதிபருக்குரிய பணிகள், சாதனைகள் இவரது காலத்தில் நடந்தேறி இருகிறது.

- மத்திய கல்லூரியாக எமது பாடசாலை தரம் உயர்த்தப்பட்டமை.
- க.பொ.சா. தரத்தில் 10A மாணவர்கள் எடுத்து சாதனை பதித்தமை.
- நிறஞ்சன் போன்ற விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் சாதனை பதித்தமையென்று பதில் அதிபரின் பங்களிப்புக்கள் நீண்டு செல்கின்றன

## பள்ளியினுடைய வரலாற்றுக்கான தகவல்களைக் கால அடிப்படையில் தந்துதவியவர்கள்

| பெயர் | தகவல் தந்த வரலாற்றுக் காலம் |
|---|---|
| திரு. க. சிதம்பரப்பிள்ளை, ஓய்வுபெற்ற ஆசிரியர் | 1955 - 1961 |
| திரு.ச. சண்முகம், ஓய்வுபெற்ற அதிபர் | 1962 - 1972 |
| திரு. அ. கா. மகாலிங்கம், முன்னைநாள் அதிபர் | 1973 - 1984 |
| திரு. ச. நாகரத்தினம், முன்னைநாள் அதிபர் | 1985 - 1994 |
| திரு. பெ. க. சிவலிங்கம் | 1995 - 2005 |
| திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன் இந்நாள் அதிபர் | 2006 - இன்று |

## தொகுத்தவர்கள்

திரு. க. சரவணபவன், முன்னைநாள் ஆசிரியர்.
திரு. இ. செல்வநாயகம், பழைய மாணவன்.
} பொன் விழா காலத்திற்கு முன்பு

திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன் - இந்நாள் அதிபர் 2006 - இன்றுவரை
சி. பீதாம்பிரம் உதவிக் கல்விப்பணிப்பாளர்

# வைரநாயகியே வாழ்க வளர்க

கட்டி வளர்த்த தேவியே கல்விதந்த பூந்தேவியே
கொட்டினாலும் குளவி மட்டிட முடியாதவள் நீ.
பொட்டிட்ட மங்கையே பொன்விழா கண்டவளே
அட்டதிக்கும் புகழ் பரப்பும் அம்மா தேவியே வந்தனம்.

இடிந்தாய் மடிந்தாயம்மா இடம்பெயர்ந்து அலைந்தாய்
முடிந்த கதையென்ப முகரிவிட்டு வந்தாய் பலமுறை
விடியல் தரும் தேவியே விடிவெள்ளி நீயம்மா.
குடிவயிரம் குளிர்ந்திட குளிப்பாட்டியவள் நீயம்மா.

உன்பிள்ளைகளம்மா என்போன்றவர்க்கு ஆசிரியர்
தன்னலமற்று சேவை செய்ய தலைப் பணிகளானோம்.
நன்னலத்துடனவர்கள் நமக்கு முன் வழிகாட்டியதால்
இந்நாளில் வைரத்துக்கு இக்கவிதையினை எழுதுகிறேன்.

இடம்பெயர்ந்து அகதியாய் நடையாய் நடந்தோம்மம்மா
முடமானோம் தாயே முற்றுமுளமழிந்தோம்
திடமாக மீண்டும்நிமிர தீனிதந்த வைரநாயகியே
விடமாட்டோம் அம்மாவுனை விண்வரை உயரவைப்போம்.

பட்டங்கள் மட்டுமல்ல பணிவான விழுமியங்களை
இட்டமுடன் நடுவோம் திட்டத்துடன் அறுவடை செய்வோம்
விட்டமிலா வளர்ச்சி காண விடிய விடிய உழைப்போமம்மா
மட்டிலா வைரநாயகியே மாணவரின் சத்தியமிது.

தட்டூரில் நிமிர்ந்துநின்று நல்ல கலைநடனம் ஆடுகிறாய்
பட்டுப் போகாமல் கணபதிமுருகன் பண்ணிசை பாடுகிறார்கள்
கட்டுக் கரும்பாக கல்வி கரைபுரண்டு ஓடுகிறது
எட்டுத் திசையும் புகழ்பரவ எந்தாயே ஆடம்மா நடனம்.

மணிவிழா நாயகியே வாழ்க மணிமகுடமம்மா வாழ்க
தணியாத எம் தாகம் தீர தண்ணீர்போல் அறிவு நீ சுரந்து
பிணியதாம் மூடக் கொள்கை பிரதேசத்தில் மறந்திடம்மா நாளை
பணிகிறோம் பாதாரம் அம்மா படிக்கும் உந்தன் குஞ்சுகள் தாயே.

செ. அருந்துஷன்,
12ம் ஆண்டு, விஞ்ஞானப்பிரிவு
புது / மத்திய கல்லூரி

# மாணவர்
# ஊற்றுக்கள்

# வாகைப் பூக்களின் காலம்

நாயாறு பாய்கிறது!
பாறைகள் எங்கும் இசையை எழுப்பியபடி
கண்ணாம் பற்றைகளில்
தன் ஈரச் சுவடுகளைப் பதித்தபடி
செம்மலையில் கட்டிய
அரியாத்தையின் யானை எடுக்கும் ஓலம்
செம்மணி வரைக்கும் அதிர்கிறது

முல்லைக் கடல்
அது பெருங்கடல்
வற்றாப்பளை அம்மனுக்கு
ஒளியூட்டும் ஆகுதியாய்
ஆன கடல் அது

அது தன் அலைக்கரங்களால்
கரையை ஓங்கி அறைகிறது
கோபம் கொண்ட நாகம்போல

நந்திக்கடல் நீரேரி
உன் மீதேறிப் போனவர்தம்
குருதியைக் குடித்தாயே
தணிந்ததுவா உன் குருதிப்பசி

வட்டுவாகல் பாலம்
சப்த கன்னியர் கொலுவிருக்கும்
கோயில் கொண்ட பாலம்

கன்னியரின்
கோபம் கொண்ட நாவுகள்
கோடானு கோடியெனப்
பெருகியலைகின்றன

பாலையும் வீரையும்
முதிரையும் விண்ணாங்குமென
அடர்கிறது வன்னிக்காடு

காட்டில்
செம்பூக்களை
ஏந்திச் சிலிர்க்கிறது வாகை
என் மனமும்தான்



கோ. டினோஜிதா
தரம் - 10F

# அணையாத தீபங்கள்

காரிருளாய் கலைந்து கிடந்த எமது
கனிவான மனத்தை
அகல் விளக்கால் சுடர் ஏற்றி
அன்பால் அரவணைத்து பண்பாய் படியேற்றி
ஒழுக்கங்களால் உயரவைத்த
அணையாத தீபங்களாய் அதிபர் ஆசிரியர்கள்

பாரினிடையே உயர்ந்து பல்வழிகள்
பல காட்டிட
புவியிலே நிற்கும் புது கற்பக
மரங்களும் இவர்கள்தானே

வாழ்க்கையிலே நன்னெறி காட்ட
வணக்கத்தில் பண்பைக் காட்ட
ஒழுக்கத்தில் உயர்வை காட்ட
ஓயாத கடலலைகளும் இவர்கள்தானே

கர்த்தாவின் படைப்பிலே பெற்றோருக்குப்பின்
கண்கண்ட தெய்வங்களாய்
எம்மை கரைசேர்க்கும் இறைவன்
எய்திய பாணங்களாய் ஆசிரியர்கள்

நம்மை காணாத போது பரிதவிக்கும்
நம் அன்னை
நம்மை பாரினிடையே காட்டிட தன்னையே
பரிசளிக்கும் இந்த ஆசிரியர் குலமேன்மை

காலங்கள் கடலாகவும்
கற்பனைகள் சிறகுகளாக படபடக்க
வாழ்க! வளர்க! வெல்க! எனும் மும்மொழிகளால்

எம்மை தாலாட்டுகின்ற அழியாத
செல்வங்களாய் ஆசிரியர்கள்

சொல்லினிலே செம்மையும்
சிறப்பினிலே சீர்மையாகவும்
விளங்குகின்ற நாம்
விடை தேடி அறியமுடியா பல
கேள்விகள் தான் ஆசிரியர்கள்

கரைதேடிய பலருக்கு கலங்கரையாய்
பல வழிகள் காட்டிட
மேலேறும் பலருக்கு ஏணிகளாள் இருந்து
தம் உயர் பதவியை நாடாத
பெருந்தகைகள் ஆசிரியர்கள்

வாழ்விலே வசந்தம் பெற்றாலும்
படிப்பிலே பல்கலைகள் கற்றாலும்
ஒழுக்கத்திலே உயர்ந்து விளங்கினாலும்
நேர்மையிலே நீக்கமற இருந்தாலும்
இனி நினைவு கூருவோம்
எம் இனிய நெஞ்சங்களை

அணையாத தீபமாய்
அறிவு ஒளிகாட்டி - எம்மை
ஆளாக்கும் - இனிய
ஆசிரியர்களை! வாழ்த்துவோம்.

யோ. வேணுஜன்
தரம் - 11E

# புதியதொரு புலர்வினைப் படைப்போம்.

போர் முடிந்து விட்டது
போர் வீரர்கள் மடிந்து போயினர்
அல்லது காணாமல் போயினர்
தேரொலியும் சங்கொலியும்
நின்று போயிற்று
அரசனும் இல்லை
இளவரசனும் இல்லை
தளபதிகளில்லைத் தானையுமில்லை
இனி யார் அரியணை அமர்வார்கள்

கருங்கோடை
காண்டாவனம்
எல்லாமும் கடந்தாயிற்று
குடிக்கக் குடிக்கவடங்காத் தாகம்
கொஞ்சமாவது தணித்தாயிற்று
இனி
நதியின் இசையை அவரவர் ரசிப்போம்
எமக்கென்றொரு புல்வெளியில் கூத்தாடுவோம்

நிலவின் குளிர்ச்சியையும்
பறவைகளின் பாடல்களையும்
கடலின் ஓசையையும்
காற்றின் கவிதையையும்
எமதாக்கி ஒரு புதிய புலர்வினைப் படைப்போம்
ஆதிவேரில் துளிர்ப்பியற்றி
படரட்டும் நிலமெங்கும்
வெந்த நிலம் ஆறு தணியட்டும்
விட்ட இடத்திலிருந்தே தொடங்குவோம்

உழவனும், உழத்தியும்
ஏரெடுத்துக் களனி செல்க
வலைஞர்களின் அம்பாவோசை
அலைகளில் புதுக் கவியெழுத
புதியதொரு புலர்வினைப் படைப்போம்

**கோ. திவ்வியராஜ்**
வர்த்தகப் பிரிவு - 13 (2015)



பாடசாலை அபிவிருத்திக் குழு - 2015



பழைய மாணவர் சங்கச் செயற்குழு - 2015

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஐக்கியராச்சியம்






# வைரவிழாக் காணும் புதுமையாளிற்கு

வன்னிக்கு ஒளியூட்ட வந்துதித்த ஆதவனே – இன்று
நீ அறுபதாம் அகவை தனில் கால் பதிக்கும் திருநாளோ!
முத்தமிழில் கவி வடித்து வாழ்த்துகிறேன் உன்னை
இன்று போல் என்றும் உன்புகழ் பரவிடவே.

வன்னித் தாயின் ஒப்பற்ற செல்வமே
எம் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி
பெரியார் நேசரத்தினத்தின் அன்றைய முயற்சியால் – இன்று
முல்லைப் புதல்வர்களின்
அறிவுத் தாகம் தீர்க்கும் – வற்றா நதியே

முல்லைத்தீவின் முத்தே
புதுநகரின் புதுமையாளே
நீ சாதிக்கப் பிறந்த உருவமா அன்று
சாதனையே உருவானவளா? புரியவில்லை எனக்கு
உனை நினைக்க வியக்கிறது என் மனம்.

எத்திசை நோக்கினும் ஆலமரங்கள்
அவற்றிடையே உயர்ந்திருக்கும் மாடிக் கட்டடங்கள்
துள்ளித் திரியும் வெள்ளைப் பட்டாம் பூச்சிகள்
கனிவான ஆசான்கள் கையில் கணினியுடன்
ஆயினும் ஒருகை மறக்கவில்லை அரவணைப்பை

விளையாட்டுப் போட்டியென்றால்
விண்ணையே ஆர்ப்பரிக்கச் செய்வாய்
விஞ்ஞானத் துறையென்றால் – உன்
பரிசோதனைகளால் விஞ்ஞானியையே மெய்ச்சிடுவாய்
தமிழ்த்தினப் போட்டியென்றால்
தமிழையே வியக்க வைப்பாய்

ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சை முடிவுகள்
வெளிவரும் கணத்தில் – நீ
அடையும் ஆனந்தம் தான் என்ன?
கல்வியமைச்சு முதல் கருவறை சிசுவரை
உன்பெயர் கூற வைப்பாயே – இச்
சாதனையின் இரகசியம் தனை ஒருமுறை செப்புவாயா?

வைத்தியராய் வர்த்தகராய் விஞ்ஞானியாய்
மெய்யறிவாளராய் பொறியியலாளராய் பல்கலை மாணாக்கராய்
வழிகாட்டி நிற்கும் ஆசான்களாய்
கடல் கடந்த தேசமெங்கும் – உன் புதல்வர்கள்
ஆலம் விருட்சமாகி விழுதுகள் விட்டு பரந்துள்ளனரே.

காலங்கள் கரைந்தாலும் கோலங்கள் மறைந்தாலும்
வன்னியின் வித்தகியே என்றும் உமை மறவோம்
இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் உன்புகழ் பரவிட
கவிஞனாய் இன்றி உன் புதல்வியாய் வாழ்த்துகிறேன்.
வாழ்க! வாழ்க! வாழ்க!


செல்வி. ஸ்ரீகாந்தராசா - ஹாஸ்வினி
உயிரியல் பிரிவு - 12 (2016)

# நம்பிக்கையுடன் செயற்படுவோம்

உலகை நாளை ஆள
உபதேசம் வழங்கும் கல்விக் கூடம்
வலக்கை போன்று செயலாற்ற
வழிகாட்டும் ஆசான்கள்
நலமாய் நாளை வாழ்ந்திட
நம்பிக்கையுடன் செயற்படுவோம்.


போதனைகள் எம் வாழ்வில்
புதுப்பொலிவை தோற்றுவிக்கும்
வேதனையைக் கண்டு நாம்
வீணே கலங்கிடாமல்
சாதனைகள் படைத்து நாளை வாழ்ந்திட
நம்பிக்கையுடன் செயற்படுவோம்.

காலத்தின் அருமை உயர்வென்று
எண்ணி நாம் கற்று
ஆல விழுது போல் அறிவினைப் பெற்று
ஞாலமதில் நலமாக வாழ்ந்திட
நம்பிக்கையுடன் செயற்படுவோம்.



சி. ரிலக்சி
தரம் - 6D

# தூரத்துப் பச்சையும் ஏழை விழியும்



தூரத்துப் பச்சையும் ஏழை விழியும்
துரத்தியே விரட்டிடும் ஏழ்மையும்
தூங்கிய வாழ்வில் தொலையும்
தாங்கொணா பசியில் தூரத்துப் பச்சை

கல்வியில் தேடிட கணினியின் தேவை
கணினியின் தேவையால் கரைந்தது கல்வி
கற்றவர் தன்னை மதிக்க மறந்தார்
பெற்ற தாயிடம் அன்பைத் துறந்தார்

உள்ளங்கையில் உலகை அறியலாம்
உள்ளத்தை தொலைத்த பின் என்ன அறியலாம்
பள்ளத்து அறிவாய் பாய்ந்திடும் இணையம்
படுகுழியில் தள்ளி விழுத்துமா?

ஏழையின் விழியில் அனைத்தும்
என்றுமே எல்லாம் தூரத்துப் பச்சை
தொலைந்திடும் வாழ்க்கையில் இவை
தொலையாத ஏழையின் இச்சை

பணம் படைத்தவர் பிள்ளைக்காய்
பணத்தை நீராய் அள்ளி இறைக்கிறார்
பிள்ளை அதனை உணரவில்லையேல்
கல்வியும் அவருக்கு தூரத்துப் பச்சை

இளமையில் கல்வி சிலையில் எழுத்து
இளமையில் அதனை இழந்திடில்
முதுமையில் தேடிடும் கல்வியும்
வரண்ட பாதையில் வராத பச்சையே

ஏழை வயிற்றில் எரிவது நெருப்பு
ஓலைக் குடிசையில் அவர்களின் இருப்பு
மூளை உண்டெனில் முடிவைத் திருப்பு
முட்களுக்குக் கூட உனக்கேன் செருப்பு

பச்சைசையை தேடி அலையும் மனிதரும்
பசியை மறந்த இச்சை மனிதரும்
மிச்சமாய் தேடி வைப்பது யாதடா?
உச்சக் கல்வி ஒன்று மட்டுமே.

கோ. ஜபிஷாயினி
11E

## PCC, We Love You A Lot

Congratulations, PCC,
On your diamond jubilee
Oh! my school mother,
my heart is full of happiness and joyful

On a small town when it stands still,
the morning, blazing sunshines on you,
it fills us with warmth and joy,
PCC you look so majestic.

You are our sunshine when we are grey,
you are a strong modern school,
facing the future, confident and sincere,
ready to guide hoards of young minds.

Let's all celebtate the diamond jubilee,
This is the day that you were born 60 years back,
happy birthday PCC, you are the best,
we love you forever.

**Miss. Kaanapriya Satkunaseelan**
Grade - 12 Bio

# எங்களை வாழ விடுங்கள்

"மெதுவாக கண்ணைத் திறந்தான் குமரன் ஆ! அம்மா!! என்று அவன் முனகிய சத்தத்தைக் கேட்டு அருகில் இருந்த தாதியரும், வைத்தியர்களும், அவனை நோக்கி ஓடி வந்தார்கள். சுற்றுமுற்றும், மிரள மிரள நோக்கிய குமாரனை அணைத்த வைத்தியர் ஒருவர் "தம்பி பயப்பட வேண்டாம்" இது கண்டி போதனா வைத்தியசாலை இதன் சிறுவர் பிரிவில் நீங்கள் இருக்கின்றீர்கள் உங்களுக்கு எங்களைத் தெரிகின்றதா? நன்றாகப் பாருங்கள் உங்கள் உடல்நிலை எப்படியிருக்கின்றது?" என்ற வைத்தியரின் கேள்விக்கு சேர் "ஒரே களைப்பாக இருக்கின்ற, எனது காலை அசைக்க முடியவில்லை. தலையில் வேதனையாக இருக்கின்றது" என்று அவன் கூறியதைக் கேட்ட வைத்தியரின் முகத்தில் மகழ்ச்சியும், சந்தோசமும் பொங்கி வழிந்தது. வைத்தியர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவினர் ஒரு பெரிய வைத்தியருக்கு கைகுலுக்கினர் இவற்றைக் கண்ட குமரன் ஏன் என்னுடன் கதைத்ததற்கு இவ்வளவு மகிழ்ச்சியை இவர்கள் வெளிக்காட்டுகின்றார்கள் என்பது விளங்காது தவித்தான் அந்தநேரம் அவனுக்கு அருகில் வந்த அந்த பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் "தம்பி உங்களது பெயர் என்ன?" என்றதற்கு நான் குமரன், குமரன் என நா தடுமாறிக் கூறினான் ஆ! குமரன். நீங்கள் சில வருடங்களுக்கு முன் வன்னியிலை நடந்த யுத்தத்தின் போது காயப்பட்டு மயக்கமுற்ற நிலையிலை இங்கு கொண்டு வரப்பட்டீர்கள் என்பது மட்டுமே எமக்கு தெரியும் வேறு ஏதுவும் உங்களைப் பற்றி எமக்கு தெரியாது.

நீங்கள். குண்டுத் தாக்குதலுக்குட்பட்டு காலிலும், தலையிலும், காயமேற்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டீர்கள். உங்களது காலைக்கூட அகற்ற வேண்டியேற்பட்டது. ஆனால் தலையில் ஏற்பட்ட காயத்தால் நீங்கள் "ஹோமா" நிலையில் இருந்தீர்கள். உங்களது பழைய நினைவுகளை மீட்பதற்கு இத்தனை வருடங்களாக நாம் இரவு, பகலாக உழைத்தோம். பல வெளிநாட்டு வைத்தியர்களின் ஆலோசனை வழிகாட்டலைக்கூட பெற்றோம் இன்று எங்களது சிகிச்சை பலனளித்து விட்டது. உங்களை பழைய நிலைக்கு கொண்டுவர உதவியவர்களில் முக்கியமானவர்கள் திருமதி. சோமாவதி திலகரட்ணமும். அவரது மகன் சுனிலும் என்றவாறு வைத்தியர் அவர்களை அவனுக்கு அறிமுகம் செய்தார். குமரனின் இரு கைகளையும் இறுக்க பற்றிய சுனில், நலமா என்றான்? அன்புடன் கன்னத்தில் முத்தமிட்டாள் சோமாவதி அனைவரது கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

வைத்தியர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றதும் தனது உதவியாளராக நின்ற சுனிலைப் பார்த்து "எனக்கு நிறைய பசிக்கின்றது சாப்பிட வேண்டும் போல இருக்கிறது" என்றதற்கு முதலில் திரவ ஆகாரம் தான் எனது அம்மா சூப் கொண்டு வருவா. என்ற சுனிலின் பதிலைக் கேட்ட குமரன், நீங்கள் யார்? உங்களுக்கும், எனக்கும் என்ன தொடர்பு? நீங்கள் ஏன் என்னில் இவ்வாறு அக்கறை கொள்கின்றீர்கள்? என்ற குமரனின் கேள்விக்கு சிரிப்பொன்றை உதிர்த்த சுனில் எனது தாயார் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தேயிலை தோட்ட உரிமையாளர் ஒருவரின் ஒரேயொரு மகள் அவதான் சோமாவதி. அம்மா.

அவ பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது காலியைச் சேர்ந்த பொறியியல் துறையில் படித்த எனது தந்தையாரைக் காதலிச்சிருக்கின்றா எங்கள் அப்பா நல்ல அழகானவர் அன்பான , பண்பான சுபாவம் கொண்டவர் ஆனால் மிக வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர் படித்து முடித்த அப்பா நல்ல சம்பளத்தில் இலங்கையின் தரைப்படையில் பொறியியலாளராக இணைந்து கொண்டார். அப்பாவை தனது மகளுக்கு திருமணம் செய்ய எங்கள் தாத்தா விரும்பவில்லையாம் அம்மாவின் விடாப்பிடியால் தாத்தா திருமணம் செய்து வைத்தாராம். அம்மாவும், அப்பாவும் சந்தோசமாக வாழ்ந்திருக்கின்றார்கள். அதன் பேறாக நான் பிறந்தேன்.

அப்பா லீவில் வந்தால் ஒரே கொண்டாட்டம் தான் நானும் அப்பாவும், அம்மாவும் காரிலை சுற்றித் திரிவம். அப்பா வேகமா கார் ஓட நான் கைதட்டி சிரிப்பேன். அப்பா, அம்மாவை முதுகில் ஏற்ற அம்மா என்னை முதுகில் ஏற்ற எங்கட பூந்தோட்டத்தினை சுற்றி வருவார் என்னுடனும் எனது நண்பர்களுடனும் கிரிக்கெட் அடிப்பார். அம்மாவை தனது தேவதை என்று சொல்லுவார். ஒவ்வொரு இரவும் வேலை செய்யும் இடத்தில் இருந்து எங்களோட கதைச்சு Goodnight சொல்லித்தான் படுப்பார். அப்படிப்பட்டவர். லீவுக்கு வந்திட்டு வேலைக்கு போகும் போது அவர் போன Boat தாக்கி அழிக்கப்பட்டது தான் தெரியும். அப்பாட உடலைக் கூட நாங்கள் காணவில்லை. அம்மாவாலையும், என்னாலையும் இதைத் தாங்கவே முடியாமல் போச்சுது. அப்பாவை உலகமாக நினைச்ச எங்களுக்கு எல்லாமே வெற்றிடமாகத் தெரிஞ்சுது. அம்மா எனக்கு தெரியாமஇருந்து அப்பாவை நினைத்து அழுவா நான் நடைப் பிணமானேன்.

அப்பாவின் நினைவுகளை என்னால மறக்க முடியாமல் இருந்தது. இந்த நேரம் எனது நண்பன் ஒருவன் எனது கவலைகளை மறக்க மருந்து தருவதாக கூறி, முன்பின் தெரியாத ஒருவரிடம் என்னை அழைத்துச் சென்று, அவர் மூலம் சிறு வயதிலேயே எனக்கு போதைப் பழக்கத்தை ஏற்படுத்தினான். அப்பாவின் கவலையால் என்னை கவனிக்காத அம்மா ஒருநாள் நான் மயங்கிய நிலையில் இருந்ததைக் கண்டு, என்னை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றா அதன் போதுதான் அவவிற்கு உண்மை தெரிய வந்தது.

என்னை வைத்தியசாலையில் வைத்திருந்த போதுதான் உங்களையும் வன்னியில் இருந்து யுத்தத்தில் காயப்பட்ட சிறுவனாக கொண்டு வந்தார்கள் உங்களுடன் பொது மக்கள் பலரையும் கொண்டு வந்தார்கள். யுத்தத்தின் விளைவுகள் என் குடும்பத்திற்கு மட்டுமல்ல நாட்டில் பல குடும்பங்கள் உறவுகளை இழந்து, உயிரை இழந்து, அங்கங்களை இழந்து, தமது இருப்பிடங்களையும், சொத்துக்களையும் இழந்து இருப்பதை அறிந்தேன். எனது மனதிலும், அம்மாவின் மனதிலும் கூட மாற்றம் ஏற்பட்டது நான் போதைப்பொருள் பாவனையில் இருந்து மீண்டு, மீண்டும் படிக்கத் தொடங்கினேன். தேயிலைத்தோட்ட நிர்வாகமும், அப்பாவின் அன்பும் தான் உலகம் என்றிருந்த அம்மா, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, பொதுமக்களுக்காக சமூக சேவை அமைப்பில் சேர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்தா அந்த நேரத்தில் தான் உங்களைக்

கண்டு உங்களது வைத்திய சிகிச்சைக்கு உதவினா. பல வைத்தியர்கள் இந்தியாவில் இருந்து கூட உங்களை வந்து பார்த்தார்கள். வைத்தியர்களதும், அம்மாவினதும் அயராத முயற்சிதான் உங்களை இன்று இவ்வாறு சுகமடைய வைத்துள்ளது. என் அம்மா அடிக்கடி கூறுவா "எந்தத் தாய் பெற்றெடுத்த பிள்ளையோ தெரியாது அவனை சுகப்படுத்தி தாயிடம் ஒப்படைக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவா என்று கூறி முடிக்க கண்ணாடிக் குவளையொன்றுடன் வந்த சோமாவதி. "இந்தாங்க தம்பி குடிங்க சூப் நல்லாயிருக்கும்". என்ற அந்த கொச்சைத் தமிழை விட அவ்வின் உருவம் அவனுக்கு உயிர்கொடுத்த உத்தமியாக காட்சி தந்தது.

"மல்லி வீட்டுக்கு போக ஆயத்தமா?" என்றவாறு சிரித்துக்கொண்டு குமரன், அருகில் வந்த நேஸ் எழும்புங்க உங்களிடம் விளக்கம் எடுக்க இரு பொலிஸார் வந்திருக்கிறார்கள் மாத்திரை போட என்றாள். குமரனை அணுகிய பொலிசார் தம்பி பயப்பட வேண்டாம் நாங்கள் உங்களை, உங்கள் குடும்பத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் யார்? உங்களது ஊர், பெற்றோர் பெயர் ஞாபகமிருக்கா? என்ற கேள்வியைக் கேட்டதும் குமரனது எண்ண அலைகள் கடந்த காலத்தை நோக்கி சிறகடிக்க ஆரம்பித்தது.

நான் அப்பா, அம்மா என்ரை அக்காமார் மூவரும் ஒன்றாக சந்தோசமாக புதுக்குடியிருப்பிலை, கோம்பயாவிலில் வாழ்ந்தனாங்கள், அயல் முழுக்க உறவுகளோடை ஒன்றாக அவர்களது இன்பத்திலும், துன்பத்திலும் பங்குகொண்டு ஒரு வீட்டிலை சமைத்ததை அடுத்த வீடுகளுக்கு பரிமாறி, கோயில் திருவிழாக்கள், பொங்கல் என்று எல்லாம் சுற்றித் திரிந்து, ஆலமர விழுதுகளை பிடிச்சு ஊஞ்சலாடி, எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தம். அப்பா பட்டியாலை கொண்டுவாற எருமைப்பாலை தயிராக்கி கட்டி கட்டியாக வெட்டிச் சாப்பிட எவ்வளவு நல்லாயிருக்கும். அதைவிட எருமைப்பால் புக்கை, சுவிஸ் கண்டோன், தோத்திடும், கள்ளியடியிலை சிறுபோகம் செய்தால் அப்பாவுக்கு அறுவடை 100 மூட்டையைத் தாண்டும். பச்சை அரிசிச் சோறும், எங்கடை ஊர், கோழிக்கறியும், என்னசுவை, இறாலும், நண்டும், வட்டுவாகல் கடல், மணலையும், முத்தையன் கட்டு மரவள்ளி கிழங்கும், போட்டு பெரியம்மா, காய்ச்சுற ஒடியல்கூழும், மாமரத்துக்கு கீழ் இருந்து பலாவிலையால கோலிக் கோலி ஒண்டாக இருந்து கூழ் குடிக்கிற காட்சியும் பின்னேர இடைவேளைக்கு அம்மம்மா பனங்காய்ப்பனியாரம் சுட்டு ஒளிச்சு வைச்சு தாறதும். நீ தான் சின்னவனின்ர ஒரே ஒரு பெடியன் நல்லாச் சாப்பிட்டு பழக்க வேணும் மெண்ட அந்தக் கிழவியின் ஆசை மரத்திலை ஏறி, மாம்பழம், பலாப்பழம், புடுங்கி தின்னும் அந்த நினைவுகள் எல்லாம் இன்னும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

வாகரையில் முடிந்த யுத்தம் மீண்டும், வன்னியில் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட சண்டை. முல்லைத்தீவையும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தையும் நெருங்கியது. இடம்பெயர்ந்த எல்லா மாவட்ட மக்களுடன் புதுக்குடியிருப்பு பிரதேச மக்களும் இடம்பெயரத் தொடங்கினர். குண்டுதாக்குதலையும், செல் வீச்சுகளையும் கண்டு நானும் கூட பயப்படத் தொடங்கினேன். உயிருடன் தப்புவமா எனக்கு பயமாக இருக்கு என்று அடிக்கடி

அம்மாவையும், அப்பாவையும் கேட்பேன். பங்கருக்குள்ளே பதுங்கியிருக்கிறது பங்கருக்குள்ளேயே அம்மா சமைப்பதையும், குடிதண்ணீர் அள்ளி வரப் போன அப்பா செல் விழுந்து செத்திட்டார். என்ற செய்தியும் தலையில்லாத அவரது உடம்பை யாரோ கொண்டு வந்து கொடுக்க அழக்கூட நேரமில்லாமல். அவசர அவசரமாக பங்கருக்குள் போட்டு மூடியதையும், நினைத்து பார்த்தான். பசிதாங்கேலாமல் மூன்றாவதக்கா சாக இனியும் பொறுக்கேலாது இராணுவத்திட்ட போவம் நடக்கிறது நடக்கட்டும் என்று போற சனத்தோட போய் கொண்டிருந்தபோது அக்காமார் இருவரையும் அம்மாவையும் பின்னால வாங்கோ என்று கூறியபடி போய் கொண்டிருந்த போதுதான் எங்கிருந்தோ வந்த குண்டு வெடித்ததும் கால் சிதறியதும், தலையில் காயமேற்பட்டதும் ஞாபகத்திற்கு வந்தது. "ஐயோ! திருச்செந்தூர் முருகா என்ர பிள்ளையைக் காப்பாற்று என்று அம்மா குளறியதும் தம்பி, தம்பி என்று அக்காமார் அழுததும் தான் தெரியும். அதன் பின் எனக்கு எதுவும் தெரியவில்லை" என்று கண்ணீர் மல்க தனது கடந்தகால வாழ்க்கையை பொலிசாரிடம் கூறினான். பெயர் விபரங்களைப் பெற்ற பொலிசார் கவலைப்படாதீங்க தம்பி உங்கடை குடும்பத்தை தேடிக் கண்டுபிடிச்சு மிகவிரைவில் உங்களை உங்கடை குடும்பத்தோட இணைத்திடுவம் என்று ஆறுதல் கூறிச் சென்றனர்.

Ward round ற்கு வந்த Doctor எப்படித்தம்பி உடம்புக்கு என்ன செய்யுது எங்க வலி இருக்கு என்றபடி குமரனைப் பரிசோதித்ததற்கு உடம்பு வலியை விட மனத்தின்ரை வலிதான் தாங்கேலாது என்ரை அம்மா அக்காமார் என்ன ஆனார்கள் என்பது எனக்குத் தெரிய வேணும் சேர் என்றான் என்றான். டொக்ரர் ஆவலுடன் பொறு, பொறு அமைதியாய் இரு எங்கடை அயராத முயற்சியாலை பல வருடங்களின் பின் இயல்பு நிலைக்கு வந்திருக்கின்றாய். இனி பொய்க்கால், பொருத்தவேணும். கனவேலை இருக்கு இப்பதானே உனது பெற்றோர் பெயர் விபரங்கள் குடுத்திருக்கின்றாய் விரைவில் அவர்களிடம் போய் சேரலாம் என்றவர் ,எங்கட நாட்டிலை ஆட்சியே மாறிட்டுது உங்களை மீள்குடியேற்றம் செய்து இந்தியன் வீட்டுத்திட்டங்கள் குடுத்து வீதியெல்லாம் அபிவிருத்தி செய்து மின்சாரம் கொடுத்து போக்குவரத்து எல்லாம் செய்திருக்கினம் என்றார். நானும் யாழ்ப்பாணம் தான் என்றவாறு உனக்கு சுனிலிடம் ஒரு தமிழ் பேப்பர் வாங்கிக் குடுக்கும்படி சொல்லியிருக்கிறேன்,. என்றவாறு அடுத்த நோயாளியை நோக்கிச் சென்றார் .

மதிய உணவுடன் வீரகேசரி பத்திகையுடன் வந்த சோமாவதியை கண்ட குமரன் ஆவலுடன் பத்திரிகையை வாங்கிப் புரட்டினான். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி நூல் நிலையத்தில் பத்திரிகை வாசித்தபோது கிபீர் சத்தத்தை கேட்டு ஓடி பங்கருக்குள் புகுந்ததும். அதற்குள் இருந்த பாம்பு நிமலனைத் தீண்டியதும். குமரனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. "தம்பி, சாப்பிட்டுப் பேப்பர் படிங்க" என்ற சோமாவதி அம்மாவின் அன்புக் கட்டளைக்கு செவிசாய்த்தவன் உணவைச் சாப்பிட்டவாறு தலைப்புச் செய்திகளை நோட்டம் விட்டான். வடபகுதியில் அதிகரித்துவரும் போதைவஸ்து பாவனை, பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள், கோஸ்டி மோதல்கள், வாள் வெட்டுச் சம்பவங்களை அடக்குவதற்கு ஒரு மாதகால அவகாசம் கோரும் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி, அரசியல் கைதிகளை உடன்விடுவிக்க, காணாமல் போனோர் தொடர்பான விசாரணைஅறிக்கை, ஏன் தாமதம்..... அதிகரித்து வரும் மதுபாவனை, பெண்பிள்ளைகளின்

பாதுகாப்பில் தாய்மார் கூடிய அக்கறை செலுத்த வேண்டும், ஏழு வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவு வடபகுதியில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். மாகாணசபையில் தீர்மானம், மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் நவீன தொடர்பாடல் சாதன பாவனை, சினிமா மோகத்தையும் தடுத்து கல்வியிலும், ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் ஈடுபட வழிகாட்ட வேண்டும், பட்டப் பகலில் பல லட்சம் ரூபா கொள்ளை என்று தலைப்பை வாசித்த குமரனுக்கு தலையே சுற்றியது. மறுபடியும் மயக்கம் வரும் போல இருந்தது. பத்திரிகையை தொப்பென்று கட்டிலில் போட்டான். என்ன தம்பி பேப்பரை வீசிட்டிங்க என்று தனக்கு தெரிந்த தமிழில் கேட்ட சோமாவதியிடம் இல்லையம்மா எங்கடை ஊரும் நிறைய மாறிப் போச்சுப் போல கிடக்கு என்றவன் ஏன் இந்த யுத்தம்? இத்தனை அழிவுகள் ஏன் வந்தது? ஆனால் இவ்வளவு அழிவைச் சந்திச்சாப் பிறகும் நாங்கள் ஏன் திருந்தவில்லை.

புதுமாத்தளனிலை இருக்கேக்க எங்கட உயிரைக் காப்பற்ற நாங்கள் பட்டபாடு சமாதானத்துக்காக நாங்கள் ஒவ்வொருவரும் ஏங்கின, ஏக்கம். எங்களுக்குத்தான் தெரியும் அழிவுகளை நேரடியாக அனுபவிச்ச எங்களுக்குத்தான் உண்மை தெரியும் இந்த நாட்டு அரசியல்வாதியல்கள் ஏன் எல்லாவற்றையுமே குழப்புகின்றார்கள் என்ற குமரனின் கேள்விக்கு, “தம்பி உலகத்தில் ஒரு லச்சம் செலவழித்து ஒரு கோடி உழைக்கக் கூடிய தொழில் அரசியல், சினிமா, போதைவஸ்து, குடிவகைகள் இவை இலாபம் தரக்கூடிய தொழில்கள் இதாலதான் அரசியல்வாதிகள் அரசியலுக்கு வாறாங்க நம்ம நாட்டிலை யுத்தத்திற்கு அடிப்படையே அரசியல்வாதிகள் தான். ஒற்றுமையாக வாழ நினைக்கிற தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களை வேறுபடுத்தி கட்சி ஆரம்பிச்சு இனவாதம் பேசி ஆட்சி அமைத்து அரசியலாலை நிறைய உழைச்சு தாங்க தங்க குடும்பகள் வசதியாக, ஆடம்பரமாக வாழ வைக்கிறாங்க, ஏழை, பொதுமக்கள் அடிபடுறாங்க இங்க பாருங்க நாம நயினாதீவுக்கு போன கப்பலில் பயணம் செய்யக்க சுனில் சத்தி எடுத்தான். அப்ப ஒரு தமிழ் அம்மா தண்ணி தந்தா நாம மனுசங்க இனம் பாத்தாவா அந்த அம்மா? கதிர்காமத்தில் நீங்களும் தம்பியை அருச்சனையோட நாமும் அருச்சனையோட ஒன்றா வரிசையாக நிக்கிறம். நமக்கு ஒற்றுமையாக நிம்மதியாக சமாதானமாக வாழ விருப்பம் ஆனா அரசியல்வாதிகள் விடுறாங்களில்லை;; ஒரு வளமும் இல்லாத சிங்கப்பூரில் பல இன மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து அபிவிருத்தி அடைய வில்லையா? கனடாவில் பல இனமக்கள் வாழ்வில்லையா? சுவிஸ்சில் வாழவில்லையா?” என்ற பொருளியல் பட்டதாரியான சோமாவதியின் கூற்றுக்கு தலை அசைத்தான் குமரன்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் பொதுமக்களும், ஊடகவியலாளரும், சட்டத்தரணிகளும், ஊழியர்களும், பொலீசாரும் நிறைந்திருந்தனர். பொலீஸ் அம்புலன்ஸ் வாகனத்தில் இருந்து ஊன்றுகோலை ஊன்றியவாறு வந்து இறங்கினான் குமரன். அதனைத் தொடர்ந்து தங்களது காரில் இருந்து சோமாவதியும், சுனிலும் இறங்கினார்கள். ஊன்றுகோலுடன் நின்ற குமரனை ஊன்றுகோலுடன் வயது முதிர்ந்த உருவம் ஒன்று வந்து “குமரன் ” என்று இறுகக் கட்டியணைத்தது. “அப்பா, அப்பா நீங்கள், நீங்கள்” என்றுகூற முன்பு ஓம் குமரன். நான் சாகவில்லை மாத்தளனிலை தண்ணி எடுக்கப் போன போது, நான் காயப்பட்ட உடன என்னை

கப்பலிலை ஏற்றிக்கொண்டுபோய், புல்மோட்டையில் வைத்து வைத்தியம் செய்து தப்பிட்டன் "அப்பா, அம்மா எங்கையப்பா" என்னைப் பார்க்க வரவில்லையா? என்றதற்கு இல்லைக் குமரன், அவ உன்னைக் காணாத கவலையில் பைத்தியம் பிடிச்சமாதிரி இருந்து கடவுளிட்டைப் போட்டாடா என்றவாறு குலுங்கிக்குலுங்கி அழுதார். ஐயோ! அம்மா உன்ர திருச்செந்தூர் முருகன் என்னை காப்பாற்றீட்டான் அம்மா என்றான் குழறியபடி மெதுவாக தம்பி, தம்பி என்று ஒரு கை தட்டியதைப் திரும்பிப் பார்த்த குமரன், "பெரியக்கா" என்றான். அழுதவாறு கையிலிருந்த சிறு பெண் குழந்தை மாமா, மாமா என்றது. இந்தாடா உன்ரை மருமகள் அம்மா மாதிரியே இருக்கிறாள். அம்மாவின்றை பெயர்தான் வைத்திருக்கிறம் என்றாள். உன்னைப் பார்க்க லண்டனிலை இருந்து வந்திருக்கிறேன் என்றாள். இரண்டாவது சகோதரி.

வழமையான பெற்றோரிடமான ஒப்படைப்பு சம்பந்தமான சட்டநடவடிக்கைகள் முடிவடைந்ததும், குமரனை நெருங்கிய ஊடகவியலாளர்கள் "உங்களது உணர்வுகள் எப்படியிருக்கிறது" என்ற கேள்விக்கு அமைதியாக பதிலளித்தான். குமரன் "எனது தாய், தந்தையுடன் சந்தோசமாக புதுக்குடியிருப்பில் வாழ்ந்தவன் நான் இன்று தாயை இழந்து சகோதரியை இழந்து, ஒரு காலை இழந்து, பல வருடம் நினைவிழந்து எனது தந்தை ஒரு காலை இழந்து நோயாளியாகி யுத்தம் தந்த பரிசு இவை. எனக்கு மட்டுமல்ல பல குடும்பங்களுக்கு இதேகதிதான் பிள்ளைகளை இழந்த தாய்மார், தாய்மாரை, தந்தையை இழந்து அனாதைகள் ஆக்கப்பட்ட பிள்ளைகள், கணவனை இழந்து தவிக்கும் மனைவிகள், குடும்ப உறுப்பினர்களை தேடும் உறவுகள், சிறைச்சாலையில் தமது இளமைக் காலத்தை தொலைத்துக் கொண்டு சிறைக்கம்பிகளின் உள்ளே ஏங்கும் எம் சகோதரங்கள். இவ்வளவு வேதனைக்கும் யார் காரணம்? சுயநல அரசியல்வாதிகளும், ஆயுத விற்பனையாளர்களும் தான். மக்களையும், இளைஞர்களையும், பிழையாக வழிநடத்தி அவற்றின் இன்பம் காணும் நம் அரசியல்வாதிகள் சாதாரண அப்பாவி மக்களின் வாழ்வில் இனியும் விளையாட வேண்டாம்.

இளம் சமுதாயத்தினரான எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள். எமது குடும்பங்களும் நாம் பிறந்த வாழ்ந்த சூழலில் எங்கள் உறவுகளுடன் ஒன்றாக இருந்து கல்வி கற்று ஒழுக்க விழுமியங்களை பின்பற்றி நிம்மதியாக எம்மை வாழ விடுங்கள். குடிபான உற்பத்தி கம்பனிகளிடமும், விற்பனையாளர்களுக்கும், போதைவஸ்து, விற்பனையாளர்களிடமும், ஆபாச சினிமா தயாரிப்பாளர்களிடமும் கெஞ்சிக் கேட்கின்றோம் உங்களது உழைப்புக்கும், வருமானத்திற்குமாக எமது இளம் சமுதாயத்தைச் சீரழிக்காதீர்கள். எமது இளைஞர், யுவதிகளே! நவீன தொடர்பாடல் சாதனங்களின் மாயையில் வீழ்ந்து உங்கள் காலங்களை வீணடிக்காதீர்கள் இன, மத, மொழி, சமய பேதமற்ற நாடாக சிங்கப்பூர், கனடா, சுவீஸ் போல் ஏன் நாம் மாறக்கூடாது. எங்களை நிம்மதியாக வாழவிடுங்கள் We Wont Peace என்றவாறு குமரனும், சுனிலும் கண்ணீர் மல்க உரத்து கையை உயர்த்தியவாறு கூறினார்கள்.

சிறுகதை ஆக்கம்:
சின்ராசா தனஞ்சிகா
க.பொ.த உயர்தரம் (உயிரியல் பிரிவு 2015)

# தந்தைக்காக..

அன்று காலை !!! பல்கலைக்கழகமே ஏதோ கோயிலாய் மாறிய ஓர் உணர்வு! காயத்ரி மந்திரமும் மற்றும் பல வேண்டுதல்களும் கணக்கற்று நடந்தேறிக் கொண்டிருந்தன. மாணாக்கர் அங்குமிங்கும் விடை பரிய புதிர் போல் அலைந்து கொண்டிருந்தனர். "கடவுளே....!!" எனும் வார்த்தை மாணாக்கரின் நாக்கில் நடனமிட்டவாறு இருந்தது.

அனைவருமே இன்று வரவுள்ள இறுதி பெறுபேற்றை வரவேற்க முழு மனதுடனும்........ இல்லை!! அரை மனதுடனும் காத்திருந்தனர். வாழ்க்கை எனும் ஆர்ப்பரிக்கும் கடலில் "பட்டதாரி" எனும் படகில் ஏற இருக்கும் இறுதி வாய்ப்பு என்பதால் யாவரது கண்களும் ஆச்சிரியக்குறியை ஒட்டவைத்து காத்திருந்தன.

இதே ஏக்கம் கலந்த கண்கள் அந்த வேப்பமர நிழலிலும் இருந்தது. அவன் ரமேஷ் அவனது கைகள் ஒன்றை ஒன்று இறுகப்பற்றி உறவாடிக் கொண்டு இருந்தன. இதயம் எழுபத்திரெண்டு முறைகளை தாண்டி அடித்துக் கொண்டிருந்தது. மனம் "அப்பாவின் கனவுகள் நனவாக வேண்டும்" என மாறி மாறி கூறிக்கொண்டிருந்தது. இந்த ஏக்கத்தின் இடையே வீசிய இளம் பூங்காற்று ரமேஷை இறந்தகாலம் நோக்கி இரக்கமின்றி இழுத்துச் சென்றது.

"செங்கல்லாறு கிராமம் தனது இன்றைய விடியலுக்காய் காத்திருந்தது. ரமேஷது அப்பா பெரியதம்பி ரமேஷிற்கு பாடசாலை சீருடை அணிவித்து கொண்டிருந்தார்.

"தம்பி ஆடமா நில்லு! நேரமாகுது!"
"சரியப்பா! தல வாரி விடுங்கோ"
"உம் எல்லாம் சரி! போவம் வாங்கோ"

தந்தையின் கனிவான பேச்சும் அன்பான அரவணைப்பு ரமேஷிற்கு தன் தாயின் இழப்பை நினைவிற்கு வராமல் தடுத்து வைத்திருந்தது. பெரியதம்பி ஒரு சாப்பாட்டு கடையை தன் ஊரிலேயே நடத்தி வருகிறார்.

"ரமேஷ் வடிவா இரு! பிறகு விழுந்துடுவா!"
"சரியப்பா!"
பெரியதம்பியின் யமஹா வண்டி புகை மூட்டங்களை

பரிவாரங்களாக்கி புறப்பட்டது. வழமைபோல் மகனை பாடசாலையில் இறக்கிவிட்டு வண்டி தன் கடை நோக்கி பயணமானது இடையே.

"பெரியதம்பி கொஞ்சம் நில்லப்பா! என்ன கொஞ்சம் பஸ் ஸ்டான்ல இறக்கி விட்டுர்றீயோ?" அது பக்கத்து வீட்டு தர்மனது குரல்.

"சரியப்பா! வா!" தர்மன் பெரியதம்பியின் பின்புறம் ஒட்காந்து கொண்டார்.

இரண்டு முறுக்கல்...... வண்டி, நகருவதாய் இல்லை, மூன்றாவது அழுத்தமான முறுக்கல் ஒரு பாரிய புகைமூட்டத்தோடு வண்டியை நகரச்செய்தது.

"என்ன பெரியதம்பி உடம்பெல்லாம் வேர்த்துக்கொட்டுது?"

"அது ஒண்டும் இல்லயண்ண! காலையில் புள்ளையோட மல்லுக்கட்டி பிறகு சமைச்சு ஒரே வேலைப்பளு!"

"பேசாம, இன்னொரு கல்யாணத்தைச் செய்து விட்டியெண்டா புள்ளயும் நல்லா இருக்கும் பாரன்!"

"இதெல்லாம் சும்மா கிடக்கிற வாய்க்கு பேச நல்லாயிருக்கும் நடைமுறைக்கு சரிவராது. இன்னொருத்தி வர அவளும் அவளுட புள்ளயளும் ஒண்ணாயிருக்க என்ர புள்ள தனியாயிடும்!" விழியருகே சில துளிகள்.

இந்த பேச்சு தர்மனத நாவை கட்டி விட்டாற்போல.... இல்லை.... அறுத்து விட்டதாய் உணர செய்தது இது வழமை தன் மகனையும், தன்னையும் யாரும் பிரித்து விடக்கூடாது என பெரியதம்பியின் மனம் கொண்டுள்ள சங்கற்பம் இன்று வரை தொடர்கிறது.

காலப்பெருநதியின் ஓட்டம், ரமேஷின் க.பொ.த(சா/த) பரீட்சை முடிவுகளை பெரியதம்பியின் கைகளில் சேர்த்தது. பட்டினியாய் கிடந்தவனுக்கு பந்திச் சாப்பாடு கிடைத்தது போல் ஓர் ஆனந்தம் இதே ஆனந்தம் இரு வருடம் கழித்தும் பெரியதம்பிக்கு கிட்டியது. அது உயர்தர பெறுபேற்றில் ரமேஷ் சாதித்தது.

இன்று ஒரு மகன் தன் தந்தைக்கு கொடுக்கக்கூடிய பேரானந்தம்.

இத்தனை வருட தவம் இன்று முடிவுறவுள்ளது.

"டேய் ரமேஷ்! வாடா ரிசல்ட் ஒட்டியாச்சு!" நண்பனது குரல் கேட்டு விழித்தான் ரமேஷ்.

"வாடா!" நண்பனின் அழைப்பை கேட்டு ஓரிரு அடிகள் வைத்திருப்பான் காற்சட்டை பையின் தொலைபேசியின் சிணுங்கல்.

"ஹலோ தம்பி!"
"யாரு!!.... யாரு பேசுறது?"
"நா...... தர்மன்ன!"
"சொல்லுங்க"
"ஹலோ!.... ஹலோ!.... சரி கேக்கல்ல!"
"தர்மன்ன! தர்மன்ன! இங்க கவரேச் கிடைக்கல்ல!...... ஹலோ!"

ரமேஷிடம் தொலைபேசி கோபுரமும் விளையாடியது.

"அட மச்சான் வாடா! பெடியன் குமிய போறனுவன்!"
"வர்றண்டா"

சக மாணாக்கருடன் முட்டி மோதி ஒட்டப்பட்ட ரிசல்ட் சீற் அருகே சென்றான் ரமேஷ்.

அது! அது! அவனது பெயர் தான்! பெரியதம்பி ரமேஷ், ரிசல்ட்! ரிசல்ட் என்ன? பார்ப்பதற்கிடையே மீண்டும் ஒரு அழைப்பு.

"சொல்லுங்க தர்மன்ன?"
"தம்பி! தம்பி!"
"கேக்குது சொல்லுங்க!"
"அப்பா! பெரியதம்பியண்ணா!"
"தர்மன்ன! அப்பாக்கு என்ன? அப்பாவுக்கு என்னாச்சு"

"நம்ம அப்பா....." முடிப்பதற்கிடையில் மீண்டும் அழைப்பு துண்டிக்கப்பட்டது. அழைப்பு மட்டுமல்ல..........

**க. ஷானுஷன்**
கணிதப் பிரிவு - (2017)



வைரவிழாக் குழுவினர்



மலர்க்குழு



பாடசாலை முகாமைத்துவக் குழு



உயர்தர மாணவர் ஒன்றியம் - 2015

# யானைக்குட்டி

தனுவுக்கு உள்ளூரக் கிளர்ந்த சிலிர்ப்பு காலவரை வந்திருந்தது. கால் நிலத்தில் பதிந்திருக்கிறதா இல்லையா என்பதைக்கூட அவளால் ஊக்கிக் முடியாதிருந்தது. காரணம் அவளால் செய்யப்பட்ட களிமண் யானைக்குட்டி உயிரோடு வந்து நிற்பது போலவும் துதிக்கையை அசைத்து அசைத்து அவளோடு கதை பேசுவதைப் போலவும் உணர்ந்தாள்.

நான்காம் ஆண்டு வகுப்பாசிரியர் எல்லோருக்கும் நேற்றுக் கூறியிருந்தார்.

"நாளைக்கு வரும்போது எல்லோரும் களிமண் எடுத்து உங்கட கையாலயே ஏதாவது ஒரு பொருளைச் செய்து கொண்டு வரவேணும்."

"ரீச்சர் குருவி செய்யிலாமோ?" வேணி குறுக்கிட்டாள்.

"ரீச்சர் நான் பாம்பு செய்யப் போறன்" மதன் கூறி விட்டுப் பெருமிதமாக உட்கார்ந்தான்.

"சரி சரி அமைதியாய் இருங்கோ. நீங்கள் விரும்பிய மாதிரி செய்து கொண்டு வாருங்கோ. எல்லாருக்கும் அழகியலுக்குப் புள்ளி போடுவன். சரி தானே" ரீச்சர் கூறி முடிக்க முன்னர் "ஓம்... ஓம்" என்று தினேஸ் கத்தினான். அவனைத் தொடர்ந்து வகுப்பெங்கும் "ஓம்... ஓம்" என்று குரல்கள் ஓங்கி யெழுந்தது.

தனு எப்படியாவது அழகான யானைக்குட்டி ஒன்று செய்வதெனத் தனக்குள் கற்பனை செய்தாள். அன்று பாடசாலையால் வீடு சென்ற சிறிது நேரத்திலேயே அப்பாவிடம் சொன்னாள். "அப்பா நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் அழகியல் பாடத்துக்கு எங்கட ரீச்சர் களிமண்ணில் ஏதாவது செய்து கொண்டு வரவேணுமென்று சொல்லிவிட்டவோ" என்று சொல்லி விட்டு அப்பாவின் முகத்தையே பார்த்தாள்.

"எனக்கெங்கேயம்மா நேரம் இருக்கு. இப்ப கடலுக்கு வெளிக்கிட்டால் விடியத்தான வருவன்" கூறியபடி வலையையும் தூக்கித் தோளில் போட்டபடி ஆயத்தமானார்.

"அப்பா எனக்கு களிமண் எடுத்துத் தந்தால் காணும் நான் செய்வன்." தனுவுக்கு ஒரே பதட்டமாக இருந்தது. எப்படியாவது அப்பாவை வைத்துக் களிமண்ணை எடுத்து விடவேண்டுமென்று குறியாய் இருந்தாள்.

"இல்லேம்மா இப்பவே எனக்கு நேரம் போட்டுது. வேலியடியில் கிடக்கிற புத்தில் மண்ணை எடுத்துச் செய் புள்ள நான் போட்டு வாறன்" கூறியபடி சைக்கிளை மிதித்தார்.

தனுவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. எப்படியாவது ஒரு யானை வடிவம் மண்ணில் செய்தேயாக வேண்டும். வேலியடிக்குப் போய் புற்றைப் பார்த்தாள். தன்னைவிட உயரமாக இருந்த புற்றை எப்படி வெட்டி மண்ணை எடுப்பது என யோசனையாக இருந்தது. உள்ளே பாம்பு, பூச்சியிருக்குமோ என அச்சம் வேறு அவளைக் கிலி கொள்ள வைத்தது.

மண்வெட்டியைக் கொண்டு வந்து கொத்தினாள். மண்வெட்டி தூக்கவே முடியாதிருந்தது. மண்வெட்டி திரும்பி வந்ததே தவிர மண் வரவில்லை. அம்மாவிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று புதிய யோசனை கிளம்பியது. மண்வெட்டியைப் புற்றடியில் வைத்து விட்டு தாயிடம் வந்து தன் இயலாமையைச் சொன்னபோது தாய் குழந்தைக்குப் பாலூட்டியவாறிருந்தாள். தனுவுக்கு அடுத்து என்ன செய்வது என சிந்தனையில் மீண்டும் புற்றடிக்கே வந்தாள். இப்போது புற்று இன்னும் உயரமானது போல தோற்றம் காட்டியது. நேரம் செல்லச் செல்ல அவளுக்கு கைகால்களில் உதறல் எடுக்கும் போல இருந்தது.

'மதன் என்ன செய்திருப்பான்? வேணி குருவி செய்வதாகச் சொன்னாள். தினேஸ் ரமணி, குயிலினி எல்லோரும் இப்ப என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கின்றார்களோ' என நினைத்த போதே தனுவுக்கு அழுகை வந்துவிடும் போல இருந்தது.

ஏதோ நினைத்தவளாகச் செம்பில் தண்ணீரைக் கொண்டு போய் புற்றில் ஊற்றினாள். வறண்டு போயிருந்த புற்றின் பரப்பில் தண்ணீர் ஓடி ஈரம் தெரிந்தது. மீண்டும் ஒரு செம்பில் கொண்டு வந்த தண்ணீரை அதன்மேல் ஊற்றினாள். ஈரம் படர்ந்து விட்டிருந்த இடத்தில் மண்வெட்டியால் வெட்டி எடுத்தாள். யானை செய்வதற்குரிய மண் கிடைத்து விட்டது. மனதில் சந்தோசம் கட்டுக்கடங்காமல் பீறிட்டெழுவதை அவளேயுணர்ந்தாள்.

தன்னால் செய்யப்பட்ட யானைக்குட்டியைப் பார்க்கப் பார்க்க அவளாலேயே நம்பமுடியாதிருந்தது. தடவித் தடவிப் பார்த்துக் கொண்டாள். கைகளுக்குள் யானை அசைவது போலவே இருந்தது. ரீச்சருக்குக் காட்டும்போது ரீச்சரின் முகத்திலெழும்புகின்ற ஆச்சரியமும், பாராட்டிப் புள்ளி போடும் போது ஏனைய மாணவர்கள் தன்னைப் பார்க்கப் போகும் காட்சியையும் எண்ணியபடி யானையைத் தூக்கித் தோளோடு

சேர்த்தணைத்தபடி பாடசாலைக்கு நடந்தாள்.

வகுப்பில் உள் நுழையும் போதே மற்ற மாணவர்களைப் பெருமிதமுடன் பார்த்தாள். அம்மி, குளவி, பாம்பு, மாடு எனக் களிமண் வடிவங்கள் மேசைகளில் இருந்தன. தனது யானையைப் பக்குவமாகத் தன் மேசையில் வைத்தாள் தனு.

"ஏண்ரி தனு இது உனக்கு யார் செய்து தந்தது?" வேணி கேட்டாள்.

"என்ன வடிவாய் இருக்கு எனடா" சுரேஸ் அவளது யானையைப் பார்த்தபடி மதனுக்குக் கூறினான்.

அவரவர் உருவங்களை வருடியும் தூக்கியும் பார்த்தபடியே இருக்க ஆரம்ப மணியடித்தது. தனு அடிக்கடி வாசலுக்கு வந்து ரீச்சர் வருகிறாவா என எட்டி எட்டி பார்த்தபடியிருந்தாள்.

காலைக் கூட்டமும் முடிந்த பின்னரும் வகுப்பாசிரியர் வராததைக் கண்டு தனுவுக்கு ஏக்கமாக இருந்தது. வகுப்புக்களுக்குக் கலைந்து போன மாணவர்களின் ஒலிகள் அடங்கி அமைதி பிறந்தது. தனு வாசலில் நின்றபடியே ரீச்சரைப் பார்த்தாள். வரவில்லை. 'இன்று வராமலே விட்டுவிடுவாரா' நினைக்க தனுவுக்கு இருந்த ஆவல் மெல்ல விலகும் போலிருந்தது.

வகுப்பறை அமைதியற்றிருக்க பிள்ளைகள் ஒவ்வொருவரும் மாறி மாறி உருவங்களைப் பார்த்தபடி திரிந்தனர்.

மதன் தனுவின் யானைத் தூக்கிப் பார்க்கும் போது சுரேஸ் பறித்தான்.

"தாடா நான் பார்த்திட்டுத்தாறன்."

"விடுடா நான் பார்த்தாப்பிறகு நீ பாரடா" மதன் இழுக்கும்போது யானையின் ஒரு கால் ஒடிந்து விழுந்தது. மதனுக்குப் பயம் தொற்றிக்கொண்டு நைசாக நழுவுவதற்குப் பிளான் பண்ணும் போது தனு பிடித்தாள். "உடைச்ச மாதிரி ஒட்டித்தாடா" என்று கையைப் பிடித்தாள். அவள் பிடித்திழுக்கும் போது மதன் கையிலிருந்த யானை கீழே விழுந்தது.

உடைந்து, துண்டங்களாகிய யானையின் உருவைப் பார்த்தாள். மண்ணும் மண்ணாங்கட்டிகளுமாய் நிலத்தில் கிடந்தன. கண்களில் வழிந்த கண்ணீரில் யானையின் உருவமழிந்து போனது.

க. மதியந்தி

கலைப்பிரிவு (தரம் 12B)

# மனித வாழ்வில் விஞ்ஞானம்

விஞ்ஞானமானது மண்ணை விட்டு விண்ணைத் தொட்டு ஞானம் புரிகின்றது. "நிலா நிலா வா வா " என்றார்கள் அந்தக் காலம். நிலாவிற்கு சென்று வந்தார்கள் இந்தக்காலம். வேட்டுப்பரம்பரை இனம் ஆய்வுக்காக செவ்வாய்க்குச் சென்றுவிட்டது. நேற்றைய மனிதன் காட்டை அழித்து வீட்டைக் கட்டினான். இன்றைய மனிதன் விண்ணிலே தேரினை ஓட்டுகின்றான் . நாளைய மனிதன் ஈரேழு உலகை ஆழப்போகின்றான். இவ் விஞ்ஞானத்தொழில்நுட்பம் பல்வேறு துறைகளினூடாக தன் கிளைகளைப் பரப்பி அசைக்க முடியாத மாபெரும் விருட்சமாயுள்ளமை யாராலும் மறுக்கத்தக்க உண்மையாகும்.

காலங்கள் பல கடந்து இன்னொரு பொற்காலத்திலே வேகமாக வீறுநடை பயிலுபவனாக இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்பு தட்டி எழுச்சியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் கணினி யுகம் இது என்று கூறினால் மிகையல்ல. விலங்குகளுடன் தம்மையே யாரென்று தெரியாது தம்மை மறந்து நடை பயின்றது அந்தக்காலமாக இருந்தது. எனினும் இன்று மனிதன் நன்கு முன்னேற்றம் அடைந்து விட்டான். மாற்றங்கள் நிலையான மாறுகின்ற உலகினிலே மானிடனின் மாற்றத்தை ஏற்றுக் கொண்டு கால நீரோட்டத்திற்கு ஏற்ப கங்கு கரை தெரியாமல் துரித முன்னேற்றம் அடைந்து கொண்டுள்ளான்.

நவீன வளர்ச்சியின் புரட்சிப் பின்னணியில் பல துறைகளுமே சங்கமித்து நிற்பதோடு உலகாயுத சிந்தைனைத் திறனடிப்படையில் பூகோள மயமாக்கலும் மனிதனை ஆட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்று இவ் விஞ்ஞானத் தொழில்நுட்பமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், போக்குவரத்து, கல்வி, மருத்துவம், வணிகச் செயற்பாடுகள், விண்வெளி ஆய்வுத்துறை, ஆய்வுச்சட்டம், பல்லூடகம் என இன்னோரன்ன செயற்பாட்டு அம்சங்களில் செவ்வனே தன் பணியை அளித்து இன்று விண்வெளியிலே கேளிக்கைகளையும் உபசார அறைகளையும் அமைக்குமளவிற்கு வளர்ச்சிப் படியேறி நிற்கின்றது என்றால் அது இருபத்தோராம் நூற்றாண்டின் வரம் என்று தான் கூற வேண்டும். எந்த ஒரு விடயத்தை பொதுவாக நோக்கினாலும் "அனுகூலம் ஒன்று இருந்தால் பிரதி கூலங்கள் பல மடங்காக இருக்கும் " என்பது படித்தவர் முதல் பாமரர் வரை உணரப்பட்ட வாழ்வியல் அம்சம். இதன் பொருளும் , கூடிய விளைவுகளும் தொழில்நுட்பப் புரட்சியின் இயற்கைக்கு மாறான அணுகு முறையால் விளைந்துள்ள அனர்த்தங்களின் கோர வடுக்கள் பறை சாற்றி நிற்கின்றன.

இன்றையளவில் விஞ்ஞானமானது எவ்வாறு தகவல் தொடர்பாடல் துறையில் பங்காற்றி வருகிறது ? என்பதை ஆராய்ந்து பார்ப்போமானால், பண்டைக் கால மனிதன் தன் தொடர்பாடல் கருமங்களை புகை எழுப்புதல், கொடி காட்டுதல், புறாவிடம் கடிதம் கொடுத்து

அனுப்புதல், பறை அடித்தல் மூலம் பரிமாறிக் கொண்டான். ஆனால் இன்று பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மின்னஞ்சல், தொலைநகல், இணையம் என பல்வேறு அற்புதமான கண்டுபிடிப்புக்கள் இப் பிரபஞ்சத்தில் குறைந்த காலத்தில் கூடிய விளைதிறனுடையதாக செய்திப்பரிமாற்ற வழி வகை செய்தது எனலாம்.இவற்றிலும் அருமையான கண்டுபிடிப்பான இணையம் தொலைவு எனும் நிலையைத் தாண்டி பூகோளக் கிராமமாய் செயற்பட வைத்துள்ளது நிதர்ஷனமான உண்மையாகும். இன்றையளவில் இதனாலேயே "இவ்வுலகை இவ்வுள்ளங்கையினுள் அடக்கி செயற்பட வைத்துள்ளது" என்ற கருத்து முதன்னிலை பெற்றுள்ளது.

தற்போது விஞ்ஞானத்தின் பங்களிப்பு எவ்வாறு போக்குவரத்து துறையில் பங்காற்றி நிற்கின்றது? என்பதனை ஆராய்ந்து பார்க்க முற்படுவோமானால், போக்குவரத்து பண்டைய காலங்களில் நடைப்பயணமாகவே இடம்பெற்றது. பின்பு சக்கரத்தைக் கண்டுபிடித்து போக்குவரத்தில் சிறியளவான மாற்றத்தைக் கொண்டு வந்தான். இன்று நிலம், நீர், வான், அண்டவெளி எனப் போக்குவரத்து இடம்பெற்று வருகிறது.இன்றையளவில் நாளுக்கு நாள் வித்தியாசமான திறனுள்ள, உயர் வினைத்திறனுடைய அற்புதமான பலரக வாகன உற்பத்திகள் இப் போக்குவரத்தினை இமயப்பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. அது மட்டுமன்றி இன்றைய மனிதர்கள் விடுமுறைக் காலங்களில் கடல் தாண்டிச் சுற்றுப் பயணம் செய்வதைத் தவிர்த்து விண் தாண்டி சுற்றுலாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தரைவழிப் போக்குவரத்து சாதனங்களில் இவ்வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தது கைத்தொழில் புரட்சியின் போது "டெம்லர்" ஆல் கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆகும். இவ்வாறான நவீன போக்குவரத்து சாதனங்களால் எமது வாழ்வானது வினைத்திறனாக்கப்பட்டுள்ளமை மிகையல்ல.

அழியாச் செல்வமான கல்வியின் வளர்ச்சியில் விஞ்ஞானத்தின் செல்வாக்கினை பகுப்பாராய்ந்து பார்ப்போமானால், இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வித்துறை இமயத்தை எட்டியுள்ளது. அல்லது விஞ்சியுள்ளது எனலாம். கல்வி என்ற கங்கு கரையற்ற கடலில் தேடல் என்ற படகினை ஆழத்திலிருந்து உச்சிக்கு கொண்டு செல்வதற்கான சேவையை இணையம் வழங்கி வருகிறது. இணையத்தின் மூலம் மாணவர்கள் தமக்குத் தேவையான "நூல்களின் பக்கங்கள், தகவல்கள், அறிஞர்களது கருத்துக்கள், விரிவுரையாளர்களது உரைகள் " என எந்தவொரு விடயத்தினையும் திரிபுற ஆணித்தரமாக அறிந்து கொள்வதற்கும் இணையம் என்ற விஞ்ஞான விளைபொருள் இன்றியமையாத இணையற்ற சேவையினை வழங்கி வருகின்றது. இவ்வாறான விஞ்ஞானத்தின் செயற்பாடுகளால் அழியாச் செல்வமாகிய கல்வியை வாழ்நாளில் இலகுவாக பெற வழிவகை செய்துள்ளது.

மனிதன் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கான பின்னணியை நவீன மருத்துவம் ஏற்படுத்தி கொடுத்துள்ளது. பேய் பிடித்து விட்டது என்று உயிரை மாய்த்துக் கொள்ள முற்பட்ட மனிதனுக்கு நோயைத் தவிர்த்து சுகாதாரத்துடன் வாழ்வதற்கான முக்கியத்துவத்தை உணர்த்தியது நவீன மருத்துவம். தற்போது எந்த நோயையும் தீர்க்கக் கூடிய மருந்துவங்கள் வலுப்பெற்றுள்ளது. இன்று இதய மாற்றுச் சிகிச்சை, செயற்கை இதயம் பொருத்துதல், கழியொலி அலைகள் மூலம் கற்களைக் கரைத்தல் போன்ற பல்வகையான சிகிச்சை முறைகள் இன்று மனிதனை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அதுமட்டுமன்றி இவ்விஞ்ஞானம் தன்மானத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக பருத்திப்பஞ்சின் பக்குவத்தை உணர்த்தியது விஞ்ஞானம். இவ்வாறாக விஞ்ஞான தொழில்நுட்பம் நம் வாழ்வை இலகுவாக்கியுள்ளது.

எவ்வாறெனினும் நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல இவ் விஞ்ஞானத்தால் விளைந்த விளைவுகளிலும் தீமை உண்டு. இன்றையளவில் இவ்விஞ்ஞான தொழில்நுட்பமானது உலகாயுத உற்பத்திக்கும், அணுகுண்டு உற்பத்திக்கும் காரணமாக மனிதனை ஒரு கொடூரமான மனிதத் தன்மை அற்ற விலங்காக மாற்றுகின்றது. உதாரணமா இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஐக்கிய அமெரிக்கா ஜப்பானின் மீது 1945ம் ஆண்டு ஆவணி மாதம் ஆறாம், ஒன்பதாம் திகதிகளில் ஹிரோசிமா நாகசாகி மீது வீசப்பட்ட குண்டுகளால் இன்றும் அதன் கொடூரமான விளைவை ஜப்பான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி இன்று விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவினை தீவிரவாதிகள் பயன்படுத்தி இவ்வுலகிற்கு தீங்கினை ஏற்படுத்துகின்றனர். அதை விட இன்றைய வெகுசனத்தொடர்பு சாதனங்கள் ஒரு சிலரால் தீயவழியில் அல்லது பிழையான பாவனைக்கு பயன்படுத்தப்படுகின்கின்றது.

எனவே நவோத் தொழில்நுட்ப உலகினிலே இம் மண்ணின் மைந்தர் நாம் விஞ்ஞானத் தொழில்நுட்பம் நமக்கு ஏற்படுத்தும் நன்மைகளைப் பயன்படுத்தி நம் வாழ்வை செம்மையாக்கி தீமைகளைத் தவிர்த்து ஒழுக்க சீலர்களாக வாழ்வோமாக.

கி. சிரஞ்சித்
தரம் 11 E
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



பட்ட துயர் பறந்தோடப்
பாட்டொன்று இசைத்திடவே
பட்டுத் துகிலுடுத்தித்
திக்கெட்டும் புகழ் பரவ
தகிட தகதிமி
தான் போட்டாடணங்கே
சலங்கைகள் அதிரட்டும்
புத்தொளி பிறக்கட்டும்

சி.வசிகரன்
தரம் – 12 A கலைப்பிரிவு

பொருளாதாரத் துறையைப் பொறுத்தவரையில் இன்று அநேகமான வியாபாரங்கள் இணையத்தளங்கள் ஊடாகவே இடம்பெறுகின்றன. பங்குச்சந்தை வியாபாரங்கள், வாகன விற்பனைகள் செல்லப் பிராணிகள், வியாபாரம் என்பன இலத்திரனியல் வர்த்தகத்தின் ஊடாகவே இடம்பெறுகின்றது. e-Money, e-bank, e-bill, e-Payment என்பன இலத்திரனியலே முக்கிய ஊடகமாக விளங்குகின்றது. பொழுது போக்குகின்ற நோக்கில் தாம் விரும்பியபடி நட்புறவு கொள்ளவும், படிக்கவும், படங்கள் பார்க்கவும் இன்று தொடர்புத்துறை விரிவடைந்துள்ளது. இன்று வெளியாகும் சினிமாப்படங்களை இன்றே பார்க்க முடியும். விளையாட்டுச் செய்திகள், அதிசயங்கள், அபூர்வங்கள் என எல்லாம் இன்று இலத்திரனியல் ஆதிக்கத்தில் அடங்கியுள்ளது.

தொடர்பாடற் சாதனங்கள் உலகை ஆளுகின்ற அல்லது இயக்குகின்ற கருவியாக மாற்றமடைந்ததன் பின் அறிவுசார் முகாமைத்துவக் கோட்பாடுகள் வளர்ச்சியடைந்தன. அறிவுத்திறனில் முன்னிலை வகிக்கும் நாடே உலகின் ஆதிக்கம் பெறுகின்ற நாடாக வலுப்பெற்றது. அதேபோல் தொடர்பாடல் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற நாடுகள் முன்னணியில் திகழ்கின்றன. உதாரணமாக அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்றனவாகும்.

தொடர்பாடல் சாதனங்கள் நேரான வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருப்பினும் கூட கலாசார பண்பாட்டு விழுமியங்களில் எதிரான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தென்பதும் மறக்கமுடியாத உண்மையாகும். இன்று "Face Book" மூலம் ஏற்படுகின்ற காதல் உறவுகள், பொருள் விற்பனைகள் மற்றும் இணையத்தின் மூலமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற பாலியல் காட்சிகளும் இளம் சமுதாயத்தின் மத்தியில் நெறிபிறழ்விற்கான காரணியாக அமைகின்றது. அதுமட்டுமல்லாமல் கொலை மிரட்டல்கள், வன்முறைகள், பலாத்காரங்கள் எனப்பல இழிநிலைகளைத் தோற்றுவிப்பதற்கும் காரணமாக அமைகின்றன.

தொகுத்து நோக்கின் தொடர்பாடற் சாதனங்களைக் கையாளுகின்ற தனி மனிதனுடைய மனப்பக்குவமே அதனுடைய சமூக தாக்கத்தைத் தீர்மானிக்கின்றது. இளைய தலைமுறையினருக்கு நவீன தொடர்பாடற் சாதனங்கள் ஒரு பொருளாதார உற்பத்தியூடகமாக பயிற்றுவிக்கின்றபோது பொருளாதார நிறைவுமிக்க சமூகமாக மாற்றுவதற்கு ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**ர. பவித்திரன்**

தரம் - 7D

புதுக்குடியிருப்பு ம. கல்லூரி

# பொறுமையைக் கடைப்பிடிப்போம்

இறைவனின் படைப்பில் மனிதன் என்ற படைப்பு சிறப்பானது, மேன்மையானது. மற்றைய ஜீவராசிகளுக்கு எல்லாம் ஐந்தறிவினை கொடுத்த இறைவன் மனிதனுக்கு மட்டும் ஏன் ஆறு அறிவைக் கொடுத்தான். அன்பு, பாசம், மனிதநேயம், நட்பு, பிரிவு, பொறுமை போன்றவற்றை உணர்ந்து கொள்கின்றான். இவ் மனிதன் வாழ்க்கைப் பாதையிலே பல்வேறு இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றான். இவ் இன்ப, துன்பங்கள் வாழ்க்கைச் சக்கரத்திலே தொடர்ச்சியாக நிகழ்கின்றன. போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கையில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். இவ் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு மனித பிறிவியை சாதனை கொண்டதாக மாற்ற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். முயற்சி செய்வதினாலேயே நல்ல இலக்குகளை அடையமுடியும். சந்தோசங்களையும் அமைதியினையும் ஒரு சிலரே அனுபவிக்கின்றார்கள் என்றால் அதில் காரணங்கள் இருக்கின்றன. மனிதனுடைய வாழ்க்கையில் துன்பம் இல்லாததாக மாற்ற வேண்டுமானால் நல்ல பண்பாட்டு ஒழுக்கங்களை வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டும்.

வாழ்க்கையிலே ஏற்படுகின்ற பிரச்சினைகள் வராமல் தடுக்க வேண்டுமானால் "பொறுமை" என்ற உயரிய பண்பை கடைப்பிடிப்பார்கள் ஆயின் வாழ்க்கையிலே துன்பங்கள் வராது. பிரச்சினைகள் வராது. வாழ்க்கை பாதையிலே வெற்றி பெறுவது இலகு. மேலும் கருத்து முரண்பாடுகள், பகை தோன்றக் காரணம் பொறுமை என்ற நற்குணத்தை இழப்பதினாலேயே ஆகும். இதனை வள்ளுவர்

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத்
தம்மை இகழ்வார் பொறுத்தல் தனல்"**

அதாவது பூமியினை நாம் கொத்தி, வெட்டி, குழிகள் தோன்றி பல்வேறு அழுக்குகளை பொறுத்து எம்மை எல்லாம் தாங்குகின்றாள். எமக்கு நிறைந்த வளங்களை தருகின்றாள். இங்கு பொறுமைக்கு பூமி தாயை ஒப்பிடப்படுகின்றது. அதாவது "எமக்கு துன்பம் செய்வோர்க்கும் பொறுமையாக இருந்து நன்மை செய்ய வேண்டும்". பூமியை போன்று நாமும் பொறுமையினை கடைப்பிடித்து வாழ வேண்டும். பொறுமையினை கடைப்பிடிப்பவர்கள் இவ்வுலகில் புகழுடன் வாழ்கின்றார்கள்.

பிறர் கூறுகின்ற கருத்துக்களை பொறுமையுடன் செவிமடுக்க வேண்டும். பிறர் கூறுகின்ற கருத்துக்கள் நமக்கு கோபத்தை தரக் கூடியதாக இருந்தாலும் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு கோபம் கொள்வதை வைத்திய நூல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

**''நீ கோபித்து கொள்ளும் ஒவ்வொரு நிமிடமும்**
**அறுபது விநாடி இன்பத்தை இழக்கின்றாய்"**

எனவே கோபம் கொள்வதால் ஏற்படுகின்ற பிரச்சினை எமக்கு இன்பத்தை இழக்கச் செய்கின்றது. பிரச்சினைகளைத் தடுப்பதற்கு பொறுமையை கடைப்பிடித்தல் அவசியமாகும். இன்று தனிநபர்களுக் கிடையேயும், குடும்பங்களிற்கிடையேயும் பல்வேறு கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணம் பொறுமையை கடைப்பிடியாமையே ஆகும். இன்று சில குடும்பங் களிலும் சரி, நிறுவனங்களிலும் சரி இனிமையான உரையாடல் இடம்பெறுவதில்லை. இதனால் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே பொறுமையினை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

பொறுமையினை ஞானி ஒருவர் பின்வரும்ாறு கூறுகின்றார்.

**"பொறுமை இதயத்தின் பொக்கிசம்**
**சமாதானத்தின் தூதுவன்**
**வீரத்தின் சிகரம்**
**அமைதியான வாய்க்கால்**
**பொறுமை வல்லவனே பூரண மனிதன்"**

இதன் மூலம் பொறுமையின் சிறப்பை அறிந்து கொள்ளலாம். எமது நடைமுறை வாழ்க்கையிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு வாழ்க்கையிலே நடைபெறுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பொறுமையாக செயற்பட வேண்டும். சின்னச் சின்ன பிரச்சினைகளையெல்லாம் பெரிதாக்கக் கூடாது. பிறருடைய மனம் புண்படாதவாறு எமது செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கையிலே எவ்வாறான பிரச்சினைகள் தோன்றினாலும் நாம் பொறுமையினை இழக்கக் கூடாது. பொறுமையினை இழப்பதினாலே ஏற்படுகின்ற பிரச்சினையை பற்றி சற்று சிந்திக்க வேண்டும். இன்று பொறுமையினை இழப்பதினால் பல குடும்பங்கள், காதலர்கள், நண்பர்கள் பிரிந்து வாழ்கின்றனர். எனவே பொறுமையினை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

**"சினம் கொள்வது ஆண்மையாகாது.**
**பொறுமையும் இன் சொல்லும் தான்**
**ஆண்மை. அதுவே வீரம் சினம்**
**கொள்பவன் ஆற்றலும் தைரியமும் அற்றவன்"**

என ஆத்மா சிந்தனையில் கூறப்படுகின்றது. அற்ப விடயங்களுக்கு கோபம் கொள்ளக்கூடாது. பொறுமையாக செயற்பட வேண்டும். பொதுவாக பொறுமை குணம் படைத்தவர்கள் தான் வாழ்க்கையிலே வெற்றி பெறுகின்றார்கள். துன்பங்கள் இல்லாமல் வாழ்கின்றார்கள். பொறுமையினை இன, மத பேதமின்றி எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இக்காலத்திலே பொறுமைக் குணம் உள்ளவர்களும் பல்வேறு சோதனைகள் வருகின்றன. இருந்தும் இச்சோதனைகளை சாதனைகளாக மாற்றி வருகின்றார்கள். பொறுமையினைக் கடைப்பிடிப்பதால் நன்மையே கிடைக்கும். **"பொறுமையே பூமியை வெல்லும்"** என கூறப்படுகின்றது.

பொறுமையினை கடைப்பிடிப்பதால் வாழ்க்கையிலே வெற்றியே கிடைக்கும். இதனை ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் அறிந்து கொள்ளலாம். பொறுமையினை கடைப்பிடிக்காமையினால் வாழ்க்கையிலே பலர் நின்மதி இன்றி வாழக்கின்றார். **"பொறுமையே புரட்சியின் ஆரம்பம்"** என கூறப்படுகின்றது, மேலும் மகாபாரத்திலே **"வில்லுக்கு விஜயன் மல்லுக்கு வீமன், பொறுமைக்கு தர்மன்"** என கூறப்படுகின்றது. அதாவது தர்ம மகாராசாவுக்கு எத்தனையோ சோதனைகள் நிகழ்ந்தன. நாடிழந்து, கட்டிய மனைவியை இழந்து கடைசியில் திரௌபதி மானபங்கப்படுத்தப்பட்ட நிலையிலும் மனம் தடுமாறாது பொறுமையாக **"பொறுத்தார் பூமி ஆழ்வார் பொங்கினார் கடலாழ்வார்"** என்றொரு பழமொழியும் உண்டு. அதாவது இவ் பூமியை ஆட்சி செய்யும் அளவிற்கு பொறுமை ஒருவரை உயர்ந்த வல்லது பொறுமையினை இழப்பதினால் ஏற்படுகின்ற விளைவு பாதகமானது.

இப் பொறுமைக் குணம் இல்லாதவர்களிடம் கர்வம், பிறரைக்கெடுக்கும் மதி, குறுகிய மனப்பாங்கு, தப்பான எண்ணம் போன்ற தீய எண்ணங்கள் மேலோங்கி காணப்படுகின்றன. பொறுமை என்னும் உயரிய குணத்தை கடைப்பிடித்து வேண்டும். எதை இழந்தாலும் பொறுமையினை இழக்கக் கூடாது என்பார்கள். எனவே அனைவரும் பொறுமையினை கடைப்பிடித்து அமைதியும் பூரணத்துவமுடைய வாழ்க்கையை நடக்க முயற்சிக்க வேண்டும்.

க. வினோதினி
கலைப்பிரிவு - 2016
(தரம் 12B)

# மொழி ஆய்வகம்

மொழி ஆய்வகம் என்பது கல்வியியல் தொழினுட்பத்தின் அண்மைக் கால அதிசயமாகும். மொழிப் பயிற்சிக்கு மிகச் சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ள மொழி ஆய்வகத்திற்கு ஒரு தனிச்சிறப்புண்டு.

நவீன கல்வியியல் தொழினுட்பத்தின் ஓர் அம்சமாக அமெரிக்கர்கள் இதனைக் கண்டறிந்தனர். மொழி ஆய்வகங்களில் உச்சரிப்பு, சொற்களுக்கான பொருள், உச்சரிக்கப்பட வேண்டிய அளவு முறை இவையனைத்தும் ஒலி ஊடகத்தின் வாயிலாகக் கற்பிக்கப்படுகின்றன. எந்த நாட்டு மொழியோ அந்த நாட்டின் தன்மைக்கேற்ப உச்சரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதே இந்த மொழி ஆய்வகத்தின் நோக்கமாகும். ஒரு மொழியை கற்றுக்கொடுக்கும் போது அந்த மொழியில் பேசவும் உ எழுதவும், படிக்கவும் ஒரு மாணவனால் முடிய வேண்டும்.

மொழி ஆய்வகத்தின் கற்பித்தல் முறையில் ஆசிரியர் முதலில் மாஸ்ரர் ரேப்பை ஓடவிடுவார். அந்த ஒலிநாடாவில் உள்ள பாடங்கள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மாணவர்கள் முன் உள்ள ரேப்றெக்கோடரில் பதிவாகும். இதன்பின் ஒவ்வொரு மாணவரும் தான் பதிவு செய்த பாடநகலை ஓடவிட்டு கவனிக்கத் தொடங்குவர். குறிப்பிட்ட சில இடங்களில் அவர்களும் அந்தப் பாடங்களை உச்சரிப்பர். இவர்கள் உச்சரிப்பது மற்றொரு பதிவுக் கருவியில் பதிவாகும். பின் தமது உச்சரிப்பும், ஒலிநாடாவில் உள்ள உச்சரிப்பும் பொருத்தமாக இருக்கிறதா எனக் கவனிப்பர். தமது உச்சரிப்பு சரியாக வரும் வரை மீளப்போட்டுக் கேட்பர்.

நவீன கருவிகள் கொண்ட மொழி ஆய்வகத்தில் இரட்டைத் தட ஒலிநாடாக்கள் இருக்கும் ஒரே பதிவுக் கருவியில் ஒரு தடத்தில் பாடத்தினையும் மற்றொரு தடத்தில் மாணவரின் குரலையும் பதிவு செய்து கொள்ள முடியும். இதன் மூலம் உச்சரிப்பு சரி செய்யப்படும்.

இவ்வகை மொழி ஆய்வகங்களில் ஆசிரியர் கொடுக்கும் பாடங்கள், மாணவர்கள் தாமாகவே தேர்வு செய்து கொள்ளும் பாடங்கள், தொலைபேசி டயல் போல குறிப்பிட்ட சில எண்களை சில எண்களை அழுத்தி அதிலிருந்து பெறும் பாடங்கள் என பலவகைகள் உள்ளன.

முழுமையான மொழி ஆய்வகமானது வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனிப் பகுதிகளை (பூத்) கொண்டதாக அமைக்கப் பட்டிருக்கும். ஒவ்வொரு பகுதியிலும் ஒலிநாடா, இயபோன், மைக்ரோபோன்

இவற்றுடன் ஒலிநாடாவை இயக்கவும், மாணவர் பேச்சைப் பதிவு செய்து கொள்ளவும் தனித்தனிக் கருவிகள் இருக்கும். ஆசிரியர் தன் வகுப்பறையிலிருந்தே இவற்றை கவனிக்கவும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் முடியும். மாணவன் தமக்குரிய சந்தேகத்தைக் கேட்கவும் இந்த மொழி ஆய்வகத்தில் முடியும்.

இதில் எவ்வளவு நேரமும் கற்கமுடியும். பாடத்தில் தெளிவு பெறும்வரை கற்கலாம். மாணவர்களுக்குத் தேவையான பாடங்களை வழங்குதல், மொழி ஆய்வகக் கருவிகளை அவர்கள் சரியான முறையில் கையாள்கிறார்களா? என்பதைக் கவனித்துச் சரி செய்தல், உச்சரிப்புக்களில் தவறிருந்தால் திருத்தல் செய்தல், மாணவர்களின் திறனை மேம்படுத்தி அவர்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லல் இவையனைத்தும் ஆசிரியரின் பணியாகும். இவற்றுக்கென கட்டுப்பாடு ஸ்விட்சுகள் ஆசிரியரின் அறையில் இருக்கும். குறிப்பிட்ட மாணவருடன் தாம் பேசவும் மாணவர்கள் பேசுவதை தாம் கேட்கவும் ஆகிய இரு தட வசதி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும். அனைத்து மாணவர்களுக்கும் ஒரே கட்டளையைப் பிறப்பிக்க வேண்டியிருந்தால் அதற்கான வசதியும் ஆசிரியர் அறையில் இருக்கும்.

## மொழி ஆய்வகத்தின் தனிச் சிறப்புக்களாவன

**✠ ஒரு மொழியில் உள்ள சொற்களை அந் நாட்டின் தன்மைக்கேற்ப உச்சரிப்பது எப்படி என்பதை மாணவர்களால் புரிந்து கொள்ள முடியும்.**

**✠ குறைந்தளவு காலத்தில் புதுமொழியைச் சரளமாகப் பேச முடியும்.**

**✠ வகுப்பறையில் மொழிப்பாடத்தை கற்றுக் கொள்ளும் போது மாணவர்களுக்கு தாங்கள் ஏதேனும் தவறாகக் கூறிவிடுவமோ எனக் கூச்சசுபாவம் இருக்கும். மொழி ஆய்வகத்தில் இவ்வாறான பேச்சிற்கு இடம் இல்லை. மொழிப்பயிற்சியைத் தனது பகுதியில் இருந்தபடி எடுப்பதால் வேறு யாரும் தன்னைக் கவனிப்பார்கள் என்ற அச்சவுணர்வின்றி தன்னம்பிக்கையுடன் செயற்படலாம்.**

**✠ மாணவர் தனது பகுதியில் இருந்து உச்சரிப்பதை ஆசிரியரால் தனது அறையிலிருந்து கேட்க முடியும். எந்த மாணவர் தவறு விடுகின்றாரோ அவருக்கு மட்டும் கேட்கும் விதத்தில் அவரது உச்சரிப்புத் தவறைச் சுட்டிக்காட்டி சீர்செய்து கொள்ள முடியும்.**

**✠ மாணவரின் திறனறிந்து செயலாற்றும் வாய்ப்புக் கிடைக்கிறது. நேர விரயமும் தடுக்கப்படுகிறது.**

எனவே தற்காலத்தில் இதன் பயன்பாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

**ஆக்கம்:**
வி. பிருந்தாப் IIE

# நுண்ணங்கிகள்

நுண்ணங்கிகள் அல்லது நுண்ணுயிர் என அழைக்கப்படுபவை கண்ணுக்குப் புலப்படாத நுணுக்குக்காட்டியின் உதவியால் மட்டுமே பார்க்கக் கூடிய தனிக்கலம் அல்லது கூட்டுக்கலங்களால் ஆன உயிரினங்கள் ஆகும். கண்ணால் காணக்கூடிய நுண்ணுயிர்களிலே அறியப்பட்டவை சில. ஆனால் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிர்களின் எண்ணிக்கையானது பல கோடியை தாண்டும்.

இவ் நுண்ணுயிர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றது. குறிப்பாக வேறு உயிரினங்களால் உயிர் பிழைக்க முடியாத வெந்நீர் ஊற்றுக்கள், கந்தக பூமிகள், பனிப்பிரதேசங்கள் போன்ற இடங்களிலும் காரத்தன்மை, உப்புத்தன்மை, அமிலத்தன்மை மிகுந்த இடங்களிலும் கூட நுண்ணுயிர்கள் உயிர் வாழ்கின்றன.

இவ் நுண்ணங்கிகளுக்குள் பக்ரீரியாக்கள், நுண்பாசிகள், பூஞ்சணங்கள், வைரசுக்கள் போன்றன அடங்கும். வைரசுக்கள் நுண்ணுயிர்களுக்குள் அடங்கும் ஆயினும், ஏதாவது உயிரினத்தின் அல்லது உயிருள்ள கலங்களுக்குள் இருக்கும் போது மட்டுமே இனம்பெருகும் தன்மையை கொண்டால் அவற்றை நுண்ணுயிர்களில் சேர்க்க முடியாது என்ற கருத்தும் நிலவுகின்றது.

2nm முதல் 100μm வரை அனலில் வேறுபடுகின்ற பக்ரீரியாக்கள் நுண்ணுயிரிகளில் பெரும்பாலான இடத்தை வகிக்கின்றது. இவற்றில் சில தீமையும் சில இனங்கள் நன்மையையும் ஏற்படுத்துகின்றன. உதாரணமாக *Salmonella a botulinum, vibrio cholerae,* போன்றன தீமையையும் *streptococcus thermophilus, Lactobacillus bolgaricos* என்பன நன்மையையும் ஏற்படுத்தும் சில பக்கீரியா இனங்களாகும்.

நுணுக்குக்காட்டிகளால் அவதானிக்கக் கூடிய பாசிகள் நுண்பாசிகள் எனப்படும்.இவற்றுள் பச்சைப்பாசிகள், பழுப்புப்பாசிகள், இரு நகரிழையுயிரு என பலவகைப்படுத்தலாம். பூஞ்சணங்களுக்குள் மதுவம் போன்ற ஒரு கலத்தாலான உயிரங்கிகளும் பல கலங்களால் ஆன காளான்கள் வரை காணப்படுகின்றது. இவற்றுள் Penicillium spp, Mucor spp போன்றன

உணவுப் பொருட்களில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துவதுடன் Saccharomyces spp நொதித்தல் மூலம் அற்ககோலை தோற்றுவிக்கப்பதுடன் ரொட்டித் தயாரிப்பிலும் இது பயன்படுகின்றது.

நுண்ணங்கிகளும் அவற்றின் செயற்பாடுகளும் மனித வர்க்கத்தினால் பொருளாதார மேம்பாட்டின் பொருட்டு வரலாற்றுக் காலம் முதலே பயன்படுத்தப்படுகின்றது. நுண்ணங்கிகளை பயன்படுத்தி மனிதன் உற்பத்தி செய்யும் பொருட்களாவன அற்ககோல் பானங்களின் தயாரிப்பு, போறணைப் பொருட்களின் உற்பத்தி, வினாகிரி தயாரிப்பு, தயிர், யோகட், பாற்கட்டி, பட்டர் போன்ற பால் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு, இலக்ரிக் அமில உற்பத்தி, அமினோ அமிலங்களின் உங்பத்தி குளுற்றாமின் அமில தயாரிப்பு போன்ற உணவுப் பொருட் தயாரிப்பில் பயன்படுகின்றது. இவை தவிர வேளாண்மை உற்பத்தி, உயிர்வாயு தயாரிப்பு, உயிரித தொழில்நுட்பம், கனிய மறுசுழற்சிக்கும், நைதரசன் சுழற்சியில் நைதரசன் நிலைப்படுத்தல் நைதரசன் இறக்கம் போன்றவற்றிலும் பயன்படுகின்றது.

நுண்ணங்கிகள் பேரளவில் மனித வர்க்கத்திற்கு உதவி செய்தாலும் இதற்குச் சம அளவிலான தீமையையும் ஏற்படுத்துகின்றது. அதாவது இவையே சில இடங்களில் நோய்க்காரணிகளாகவும் திகழ்கின்றது. மனிதர், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றில் நோய் உண்டாக்கக் கூடியனவாகவும் காணப்படுகின்றது. இவற்றால் உருவாக்கப்படும் தொற்றுநோய்களினால் ஆரம்பகாலம் தொட்டே ஏராளமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் கூட ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் தொற்று காரணமாக ஏராளமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் இந் நோய் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு பெரும் போராட்டத்தை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. சில நாடுகள் தமக்கு எதிரான நாடுகளில் நுண்ணங்கிகளை பரப்பி மனித வர்க்கத்தை அழிக்கும் ஆயுதமாகவும் பயன்படுத்தி வருகின்றன. மனிதன் உருவாகிய காலம் தொட்டு இவை மனிதனுக்கு பல்வேறு நன்மைகளையும் தீமைகளையும் செய்த வண்ணமே உள்ளன. ஆயினும் இவைகளை பற்றிய ஆய்வு தொடர்ந்து நடந்த வண்ணமும் பல அறிவியல் கண்டுபிடிப்புக்கள் வந்த வண்ணமும் உள்ளன.

த. திலக்ஷன்
A/L E- tec
(2016 )

# மௌனம்

இலை சலசலக்கிறது! மலையோ மௌனமாய் உள்ளது! வலிமையானது எது? கடலின் கரை ஊழையிடுகிறது! உட்பகுதியோ ஓசையின்றிக் கிடக்கிறது! ஆழம் மிக்கது எது? சருகு சப்தமிடுகிறது! மலரோ மௌனம் சுமக்கிறது! இனிமையானது எது? சில்லறை சிணுங்குகிறது! நோட்டு மௌனம் சாதிக்கிறது! மதிப்பு மிக்கது எது? மதிப்பு - ஆழம், இனிமை, வலிமை இவற்றின் மறு வடிவமே மௌனம்! விளக்கு மௌனமாகத் தான் எரிகிறது! நிலவு மௌனமாகத்தான் வருகிறது! கதிரவன் ஓசையில்லாமல் தான் உதயமாகிறான்! ஊற்றுக்கள் ஒலி எழுப்பாமல் தான் உற்பத்தியாகின்றன! உயிர் மௌனமாகத் தான் உலாவுகிறது! பயிர் மௌனமாகத் தான் வளர்கிறது! புரிந்து கொள்ளுங்கள், மௌனம் என்பது, ஊமைத்தனத்தின் அடையாளமல்ல! உயர்ந்த நோக்கங்களின் வெளிப்பாடு ஆகும்.

மௌனமாய் இருப்பது என்பது வேறு; மௌனத்தால் பேசுவது என்பது வேறு, சுவர் மௌனமாக இருக்கிறது, சித்திரம் மௌனத்தால் பேசுகிறது. காகிதம் மௌனமாய் இருக்கிறது, பத்திரிகை மௌனத்தால் பேசுகிறது. முட்டாள் மௌனமாய் இருக்கிறான்! சிந்தனையாளன் மௌனத்தால் பேசுகிறான்! மௌனம் மக்கள் மன்றத்தினால் மதிக்கப்படுகிறது, மௌனம் சிக்கனமான மொழி! அதே வேளையில் சிக்கலான மொழி! மௌனம் சம்மதத்தின் அடையாளம் என்பார்கள் சரிதான். அதே வேளையில் தொடர்பே இல்லை என்பதற்கும் அதுவே அடையாளம்!

மன்னன் தவறு செய்கிறான்; மக்கள் மௌனம் சாதிக்கிறார்கள் அது சம்மதம் என்பதை வெளிப்படுத்தவில்லை! சம்மதம் இல்லை என்பதையே காட்டுகிறது! பல நாடுகளில் புரட்சிக்கு முன் மக்கள் பேசியமொழி மௌனமே! வெடிப்பதற்கு முன் எரிமலை பேசும்மொழி மௌனம் தானே, தந்தையும், தாயும் சண்டை போடுகிறார்கள், பிள்ளைகள் பேசாமல் இருக்கிறார்கள். அது அவர்களின் கல் நெஞ்சத்தையும் காட்டவில்லை. கவலைப்படுகிறார்கள் என்பதையே காட்டுகிறது. மௌனத்தின் சப்தங்கள் பலருக்கு கேட்பதில்லை. அதன் அர்த்தங்கள் பலருக்குப் புரிவதில்லை.

மௌனங்களுக்கு பொருள் காணமுடிந்தவனே பெரியவன் ஆகிறான். மற்றவர்களின் மௌனங்களைப் புரிந்து கொள்ள முயலுங்கள் தேவைப்படும் வேளைகளில் நீங்களும் மௌனத்தால் பேசுங்கள். அதே வேளையில் அறிவற்ற

இருவர் மோதுகிறார்கள், பேசாமல் போய்விடுங்கள். தெருவோரத்தில் நாய்கள் இரண்டு சண்டையிடும் போது நாம் பேசாமல் தானே இருக்கிறோம். காரணம் இல்லாமல் ஒருவர் உங்களைப் களங்கப்படுத்துகிறார். வீதிக்கு சென்று நீங்கள் விளக்கம் கொடுக்க தேவையில்லை, மௌனமாய் செயற்படுங்கள், கடமையை தொடருங்கள். காலத்தின் அலை அவரை அப்புறப்படுத்தும். உங்களை அழைத்து வந்து அரங்கத்தில் அமர்த்தும்.

நீங்கள் எதிர்பார்த்த ஒன்று இன்னமும் வந்து சேரவில்லை. அவசரப்பட்டு "உலகே மாயம்" என்று உளறாதீர்கள்! நீர் மூழ்கி கப்பல் போல் நிசப்தமாய் செயற்படுங்கள். நிமிரும் காலம் நிச்சயம் வரும். ஒருவன் நியாயமான கேள்விகளை கேட்கிறான், நின்று பதில் சொல்லுங்கள், அவ்வேளை முட்டாள்தனமாக கேள்விகளை கேட்கின்ற போது நீங்கள் பதில் சொல்ல தேவையில்லை. ஒருவர் இதயத்தின் சுமைகளை உங்களிடம் இறக்கி வைக்க வருகிறார். அவருக்கு இன்முகம் காட்டுங்கள். ஒருவர் இன்னொருவரைப் பற்றி அவதூறு பேச வருகிறார், அவர் முன்னே நிற்காதீர்கள், ஓடிவிடுங்கள். இங்கெல்லாம் உங்கள் மௌனத்துக்கு ஆழமான பொருள் உண்டு. சிலருக்கு வாயை திறக்க ஒரு வாய்ப்பு கிடைத்தால் போதும், தங்களது வாழ்க்கை வரலாறு முழுவதையும் அவிழ்த்து விடாமல் அகலமாட்டார்கள். அவர்களிடமும் பேசுவதற்கு நிற்காதீர்கள். விலகி விடுங்கள். பேச்சுக்களை சிக்கனம் ஆக்குகிறவன் தனது நேரத்தையும் மிச்சப்படுத்துவான். பேச்சுக்களை வீண்செலவு செய்கிறவன் தனது நேரத்தை இழந்து விடுகிறான். எனவே தேவையில்லாமல் பேசி உங்களது காலத்தை வீணாக்காதீர்கள்.

**Kengatharan**
**Neruka**
Com 2016.

# இந்து சமய கல்விச் சிந்தனைகள்

இந்துக்கள் பின்பற்றும் சமயம் இந்து சமயம் என அழைக்கப்படுகின்றது. பொதுவாக நோக்கும் போது இந்தியாவில் காணப்படும் சில சமயங்களாக சைவம், வைணவம், காணபத்தியம் கௌமாரம், சாக்தம் போன்றன காணப்படுகின்றன. இந்துத் தத்துவம் என்பது உபநிடதமம், வேதாந்தம், சித்தாந்தம் என்பவற்றைக் கூறுகின்றது. இதுவரையில் எடுக்கப்படாத சைவக் கொள்கைத் தத்துவத்தின் ஆரம்ப காலப் பகுதி தொடர்பாக ஆராய்ச்சியாளர்களே முடிவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சமய இலக்கியத்தில் சமயக்கல்வி பற்றிய த்ததுவங்கள் ஆராய்வு செய்யப்படுகின்றன.

பரம்பொருளை உணர்ந்து கொள்வதே வாழ்க்கையின் முக்கிய இலட்சியம் எனக்கொண்டு மனிதர்கள் இவ்வுலகத்தில் பிறக்கிறார். பரம்பொருள் என்பது சர்வ வல்லமையடைந்த கடவுளையே குறிக்கின்றது. கடவுள் ஒரு போதும் மனிதனாகப் பிறக்கவில்லை என்பதனையும் அறிந்து உணர்ந்து கொள்ளும் திறன் மறுபிறப்பு பெறும் ஆன்மாவுக்கு கிடைத்திருக்கின்றது.

ஆன்மா, மலம் ஆகியவற்றுடன் இணைந்து தொடர்ந்தும் நிலவுகின்றமையால் மோட்சம் அதாவது கடவுள் பற்றிய முழு விளக்கமும் கிடைக்கப் பெறும்வரை புனர் ஜென்மம் தோன்றும் ஆன்மா என்பது கடவுள் அல்ல கடவுள் ஒரு போதும் ஆன்மாவாக மாறமாட்டார் சகலவிதமான சுகபோகங்களையும் அனுபவிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் இன்பம் தற்காலிகமானது. உலகத்தின் உண்மை நிலை உணரப்படாமையாலும் உலகாய சுகபோகங்கள் அழிந்துவிடக் கூடுதலாலும் அவற்றை நுகருவதன் மூலம் நித்திய சுகத்தைப் பெறமுடியாது என்பதும் ஆன்மாவுக்கு விளங்கும்.

கடவுள் தொடர்பான உண்மையை அறிந்து கொள்வதற்கான உயிர்க் கொலையிலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும். என சைவ தத்துவம் வலியுறுத்தி நிற்கின்றது. வேதாந்தத் தத்துவமானது கடவுள் என்பது தானே எனும் பெருவாக்கியத்தில் அடங்கியுள்ள தத்துவத் தொகுதியை வலியுறுத்துகின்றது. உபநிடதத்தில் இது " அநு நீயே " என்று பொருளைத் தருகின்ற தத்துவம் அஸி வேதாந்த எண்ணக்கருக்களாக விருத்தியடைந்த கருத்துக்களும் இவையே ஆகும். கடவுள் தாமேயாதலால் வணங்கப்படுவதற்காக வேறொருவர் கிடையாது எனும் கருத்தைப் பிற்காலத்தில் சிந்தனையாளர் பரப்பினர்.

கடவுள் பூரணமானவர் எனும் கருத்து உபநிடதத்திலே வெளியிடப்படுகின்றது. ஆன்மாவும் பூரணமானதாரும் பூரணத்தினால் பூரணத்தை உணரும் போது எஞ்சி நிற்பது பூரணமேயாகும்.

ஐம்புலன்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொள்வதுமான எப்போதும் பயன்படக்கூடியதும் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவத்தில் விரும்பிக் காட்டுவர் மனிதன் இவை நித்தியமற்றவை என உணரும் போது சாந்தி பெறுவது பற்றித் தேடுகின்றான் மனிதர் அனைவருமே சர்வ வல்லமை பொருந்திய மனித நிலையை அடைவதற்காகவே முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது.

இவ்வாறாக இந்து சமயமானது இந்து சமயங்களின் தத்துவமாகவும் இந்துக்களின் சமயமாகவும் சைவசித்தாந்தம், வேதாந்தம் என்பன தொடர்பாகவும் காணப்படுகின்றது. சைவ சித்தாந்த தத்துவத்திற்கு அமைய ஆன்மா தெய்வ நிலையை அடைகிறது. சைவக் கொள்கைத் தத்துவத்திற்கு அமைய முற்பிறப்பில் செய்த கருமங்களுக்கு அமைய மனிதனாகத் தோன்றி அக்கருமங்களுக்கு அமைய சுகதுக்கங்களை அனுபவிக்கின்றான். இப்பிறப்பில் நற்கருமங்கள் புரிந்தால் சர்வ வல்லமை மிக்க கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கின்றது. இவ்வுலகில் பிறப்பதன் நோக்கம் அதுவேயாம் என இந்து சமய கல்விச் சிந்தனையை நோக்கலாம்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க"

சி.குகன்யா
தரம் -12
கலைப்பிரிவு (2017)
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# நாட்டுக் கூத்துக்கலை......

மக்கள் வாழ்வில் கூத்துக்கலையும் இன்பம் தரும் பண்பாட்டுப் பொக்கிசமாக நிலைபெற்று விட்டது. பண்டைய காலத்தில் மக்கள் கடின உழைப்புக்குப் பின் ஓய்வு நேரங்களில் சந்தோசமாகப் பொழுதைக் கழித்து வந்தார்கள். இந்நேரங்களிலேதான் கூத்தாடும் வழக்கம் உருவாகியது. நாட்டுக் கூத்துக்கு மரியாதைக்குரிய அண்ணாவியார் பிதாமகனாக விளங்குகின்றார். நாட்டுப்புற கிராமங்களில் மக்களின் தொழிலை அடிப்படையாகக் கொண்டே கூத்துக்கள் தோன்றின கற்றறிந்தோர் மட்டுமல்ல பாமர மக்களும் கூத்துக்கலையில் ஈடுபட்டனர்.

இலங்கையில் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மலையகம் போன்ற பிரதேசங்கள் நாட்டுக்கூத்துக்கு புகழ்பெற்றவையாக விளங்குகின்றன. கூத்துக்களில் வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, சிந்து நடைக் கூத்து, வசந்தன் கூத்து முதலிய வகைகள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, வற்றாப்பளை, குமுழமுனை, வட்டுவாகல், கள்ளப்பாடு, சிலாவத்தை, கொக்கிளாய் போன்ற ஊர்கள் முக்கியம் பெறுகின்றன. பாரம்பரிய அண்ணாவிமார்கள் கூத்து பழக்குவதை ஒரு தெய்வீகக்கலையாக மதித்து வளர்த்து வந்துள்ளார்கள். ஆனால் இன்று அவ்வாறான பரம்பரை குறைந்தே காணப்படுகின்றது.

புதுக்குடியிரப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் கூத்துக்களாக கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து, வள்ளி திருமணம்., எஸ் தாக்கியார், ஞானசவுந்தரி, ஆட்டு வாணிபன் என்பன குறிப்பிடக்கூடியவை. வற்றாப்பளை கண்ணகித் தாயாரின் வரலாற்றைக் கூறும் கோவலன் கூத்து முல்லைத்தீவு மக்களின் கூத்து பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. இது இரவு முழுவதும் வட்டக்களரியில் ஆடப்பட்டு வருகின்றது. கடவுளுக்கு நேர்த்திக் கடனாக ஒவ்வொரு வருடமும் கூத்துப் போடும் மரபு வழக்கமாக உள்ளது. இவற்றை வளர்ப்பதற்காகவே இன்று பாடசாலைகளில் தமிழ்த்தினப்போட்டியிலும் நாட்டுக்கூத்துக்கென தனியான போட்டி நடாத்தப்பட்டு மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது. எனவே மாணவர்களாகிய நாமும் நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வத்துடன் பங்குபற்ற வேண்டும். எதிர்காலத்திலும், நாட்டுக்கூத்துக்களை வளர்ப்பதற்காகவும் வளம்படுத்துவதற்காகவும் மாணவர்கள் தம்மை தியாகம் செய்ய வேண்டும் என விரும்புகின்றேன்.

நன்றி

ஆக்கம் : இ. திருக்குழலி
தரம் - 6$^{C}$
மு/புதுக்குடியிருப்பு ம. கல்லூரி




## கல்லூரித்தாய்

அறிவுத்தாகம் மிகுந்திடவே ஆர்வத்தோடு
அதனைத் தீர்த்திட ஓடோடி வந்தோம்
அன்பாக அரவணைத்து அன்னையைப்போல்
அனைத்துப் பிழைகளையும் தாங்கி நின்றாய்
ஞானப்பால் உண்ட தெம்பால் நிமிர்ந்தோம் - இன்று
உமைத்தாங்கத் துணிந்தோம்
கல்லூரித்தாயே நீயேஉண்மைத் தாய்

சி.டென்சன்
2016 12 A (கலைப்பிரிவு)

# TEACHERS AND LANGUAGE

Language plays an important role in the early childhood education in any educational system. A language is not only taught as a subject but also used as the meaning of instruction for teaching different subjects right from beginning. Teachers must be aware about certain aims and special objects of language teaching and must be able to adopt appropriate teaching strategies.

A language teacher must be acquainted with the linguistic and social cultural background of the child. All the children are basically different, they are to be treated differently and the individual attention must be paid in enriching this language experiences.

Developing effective teaching of any subject, would be impossible without a through understanding of learning . Children's learning is the intended out come of all teaching. It has become quite clear that in order to do any real learning we have to draw upon knowledge. Learning can be defined as "the expansion and modification of existing ways of conceiving the world in the light of alternative ways" (Worz 7 Medwel - 1991)

Teachers need to ensure the learners have sufficient previous knowledge and understanding to enable them to learn the new things planned for them. They also need to help learners make explicit the links between what they already know and what they are currently learning.

Teachers must try to promote knowledge and awareness of their own thinking and learning. It will be also achieved through the essential teaching strategy of teacher demonstration. They should also understand the key aspects of progression in pupils speaking and listening reading spelling, and hand writing specially in primary education.

An innovative teacher can adopt different strategies in making the environment stimulating for the child to develop his / her skills of language some of these basic principals must be followed.

- Materials in the classroom must provide child's level and interest.
- Materials must be attractive, meaningful and relevant to the activities.
- Teacher has provide encouraging stimulus and positive feed back.
- Pupils should be provided adequate opportunity to develop his / her self expression with confidence.
- Pupils can be encouraged to act in plays in different roles.
- Teacher should have closed supervision and remedial correction.
- Teacher has to concern himself / herself with the total development of the child. He / she has to be responsibilities in character building effective teaching and learning, carriculum development and implementation, adjusting individual differences classroom management evalvation of pupils performances and developing good family and community relationship.

The main aim of teaching learning process is not the acquisition of knowledge alone it is the awakening of curiosity the stimulation of reactivity the development of proper interests, attitudes and values and building of essential skills. It has to serve a powerful instrument of social economic and cultural transformation of society.

*M. Keerththy*
**Grade : 9D**

# ALCOHOLISM

Drinking is one of the most serious problems facing Sri Lanka and the world today. It often brings poverty, absenteeism, business failure, crimes and broken homes and diseases. Traffic accidents are usually due to drinking it slows down the intake of Oxygen, thickens the heart with fat, hardens the liver and gives rise to mental illness. Alcoholism refers to any condition those results in the continued consumption of alcoholic beverages, despite health problems and negative social consequences.

Some alcoholic drink more and some less and some moderately whichever it is the process of destruction is going on unfortunately, alcohol is readily available every where often alcohol destroys the liver and it produces inflammation of the stomach. It affects the brain, and produces condition called wet brain. This affects the normal power of co-ordination. Alcohol causes the heart to become Weak and Flabby not to function properly. The alcoholic may feel he is being persecuted. He may take revenge on another or he may attempt suicide to escape the accusing "voices" that result from damaged brain or weakened Nevers. He becomes lazy, Shiftless, and unreliable. The Primary effect of atcolism is to encourage the sufferer to drink at times and in amounts that are damaging to physical health the secondary damage causes by an inability to control one's drinking manifests in many ways. Alcoholism also has significant social costs to both the alcoholic and their family and friends.

Over fifty percent of suicides are related to school or drug depence. The alcoholic needs to leave a strong desire to change and leave the bottle alone. He can will need good food with plenty of fresh fruits and juices. He should not smoke. His meals should be well planned. He needs to take B complex vitamins. he needs to ask Divine aid to help him every hour and everyday.

**S. Thilaksan**
Grade - 11F

## Climate Change and solution for Sri Lanka

- Climate change is a change in the statistical distribution of weather patterrns when that change last for an extended period time. Climate change may refer to a change in average weather conditions or in the time variation of weather longer term average conditions. Climate change is caused by some factors such as certain time human activities, plate tectonics, volcanic eruptions, solar radiation and biotic processes.

- Having emerged as an environmental concern, climate change is now regarded world wide as an overarching development challenge. It can seriously affect the economic growth, food, security, public health, cultural heritage, social stability and even the national security of countries.

Sri Lanka is a negligible contributor to global warming. However as a nation we are highly vulnerable to the impacts of climate change which include.

- increases intensity of disasters such as droughts, floods and landslides.
- Variability and unpredict ability of rain fall patterns.
- increase in temperature.
- Sea level rise.

There are some vulnerabilities by the climate change such as impact of paddy irrigation water reguirement, tea production, agriculture. These vulnerabilities cut across many sectors in economy and threaten to compromise the significant achievements the country has has recorded in the last 20 years in increasing incomes and reducing poverty.

Living and coping with uncertain impacts of climate change is no longer. a choice. It is an impreraive Sri Lanka needs to address climate change adaptation to ensure that its economic development can continue without disruption or setbacks and investments in poverty reduction, food and water securiy and public health will not be undone.

Although we have to do something to improve our country against climate change vulnerabilities. There are some works we have to do such as adaptation in to national planning and development, enable climate resilient and healthy human settlements, minimize climate change impacts on food security improve climate resilience of key economic drivers and financing requirement and implementation targets.

green your commute, be energy efficient, choose renewable power, eat wisely, trim your waste, Let polluters pay.

**Thank You**

**S. Subanethraa**

## எண்கணிதச் செய்கையில் சில உத்தி முறைகள்

- $11 \times 11 = 121$
  $111 \times 111 = 12321$
  $1111 \times 1111 = 1234321$

இவ்வாறு கிடைக்கும் விடையானது ஏறுவரிசையாக ஒழுங்குபடுத்திய பின் இலக்கங்கள் இறங்கு வரிசைப்படுத்தப்படும்.

- $9 \times 9 = 81$
  $99 \times 99 = 9801$
  $999 \times 999 = 998001$
  $9999 \times 9999 = 99980001$

இங்கு விடையாகப் பெறப்படும் எண்ணில் "8" என்ற இலக்கத்திற்கு முன்னும், பின்னும் முறையே 9,0 அதிகரிப்பதை அவதானிக்கலாம்.

- $3 \times 3 = 09$
  $33 \times 33 = 1089$
  $333 \times 333 = 110889$
  $3333 \times 3333 = 11108889$

இங்கு விடையாக பெறப்படும் எண்ணில் பூச்சியம் என்ற இலக்கத்திற்கு முன்னும், பின்னும் முறையே 1, 8 அதிகரிப்பதை அவதானிக்கலாம்.

- $35 \times 1111 = 38885$
  $35 \times 111 = 3885$
  $35 \times 11 = 385$ இங்கு விடையாகப் பெறப்படும் எண்ணில் 3, 5 முறையே முன்னும், பின்னுமாக அமைவதுடன் அதன் கூட்டுத்தொகை (3+5=8) குறித்த கோலத்தில் அதிகரித்து செல்வதை அவதானிக்கலாம்.

இவ்வாறே $31 \times 11 = 341$
$31 \times 111 = 3441$ அமையும்

- $8^2 = 64$
  $98^2 = 9604$
  $998^2 = 996004$

இக்கோலத்தில் 9,0 என்பன "6" என்ற இலக்கத்தின் முன்னும், பின்னுமாக ஓர் ஒழுங்கில் அமைவதை அவதானிக்கலாம்.

- ஓர் எண்ணின் காரணிகளின் எண்ணிக்கையை காணும் உத்திமுறை.

I. உதாரணமாக 720 என்ற எண்ணின் காரணிகளின் எண்ணிக்கை காணல்.

$720 = 2^4 \times 3^2 \times 5^2$ என எழுதலாம்

இங்கு எண்களின் அடுக்குகளாக 4, 2, 1 என்பன அமைந்துள்ளன காரணிகளின் எண்ணிக்கைகளைக் காண்பதற்காக ஒவ்வொரு அடுக்குகளுடன் ஒன்றைக் கூட்டிவரும் பெருக்கமாக அமையும்.

$$(4+1)(2+1)(1+1)$$

$5 \times 3 \times 2 = 30$ காரணிகள்

II. 12 இன் காரணிகளில் ஒற்றை காரணிகள், இரட்டைக் காரணிகள் என்பவற்றின் எண்ணிக்கையைக் காணுதல்.

$$12 = 2^2 \times 3^1$$

மொத்த காரணிகளின் எண்ணிக்கை $= 3 \times 2$

$= 6$

12 இன் ஒற்றைக் காரணிகளின் எண்ணிக்கையைக் காண்பதற்கு 3ஐ அடியாக உடைய எண்ணின் அடுக்கு 1 ஆகும்.

$\therefore 1 + 1 = 2$ (அடி மூன்று ஓர் ஒற்றை எண்)

இரட்டைக் காரணிகளின் = மொத்த காரணிகளின் - ஒற்றைக் காரணிகளின் எண்ணிக்கை

$= 6 - 2$

$= 4$

30 இன் காரணிகளின் எண்ணிக்கை $= 30 = 2^1 \times 3^1 \times 5^1$

காரணிகளின் எண்ணிக்கை $= (1+1)(1+1)(1+1)$

$= 2 \times 2 \times 2$

$= 8$

ஒற்றைக் காரணிகளின் எண்ணிக்கை $= (1+1)(1+1)$

$= 2 \times 2$

$= 4$

(இங்கு அடியாகவுள்ள 3, 5 ஒற்றையெண்களாகும்)

இரட்டை காரணிகளின் எண்ணிக்கை = மொ.கா - ஒற். கா

$= 8 - 4$

$= 4$

- $1 \times 2 + 2 \times 3 + 3 \times 4 + 4 \times 5$ என்பதாக அமையும் வினாக்களின் விடையை கணிக்க. பின்வருமாறு செய்யலாம். $\frac{4x5x6}{3} = 40$

உதாரணமாக $4 \times 5 + 5 \times 6 + 6 \times 7 + 7 \times 8 = ?$

$\frac{7x8x9}{3} = 168$

$1^3 + 2^3 + 3^3 = 6^2$

$1^3 + 2^3 + 3^3$ ................. $100^3$ என்பதின் விடையைக் கணிப்பதற்கு(n/2(n+1))2) எனும் சமன்பாடு பயன்படும். (இங்கு n இற்கு பதிலாக 100ஐ பிரதியிடல் வேண்டும்.)

- $1^2 + 2^2 + 3^2$ ................. $100^2$ என்பதின் விடையைக் கணிக்க n/6 (n+1) (2n+1)) எனும் சமன்பாடு பயன்படும். (இங்கு n இற்கு பதிலாக 100ஐ பிரதியிடல் வேண்டும்.)

பல்கோணி ஒன்றின் மூலைவிட்டங்களை கணிக்க பயன்படும் சமன்பாடு n/2 (n-3) இங்கு n இற்கு பக்க எண்ணிக்கையை பிரதியிடல் வேண்டும்.

- தரப்பட்ட காரணிகளின் எண்ணிக்கையைக் கொண்டு எண்ணைக் காணுதல்.

6 காரணிகளைக் கொண்ட எண்ணைக் காணுதல்.


6 = 2 × 3
2 - 1 , 2 - 1
1 , 2

1, 2 என்பன முதன்மை எண்களின் அடுக்குகளாக பெருக்கப்படும். $2^2 x 3^1 =$ 18 (இவ்வெண் 6 காரணிகளைக் கொண்ட பெரிய எண்ணாகும் கூடியவலு கூடிய இலக்கத்திற்கு வலுவாக்கப்பட்டுள்ளது.)

$2^2$ x $3^1$ = 12(இவ்வெண் 6 காரணிகளைக் கொண்ட சிறிய எண்ணாகும் கூடியவலுகுறைந்த முதன்மை எண்ணுக்கு வலுவாக அமைந்துள்ளது.)

**"எல்லோருக்கும் உதவி செய்யுங்கள் செய்யா விட்டாலும் தீங்கு செய்யாதீர்கள்"**

**ஆக்கம் : தர்சனா**
தரம் - 8
மு/பு.ம.க



## ஒப்பிலாத்தாயே

கருக் கொண்டு உருதந்து
திருவென்று பெற்றெடுத்து
முலையன்னம் சுவைக்கத்தந்து
உரிமையான சுற்றம் தந்து
உறவைச் சொல்லித் தந்து
முறைப்படியாய் உணவு தந்து
உருப்படியாய் வளர்த்து
உறுபொருட்கள் தந்து
என் உயர்வு கண்டு மகிழும் தாயே
நின் கொடைத்திறனுக்கு இங்கே ஒப்பேது.



# போதை

**போதையில்** நிற்பவன் மேதையாயினும் - அவன்
பேதை ! பொருளோடு புகழையும்
அன்போடு பண்பையும் அறிவோடு ஆற்றலையும்
ஆழக்குழி வெட்டி அதற்குள் புதைக்கின்றான் - இனி
அவனுக்கு சவக்குழி வெட்டத் தேவையில்லை

அ.குகதர்சன்
தரம் – 10

# ஆசிரியர்களின்
# தேடல்கள்

# கேள்விக்குறி?

வாழ்வின் இலக்கணம்
கூறி,
தமக்கென்று ஒழுக்கநெறி
கண்டு வாழ்ந்தது
தமிழினம்
அது ஒரு காலம்
அழகிய காலம்
இன்றோ?
இலக்கணங்கள் யாவும்
இலக்குகள் மாறிவிட்டன
நவீனம் என்னும்
காட்டேறி
உன்னுள் குடியேறி விட்டது

உறவுகள் தெரியவில்லை
உன்னதங்கள் புரியவில்லை
ஒன்றுமே தெரியாமல்
எல்லாம் தெரிந்தவர்களாய்
உனக்கான குழியை நீயே
தோண்டுகின்றாய்
தாத்தாவிடம் நடை பயிலவில்லை
பாட்டியின் உபகதை ரசிக்கவில்லை
தந்தையின் அறிவுரையோ சகிக்கவில்லை
அன்னையின் அன்பு மொழி
உன்னை அடக்கவில்லை.
அண்ணன், தங்கை உறவில்
அன்பின் அடையாளம் இல்லை.
இவையெல்லாம்
உன் கைபேசியின் முன்
துச்சமாகி விட்டது
முக்கியமானவர்களின் முகம்கூட
பார்க்கமுடியாத
உன் முகப்புத்தக அழுத்தம்
உன்னை உன் உன்னதங்களை
சிதைத்துக் கொண்டிருக்கிறது.

மந்தைகள் கூட
தமக்கென்ற பாதைகண்டு
தம் இலக்கை அடைந்துவிடும்
ஆனால்,
இலக்கின்றி, இலட்சியமின்றி
நீ போகும் பாதை எது?
உன் பாதை முடியும் இடம்
வெறுமையாய் போகும்.
அப்போது புரியும்
நீ இழந்த
இழப்பீட்டின் அளவு
வாழ்வில் அனைத்தும்
உனக்கானது என்ற காலம்மாறி
வாழ்வே உனக்கில்லாமல் போகும்.
அன்று உன் நிழல் கூட
உனக்கு பகையாகும்.
அத்தனையும் தொலைத்தவனாய்,
அவலங்கள் நிறைந்தவனாய்,
உன்னையே நீ
பகைத்துக் கொள்வாய்.
உன் இனம் அழிய
பகை ஒன்றும் தேவையில்லை
நீயே அழித்துக் கொள்வாய்
உணர்வுகளால், உறவுகளால்
உயர்ந்த தமிழினம்
உன்னால்
எதிர்காலத்தில்.....?

பிருந்தா
சங்கீத ஆசிரியை

## நித்திலத்தின் முத்தாக இன்று

நித்திலத்தின் முத்தாக நிமிர்ந்து நிற்கின்ற கல்லூரியை
நித்தமும் ஒளி பரப்பிட வைரமாக வருகிறாய்
கற்றவர் கைகளில் தவழவரும் பனுவலே
கனிவான ஒளிதருவாய் கற்றவராக்கிடுவாய்
புதுநகர் மத்திய கல்லூரி புதுப் பொலிவு பெற
புதுமணம் பரப்பி புகழ்ஒளி வீசிடுவாய்

## கல்லூரி

கல்வியோடு கலைகளையும் கற்றுத் தந்திடும்
மற்றவர் மனம் மகிழ மகிழ்வோடு சேவை செய்யும்
ஆலமரச் சோலையில் அமர்ந்து இருந்து
ஆற்றுகின்றாய் அளப்பரிய சேவை தனை
ஆண்டுகள் அறுபது ஆனாலும் உனது
ஈகைக்கு ஈடாகாது எதுவுமே
வாழையடி வாழையல்லவா நீ எல்லோருக்கும்
வாழ்ந்து காட்டுகிறாய் இன்று
உனது படைப்புக்களை உலகறிய வைக்க
சாதனையாளராக சஞ்சரிக்கிறாய் இன்று
நானிலம் நவில்கின்றது நீ செய்த நற்செயல்கண்டு
புலம் பெயர்ந்த நாடும் உச்சரிக்கின்றது உன் புதுமை கண்டு
நீண்ட தூரம் சென்றாலும் அவர் மனதில் நிலைத்து நிற்கின்றாய்
நீ காட்டிய வழிதானோ இன்று உனக்கு
நிலையான பொருளைத் தந்து நிகழ்வும் நிகழ்த்துகின்றனர்
கல்லூரிச் சாதனைகளை கணப்பொழுதில் மறக்கலாமோ

பழைய மாணவர் சேவை கண்டு
பள்ளி மாணவரும் கற்றிடுவர்
கனமாக பள்ளியை அவர்கள்
கணப்பொழுதும் நினைத்திடார்
சரித்திரத்தில் அவை சஞ்சரித்து விட்டவையல்லோ
கல்லூரிச் சரித்திரம் கல்மேல் பொறித்தவை
கடுதியில் அவை சரிந்து போகாது.

## அதிபர்

இவர் ஆற்றும் சேவையை அளக்க முடியாது
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத உத்தமர்
மனையை விட மத்திய கல்லூரிதான் இவர் வாழ்க்கை
பன்னிரண்டு மணிநேரம் பசிபடுக்கை பாராது
பலபாடு படுகிறார் பள்ளிக்காக
சொந்தம் உறவு சொல்லிடார் தம் வாயால்
சொர்க்கம் தான் பள்ளி என்று செய்வார் சேவைதனை
சமன் செய்து சீர் தூக்கும் எங்கள் அதிபர்
சரிபிழை சொல்லிடுவார் சரித்திரத்தில் இடம் பிடித்துவிட்டார்
மணிவிழாவை மகிழ்வோடு நடத்துகிறார் என்றும்
மனதார சேவைகள் மகிழ்வுடன் செய்திடுவார்
அதிபர் சேவையை அவனியே பேசும்
அவர் வாழி என்றும் அவர் சேவை வாழி

## ஆசான்கள்

ஆசான்கள் சேவையோ அளப்பரியது
அயராத முயற்சியோடு பணியாற்றும் தன்மை இவர்கள்
அர்ப்பணிப்பின் சிகரங்கள்
நற்பேறு பெறக் கல்லூரியில்
நலம் பட செய்கிறார்
இவரது உயர்ந்த சேவையால்
இங்கு உயர்ந்தோர் பலர் உளர்
தன்னம்பிக்கையும் தளராத முயற்சியும்
தன்னகத்தே கொண்டவர்கள்
பார் போற்றும் பகலவன் இவர்கள்
வாயார நல் வார்த்தை
வார்க்கும் சிற்பிகள்
கல்விக்காக தம்மை அர்ப்பணிக்கும் கற்றூண்கள்
கல்லூரிப் பிள்ளைகளையும் தம் பிள்ளை போல
காக்கும் காவலர்கள்
கல்லூரியில் இவர்கள் கன வேடம் தாங்கிடுவர்
இவர் சேவை என்றும் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்
இவர் வாழ்வு வளம் பெற வாயார வாழ்த்துகின்றோம்.

## மாணவர்

புதுவை பெற்றெடுத்த சிற்பியின் முத்துக்கள்
மதிப்புள்ளம் கொண்ட மாபெரும் சொத்துக்கள்
கள்ளத்தனம் இல்லா வெள்ளை உள்ளத்தவர்
பள்ளிக் காலத்தைப் பயன் பல பெற்றிட என்று

துள்ளி வரும் புள்ளி மான்கள் போன்றவர்கள் இவர்கள்
பள்ளிப்பருவத்தைப் பாழாக்காது பயன் பெறுவாரானால்
பாரிலே இவர்கள் சரித்திரம் பதிந்து விடும் என்றும்
நாளைய உலகை மாற்றுகின்ற நலனாளர்கள் இவர்கள்
நித்திலத்தில் என்றும் நிலைத்து நிற்பர் என்றும்
கறங்கு போன்ற உலகில் துரும்பாக நின்று
மாறும் உலகை மாற்றிட வேண்டும் என்றும்
கல்லூரி மாணவர் கல்வியே கண்ணென்று கற்றால்
பாரினிலே இவர் புகழ் பேசப்படுவார் என்றும்

கல்லூரி மாணவரே
பிற்கால வாழ்வு பொற்காலமாக அமைய
இக்காலமே முடிவெடு இப்படித்தான் வாழவேண்டும் என்று
நல் எண்ணமும் நல் வார்த்தையும் நலம்பட உரைப்பின்
நானிலம் போற்றும் உன் நற்செயல் கண்டு
உன் வாழ்வு உயர்வடைய
உளமார வாழ்த்துகின்றோம் நீவாழி

மத்திய கல்லூரியே மணிவிழாக் கண்டு
மகிழ்ச்சியடைகின்றோம் மனமார வாழ்த்துகின்றோம்
புதுவைரமே உனது புகழ் ஓங்கிட
புதுமணம் பரப்பிட
கற்றோரும் மற்றோரும் உன் ஒளி பெற்றிட
கலங்கரை விளக்காக கல்லூரியில் நின்று
கரை சேர்த்து விட்டிடுவாய்
வாயார நாம் உம்மை வாழ்த்துகின்றோம்
வாழிய வாழிய புது வைரமே வாழிய
மத்திய கல்லூரி வாழிய.

திருமதி. சாந்தகுமாரி யோகதாஸ்
தமிழ்பாட ஆசிரியர்
(BA Dip. in Ed)

# My New College

Puthukkudiyiruppu Central College is a crowded one
It gives jobs me to be done
If I forget my college one
I can't get the rice and bun.

My college has banjan tree breeze
With the natural freeze
Students has good knowledge
And They come from kind and hearted village
Not like them as polluted damage

I have no chance for rent
I have only tent
live with lovely kin
I only marbled inn

Students' hearts here give pleasure
Talk with them in my leaser
Their love with me can't measure
I think They are treasure

Life in it a bed of rose
I haven't the mental stress
If you come to my college once
You will have real funs

The college lane has full of paddy
They have only muddy
Many students come here only to study
I bring all our things in a buddy

**Mr. P. Thayalathasan**
(Teacher of English)

# சுற்றாடலை அச்சுறுத்தும் பொலித்தீன் பாவனை

சுற்றாடல் என்பது காணி, மண், நீர், வளிமண்டலம், காலநிலை, ஓசை, நாற்றங்கள், சுவைகள் அத்துடன் ஒவ்வொரு விவரணத்தினதுமான விலங்குகளினதும் தாவரங்களினதும் உயிரினவியல் சார் காரணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மனித வர்க்கத்தின் சுற்றாடல்களின் பௌதிகவியல் காரணிகள் என பொருளாகும் எனத் தேசிய சுற்றாடல் சட்டம் வரைவிலக்கணப்படுத்துகிறது. நாம் சுகதேகிகளாக உயிர் வாழ்வதற்கும் எமக்கு இருக்கும் உரிமைகள் எல்லாவற்றையும் அனுபவிப்பதற்கும் ஆரோக்கியமான சுற்றாடல் அவசியம். எனவேதான் இன்று மனித உரிமைகளில் ஒன்றாக **"ஆரோக்கியமான சுற்றாடலுக்கான உரிமை"** தோற்றம் பெற்றுள்ளது.

தேவைகள், போட்டிகள், பிரச்சினைகள் உலகை சிக்கலானதாய் மாற்றியமைத்திருக்கின்ற நிலையில் இவற்றுக்கிடையில் இலக்குகளை எய்துவதில் பல்வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. இவை எதிர் விளைவுகளையும் தோற்றுவிக்கத் தவிறியதில்லை. போட்டி போட்டுக்கொண்டு நாடுகள் அபிவிருத்தி செயற்பாட்டை விரைந்து மேற்கொண்டமையால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து அபிவிருத்தி கண்டமை ஒரு புறம் இருக்க, சுற்றாடலை புறக்கணித்தமையே புவி வெப்பமடைதல், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுதல் என்பவற்றுக்கு காரணமாக அமைந்துள்ளதெனவும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால் இன்று நிலைத்திருக்கும் அபிவிருத்தி (Sustainable Development) பற்றி வலுவாக பேசப்பட்டு வருகிறது. அதாவது அபிவிருத்திக்கும் சுற்றாடல் பாதுகாப்பிக்குமிடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதும் சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய கரிசனை உடைய அபிவிருத்தியை இது குறிக்கிறது. இதனை செய்வதற்கு தூர நோக்குள்ள அர்த்தமுள்ள நடவடிக்கைகள் இடம்பெறல் வேண்டும். மனித நடவடிக்கைகளின் விளைவாகவும் சூழலுக்குள் அவன் சேர்க்கும் செயற்கை பதார்த்தங்களின் விளைவாகவும் சூழலில் மிக முக்கிய அங்கங்கள் அழிக்கப்பட்டு விடும் என்ற எச்சரிக்கையை Silent spring (மௌன வசந்தம்) என்ற நூலில் ராசெல்கார்சன் விடுத்துள்ளார். மனித நடவடிக்கைகளையும் அசட்டை செய்யலாகாது என்ற உணர்வு பொருளாதார வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட அனைவரிடத்திலும் தோன்றியுள்ளது. இவ் உணர்வை தெரிந்தோ தெரியாமலோ சூழலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் மனித சமுதாயத்திற்கு உணர்த்துதல் அவசியமாகும். அந்த வகையில் இக்கட்டுரையில் அதிகரித்த பொலித்தீன் பாவனை சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கங்ள் அவற்றிற்கான பரிந்துரைகளும் முன் வைக்கப்படுகின்றன.

எமது அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் எத்தனையோ பொருட்கள் திரும்பத் திரும்ப (Reuse) உபயோகிக்கலாம். அல்லது ஒன்றின் பயன் முடிவடைந்த பின் வேறு ஒன்றுக்கு பயன்படுத்தலாம். இல்லை எனில் மீள் உற்பத்திக்கு (Recycle) பயன்படுத்தலாம். ஆனால் பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் கலாசாரம் (Use and thorow culture) தான் எம்மிடையே வளர்ந்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று நன்கு திட்டமிட்ட மீள் உற்பத்தி செயற்பாடுகள் இடம்பெறாமையே பொலித்தீனால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள முடியாமைகான முக்கிய காரணங்கள் ஆகும். பொலித்தீனால் ஏற்படும் பிரதான விளைவானது பொலித்தீன் மண்ணுடன் மண்ணாக கலக்காது உக்காது நீண்ட காலங்களுக்கு மண்ணுள்ளேயே காணப்படுவதாகும்.

**1. மண்ணின் மேற்படையில் பொலித்தீன் படை ஒன்று உருவாகுமானால் நீரை பூமிக்கு அடியில் கசிந்து செல்லவிடாது தடுத்தி நிறுத்திவிடும். இச் செயற்பாடு பூமிக்கு அடியில் கிணறுகள், ஊற்றுக்கள் மூலம் கிடைக்கும் நீரை வற்றச் செய்கிறது.**

**2. இலகுவில் அழிந்து போகாத பொலித்தீன் பைகளும், பொலித்தீன் பைகளில் கட்டி வைக்கப்பட்ட குப்பைகளும் அவ்வாறே எடுத்து செய்யப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் சேர்ப்பிக்கின்ற போது உக்கிவிடக் கூடிய பொருட்களும் நீண்ட காலத்துக்கு ஊக்கி விடாதிருக்கச் செய்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுதல், வழிமாசடைதல், நோய் பரவுதல் என்பன இடம் பெறுகிறது.**

**3. காற்றிலே பறந்து செல்லக்கூடிய "கிசுகிசு" பைகள் என செல்லமாக அழைக்கப்படும் மெல்லிய பொலித்தீன் பைகள், பாதைகள், பொது இடங்கள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள் வளாகங்கள் என்பவற்றின் அழகையையும் தூய்மையையும் கெடுக்கின்றன.**

**4. சுத்தமான நீரோடைகள், தேங்கி நிற்கும் நீர் நிலைகள் என்பவற்றிலும் கணிசமான அளவு பொலித்தீன் கலந்து விடுகின்றன. இது நீரை மாசடைய செய்வதுடன் நீர் வாழ் உயிரினங்களுக்கும் பாதிப்பை உண்டு பண்ணுகிறது.**

அடுத்ததாக பச்சைவீட்டு வாயுக்களாலும் சுற்றாடல் மாசடைகின்றது. பச்சைவீட்டு வாயுக்களானது குப்பைகளை எரிப்பதிலிருந்தும், தொழிற்சாலை களிலிருந்தும் வாகன புகைகளிலிருந்தும் குளிர்சாதன பெட்டிகளிருந்தும், வாசனைப் பொருட்களில் இருந்தும் வெளிவருகின்றது. பச்சைவீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட் $Co_2$, மீதேன் $CH_3$, குளோரோபுளோரோகாபன்

CFC, நைதரசன் ஒட்சைட் $N_2O$, நீராவி என்பன வளிமண்டலத்தை அமைத்து வளியில் சூரியனில் இருந்து பூமியை அடைந்து மீண்டும் சூரியனை அடையும் வெப்பக்கதிர்களை உறிஞ்சுவதனால் பூமி வெப்பம் அடைகிறது. பூமி வெப்பமடைவதால் பருவ காலங்களில மாற்றம், கடும்மழை, வெள்ளப்பெருக்கு, கடும் வரட்சி, மழைவீழ்ச்சி பாதிப்படைதல் போன்ற செயல்முறைகளை ஏற்படுத்துகிறது. குளோரோபுளோரோ காபன் ஓசோன்படையில தாக்கத்தை ஏற்படுத்தி ஓசோன் துவாரத்தின் மூலம் செவ்ஊதா கதிர்கள் பூமியை அடைந்து தோல் நோய்கள் குறிப்பாக தோல் புற்றுநோயை ஏற்படுத்தும். 21 நூற்றாண்டளவில் சூழல் வெப்பநிலை 1.4 - 5.8$C^0$ ஆல் அதிகரிக்கும் என கூறியுள்ளார்கள்.

வளிமண்டலத்தில் ஓசோன்படை காணப்படுகிறது. இப்படை சூரியனிலிருந்து வெளிவருக்கின்ற தீங்கு விளைவிக்கின்ற செவ் ஊதாக்கதிர்களை (Uttra violet rays) பூமிக்கு ஊடுருவுவதை தடுக்கின்றது. இவ் ஓசோன் படையில் சூழல் மாசடைவதன் மூலம் துவாரம் ஏற்பட்டுள்ளது. குளிர்சாதன பெட்டிகள், வாசனை திரவிய விசிறிகள் மூலம் குளோரோபுளோரோகாபன் (CFC) வளிமண்டலத்தை அடைந்து CFC இல் உள்ள குளோரினது ஓசோனை பிரித்து குளோரின் ஒட்சைட்டாகவும் ஒட்சிசனாகவும் மாற்றுகிறது. இதனால் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டு துவாரத்தின் ஊடாக செவ் ஊதாக்கதிர்கள் பூமியை அடைவதனால் பூமி வெப்பமடைவதுடன் மனிதனில் தோல் நோய்கள் தோல் புற்றுநோய்கள் ஏற்படுகின்றது.

**1. குப்பைகளை எரிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குப்பைகளை எரிக்கும் பொழுது வெளிவரும் சிறிய துணிக்கைகள் நச்சுத் தன்மையான பொருட்களை கொண்டிருக்கும் இத் துணிக்கைகள் சுவாசத்தின் மூலம் நுரையீரலைஅடைந்து நுரையீரலில் தேங்கி நோய்த் தொற்றுதலை அதிகரித்து அஸ்மா, இருமல், நெஞ்சு நோ, சுவாசிக்கடினம் போன்ற நோய்களை ஏற்படுத்தும்.**

**2. திறந்த இடத்தில் பொலித்தீன்களை எரிக்கும் போது டயொக்சின் (Dioxin) என்னும் பதார்த்தம் வெளிவிடப்படும். இது நுரையீரல் புற்று நோய்க்கு பிரதான காரணமாகும்.**

**3. குப்பைகளை எரிப்பதனால் வளிமண்டலத்தில் ($Co_2$) காபனீரொட்சைட் அளவு அதிகரிக்கும். இதனால் பச்சைவீட்டுத் தாக்கம் ஏற்படும்.**

**4. திறந்த இடத்தில் குப்பைகளை எரிக்கும் போது மண்ணில் உள்ள உயிரினங்கள் அழிவுக்கு உட்படும்.**

பொலித்தீன் பாவனையால் ஏற்படும் சுற்றாடல் பிரச்சனை அனைத்து நாடுகளுக்கும் பொதுவாக இருந்த போதும் வளர்ச்சி அடைந்த நாடுகள் பிரச்சனையை தீர்ப்பதில் தகுந்த நடவடிக்கைகளை கையாண்டு வெற்றிகண்டு வருகின்றன. இந்த நாடுகளில் குப்பைகளை பிரித்தெடுத்த நிலையிலேயே அகற்றப்படுகின்றன. அதனை செய்வதற்கு அந்நாட்டு மக்கள் தம்மை பழக்கப்படுத்தி கொண்டதனால் குப்பைகள் இதர கழிவுகள் மீள் உற்பத்திக்கு இலகுவாக பயன்படுத்த முடிகின்றன. தகரம், போத்தல், பிளாஸ்ரிக்கு, பொலித்தீன், காகிதாகிகள் என்பன வேறு பிரித்து அகற்றுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு பிரித்து கழிவுகளை அகற்றாதவர்களுக்கு முதலில் எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. அச் செயல் தொடருமானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. படிப்பறிவில் உயர்ந்தவர்கள் தமது சுகாதாரம் ஆரோக்கியமான சுற்றாடலின் அவசியம் பற்றிய உணர்வு பூர்வமாக அறிந்து வைத்துள்ளனர். ஆனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நிலைமை வேறு விதமாக உள்ளது. வறுமை, வேலையின்மை, போசாக்கு இன்மை, அதிகரித்த சனத்தொகை என்பன காணப்படுவதை போன்று பெருகிவரும் குப்பைகூலங்கள் பாரிய பிரச்சனையாக உரு வெடுத்துள்ளது. எளிதில் உக்கி அழித்து விட முடியாத பொலித்தீன் பாவனை ஒரு தேசிய பிரச்சனையாக உள்ளது. ஆனால் இங்கு வாழும் மக்கள், பாடசாலை மாணவர்கள் குறித்தெழுந்துள்ள ஆபத்துக்களை அறியாது இருக்கின்றனர். மக்களின் மனப்பாங்கை மாற்றி அவர்கள் உணர்வு பூர்வமாக சிந்திக்கும் வகையில் விழிப்பூட்டல்களைச் செய்தல் வேண்டும். நம் நாட்டு மக்கள் மதப்பற்று, இனப்பற்று, பதவிப்பற்று என்பவற்றை கொண்டிருக்கின்றார்களே தவிர தேசப்பற்றை கொண்டிருக்கவில்லை. இது பல்வேறு வகையிலும் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ளதைப் போன்றே சுற்றாடலை மாசடைய செய்வதற்கு ஒரு காரணியாக அமைகின்றது. எனவே பொலித்தீன் பாவனையால் சுற்றாடலில் ஏற்படும் தாக்கத்தினை தேசிய பிரச்சனையாகக் கொண்டு அனைவருமே இதனைத் தீர்க்க முன்வருதல் வேண்டும்.

**நடைமுறைச் சாத்தியம் மிக்க பரிந்துரைகள் சில....**

* *பொலித்தீன் பைகளின் உருவாக்கத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ளல்.*

*பொலித்தீன் உற்பத்தியாளர்கள் பொலித்தீனால் சுற்றாடலுக்கு ஏற்படும் செலவை கருத்திற் கொண்டு அதனை ஈடுசெய்யும் வகையில் தமது பங்களிப்பை செய்ய முன்வரல்.*

முடிந்தவரை இயற்கை நார்கள், புல்லுகள், சணல்கள், துணி, மூங்கில் போன்றவற்றினால் பைகள், கூடைகள் என்பவற்றை தயாரித்து கொள்வனவுக்கு பயன்படுத்தல்.

பொலித்தீன் உற்பத்தியை கட்டுப்படுத்தும் வகையில் பொலித்தீன் உற்பத்திகள் மீது இறக்குமதி தடை விதித்தலும் வரி விதித்தலும்.

பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடிக் குழுக்களை உருவாக்கி அதன் மூலம் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

உணவுச்சாலைகளில் பரிமாறவும் எடுத்துச் செல்லவும் மருத்துவ குணமிக்க வாழையிலை, தாமர இலை, வாழை மடல் போன்றவற்றைப் பயன்படுத்தல்.

பாடசாலை மாணவர்கள், வேலை செய்பவர்கள் தமது உணவுகளை உணவுப் பெட்டிகளில் எடுத்துச்செல்லும வழக்கத்தை மேற்கொள்ளல்.

மக்களை ஒன்றுதிரட்டி பொலித்தீன் பாவனை பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தல்.

இயலுமானவரை திண்மக் கழிவுகளை மீள்பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உதாரணம் : கடதாசி, பொலித்தீன் பை, பிளாஸ்ரிக் போத்தல்.

இங்கு குறிப்பிட்ட யோசனைகளை நடைமுறை சாத்தியமாக்குவதில் அனைவரும் அக்கறையுடன் தாமாக முன்வந்து செயற்படுவோமானால் பொலித்தீனால் சுற்றாடலுக்கு ஏற்பட்டிருக்கும் சவாலை வெற்றி கொள்ள முடியும். நாம் வேண்டிநிற்கும்ஆரோக்கியமான சுற்றாடலை பேணலாம். நம் எதிர்கால சந்ததியினரும் மாசற்ற சூழலில் வாழமுடியும்.

திரு. இரத்தினம் சிவகுமாரன்
பகுதித்தலைவர்(10 - 11),
சுற்றாடற்குழு பொறுப்பாசிரியர்.

# வேற்று மொழிப் பிரயோகமும் பண்பாட்டின் இருப்பும்.

## அறிமுகம்

மனித குலத்தின் இயங்குநிலை என்பது, பண்பாட்டின் அடியாகவே கட்டமைக்கப்படுகிறது. தன்னுடைய வாழ்வியற் கூறுகளைத் தீர்மானிப்பதில் பண்பாட்டினையே முக்கியமாக கையாளுகின்றது. அதில் மொழியென்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இத்தலைப்பின் தன்மையினைத் தொட்டு நுகர்வதற்கு முன்னர் மொழி, வேற்றுமோழி, பண்பாடு என்னும் ஆக்கச் சுட்டிகளை செங்குத்தாகவும் குறுக்கு வெட்டுமுகமாகவும் தோலுரித்துக் காட்டுவது மிக்க பயனுள்ளது.

ஒவ்வொரு சமூகப்பிராணியும் பல பண்பாட்டு அடையாளங்களைத் தனக்குரியதாக உற்பவித்து, அதனை அடுத்த தலைமுறைக்குப் பல உள, உலகநெருக்கடிகளுக்கு மத்தியில் (சமூக, சமய, பொருளாதார, அந்தஸ்து) கையளிப்புச் செய்கின்றது. இத்தன்மையில் ஒன்றுதான் தமிழ்ப்பண்பாடு – தமிழர் பண்பாடு. இச்சொல்லாடல் மேற்கண்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த போதும், பெரும்பாலும் வேற்றுமொழிக் கையாள்கையினால் பல பண்பாட்டு மாறுதல்களைச் சந்தித்ததை அறியக்கிடக்கின்றது. இவ்வேற்றுமொழிப் பிரயோகத்தின் வீச்சானது பண்பாட்டை எத்தகைய இடத்தில் நிலைநிறுத்தியுள்ளது என்பதனை அறிவதும் அறிவுறுத்துவதுமே இவ்வாய்வின் செயலும், செய்தியுமாகும்.

## மொழியும், வடிவமும்

மொழி என்பது, சமூகத் தளத்தில் உற்பவிக்கப்பட்ட ஒவ்வொரு உயிர் உள்ள நடமாடும் நகரும் இயல்பு கொண்ட ஜீவனும் தனது எண்ணங்கள், உணர்வுகள், விருப்பங்கள், தேவைகள் என்பவற்றினைத் தன் இயல்பு கொண்ட பிறிதொரு பிராணிக்கு எடுத்துக் கூறுவதற்காகப் பயன்படுத்தும் ஓர் ஊடுகடத்து வழிவமாகக் கொள்ள முடியும். கருணாகரன் என்பவர் "பேச்சாலும். எழுத்தாலும் தனது கருத்தை பிறருக்கு கூறவும் நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்திலிருந்தே மனிதனோடு பின்னிப்பிணைந்திருந்த மொழி" என்கிறார். பேரா. அ. சண்முகதாஸ் அவர்கள் "மனிதனுடைய மிக முதன்மை வாய்ந்த கருத்துத் தொடர்புச் சாதனம் மொழியேயாகும். அவன் சிந்திப்பதற்கும், கருத்துக்களைத் தொடர்புறுத்துவதற்கும் ஒரு சமூகத்தின் அங்கத்தவனாகவும் தனி மனிதனாகவும் செயற்படுத்துவதற்கும் மொழியே முதன்மையான கருவியாக அமைகின்றது" என்கிறார்.

வேற்று மொழி என்பது ஒரு சமூகத்தின், இனத்தின் பூர்வீக காலம்தொட்டு பயில்நிலையில் உள்ள தொடர்பாட்டு ஊடக வழிவமல்லாத பிற சமூகத்தின், இனத்தின் மொழிக் கையாள்கையின் ஊடுருவலும், அதன் பயன்பாடும் ஆகும். அதாவது ஒரு இனத்தின் பூர்வீக மொழியல்லாத ஏனைய மொழிகளினை இது தொட்டு விரித்துச் செல்கிறது. வேற்று மொழியின் ஊடுருவல், பயன்பாடு, பிரயோகம் ஆகியன எத்தகைய தன்மையில் தமிழில் தாவியது, ஒட்டியது, அதனால் தமிழ்ப்பண்பாட்டில் ஏற்பட்ட சாதக, பாதகத் தன்மைகள் பற்றிச் சிந்திப்பதும், சித்திரிப்பதும் ஆய்வின் முதுகெலும்பு.

## பண்பாடும், பயில்நிலையும்

பண்பாடு என்பது பற்றி நோக்கின், இதனை முதலில் இலக்கண நிலையில் பண்பாடு என்ற சொல் பண் + பாடு என்பதன் புணர்ந்த வடிவமாகும். "பண்" என்ற அடிச்சொல் பண்டு என்ற சொல் தரும் அர்த்தம் போல் முன்னைய காலம், பழமையானது என ஊகிக்க முடிகிறது.

"பண்டு முளைப்பது அரிசியேயானாலும்......."

இதில் பண்டு என்பது முன்னர் என்பதனையே சுட்டுகின்றது. பாடு என்பது பின்பற்றுதல், உருவாக்குதல், பொறுப்பு என்பவற்றைச் சொல்ல முனைகிறது. இச்சொல் "தல்" என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்று, பண்படுத்தல் என்ற ஒரு தொழிற்பெயரினைச் சுட்டுகிறது. அதாவது மருதநிலத்தின் தொழில் நிமித்தத்தின் போது நிலத்தினைப் பண்படுத்தல், பதப்படுத்தல், ஒன்றிற்காக தயார் நிலைப்படுத்தல் என்னும் தன்மைகளுடன் இது நெருங்கிய தொடர்புபடுகின்றது.

வரலாற்று நிலை நின்று நோக்கின், பண்பாடு என்ற சொல் ஆரம்ப காலகட்டத்தில் இதே வரிவடிவத்தில் பயன்படுத்தாத தன்மையினை அறியலாம். இச்சொல் 1926-1931 இல் தயாரிக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக லெக்சிக்கனில் இடம் பெறவில்லை. இதனைத் தமிழில் அறிமுகப்படுத்திய பெருமை டி.கே. சிதம்பரநாதமுதலியாரையே சாரும். இவர் 1937 இல் இதனைத் தமிழுக்குக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தினார்.

முன்னைய காலத்தில் பண்பாடு என்னும் சொல்லாடலின் உள்ளீடுகள் நிறைந்த பதங்களாக பண்பு, பண்புடமை, சால்பு, சான்றாண்மை என்பவை பயில்நிலையில் உள்ளமையினை பழம் பிரதகளை வாசிக்கும் போது தரிசனம் செய்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. தமிழ்ப் பெருமைகளை, வாழ்வியல் முறைகளை நிலை நிறுத்தியது, திருக்குறள் என்று கூறுவது மிகைபடச் சொல்வதற்கான முயற்சியல்ல.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்" (997)

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்" (983)

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம் தான்
தாங்காது மன்னோ பொறை" (990)

"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்......." (கலித்தொகை)

என்ற இலக்கியச் சான்றுகளைத் தொட்டுணரும் போது பண்பாட்டின் உள்ளீடுகள் நிறைந்த பதங்கள் வேறு வரிவடிவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது நிதர்சனமாகின்றது.

## வேற்று மொழியின் ஊடுருவல்

ஒரு சமூகத்தின் பூர்வீக மொழியில் வேற்றுமொழி நிழல் ஆடுவதற்கான காரணங்கள், சந்தர்ப்பங்கள் நோக்குவோமாயின்,

- அரசியலில் உறுதித்தன்மை இன்மை.
- அரசியல் மாற்றங்கள்
- வேற்றுமொழி அரசுகளின் நீண்டகால ஆட்சி
- பழங்காலம் தொட்டே அந்நிய நாடுகளுடன் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகள்.
- பிறநாட்டுத் தூதுவர்களின் வருகை.
- பிறமதங்களின் வருகையும், அதன் செல்வாக்கும்.
- சமயவாதிகளின் பிரசார உத்திகள்.

முதலிய காரணங்களினால் வேற்றுமொழி ஊடுருவும் தன்மைகள் அதிகமாகவுள்ளது.

இலங்கையில் தமிழ் பேசும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களில் அதிகமாக வேற்றுமொழி பரவியுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் இப்பிரதேசங்கள் தமக்கே உரிய தனித்துவமான இறைமைகளை இழக்க நேரிட்டது.

சங்ககால ஈற்றுப் பகுதியில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார, சமய மாற்றங்களினால் பிற மொழிச் சொற்கள் தமிழ்மொழி மீது படையெடுத்தன. களப்பிரரின் படையெடுப்பினாலும், ஆட்சியினாலும் வடமொழிச் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. தமிழில் கலந்த பிறமொழிகளில் வடமொழியே பிரதானமானது.

இலங்கையைப் பொறுத்த வரையிலும் தமிழ்ப் பிரதேசங்களிலும் சரி பிற பிரதேசங்களிலும் சரி அதிகமான வேற்றுமொழிப் பிரயோகம் இடம்பெற்றது. இங்கு

- போர்த்துக்கேய மொழி
- ஒல்லாந்து மொழி
- ஆங்கிலமொழி
- அரேபிய மொழிகள்

எனப் பல்வேறு வேற்று மொழிகள் உள் நுழைந்தன. இத்தன்மையில் இலங்கையில் புகுந்த அனைத்து மொழிகள் பற்றிப் பார்க்கும் தன்மையினைக் குறைத்து சுதந்திரத்திற்குப் பின்னர் ஆங்கில மொழியினால் தமிழர் பண்பாட்டில். தமிழ்ப்பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்களைப் பேசுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இச்சூழலில் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்கள் சிலவற்றை இங்கு தொட்டுக் கோடிட்டுக் காட்டுவதுடன் அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களை அடையாளம் காட்டுவதும் மிக அவசியமான கூறாகவுள்ளது.

- நடை, உடை பாவனை
- சடங்கு
- கூட்டுக்குடும்பம்
- வழிபாட்டு முறை
- நம்பிக்கைகள்
- திருமணம்
- கற்பு
- தாலி
- சமயம் (மதம்)

இவ்வாறு தமிழர்கள் தமிழ் மரபியல் தன்மையோடு ஒன்றித்து வாழும் அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை தமிழ்ப் பண்பாடு என்கிறோம்.

வாலில்லா மனிதக் குரங்குகள் (மனிதர்) நாகரிக வளர்ச்சியினால் ஆடையணியும் இயல்பினைத் தமதாக்கிக் கொண்டனர். இவ் இயல்பினைக் காலப் போக்கில் இழந்துபோகும் தன்மையினையும், அதிலிருந்து உயர்நிலையினையும் அடைய முயற்சித்தனர். அதாவது மனித

சமூகம் அல்லது தமிழ்ச் சமூகம், மார்புக் கச்சையும், இடுப்புத்துணியினையும் தமது உடைகளாகவும், மரத்தின் விதைகளையும், கொடிகளையும் அணிகலன்களாகவும் அணிந்து, தமது ஆடை அணிகலன்களை உருவநிலைப்படுத்திக் கொண்டார்கள். பின்னர் வடமொழித் தொடர்பினால், கலப்பினால் வேட்டி சால்வை சேலை என்று மாறினர்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த மொழிகளின் பின்னர் தமிழைச் சூழ்ந்து கொண்ட மொழியாக ஆங்கிலமொழி திகழ்கிறது. இவ் ஆங்கிலமொழியின் பயில்நிலையால் தமிழர் பண்பாடான நடை, உடை பாவனைகளில் அதிக மாற்றங்களைச் சந்திக்க நேரிட்டது. அதாவது ஆங்கிலமொழியினர் அணிந்த உடைகள் தமிழ் பண்பாட்டில் பெரும் மாறுதல்களை உற்பவித்தது. மார்புக் கச்சை, இடுப்புத்துண்டு என்ற நிலை மாறி நீளக்காற்சட்டை, மேலங்கி (COAT, TIE) எனப் பல புதிய புதிய ஆடைகளை உற்பவித்து அவற்றை அணிந்து உலாவந்தனர்.

முன்னர் "ஆடை பாதி ஆள்பாதி" என்னும் தன்மை நிலைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இம்மொழிப் பாவனையின் வளர்ச்சிப் போக்கில் மனிதனின் உடலில் ஆடையினைத் தேடிப் பார்க்கும் தன்மை அதிகரித்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இத்தன்மையின் போக்கு அடுத்த சந்ததிகள் ஆடையற்ற தன்மையை உள்வாங்கி, பிறப்புக் கோலத்தில் சஞ்சரித்து விடுவார்கள் எனப் பல நல்ல புத்திஜீவிகள் தங்கள் மனங்களை அங்கலாய்த்துக் கொள்கிறார்கள். முற்காலங்களில் எல்லாம் அறிவில், வயதில், நற்பண்புகளில் சிறந்த பெரியவர்கள். அவர்களின் எதிரில் தரிசனமாகும் போது, பல செயல்களை அவர்களுக்கு நிவேதனம் செய்தார்கள்.

- எழுந்து நிற்றல்
- வணக்கம் செய்தல்
- தோள் துண்டை எடுத்து இடையில் அணிதல்
- கைகட்டி மரியாதை செய்தல்
- கால் கழுவுதல்
- இன்முகம் காட்டுதல்
- அன்பு, அடக்கம் கலந்த வார்த்தைப் பரிமாற்றம்

இத் தன்மையினை பழம்பெரும் இலக்கியமான கம்பராமாயணத்தின் ஒரு காட்சியில் கண்டு கொள்ளலாம். அதாவது கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரதனை அழைத்து வரச் சென்ற சுமந்திரனிடம் கைகேயி இராமனை அழைத்து வரும்படி கூற கைகேயிடம் வந்த இராமன் செயல்களாக

"வந்தவள் தன்னைச் சென்னி மண் உற வணங்கி வாய்த்த
சிந்துரப பவளச் செவ்வாய் செங்கையில் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்.
அந்திவந்து அடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான்." (108)

என்னும் பாடலின் இராமன் தன் அன்னையை எவ்வாறு கனம் பண்ணினான் என்ற தன்மை இதனூடாக நிதர்சனமாகின்றது. இவ்வாறு பல பழம் படைப்புக்கள், எமக்கு இதனைப் போதிக்கின்றது. ஆனால் இத்தன்மைகளின் பின்னர் சலாம் போடுதல் (Salut) என்னும் தன்மைகளை தமதாக்கிக் கொண்டதுடன் மேலும் நல்ல இயல்புகள் நம்மில் புகுந்ததுடன் நின்றுவிடாது. மனித வாழ்வுக்கு ஏற்பல்லாத தன்மைகளும் நுழைந்து கொள்வதற்கு மறுக்கவில்லை.

- எழுந்து நிற்காமை
- வணக்கம் சொல்லாது மௌனிகளாகுதல்

- எதிர்த்துப் பேசுதல்
- வன்மையான சொற்களைப் பயன்படுத்தி உரையாடுதல்
- வாழ்வியல் முறைக்கு முரணாக தம் வாழ்வை வடிவமைத்தல்

என்பன இக்கால மக்களின் புதிய முறைமைகளாக காணப்படுகின்றது. அடுத்து தமிழினத்தின் குடும்ப வாழ்க்கைமுறைகளிலும் அதிக மாறுதல்களைச் சந்திக்க நேரிட்டது. அதாவது முன்னய காலகட்டங்களில் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, மாமன், மாமி, மச்சான், மச்சாள் போன்ற குடும்பப் பிரிவினர்களும் ஒன்றாக ஒரு கூட்டுக் கிளியாக வாழ்ந்தனர். அதனையே கூட்டுக் குடும்பம் என்று அழைத்தனர். ஆனால் இன்று இவ் வாழ்க்கை முறைகள் சிதறடிக்கப்பட்டு தனித் தனிக் குடில்களாக தனித்தனி தீவுகளில் தனியன்களாகி வாழ்க்கை முறை தெரியாது வாழ்ந்து வருகின்றனர்.

தமிழரின் வாழ்வியல் அடையாளச் சின்னங்களாகத் திருமணம், தாலி, கற்பு, பொட்டு என்பன முக்கியமானவை. முன்பெல்லாம் திருமண நிகழ்வு என்பது, பெரியார் முன்னிலையில் சடங்கா சாரங்களுக்கு மத்தியில் இடம்பெறும் புனிதமான நிகழ்வு. ஆனால் இன்றெல்லாம் இப் புனித நிகழ்வு புனிதமற்ற தன்மையில் அரங்கேறுவதனைக் காணமுடிகின்றது.

- பதிவாளர் இல்லங்களிலும்
- ஒதுக்குப்புற இடங்களிலும்
- சிறுதெய்வ வழிபாட்டிடங்களிலும்
- சகபாடிகளின் வாழ்விடங்களிலும்

எனப் பல தன்மைகளில் இடம்பெற்ற திருமணங்களினால் அதன் தனித் தன்மைகள் குறைந்து செல்வதனையே காணமுடிகின்றது.தாலி என்பதும் இவ்வாறுதான் புனிதச் சின்னமாக மதிக்கப்பட்டது. ஆனால் தற்சமயம் அப்புனிதங்கள் எல்லாம் புதைகுழியில் போட்டுப் புதைக்கும் நிலைக்குள்ளாகியுள்ளோம்.

தாலி பெண்களுக்கு வேலி என்ற இயல்பு நிலைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இன்று தாம் வேலிகளைக் கடந்து செல்வதற்கு தாலியை ஒரு வாகனமாகப் பயன்படுத்தினார்கள் என்று கூறும் போது நெஞ்சம் கனக்கிறது தாலி.கற்பு என்பது பெண்ணினம் தம் மனத்தினால் கூட வேறு ஒருவனை நினைக்காது, உள்ளெண்ணத்துடன் வாழும் வாழ்க்கை முறையினை இது சுட்டுகின்றது. கற்புக்குரிய திருமண உறவில் தன் துணையைத் தவிர வேறுறொருவரை நடாத ஒழுக்கம். கற்புடைய பெண்கள் கற்பில் சிறந்த பெண்கள் கன்னித் தன்மை (virginity) என்பவற்றினைக் கூறுகின்றது.

தமிழ் இலக்கியங்கள் மனித வாழ்க்கையினை கற்பியல், களவியல் என இரண்டாகக் கூறுகின்றனர் தொல்காப்பியர் கற்பு வாழ்வினைப் பற்றிக் கூறும் போது

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" (தொல்காப்பியர் பொருள் 140)

என தொல்காப்பியர் கூறி, அதாவது கற்பென்று சிறப்பித்துக் கூறப்பெறுவது, வதுவைச் சடங்குடன் பொருந்திக் கொள்வதற்குரிய மரபினையுடைய தலைவன் தலைவியைக்

கொடுப்பதற்குரிய மரபினையுடையோர் கொடுப்பக் கொள்வது, தொல்காப்பியர் இல்வாழ்வின் தொடக்கத்தினையே கற்பு வாழ்வின் தொடக்கமாகக் கொள்ளுகின்றார். இது திருமணச் சடங்கின் மூலமே ஏற்படுகின்றது.

"ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"

எனத் திருவள்ளுவர் கற்பினை முதன்மைப் படுத்துகின்றார். தமிழர்களில் நெற்றித்திலகம் முக்கியமானது. பெண்கள் திருமணத்தின் போது அணிவார்கள். ஆண்களிற்கு அவர்கள் போரிற்கு செல்லும் போதும், முக்கிய காரியங்களிற்குச் செல்லும் போதும் அணிவது வழக்கமாயிற்று. இதனை வெற்றித் திலகம் என்று அழைத்தனர். ஆனால் இன்றெல்லாம் இத்தன்மைகள் காண்பது அரிதாகிவிட்டது. இத்துடன் இன்று உடைகளின் வண்ணங்களுக்கேற்ப ஒட்டுப் பொட்டு அணியும் பழக்கம் தலை நீட்டியுள்ளது.

இவ்வாறு பல்வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயந்திரம் இன்றி அவனால் நிறைவேற்ற முடியாத தன்மை காணப்படுகின்றது. இதனால் மனிதன் எதுவும் செய்யமுடியாதளவுக்கு அவனைச் சோம்பேறி ஆக்கிய பெருமையும் இச் செயற்பாடுகளினால் தான் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அத்துடன் இக்காலத்தில் புதிய புதிய நோய் நொடிகள் நம்மைப் பற்றிக் கொள்வதற்கு இத் தன்மைகள் மூலமாகின்றன.

தமிழ்ப் பண்பாடு, மரபுரிமைகள் பற்றிப் பேசும் போது சுமைதாங்கி, நீர்த்தொட்டி, ஆவுரஞ்சிக்கல் என்ற தொகுதிகள் மிக முக்கியமானது. இத் தொகுதிகள் எல்லாம் இன்று இருந்த இடம் இல்லாது புதைந்தமைக்கும் இதே காரணத்தைச் சொல்லத் தலைப்பட்டிருக்கிறோம்.

ஒரு மனிதன் தன் மொழி தவிர்ந்த மொழியறிவினைப் பெறும் போது அவன் மேலும் இரட்டிப்பாகிறான். பல நல்ல கருத்துக்களை பெற்றுக் கொள்கிறான். "மொழி மனிதனை இரட்டிக்கும்" என்று சான்றோர்கள் கூறுவர். ஆனால் நாம் அவ்வியல்பகளைப் பெறுவதுடன் அதனையே பிரதானமானது எனக் கருதிவாழ்ந்து வருகின்றோம். உதாரணமாக எல்லாப் பிள்ளைகளின் பெற்ற தாயை நாம் அம்மா என்றுதான் அழைக்கின்றோம். அதற்கு அவர்கள் எல்லோரும் மடியில் வைத்துப் பாலூட்டுவார்களா? இல்லவே இல்லை. அதே போல் நாம் அறிவில் வளர்வதற்கு நம் மொழியே மூலகாரணமாகின்றது.

எனவே ஒரு இனத்தின் பண்பாட்டுக் கூறுகளைத் தீர்மானிப்பதில் மொழிக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. இவ்வகையில் தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் எவை, அவை எத்தகைய வீரியத்துடன் இயங்குகின்றன என்பது பற்றி ஆராய்வதற்கும், அதன் நன்மை, தீமைகளை கூறுவதற்கும், எமக்கான பண்பாடுகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் செயல் வட்டம் ஒன்று இயங்குதல் வேண்டும். அவை பாடசாலை, கிராமங்கள் போன்ற சமூக வலையமைப்புக் கொண்ட இடங்களில் இதயசுத்தியுடன் செயற்படும் போது தமிழ் இனத்திற்கான, சமூகத்திற்கான பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கவும், நடைமுறைப்படுத்தவும் முடியும். அத்துடன் தமிழினத்தை தமக்கான நித்திய வாழ்விற்கு அழைத்துச் செல்லும் என்பது திண்ணம்.

வை. நவதரன்
ஆசிரியர்

# மாணவர்களின் கல்வி விருத்தியில் பாடசாலை நூலகம்

கல்வி என்பது அறிவைப் பெற்றுத்தரும் கலையாகும். ஒழுங்கமைக்கப் பட்டதும் திட்டமிடப்பட்டதுமான முறையில் அறிவை வளர்ப்பது கல்வியாகும். உடல், அறிவு, உணர்வு ஆகிய மூன்றினையும் ஒருங்கிணைத்து முழு வளர்ச்சி பெறச் செய்வதே கல்வியின் நோக்கமாகும். மனிதனது பூரணத்துவமான வளர்ச்சிக்கும், அவனது அறிவு வளர்ச்சியே அடிப்படையாக அமைகின்றது. அறிவும் ஞானமும் இணையுமிடத்து மனிதனிடத்தில் பரிபூரணத்துவத்தைக் காண முடிகின்றது. அறிவு, திறன், நடத்தை இம் மூன்றும் ஒருங்கு சேர்ந்து இயங்கும் போது தனிமனிதன் ஆளுமையை வளர்த்துத் தனக்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நற்குடிமகனாகத் திகழ்கின்றான். எந்தவொரு நாட்டிலும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் பாடசாலைகளே முக்கிய பங்கு வகிக்கின்றன. வெறுமனே ஏட்டுக்கல்வியாலன்றிச் சுய கல்வியால்த்தான் இப்பணி முழுமைபெற முடியும் என்பது உணரப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியில் கற்றல் - கற்பித்தலில் அறிதல் சிறப்புற அமைவதற்கு அடித்தளமாகப் அப்பாடசாலை நூலகங்கள் அமைகின்றன.

இலங்கையில் பாடசாலை நூலகங்களின் வரலாறானது அமெரிக்கன் மிஷன், மெதடிஸ்த மிஷன்களின் பாடசாலைக் கல்விமுறை வளர்ச்சியோடு இணைந்தே காணப்படுகின்றது. கல்வி கற்பது மனிதனின் ஜனநாயக உரிமை என்ற கருத்து வலுப்பெற்று வருகின்ற உலகச் சூழலில் 1945 ஆம் ஆண்டு இலவசக் கல்வியும் அதன் பின் தாய்மொழி மூலம் கல்வியும் அறிமுகமாயின. ஆனால் காலப்போக்கில தாய்மொழி மூலம் கல்வி தேசிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதற்கேற்ற வகையில் புதிய கல்வித் திட்டங்களைக் காலத்திற்குக் காலம் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்துகின்றது. அரசுக்கும் கல்விக்கும் இடையேயான தொடர்பு ஒன்றிலொன்று சார்ந்திருப்பதாகும். கல்வி சிறந்த ஆட்சியை உருவாக்கும். சிறந்த ஆட்சி முறைக்கு அது தரும் கல்விமுறையே குறியீடாகும். 1939 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்கக் கல்விச் சட்டத்தின் மூலம் மத்திய மகா வித்தியாலயங்களின் அபிவிருத்தியில் பாடசாலைகளில் நூலகங்கள் உள்ளெடுக்கப்பட்டன.

அதன்பின் 1960 இல் இலங்கைப் பாடசாலை வளர்ச்சியில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக நூலகங்கள் தொடர்பான முதலாவது சட்டம் இயற்றப்பட்டது. 1961 இல் அமைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு 1962 இல் 33 தலைப்புக்களில் தனது சிபார்சுகளை சமர்ப்பித்தது. அத்தலைப்புக்களில் 9 ஆவது தலைப்பு பாடசாலை நூல் நிலையங்கள் தொடர்பானதாகும். 1964 இல் வெளியிடப்பட்ட Proposal For National System Of Education என்ற ஆவணத்தில் நூலகங்கள் பற்றிய பல்வேறு விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இலங்கைக்கான யுனஸ்கோவின் நூலக அமைப்பு ஆலோசகராக நூலகவியல் நிபுணர் செல்வி எவிலின் இவான்ஸ் 1967 - 1970 வரையான காலப்பகுதியில் பணிபுரிந்தார். இவர் இலங்கையில் தேசிய நூலகம் அமைக்கவும் பாடசாலை நூலகங்களைப் புனரமைக்கவும் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொண்டார். இதே ஆண்டில் சகல மத்திய மகா வித்தியாலங்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையானது நூலகங்களை நிர்வகிப்பதற்கான ஒரு வழிகாட்டியாக அமைந்தது.

இலங்கைக் கல்வி நூற்றாண்டினை மெருகூட்டும் வகையில் 1969 இல் இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் பாடசாலை நூலகங்கள் இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. இக்கல்வி நூற்றாண்டை முன்னிட்டு இலங்கை முழுவதிலும் 100 சுயபாஷா பாடசாலைகளிலிருந்து இருநூறு ஆசிரியர்களைத் தெரிவு செய்து 5 நாள் நூலகப் பயிற்சி தமிழ், சிங்கள மொழி மூலம் நடாத்தப்பட்டது. இந்த நூலகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டு 100 பாடசாலைகளிலும் கல்வி நூற்றாண்டு நினைவாக நூலகங்கள் ஆரம்பிக்கப் பட்டன. 1977 இல் 700 பாடசாலை நூலகங்கள் இருந்ததாகவும் 1982 இல் 3800 நூலகங்கள் இருந்ததாகவும் தெரிய வருகின்றது. 1999 இல் நடைமுறைப் படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தில் நூல் நிலையத்தில் மொழி, இலக்கியம் சார்ந்த நூல்களைக் களஞ்சியப்படுத்தல் வாசிக்க இலக்கிய நூல்களிலிருந்து பெற்ற விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வகையில் பாடசாலைக் கல்வி விருத்தி பெற வேண்டுமாயின் அறிவுத் தேடலை ஊக்குவிக்கும் நூலகங்கள் பாடசாலைகளில் சிறப்பாக முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

பாடசாலை நூலகங்களின் பிரதான நோக்கமாக அமைவது வாசிப்புத் திறனை விருத்தி செய்தல் என்பதாகும். வாசிப்பு என்பது பாடசாலைக் கல்வி, பாடசாலை நூலகம் மூலம் வளர்ச்சியடைவதாகும். வாசிப்பதால் "மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்." பண்பாட்டுத் தகவல் மையங்களாகவும் மாணவர், ஆசிரியர், ஆள் வளத்தின் அறிவு சார் கற்றலுக்குரிய தகவல்களைத் தேடும் அறிவுக் கூட்டமாகவும் பாடசாலை நூலகங்கள் செயற்பட வேண்டும். மாணவர்களது சுய கற்றலுக்கான வாய்ப்பினையும் பாடசாலை நூலகங்கள் செயற்பட வேண்டும். மாணவர்களது சுயகற்றலுக்கான வாய்ப்பினையும் பாடசாலை நூலகங்கள் வழங்குகின்றன.

இன்றைய மாணவர்கள் தனியார் கல்விநிலையக் கற்றலிலே அதிக நாட்டம் கொண்டுள்ளனர். அவர்களை நூலகப் பயன்பாட்டுக்கு வழிப்படுத்தி ஆர்வத்தைத் தூண்டுவது ஆசிரியரதும் நூலகரதும் முக்கிய கடமையும் பொறுப்புமாகும். பாடசாலை நூலகத்தின் நூலகர் அறிவின் பக்கம் மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பாரிய பொறுப்புடையவராக இருப்பது மிகவும் அவசியமாகும். நூலகம் ஒன்றிலே "அறிவுச் சாதனங்களைச் சேகரித்தல், ஒழுங்குபடுத்திப் பேணுதல், பயன்பாட்டுக்கு உள்ளாதல், வழிப்படுத்தல் நூலகத்தின் சேவை" என்றார் அறிஞர் தோமஸ் லண்டோ. இவரது கருத்துப்படி நூலகமானது சுயமான கற்றலை முன்னெடுக்கும் களமாகும் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

ஒரு பாடசாலையின் நூலகமானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டதாக அமையவேண்டும். பாடசாலையிலுள்ள சகல மாணவர்களுக்கும் அவரவர் கல்வித்தரம், அறிவாற்றலுக்கு ஏற்றவகையில் நூல்களை வழங்குதல், பாடவிதானத்துடன் வழங்குதல், மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், மாணவர்கள் ஓய்வுநேரங்களைப் பயனுள்ள விதத்தில் செலவு செய்ய நூல்களை வழங்குதல், அத்துடன் ஆசிரியர்களுக்குப் பொருத்தமான நூல்களை, கைந்நூல்கள், வழிகாட்டிகள், மேலதிக வாசிப்பு நூல்கள், ஆசிரிய வாண்மை விருத்திக்குரிய நூல்களை வழங்க வேண்டும். இற்றுடன் பாடத்துறை தொடர்பான ஆவணங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள் போன்றவற்றையும் வழங்குதல் வேண்டும்.

மேலும் நூலகமானது மாணவர்களின் மூலவளங்களின் களமாகவும், படிக்கும் களமாகவும் அமைவதன் மூலம் மாணவர்களது கற்றல் திறனை மேம்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். 6 வயது முதல் 19 வயது வரை ஒரு பிள்ளையின் இளமைப்பருவத்தில் 13 ஆண்டுகள் பாடசாலையிலேயே செலவிடுகின்றனர். இக்காலத்தில் கற்றலில் ஆர்வம், அறிவற்றல்திறன், நடத்தை, உளப்பாங்கு, அறிவைக் கொள்ளப்பழகுதல், நுண்மதி என்பவற்றை வளர்த்து நெறிப்படுத்துவதற்கு உரமிடுவது பாடசாலை நூலகப் பழக்கங்களே யாகும். யுனஸ்கோவின நூலகவியல் நிபுணர் செல்வி எவிலின் இவான்ஸ் தமது நூலகங்கள் பற்றிய அவதானிப்பறிக்கையுல் வாசிக்கும் பழக்கம் பாடசாலையிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் பாடசாலை நூலகங்கள் நாட்டின் தேசிய கல்விக் கொள்கையில் முதன்மை பெறவேண்டுமெனவும் கூறியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி செயற்பாட்டு அறை (Activity Room) அமைப்பில் நூலகத்திற்கு இடம் ஒதுக்குதல் (புத்தக மூலை) காணப்படுகின்றது. மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் வரையறுக்கப்பட்ட மூன்று பாடங்களையும் ஒரு உளச்சார்புத் தேர்வையும் பல்கலைக்கழக நுழைவுக்கு மாணவர்கள் எடுக்கவேண்டும். பாடக் குறைப்பானது மாணவர்கள் மேலும் ஆழ்ந்து கற்பதற்கும் வாசிப்புத்திறன்களை வளர்ப்பதற்கும் எனக் காணப்படுகின்றது. எனவே பாடசாலை நூலகப் பயன்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது.

நூலகத்திற்குப் பொருத்தமான உள்ளீடுகள் அமைய வேண்டியதும் முக்கியமானதாகும். பாடசாலை நூலகங்களில் மேலதிக வாசிப்புச் செயற்பாடுகளுக்கு உசாத்துணைப்பிரிவு அவசியமாகும். இதில் மாணவர்கள் பயன்பாட்டுக்குரியவை ஆசிரியர் பயன்பாட்டுக்குரியவை, ஆய்வுக்குரியவை என்றும் உள்ளீடுகளுடன் பொது அறிவுக்கான தகவல்களைத் தரும் ஆவணங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

பாடசாலை நூலகமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டியவையாக அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், கட்டுரை மலர்கள், அரச வெளியீடுகள், ஆண்டு நூல்கள், வழிகாட்டிகள், கலைச்சொல்

அகராதிகள், நூலுருவில் உள்ளவை அதாவது தனிநூல்கள், பருவ இதழ்கள், கையெழுத்துப் பிரதிகள், கைந்நூல்கள், அறிக்கைகள் என்பன அடங்கும். அத்துடன் நூலுருவில் அல்லாதாவையாக கட்புல செவிப்புல சாதனங்கள் இசைத்தட்டுக்கள், வரைபடங்கள், சுவரொட்டிகள், ஓவியங்கள், சிற்பம் என்பன அடங்கும். இவற்றுடன் சர்வதேச நிறுவன வெளியீடுகளான தகவல் தருபவை, கருமூலம் கொண்டவை, புத்துயிர் தருபவை, ஆய்வுப் பொருட் கொண்டவை, விளக்கம் தருபவை, அறிக்கை நிலையிலுள்ளவை போன்ற வெளியீடுகளும் உள்ளடக்கப்படலாம்.

அறிவு பூர்வமாக சிந்திக்கும் ஆற்றல் மிக்க குடிகளை உருவாக்குவதில் நூலகம் அளப்பாரிய சேவை செய்கின்றது. சிந்திக்கும் ஆற்றல் மிக்க நற்குடிகள் நூலகச் சுய கற்றல் மூலமே உருவாக்கப்படுகின்றனர். பயனுறுதி மிக்க சமூகக் கட்டமைப்பின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடசாலைக் கல்விமுறையில் பாடசாலை நூலகத்தின் அளப்பரிய சேவையினையும் அதன் பயன்பாடுகளையும வளர்த்து அறிவுத்திறன் மிக்க சமூகத்தை எழுச்சி பெறச் செய்வது பாடசாலைகளாகும். இத்தகைய பாடசாலைகளில மாணவர்களின் அறிவை மேம்படுத்தி சுய கற்றலுக்கு அடித்தளமிடுவது பாடசாலை நூலகங்களேயாகும்.

திருமதி மனோகராதேவி மங்களகுமரன்
ஆசிரியை,
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



மாணவ முதல்வர்கள் - 2015

# மாற்றங்கள் வேண்டும்

மாற்றங்கள் ஒன்றே இந்த உலகின் நிலையானதாக நிலைபெறுகின்றது. இது உலக ஒழுங்கின் அடிப்படையிலானதாகும். இதனை அனைவரும் ஏற்று நடப்பார்களாயின் இந்த உலகில் பிரச்சினைகள் குறைவானதாகவே காணப்படும். சிலர் இவ்வுலகின் மாற்றங்களையும், மாற்றங்களே நிலையானது என்பதனையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதுவே அவர்களையும், அவர்களுடன் தொடர்புபட்டவர்களையும் சிக்கலான சூழல்களுக்கு இட்டுச் செல்கின்றது. கல்வியின் பொது நோக்கமே சமகால மாற்றங்களுக்கு ஏற்ற ஒரு பிரஜையாக மாணவர்கள் வளர்வதற்கு வழிகாட்டுவதாகும். இன்றைய சூழலில் சமூகத்தேவைகளும், சமகாலத் தேவைகளும் மாற்றமடைந்து செல்கின்றமையால் மாறிவரும் மாற்றங்களுக்கு ஏற்ப மாணவர்களின் நடத்தைப் பண்புகளையும், இலக்குகளையும் மாற்ற வழிகாட்ட வேண்டிய தேவை உள்ளது. இதனைச் சிலர் ஏற்றுக் கொள்ள மறுப்பது இளையவர்களின் எதிர்காலம் தளம்பலடையவும், திசைமாறவும் காரணமாக அமைகின்றது. மாற்றங்களை ஏற்று அதனுள் குறிப்பிட்ட சமூகத்துக்குப் பொருத்தமான மாற்றங்களை உள்வாங்குவதன் மூலம் மாணவர்களின் தடுமாற்றங்களையும், மாணவர், பெற்றோர், ஆசிரியர் இடைத்தொடர்பினையும் நெகிழ்வுடையதாக அமைத்துக் கொள்வது மூன்று சாராரினதும் பொறுப்பாகும்.

மனித வாழ்வின் பருவங்களானது மீளப்பெற முடியாததும் ஈடுசெய்ய முடியாததுமாகும். ஒரு பருவத்தில் இழந்ததினை இன்னோர் பருவத்தில் பெற்றுக்கொள்ள முற்படும் போது முரண்பாடுகள் ஏற்படுவதுடன் குறிப்பிட்ட பருவத்திற்குப் பொருத்தமற்றதாகவும் அமைகின்றது. இதனாலேயே அந்தந்தப் பருவத்துக்குரிய செயற்பாடுகளை அவ்வவ் காலங்களில் பெற்றுக்கொள்வதே பொருத்தமானதாகும். மாணவர்களைப் பொறுத்த வரையில் அதிக சவால்களை எதிர்கொள்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். காரணம் அவர்களின் வாழ்க்கை ஒழுங்கினைப் புறக்காரணிகள் அதிகளவுக்குத் தீர்மானிக்கின்றன. இன்று இவர்களது பொழுதுபோக்கினைக் கூட உடலுக்கு ஆரோக்கியம் தரும் விளையாட்டுக்களில் இருந்து விலக்கிப் பல தொடர்பு சாதனங்களும் தீர்மானிப்பனவாக உள்ளன. அவர்களின் உணவுத்தெரிவுகளையும் அதிகளவுக்கு பல்தேசியக் கம்பனிகளே

நிர்ணயிக்கின்றன. இதனால் கவரப்பட்டு போசாக்கான உணவுகளை விடுத்து ஆரோக்கியக் குறைவுடையதும் ஆடம்பரமானதுமான உணவு விடுதிகளை நாடும் தன்மைக்கு அவர்களை உள்வாங்கியுள்ளன. ஒரு நோய்க்கு நிவாரணிகளைப் பெற்றுக்கொள்ள முற்படும் போது கூட அதில் பல்தேசிய மருந்துக்கம்பனிகளே முன்நிற்கின்றன. மிக நலமாக வாழ்வதும், துன்பமடைவதும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றதாகவே இடம்பெறுகின்றது.

நான் யார்? என்ற சுய கணிப்பினைப் பெறுவது மனிதனுக்கு மட்டுமே உரித்துடைய உயரிய பண்பாகும். இதனால் மனிதனுக்கு சுய கணிப்பு முக்கியம் பெறுகின்றது. சுய கணிப்பானது ஒருவனது வாழ்வில் எற்படும் சம்பிரதாயங்கள், அதனால் ஏற்படும் உணர்வுகள், அதனால் உருவாக்கிக் கொண்ட நேரான சிந்தனைகள் என்பவற்றின் கூட்டான தொகுதியாகவே அமைகின்றது. இவ்வாறான சுயகணிப்பினை உயர்வாக மாற்றிக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உறவுகளைப் பெறமுடிவதுடன், ஏமாற்றங்களுக்கு உட்படும் சந்தர்ப்பங்களும் குறைவடைகின்றது. ஒருவன் சிறிய சிறிய நல்ல விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் அவனுக்குப் புத்துணர்வு அதிகரித்து அதன் தொடர்ச்சியாக இடம்பெறுதல் அதிகளவுக்கு மகிழ்வாக வாழ்வினை அமைத்துக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது. எனவே மாணவர்கள் தமது இயலுமைகளை அறிந்து வலுவூட்டுவதுடன் இயலாமைகளை இயலுமைகளாக மாற்றுவதற்கு உரிய சந்தர்ப்பமாக தமது பாடசாலைக் காலத்தினை நோக்குவார்களேயாயின் சமகால சமூகப் பொருத்தப்பாடுடைய ஒரு மாணவர் சமூகம் தோற்றம் பெறுவதனை யாராலும் தடுக்க முடியாது.

இன்றைய இளைய சமூகத்திற்கு முன்னதான தலைமுறையினரில் பெரும்பாலானோர் தாமே வளர்ந்த தன்மைகளே அதிகம். இதனால் இவர்கள் சுயதிறனுடையவர்களாகவும், தாமே இயங்கும் திறனுடைய தன்மை அதிகமானதாகவும், வளர்ந்து வந்துள்ளனர். ஆனால் இன்றைய இளைய சமூகத்தவர்கள் வளர்க்கப்படுகின்றார்கள். இதனால் வளர்ப்பவர்களின் நடத்தைப் பண்புகள் பிள்ளைகளில் அதிகம் தாக்கம் செலுத்துகின்றது. இதனாலேயே பொருத்தமற்ற நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே வளர்கின்றனர். இன்றைய நிலையில் பிள்ளை வளர்ப்பினில் மூன்று வகைக்குட்படுத்தக்கூடிய பெற்றோர்கள் உள்ளனர். அதிக

அக்கறையுடன் வளர்க்கும் பெற்றோர்கள். இவர்கள் பிள்ளைகளை கண்டிப்பது மிகவும் குறைவாகவே காணப்படும். இரண்டாவது அதிகளவுக்கு கண்டிப்பினை உடைய பெற்றார்கள் இவர்கள் கட்டளைக்கு செயற்படும் வண்ணம் பிள்ளைகளை ஒழுங்கமைத்திருப்பார்கள். மூன்றாவது கண்டிப்புடன் கூடிய அக்கறை காட்டும் பெற்றோர்கள். இங்கு மூன்றாவது முறையினைப் பின்பற்றும் பெற்றோர்களால் வளர்க்கப்படும் பிள்ளைகள் பிறழ்வுகளில் ஈடுபடும் தன்மைகள் குறைவாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளை வளர்ப்பது என்பது இன்று மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய ஒரு விடயமாகும். பெற்றார்கள் தேவையான இடங்களில் கண்டிப்பினைச் செய்து நட்புறவுடன் தொடர்புகளைப் பேணுவதுடன் பிள்ளைகளின் நண்பர்களுடனும் சிறந்த தொடர்பாடலைப் பேணுவதன் மூலம் பிள்ளைகளை இலகுவில் கையாள முடிகின்றது. இதன்மூலம் பிள்ளையில் ஏனையவர்களின் செல்வாக்கு ஏற்படும் போது பெற்றாரின் உறவுப் பிணைப்பில் இருந்து விலக முற்படுவார்கள். இவ்விடத்தில் பிள்ளைக்கு ஏதோ தடங்கல் ஏற்பட்டுள்ளது என்பதனை இலகுவாக அறிந்து அதற்கான மாற்றுச் செயற்பாடுகளின் மூலம் பிள்ளைகளை பிறழ்வுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். இன்று மேற்குறிப்பிட்ட இருமுறைகளையும் பின்பற்றும் பெற்றோர்களில் பலர் பிள்ளைகள் பிரச்சினைகளுக்கு உட்பட்டு அது தீவிரத் தன்மையினை அடைந்த பின்னரே அறிகின்றனர். இது தவிர பிள்ளைகள் ஆளுமைக் குறைபாடுடையவர்களாகவும் மானிட இடைத்தொடர்புகள் குறைவுபட்டவர்களாகவும் வளர்கின்றனர். இதனடிப்படையிலேயே பெற்றோரிடத்தில் மாற்றம் வேண்டும்.

இன்று போட்டியுடைய உலக ஒழுங்கில் பிள்ளைகளை வல்லவர்களாக வளர்க்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டும் பெற்றோர்களில் பலர் நல்லவர்களாக வளர வேண்டும் என்பதனைத் தவறவிட்டு விடுகின்றனர்.ஒரு குழந்தை கருவறையில் இருக்கும்வேளையில் காட்டிய அக்கறையின் அளவினைப் பிள்ளைப் பருவ வளர்ச்சியின் போது காட்டுவதில் குறைவு நிலையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் நடத்தைகளிலும் மாற்றங்கள் எதிர்மறையானதாக அமைகின்றது.

இன்று இளையவர்களை அதிகளவுக்கு ஈர்த்து வைத்துள்ள விடயமாக நவீன தொழில்நுட்பம் சார்பான தொடர்புசாதனங்களும்,

விளையாட்டுச் சாதனங்களும் காணப்படுகின்றன. இவர்களுடைய பெற்றார்களில் அதிகமானோர் நவீன தொடர்பாடல் சாதனங்கள் சார்பான இலத்திரனியலில் கருவிகளை சரளமாகக் கையாளும் அளவிற்கான அறிவுப் பற்றாக்குறையுடையவர்களாகவும் உள்ளனர். ஆனால் இளையவர்கள் மிக வேகமான பயன்பாட்டு திறனுடையவர்களாக உள்ளனர். இதனால் பிள்ளைகள் நவீன தொடர்புசாதனங்களில் பயன்படுத்தும் விடயங்கள் பற்றித் தெரிந்துகொள்ள முடியாதவர்களாகவும், கண்காணிக்க முடியாதவர்களாகவும் உள்ளனர். அத்துடன் அதிகமான நடுத்தர வசதியுடைய பெற்றார்கள் மிகவும் கஷ்ரப்பட்டு அந்நிலையை எட்டியவர்களாக இருப்பதனால் தங்களது இளமைக்காலத்தில் வறுமை காரணமாக அனுபவிக்க முடியாது போனவற்றையெல்லாம் தமது பிள்ளைகளுக்கு எவ்வளவு கஷ்ரப்பட்டு ஏனும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தாம் இழந்தவற்றினைப் பெற்ற திருப்தியினைப் பெறுகின்றனர். ஆனால் அதன் விளைவோ பாரதூரமானதாக அமைகின்றது. இச்செயன் முறையானது பிள்ளைகள் இலகுவாகப் பெற்றோரை ஏமாற்ற வாய்ப்பாக அமைவதுடன் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தூண்டுதலாக அமைகின்றது. இதனால் பிள்ளைகள் பயன்படுத்துவதனைக் கண்காணிக்கும் அளவிற்கேனும் தமது தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த வேண்டியவர்களாகவோ அன்றி குறிப்பிட்ட வயது வரை கையாள்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்காது ஒழுங்கமைக்க வேண்டியவர்களாகவோ மாற வேண்டியுள்ளது.

அதிகமான பெற்றோர்கள் தமது வாழ்வினை மேம்படுத்துவதற்காக உழைப்புக்காக அதிகளவு நேரத்தினைச் செலவிடுகின்றனர். நீண்டதூரம் பிரிந்துகூட உழைக்க முயற்சிக்கின்றனர். இவையெல்லாம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஆகும். ஆனால் பெற்றாரின் அரவணைப்பு இன்றி சேர்ந்து வாழும் தன்மை இழக்கப்பட்டமையினால் சிலர் பிள்ளைகளைத் துஸ்பிரயோகம் செய்வதற்கும், நடத்தைப் பிறழ்வுகளிற்கு உட்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைகின்றது. இவ்வேளையில் பிள்ளையின் எதிர்காலமே தெளிவற்று இருக்கும் போது தனது கடுமையான உடலுழைப்பை வழங்கிய பெற்றோரின் உழைப்புக்கள் பயனற்றவையாக மாறுகின்றன.

பெற்றோர்கள், பிள்ளைகளை அரவணைப்புடன் கூடிய கண்டிப்புடனும் சுயமாக இயக்கக் கூடியவர்களாகவும், முடிவெடுக்கக்

கூடியவர்களாகவும், பொறுப்பானவர்களாகவும், பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றினைக் கையாளக்கூடிய ஆற்றலுடையவர்களாகவும் வளர்கின்ற பிள்ளைகளினை எவையும் தம்வயப்படுத்த முடியாது போகும். ஆசிரியர்கள் தம்மிடம் துன்பத்துடன் வரும் பிள்ளைகளிடத்தில் அன்பாகச் செயற்பட்டு அவர்களது அவலங்களைச் செவிமடுத்து ஆதரவு வழங்குவதே அவர்களை ஆற்றுப்படுத்தும் முக்கிய விடயமாகும்.

ஒரு மாணவனின் இலக்கு எது என்பவற்றினைத் தீர்மானிக்க பெற்றோருடன் ஆசிரியரது பங்களிப்பும் முக்கியம் பெறுகின்றது. ஏனெனில் பிள்ளைகளின் இயல்புகளையும், இயலாமைகளையும் இனங்காணும் திறன் ஆசிரியர்களிடம் அதிகம் காணப்படுகின்றது. இதற்கு ஏற்ப ஒருவனை ஒழுங்காக்க முடிகின்றது. இதனடிப்படையில் மாணவர்கள் தீர்மானிக்கும் இலக்கினை நோக்கி நகர்வதற்கு உபஇலக்குகளை வகுத்து அவற்றின் ஒவ்வொரு படிநிலையின் நிறைவிலும் ஊக்கப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட மாணவன் தனது இலக்கினை இலகுவாகப் பெற வழிகாட்ட முடிகின்றது. ஆனால் இன்று போட்டி கடுமையான அணுகுமுறைகளினால் சிலர் இலக்கினை நோக்கி நகர முடிவதுடன், இன்னும் சிலர் திசை மாறவும், பின்னடையவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இது சிலரின் வெற்றியை, தோல்வியடைந்த பலர் சேர்ந்து கொண்டாட வேண்டிய தன்மையை ஏற்படுத்துகின்றது. தரம் 5 புலமைப்பரீட்சையினை இதற்கு சிறந்த உதாரணமாகும். வெறுமனே தரப்படுத்தப்பட்ட நகரப் பாடசாலைகளில் அனுமதியைப் பெறப் பயன்படும். இப்பரீட்சை அதிகளவு கிராமப்புற மாணவர்களும் கடுமையான அன்றி அளவுக்கு மீறிய கற்றலளவை வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளாக் கப்படுகின்றனர்.

இன்று உட்படுத்தல் கல்விமுறை அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் போட்டி மனநிலையில் உள்ள பாடசாலைகள் தமது பெறுபேறுகளை உயர்த்திக் காட்ட வேண்டும் என்பதற்காக மீத்திறனுக்கு ஏற்ப தரம் பிரிகின்றனர். இதனால் மிகவும் பின்னிலையில் உள்ள கற்றல் திறனுடைய மாணவர்களினை ஆசிரியர்கள் விருப்புடன் நோக்கும் அளவு குறைவாகக் காணப்படுவதுடன் அரசின் நோக்கத்திற்கு முரணானதாகவும் அமைகின்றது. இவ்வாறான தன்மையானது குறிப்பிட்ட மாணவர்கள் ஒதுங்குதல், இடைவிலகுதல், பிறழ்வுகளில் ஈடுபடல் என்பன போன்றவற்றில் ஈடுபாட்டினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைகின்றது.

எனவே இந்த உலகில் மாற்றம் என்பது மட்டுமே நிலையானது. அதனை ஏற்றுக்கொண்டு மாற்றமடையும் உலக ஒழுங்கிக்கு ஏற்ப எம்மையும் மாற்றிக் கொள்வதன் மூலம், மாணவர், பெற்றார், ஆசிரியர்களுக்கு இடையிலான இடைத்தொடர்பு நெருக்கமுடையதாக அமையப்பெறும். மாற்றங்களை நாம் உள்வாங்கத் தயங்கும்போது நாம் பல விடயங்களில் இருந்து ஒதுங்கவேண்டிய சூழல் ஏற்படும். மாணவர்கள் மாறும் உலக மாற்றங்களில் பொருத்தமானவற்றை எடுத்துக்கொண்டு தேவையற்றவற்றை விலக்குவதன் மூலம் தெளிவுடையவர்களாகவும், சமூகத்துக்கு பொருத்தப்பாடு உடையவராகவும் மாற்றம் பெறுகின்றார்கள். பெற்றோர்கள் இயல்பான தொடர்பாடலைப் பேணுவதுடன் கண்டிப்புடன் கூடிய அரவணைப்பினையும் வைத்துக் கொள்வதன்மூலம் சிறந்ததும், பிரச்சினைகளைக் கையாளக்கூடிய பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனதும் ஆளிடை வேறுபாடுடையவன், அவனது சுய கணிப்பு, ஆளுமை, நடத்தைப் பண்புகள் வேறுபட்டன அவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு மாணவரையும் அணுகி கற்பித்தலை மேற்கொள்கின்றபோது இயலுமைகளையும், இயலாமைகளையும் அறிய முடிவதுடன் இயலாமைகளை இயலுமைகளாக மாற்ற வழிகளைத் தேட முடியும். எனவே மாறிவரும் உலகமாற்றங்களுக்கு ஏற்ப அனைவரும் தமது நிலையினை நிலை நிறுத்திக் கொள்வதற்கு மாற்றங்களைப் பொருத்தமான முறையில் உள்வாங்கி மாறவேண்டிய விடயங்களில் மாற்றங்களை செய்ய முற்படுகின்றபோது சமூக மாற்றம் ஏற்பட்டு சிறந்த ஆற்றலுடைய சமூகம் அமையப்பெறும் என்பது எனது நம்பிக்கை.

**ந. ஜோதிலிங்கம்**
(ஆசிரியர்: புவியியல், உளவளத்துணை)
(B.A (Hons), Dip.in.Ed, Dip.in.coun'g, trainer (Spycho social)

வட இந்தியாவிலிருந்து விஜயனும், அவன் தோழர்களும் இலங்கைக்கு வந்து குடியேறியதாகக் கூறப்படும் காலத்துக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழத்தின் தனி மரபினரான இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்து வந்தனர் என்பதை மகாவம்சம் எடுத்துக் கூறுகின்றது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது 3000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பெருங்கற் பண்பாட்டை ஒத்ததாக இங்கும் பரவலாகப் பல தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இலங்கையிலும் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் கி.மு 1000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் சிறந்த நாகரிகத்தோடு வாழ்ந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் நிலவிய தமிழ்ச் சங்கத்தில் ஈழத்தமிழ்ப் புலவர்கள் பலர் வீற்றிருக்கக்கூடிய அளவிற்கு இலங்கையிலே தமிழர்கள் நிலையாகவும், செழிப்பாகவும் வாழ்ந்திருக்கின்றனர். மகாவம்சத்தின் கூற்றுப்படி விஜயன் 700 பேருடன் இலங்கைக்கு வந்த ஓராண்டுக்குள் தமிழ் இளவரசி மற்றும் 700 பெண்கள், கைவினை கலைஞர்கள், பதினெண் குடிகளைச் சேர்ந்த 1000 குடும்பங்கள் எனப் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வந்து குடியேறினர்.

முதலாம் கஜபாகு காலத்தில் 12000 தமிழர்கள் இங்கு கொண்டுவந்து குடியேற்றப்பட்டதாக "பூஜாவளி" எனும் சிங்களநூல் கூறுகின்றது. இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். 2300 ஆண்டுகளுக்கு மேலாக தமிழரும், சிங்களவரும் மாறி மாறி இலங்கையில் அனுராதபுரத்திலும், அதற்குத் தெற்கேயும் ஆட்சி நடாத்தியிருக்கின்றனர். வட இலங்கையில் தமிழர்கள் தனியாட்சி நடாத்தி நிலையாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் ஓரிரு சிங்கள அரசர்கள் மட்டுமே குறிப்பிட்ட சில ஆண்டுகள் இலங்கையின் வட பகுதியையும் சேர்த்து ஆட்சிசெய்தனர். கிபி 1215 ஆம் ஆண்டு மாகன் ஆட்சிபீடம் ஏறியதன் பின் இலங்கையின் வடகிழக்கு, வடமேற்குப் பகுதி தமிழ்ப்பகுதியாகவும், தென்மேற்குப் பகுதியும், மலையகப் பகுதியும் சிங்களப் பகுதியாகவும் மாறிவிட்டன.

13ஆம் நூற்றாண்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கையின் வலிமைமிக்க அரசாக யாழ்ப்பாணத் தமிழரசு திகழ்ந்தது. இன்றைய வடகிழக்கு மாகாணங்களையும் சிலாபம், புத்தள கரையோரப் பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதி தமிழர் தாயகமாக இருந்து வந்தது.

7ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்தது. போர்த்துக்கேயரும் அவர்களின் பின் ஆட்சி நடாத்திய ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப்பகுதி முழுவதையும் கைப்பற்றி ஆட்சி நடாத்தியபோதிலும், ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களோடு மலையகத்தையும் கைப்பற்றியதன் பின்தான் இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அவர்கள் தமது ஆட்சியின் கீழ் இலங்கையை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என 1833இல் ஐந்து மாகாணங்களாக ஆக்கினர். வட, கிழக்கு மாகாணங்களுக்குள் பல சிங்களப் பகுதிகளும் உள்ளடங்கின. வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட இயல்பான தொடர்புகள் எதுவும் இல்லாத தமிழ் மக்களையும், சிங்கள் மக்களையும் ஒன்றாக ஆழ்வதில் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்ட ஆங்கிலேய ஆளுநர் சேர் வில்லியம் ஹிரகரி 1873இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டிருந்த சிங்களப் பகுதிகளான நுவரகலாவிய (அனுராதபுரம்), தம்மங்கடுவ (பொலநறுவை)ப் பகுதிகளை மீண்டும் தனியாகப் பிரித்து வடமத்திய மாகாணம் எனப் புதிய மாகாணம் ஒன்றை உருவாக்கினர்.

நீண்டகாலமாகத் தனித்தன்மை பேணிவந்த வெவ்வேறு இன மக்களைக் கட்டாயமாக ஒன்றிணைத்து ஆட்சி நடாத்த முடியாது என்பதைப் பட்டறிந்து உணர்ந்த ஆங்கிலேயர் வரலாற்றுக் காலத்திலிருந்து தனித்தன்மையோடு வாழ்ந்து வந்த வடகிழக்குத் தமிழ் மக்களை 40 ஆண்டுகளின் பின் மீண்டும் சிங்கள இணைப்பிலிருந்து பிரித்துத் தனித்தன்மையுடன் வாழ விட்டனர்.

இதிலிருந்து இலங்கையின் வடகிழக்கு மாகாணம் தமிழ்மக்களின் பாரம்பரியப் பகுதி என்றும் வடமத்திய மாகாணம் சிங்கள் மக்களின் பகுதி என்றும் 1873 இலேயே உறுதி செய்யப்பட்டுப் பிரிக்கப்பட்டது எனலாம். புதிய எல்லை பிரிக்கப்பட்டதன் பின் வடகிழக்கு மாகாணங்களில் 2%ற்குக் குறைவான சிங்கள மக்களே இருந்தனர், என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

இலங்கைத் தீவிலே நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தமிழர் தாயகப்பகுதி ஏறத்தாழ 20,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இது இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களுடன் புத்தளம், சிலாபக்

கரையோரப்பகுதிகளையும் உள்ளடக்கிய பகுதியாகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 32% ஆகும். ஆயினும் 2500 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடமாக இருந்துவந்த தமிழர் தாயகம் 20,000 சதுர கிலோமீற்றர் பரப்பில் 8000 சதுர கிலோமீற்றர் 1/3 பகுதிக்கும் கூடுதலான நிலம். கடந்த 50 ஆண்டுகளில் சிங்கள அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் பறிபோய் சிங்களவர்களின் வாழ்விடமாக்கப்பட்டுள்ளது.

2628 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தில் 1827 இல் இறைநெறி (மத) அடிப்படையில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்போது 250 (1.53%) சிங்களவர்கள் மட்டுமே வாழ்ந்தனர். இது 1921இல் 4.38% மாகவும், 1946 இல் 20.68% மாகவும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் அதிகரிக்கப்பட்டது. 1977ல் திருகோணமலை மாவட்டத்தின் 60% நிலப்பரப்பைக் கொண்ட சேருவெல என்ற புதிய சிங்களத் தேர்தல் தொகுதியும் உருவாக்கப்பட்டது. இவ்வாறு 1927ல் 1.53% ஆக இருந்த சிங்கள மக்கள் 1981இல் 33.62% மாக உயர்த்தப்பட்டது.

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு ஈழத்தமிழர்களின் நெற்களஞ்சியமாக விளங்கியது. ஆரம்பத்தில் மட்டுநகர் என்பது இன்றைய அம்பாறையையும் இணைத்திருந்தது. 1827இல் இறைநெறி அடிப்படையில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில் ஒரு சிங்களவர் கூட இருக்கவில்லை. ஆனால் 1981இல் 21.68% மாக சிங்கள மக்கள் குடியமர்ந்து காணப்பட்டனர்.

வன்னியில் வீரம்செறிந்த மண்ணான வவுனியாவும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் பாரிய நிலப்பரப்பு பறிபோனது. குறிப்பாக பழக்கலக்குளம், கச்சல்குளம், கச்சங்குளம், பாவற்குளம் போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மணலாறு என்ற பெயரில் காலத்துக்குக் காலம் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக கென்ற்பாம், டொலர்பாம், சிலோன் தியேட்டர், ஆனந்தா ரேடிங் கம்பனி போன்ற கிராமங்கள் பறிக்கப்பட்டதுடன் வெலிஓயா என்ற தனிச் சிங்கள மாவட்டமும் உருவாக்கப்பட்டு இன்று முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 16000 ஏக்கருக்கு மேலான நிலம் அபகரிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்துக்கு இலங்கையின்

நுழைவாயிலாக இருந்த தமிழர் தாயகமாகும். இங்கு 1881 இல் வெறும் 142 சிங்கள மக்கள் மட்டுமே வாழ்ந்தனர். இது 1981இல் 8710 சிங்கள மக்களைக் கொண்ட கிராமமாக மாறிவிட்டது.

1953ம் ஆண்டு வரை தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த புத்தளம் மாவட்டம் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களினாலும், பிற மாவட்டப் பகுதிகளை இணைத்ததாலும் 85% சிங்களவர்களைக் கொண்ட மாவட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

2500 ஆண்டுகளுக்கு மேலாக இன்றைய தமிழீழ மண் தமிழரின் வாழ்விடமாக இருந்து வருகின்றது. கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்புவரை இப்பகுதி யாரால் ஆளப்பட்டு வந்தாலும் தமிழர் பகுதியாகவே ஆளப்பட்டது. கடந்த 60 ஆண்டுகளில் தமிழர் மண்ணையும் சேர்த்து ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்றுவிட்ட சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மண்ணை இல்லாதாக்கும் முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

க. சுதாகரன்
B.A (Hons), Dip.in.Ed,
ஆசிரியர்..

## பக்கவிளைவை ஏற்படுத்தும் நுண்ணுயிர் கொல்லிகள்

குறிப்பிட்ட சல நுண்ணங்கிகளினால் இயற்கையாக உருவாக்கப்படுகின்றதும் உயிரினவியல் தொழில்நுட்பத்தின் செயற்கையாகக் குறைத் தொகுப்புச் செய்யப்படுகின்ற ஏனைய நுண்ணங்கிகளின் வளர்ச்சிப் பெருக்கத்தை, நிலைகொள்ளலை தடைசெய்யக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotics) எனப்படும்.

முதன்முதலாக சீனர்களே 2500 ஆண்டுகளுக்கு முன்பாக நுண்ணுயிர் கொல்லிகளின் பயன்கள் பற்றி அறிந்திருந்தார்கள் எனக் கருதப்படுகின்றது. இருப்பினும் நுண்ணுயிர் கொல்லிகளின் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் 20ம் நூற்றாண்டு வரை கண்டுபிடிக்கப்படாமலே இருந்தது. ஆனால் தற்போது 10,000க்கு மேற்பட்ட நுண்ணுயிர் கொல்லிப் பதார்த்தங்கள் பட்டியலில் இடப்பட்டுள்ளன.

முதன்முறையாக 1877இல் Louis Pasteurம் அவரது சகாக்களும் நோயை ஏற்படுத்தும் anthram Bacteria இனை Saprophytic bacteria மூலம் கட்டுப்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தார். இவர் அதிகளவு Anthran bacilli இனை விலங்குகளுக்கு கொடுத்து அத்துடன் saprophytic bacteria இனையும் வழங்கினார். விலங்குகளில் எந்தவிதமான நோய்க்குரிய அறிகுறிகளும் ஏற்படவில்லை.

1928ம் ஆண்டு Alexanderfleming green Penicillium குலவகையினை agar தட்டில் bacteria களின் வளர்ச்சியை நிரோதித்ததனை பரிசோதனை மூலம் செய்து காட்டினார். இதுவே முதலாவது நவீன நுண்ணுயிர் கொல்லியான தயாரிப்பதற்கு வழிவகுத்தது. இதனைத் தொடர்ந்து 1940களில் Howard Florey யும் அவரது சகாக்களும் Penicillium இன் இன்னொரு குலவகையினைக் கண்டுபிடித்தார்கள். இது அதிகளவான Penicillin இனை உற்பத்தி செய்யக்கூடியது. 1944 இல் Selman Warman ம் அவரது சகாக்களும் மண்ணில் வாழும் Bacteria களான Streptomyces இல் இருந்து Streptomycin எனும் நுண்ணுயிர் கொல்லி தயாரிக்க முடியும் என கண்டறிந்தார்கள்.

தொற்றுக்கள் ஏற்படும் போது நுண்ணுயிர் கொல்லிகள் வேறுபட்ட வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன தோல் மேற்பரப்பு, கண், காது போன்ற பகுதிகளில் Oinment or cream (களிம்பு) வடிவத்தில் பயன்படுத்தப்படுகின்றது நோய்த்தொற்றல் உடலின் உட்பகுதிகளில் ஏற்பட்டால் நுண்ணுயிர் கொல்லிகள் வாய்மூலமாகவோ or injection மூலமாகவோ நேரடியாக கொடுக்கப்படுகின்றது. இதன் பொது நுண்ணுயிர் கொல்லிகள் குருதியின் ஊடாக கொண்டு செல்லப்பட்டு உடல் முழுவதும் அகத்துறிஞ்சல் மூலம் சென்றடைகின்றது.

நுண்ணுயிர் கொல்லிகள் இரசாயன ரீதியில் தமக்குள் வேறுபட்டவை. ஏனெனில் நோய்த் தொற்றினை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளைக் கொல்லும் பொறிமுறையில் வேறுபாடுகளைக் காண்பிக்கின்றன. சில நுண்ணுயிர் கொல்லிகள் Bacteria கலங்களின் கட்டமைப்புகளை அழிக்கின்றன. இது இரண்டு வழிகளில் நடைபெறுகின்றது. முதலாவதாக நுண்ணுயிர் கொல்லி Bacteria கலங்களின் கலச்சுவரினை வலுவிழக்கச் செய்கின்றன. இது கலமானது சிதைவடைய உதவும். இரண்டாவதாக Bacteria கலங்களின் உள்ளடக்கங்களை Bacteria கலங்களின் கலமென்சவ்வில் பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் வெளியேற்றுகின்றது. Bacteria களின் அனுசேபத் தாக்கச் செயன்முறைகளில் தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் இன்னொரு வழிமுறையாகும். Teracycline, Erythromycin போன்ற சில நுண்ணுயிர் கொல்லிகள் Bacteria களின் புரதத் தொகுப்பினைப் பாதிப்படையச் செய்கின்றன. Rifapin எனும் நுண்ணுயிர்கொல்லி நியூக்கிளிக் அமிலத் தொகுப்பை நிரோதிக்கின்றது.

நுண்ணுயிர் கொல்லிகளின் உற்பத்தி மருத்துவத்துறையில் முக்கிய பங்கை வகிக்கின்றது. தயாரிப்பிற்கு முன்னர் நுண்ணுயிர் கொல்லிகள் பலமுறை பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இது Screening செய்தல் எனப்படும். நுண்ணுயிர் கொல்லிகள் தொழிற்சாலைகளில் Fermentation எனும் முறை மூலம் தயாரிக்கப்படுகின்றது. இதன்போது கொள்கலன்களில் 100,000 - 150,000l

வரையான திரவ வளர்ப்பு ஊடகங்களில் நுண்ணங்கிகள் வளர்க்கப்பட்டு நுண்ணுயிர் கொல்லிகள் பெறப்படுகின்றன. உச்ச விளைவினைப் பெறுவதற்குத் தேவையான அளவு $O_2$, வெப்பநிலை, pH கனிப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. நுண்ணுயிர் கொல்லி நுண்ணங்கிகளின் Secondory Metabolits ஆகும்.

ஆனால் தற்போது Wild type ஐ விட பிறப்புரிமை ரீதியில் மாற்றி அமைக்கப்பட்ட நுண்ணங்கிகளே நுண்ணுயிர் கொல்லி தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் கூடிய விளைபொருட்களை பெறமுடியும். நுண்ணங்கிகளை விகாரப்படுத்துவதன் மூலம் அவற்றின் இனப்பெருக்க வீதம் அதிகரிக்கச் செய்யப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றது. Bacteria களின் Plasmid களைப் பயன்படுத்த நுண்ணுயிர் கொல்லிகள் உற்பத்தி செய்யும் gene களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் அதிகளவு நுண்ணுயிர் கொல்லிகளைத் தயாரிக்க முடியும். இது gene amplification எனப்படும். இதன்மூலம் அதிகளவு விளைவுகளை குறைந்தளவு எண்ணிக்கையுடைய நுண்ணங்கிகளில் இருந்து பெறமுடியும்.

நுண்ணுயிர் கொல்லிக்கான உதாரணங்கள்.

Penicilins
Tetracyclines
Erythromycins
Polymyxins
Griseofulvins

Alexandar fleming என்பவரால் Penicillium என்னும் fungus இலிருந்து முதன்முதலில் நுண்ணுயிர் கொல்லி கண்டுபிடிக்கப்பட்டது. நுண்ணுயிர் கொல்லிகளைப் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் நுண்ணங்கியினங்கள்.

Penicilin - Penicilium notatum
Tetracyclines - Streptomyces aureofaciens

Erythromycins - Streptomyces erythreus
Polymyxins - Basillus Polymyxo
Griseofulvins - Streptomyces griseus

Antibiotic மருந்துகள் சாதாரணமாகப் பிரிந்துரைக்கப்படும் மருந்து ஆகும். இது உடனடியாக நோய்த் தாக்குதலில் இருந்து நம்மைப் பாதுகாப்பதாகக் கருதப்படுகிறது. இருப்பினும் 50% தேவை இல்லாத நுண்ணுயிர் கொல்லி மருந்துகளே பிரிந்துரைக்கப்படுகின்றது. மக்கள் பொதுவாக பக்டீரியா, வைரஸ் குறித்த வித்தியாசங்களைத் தெரிந்து கொள்வதும் இல்லை. விருப்பப்படுவதும் இல்லை. வேகமான நம் வாழ்க்கையில் ஏற்படும் உடல் பிரச்சினை அதாவது காய்ச்சல் என்றாலே சிலர் antibiotic மாத்திரைகளை சாப்பிடும் வழக்கத்தில் இருக்கிறோம். இந்த மாத்திரை நமக்குத் தற்காலிகமாக நோயில் இருந்து பாதுகாக்கின்றது. தொடர்ந்தோ, அடிக்கடியோ நாம் இந்த மாத்திரையை உட்கொள்வதால் உடலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ப்ராய்லர் கோழிகளுக்குக் கூட நோய் எதிர்ப்பிற்காக இல்லாமல் அவற்றின் உடற்பருமனைக் கூட்டவே இவை குறிப்பிட்ட அளவில் தீவனத்துடன் கொடுக்கப்படுகிறது. அப்படியானால் இந்த மாத்திரையை எடுத்துக்கொள்ளும் மனிதனின் கதி பரிதாபகரமானது தான் Antibiotic நம் உடலில் உள்ள பயன்தரு பக்டீரியாக்களையும் கொல்கின்றது. இந்தப் பயன்தரும் பக்டீரியாவானது நம் உடலின் குடற்பகுதியில் இருக்கிறது. நம் உடலின் இயற்கையாக இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை மழுங்கடிக்கிறது.

நுண்ணுயிர்கொல்லிகள் பொதுவாக பாதுகாப்பானவை மற்றும் நன்கு நீடிக்கக்கூடியவை என்று கருதப்படினும் அவை பரந்த அளவிலான எதிர்மறையான விளைவுகளுடனும் தொடர்புற்றுள்ளன. எதிர்மறையான விளைவுகள் காய்ச்சல் மற்றும் குமட்டல் துவங்கி பல ஒவ்வாமை எதிர் விளைவுகளை கொண்டிருக்கலாம். மிகப் பொதுவான பக்கவிளைவுகளுள் ஒன்று வயிற்றுப்போக்காகும். இது சில நேரங்களில் Clostridium difficile என்னும் நுண்ணுயிரால் ஏற்படுகிறது. இது செரிமானச் சுரப்பியின் வழக்கமான சமநிலையை நுண்ணுயிர்கொல்லி தொந்தரவிற்கு உட்படுவதால் ஏற்படுகின்றது. முறைப்படுத்திய வீரிய மருந்துகளுடன்

குயினோன் நுண்ணுயிர்கொல்லியை அழிக்கையில், தசைநார் சேதத்திற்கான அபாயம் அதிகரிக்கலாம்.

நுண்ணுயிர் மற்றும் நுண்ணுயிர் கொல்லியை முறையற்றும், அதிக அளவிலும் பயன்படுத்துவது, தடுப்பு நுண்மங்கள் உருவாவதன் காரணிக்கு பங்களிப்பதாக அமையும். தகுதிவாய்ந்த மருத்துவவியலாளரின் வழிகாட்டுதல் அன்றி தனிநபர்கள் தாமாகவே நுண்ணுயிர் கொல்லிகளை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

நன்றி

Mrs. Sri Ramany Alakenthuren
Science Teacher

## புதுவைரத்தின் நினைவலையில் ..........



திருமதி. மைதிலி மோகனீவன்

**பொருளியல் பாடத்திற்கு நல்லாசானாய்**
**பிறந்த வீட்டுக்கு இனிய தென்றலாய்**
**புகுந்த வீட்டுக்கு உற்ற துணைவியாய் - இலங்கிய மைதிலியே**
**உன்னை இம் மலர் என்றும் நினைத்திடும்.**

# சிறுவர் உரிமையும், பாதுகாப்பும்

இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படு பொருளாக, முக்கியத்துவம் பெற்றுவரும் அம்சங்களில் ஒன்று சிறுவர்களின் உரிமைகளும், அவற்றினை பாதுகாத்தலும் என்பது காணப்படுகின்றது. அந்தவகையில் சமூகத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், என்பதன் ஓர் அங்கமாக பாடசாலை மட்டத்தில் சிறுவர் உரிமைகளையும், பாதுகாப்பையும் மேலும் உறுதிப்படுத்தும் முகமாக இக்கட்டுரை உயிரூட்டப்படுவதுடன் வைரவிழாக் காணும் எமது பாடசாலையின் மலரிலிருந்து எம் சமூகத்தை நோக்கி மணம்பரப்பும் ஓர் இதழாய் இக்கட்டுரை அமையும் என நம்புகிறேன்.

உலகில் வாழும் மக்களில் 1/3 பகுதியினர் சிறுவர்களாக காணப்படுகின்றனர். சிறுவர்கள் என்னும் பதம் 18 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு ஆண், பெண் பிள்ளைகளையும் குறிப்பிடுகிறது என ஐக்கிய நாடகள் சபையின் சிறுவர் நிதியம் வரையறை செய்துள்ளது. இத்தகைய சிறுவர்களின் உரிமைகள் இன்றைய உலகில் பல்வேறுபட்ட நிலைகளில் பறிக்கப்படுவதற்கெதிராக போராடி, சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் மேலான பணியில் பல்வேறு தேசிய, சர்வதேசிய, அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களில் 1989ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனம் ஒக்டோபர் 1ம் திகதியை சர்வதேச சிறுவர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளதுடன் யூன் மாதம் 12ம் திகதியை சிறுவர் தொழிலாளருக்கு எதிரான தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளமையானது. சிறுவர் உரிமைகளை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. சிறுவர் உரிமைகள் தொடர்பாக எழுத்துருவில் பல்வேறு பிரகடனங்களும் சட்டங்களும், காப்பீடுகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள போதும் அன்றாடம் சிறுவர்களுக்கு எதிரான உரிமை மீறல்களின் போக்கு அதிகரித்தே வருகின்றது.

மேலும் இத்தகைய நோக்கில் உலகில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் முழுமையாக பாதிக்கப்படுவதில்லை என்பதே யதார்த்தமாகும். நாள்தோறும் பிள்ளைகள் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு வன்முறை என்பவற்றிற்கு இலக்காக்கப்படுகின்றனர். பொதுவாக சமூகம் இப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதை தவிர்த்து வருவதோடு ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து சிறுவர்களுக்கு அறிவூட்டப்படாத, எச்சரிக்கை செய்யப்படாத அவலநிலையே இன்றுவரை தொடர்கிறது.

## சிறுவர் பாதுகாப்பு

சிறுவர் பாதுகாப்பு என்பது சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இலக்காதல், புறக்கணிக்கப்படுதல், சுரண்டப்படுதல் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் போன்ற செயற்பாடுகளை தடுத்தல் அல்லது கையாளுதல் ஆகும். அனைத்து சிறுவர்களும், பாதுகாப்பினை பெற்றுக்கொள்வதற்கு உரிமையுண்டு. அதேவேளையில் உடல்ரீதியாக மற்றும் உணர்வு ரீதியாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பாக இருப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பதுடன் சிறுவர்களுக்கான பாதுகாப்பானதும் அன்பு, பாசம், மிகுந்ததுமான சூழலை கட்டியெழுப்புதலுக்கான முதல் அத்திவாரம் குடும்பமாகும். இதனை விட பாடசாலை மற்றும் சமூகமானது குடும்பத்திற்கு வெளியேயான சூழலை சிறுவர் நேயமுள்ளதாக மாற்றும் பொறுப்பினை வகிக்கின்றன.

## சிறுவர் துஷ்பிரயோகம்

"யாராயினும் தனிப்பட்ட ஒருவரோ அல்லது நிறுவனமோ அல்லது திட்டங்களோ எதுவாயினும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறுவர்களை அல்லது சிறுவர்களின் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான அபிவிருத்திக்கான வாய்ப்பினை காயப்படுத்தல் அல்லது சிதைவடையச் செய்தல் சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படும்" என உலக சுகதார மையம் வரையறை செய்துள்ளது. மேலும் சிறுவர் துஷ்பிரயோகத்தினை

1. உடல் ரீதியான துஷ்பிரயோகம்
2. உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம்
3. கண்டித்தலும், கண்டித்தல் தொடர்பான செயல்களும்
4. பாலியல் துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தல்
5. புறக்கணித்தல் அல்லது கேலி செய்தல்

குழப்பமான மனநிலை மற்றும் சமூக காரணிகளின் விளைவாகவே சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகிறது எனலாம். எவ்வாறாயினும் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் பிள்ளைகளின் வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதனால் இத்தாக்கத்தின் விசாலத்தன்மையை அளவிடமுடியாதுள்ளது. துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளையின் வாழ்க்கையானது மீளமைக்க முடியாதவகையில் சிதைந்து போகிறது. இதனால் பிள்ளையானது அதிர்ச்சிக்குள்ளாதல், அச்சமடைதல் மற்றும் தன்னம்பிக்கையை இழத்தல், கல்வி நடவடிக்கைகளில் பின்னடைவு, உணவினை

உட்கொள்ள முடியாதிருத்தல், உறக்கமின்மை, மற்றும் சமுதாயத்திற்கு முகம்கொடுக்க முடியாதிருத்தல் போன்ற பல்வேறு உடல் மற்றும் உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது.

## உடல் ரீதியான துஷ்பிரயோகம்

உடல் ரீதியான துஷ்பிரயோகம் எனப்படுவது பிள்ளையொன்றுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் ஒருவரால் ஏற்படுத்தப்படும் ஒரு செயற்பாடாகும். அடித்தல், உதைத்தல், எரிகாயம் ஏற்படுத்துதல், கிள்ளுதல், கடித்தல், துன்புறுத்தல், எறிதல், தள்ளிவிடுதல், மற்றும் கசையடி வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இதனுள் அடங்குகின்றன. அநேகமான வளர்ந்தவர்கள் சிறுவர்களுக்கு உடல்ரீதியான தண்டணைகளை வழங்காமல் அவர்களை வளர்ப்பது கடினமென கருதுகின்றனர். இவ்வாறு அளவுக்கதிகமான தண்டணைகள் வழங்கப்படுமிடத்து பிள்ளைகளிடத்தே விரும்பத்தகாத, பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. கடுமையான தண்டணைகளுக்கு முகம்கொடுத்த பிள்ளைகள் வளர்ந்த பின்னர் வன்முறையாளர்களாக மாறுவதற்கு வாய்ப்புள்ளதென தெரிவிக்கப் படுகிறது இதனால் இலங்கையில் பாடசாலைகளில் உடல் ரீதியான தண்டணைகள் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டணையை வழங்காது அதற்கு பதிலாக ஏனைய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என ஆலோசனை வழங்கப்படுகின்றது.

## உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம்.

உணர்ச்சி ரீதியான துக்ஷ்பிரயோகமானது சிறுவர்களின் வளர்ச்சியில் மற்றும் ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் ஆகும். இது கடுமையான உணர்ச்சி ரீதியான பாதிப்புகளை சிறுவர்கள் எதிர்நோக்கும் வகையில் வளந்தவர்களினால் புரியப்படும் ஏதேனுமொரு செயல் அல்லது நடத்தையினைக் குறிக்கின்றது. ஏசுதல், புறக்கணித்தல், அவமானப்படுத்தல், இழிவுபடுத்தல், அச்சுறுத்தல் இத்தகைய செயற்பாடுகளால் சிறுவர்களுக்கு அச்சம், பாதுகாப்பற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனஅழுத்தம், தற்கொலை உணர்வுகள் ஏற்படலாம். இதனால் சிறுவர்களின் உடல் உள சமூக அறிவுசார் மற்றும் உணர்வுசார் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படலாம்.

**பாலியல் துஷ்பிரயோகம்**

பாலியல் துஷ்பிரயோகமென்பது எவரேனும் ஒருவர் அதிகாரத்தின் மூலமாகவோ அல்லது பலத்தை பிரயோகிப்பதன் மூலமாகவோ அல்லது தந்திரோபாயமாகவோ ஒரு பிள்ளையை பாலியல் ரீதியான நடத்தையில் ஈடுபடுத்துவதாகும். அண்மைக் காலங்களில் சிறுவர்களுக்கு இவ்வகையான துஷ்பிரயோகங்கள் அதிகளவு இடம்பெறுவதை அறியக் கூடியதாக உள்ளது.

**புறக்கணித்தல்**

இது நம் சமூகத்தில் பொதுவாக காணக்கூடிய சிறுவர் துஷ்பிரயோகமாகும் பிள்ளைகளின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வதிவிடம், அடிப்படைச் சுகாதாரம், வளர்ப்பு மற்றும் ஆபத்தான நிலைகளில் பாதுகாத்தல் என்பனவற்றை வழங்காமல் இருப்பதால் புறக்கணித்தல் நடைபெறுகிறது.

**கேலி செய்தல்**

கேலி செய்தல் என்பது பிள்ளையொன்றினால் அல்லது பிள்ளைகள் கொண்ட குழுவொன்றினால் வேண்டுமென்றே ஒரு பிள்ளை அல்லது பிள்ளைகள் இழிவுப்படுத்தப்படுதல் மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளுதலைக் குறிக்கும். இவ்வகை துஷ்பிரயோகமானது பொதுவாக பாடசாலைகளில், அதிகளவில் இடம்பெறும் ஒரு துஷ்பிரயோகம் எனலாம். இவ்வாறு ஒரு பிள்ளை வேண்டும் என்றே மற்றவர்களால் துன்புறுத்தப்படும்போது அப்பிள்ளை மனஅழுத்தத்திற்கு உள்ளாவதுடன் இவ்வகை துன்புறுத்தல் உடல், வாய்மொழி, கேலிசெய்தல், உடற் செய்கைகள், மற்றும் புறக்கணித்தல் என்பவற்றூடாக இடம்பெறுகிறது.

இவ்வாறு சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களின் தன்மைகளுக்கேற்ப, அவை பாகுபடுத்தப்பட்டுள்ளன. இங்கே மற்றொரு விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. அதாவது சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள் என்பது பெண் பிள்ளைகளுக்கு எதிரானது மட்டும் என்ற கருத்தும் பெண் பிள்ளைகளே ஆண்பிள்ளைகளை காட்டிலும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற மாயை இன்றைய சமுதாயம், மற்றும் பெற்றோர் கருத்தாக காணப்படுகிறது.

1. ஆண்பிள்ளை அல்லது பெண் பிள்ளை இருபாலாரும் சமமான அளவு துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

2. அழகான பெண் பிள்ளைகள் மட்டுமன்றி எந்தவொரு பிள்ளையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படலாம்.

3. துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் பெரும்பாலும் ஆண்களாக இருந்தபோதிலும் ஆண், பெண் இருபாலாரும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர்.

4. அறிமுகமற்றவர்கள் மாத்திரமன்றி, பெற்றோரால் முழுமையாக நம்பப்படும் குடும்பத்திற்கு நெருக்கமான, உறவினர், குடும்ப நண்பர், ஆசிரியர், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர், அயலவர் மற்றும் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒருபோதும் நினைத்துப் பார்த்திராத ஒருவர் பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கலாம்.

5. துஷ்பிரயோகம் என்பது எல்லா விதமான சமூகத்தினரிடையிலும் இடம்பெறலாம். வயது, பால், குடும்பம் பொருளாதாரம், கலாசாரம், இனம், விசேட தேவையுடைய பிள்ளைகள் போன்ற வேறுபாடின்றி எந்த பிரிவினரும் துஷ்பிரயோகத்துக்கு இலக்காகின்றனர்.

6. துஷ்பிரயோக சம்பவங்களை பிள்ளைகள் பயம், வெட்கம் போன்ற காரணங்களால் வெளியே கூறாது விடலாம்.

7. பிள்ளைகளுக்கு எதிராகப் பரந்து காணப்படும் அபாயங்கள், தொடர்பாக அறிவூட்டுவதனால் பிள்ளைகள் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டு ஆபத்துக்களிலிருந்து தப்புவதற்கு வழி ஏற்படும்.

8. சிறுவர் துஷ்பிரயோக சம்பவம் இடம்பெறுவதை அறிந்தால் அதனை, உடனடியாக உரிய அமைப்பிற்கு அல்லது நிறுவனத்துக்கு அறிவிக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

எனவே சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு அல்லது அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு துஷ்பிரயோகம் தொடர்பான அறிவை சமூகத்தின் சகல மட்டத்தினரும் பெற்றிருப்பதுடன் மேலும் அவை தொடர்பான விழிப்புணர்வை கொண்டிருத்தல் அவசியமாகும்.

பெற்றோர்கள் ஆயினும் சரி, பாடசாலை சமூகத்தவராயினும் சரி

தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறுவர்களை மிகவும் சிரத்தையுடன் பாதுகாப்பதற்கு துஷ்பிரயோகத்துக்கு எதிரான மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் பெற்றோர்கள் செய்ய வேண்டியவை.

1. உங்கள் பிள்ளைகளுடன் மனம்விட்டு கதையுங்கள்.
2. நல்ல தொடுகை, கெட்ட தொடுகை தொடர்பாக உங்கள் பிள்ளைகளுக்கு அறிவூட்டுதல்.
3. வேண்டாம், முடியாது என்று மறுத்துரைப்பது சரியானது என கற்றுக் கொடுத்தல்.
4. ஆபத்தானவர்கள் யாரென கற்றுக்கொடுங்கள்.
5. பிள்ளைகளுக்கு சுய பாதுகாப்பு முறைகளை கற்றுக்கொடுத்தல். என்பனவற்றின் மூலம் பிள்ளைகளை சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்க முடியும்.
6. பாடசாலை வளாகத்தினுள் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

அவ்வாறே பாடசாலை வளாகத்தினுள் பிள்ளைகளை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு ஆசிரியரதும் பாடசாலை சமூகத்தினரதும் பிரதான கடமையாகும்.

மேலும் தற்காலத்தில் துஷ்பிரயோகங்களுக்கு பிள்ளை உள்ளாவதில் பெரும்பங்கினை இணையப்பாவனை, மற்றும் கைத்தொலைபேசிகள் வகிக்கின்றன. அதிகரித்த கணனிப் பாவனை மற்றும் இணைய பாவனையானது மாணவர்களுக்கு பெருமளவு பயனுறு தகவல்களை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை பிள்ளைகளை துஷ்பிரயோகங்களுக்கு இலக்ககாக்க காத்திருக்கும். கயவர்களுக்கு பிள்ளைகளை இலகுவில் அணுகக்கூடிய ஊடகமாகவும் காணப்படுகிறது. ஆகவே கணினிப் பாவனையால் பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகாமல் பாதுகாக்க

1. பிள்ளைகள் கணினியை பயன்படுத்தும்போது பெற்றோர் பாதுகாவலர் அவர்களை கண்காணிக்கக் கூடிய வகையில் வீட்டின் பொதுவான இடத்தில் கணினிகளை பொருத்துவதுடன் சமூக வலைத்தளங்களான Face book, Wates up போன்றவற்றில் பிள்ளை தங்கள் முகவரி, தொலைபேசி இலக்கங்கள், பாடசாலைப் பெயர், புகைப்படங்கள் என்பவற்றை ஒருபோதும் பகிர்ந்துகொள்ள கூடாது என அறிவுறுத்தல் அவசியமாகும்.

இறுதியாக எமது பிள்ளைகள் எதிர்நோக்கும், தீண்ட நினைக்கும் சர்ப்பமாக உருவெடுத்து எம்மை விட்டு உலகையே மிரட்டிவரும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இடமளியாது நாம் செயற்படுவது மட்டுமன்றி, எங்கேனும் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறின் அதற்கெதிராக உரிய நிறுவனத்துக்கு அல்லது தகுந்த நபருக்கு அறியப்படுத்தல், பாதிக்கப்பட்ட பிள்ளையை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல், பிள்ளையின் உளரீதியான மதிப்பீட்டை மேற்கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்வதும் எமது அவசிய கடமையாகும். சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக உதவியை நாடக்கூடிய இடங்கள்.

1. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை. அவசர உதவி தொலைபேசி : 0112 778 911 - 14
2. தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஒவ்வொரு மாவட்ட செயலகங்களிலும்
3. சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு - 012827028
4. மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளர் - 021 321 55 40
5. சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் - 011 28 26 444

முல்லைத்தீவு - 021 229 0033- 024 222 1863

இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையான - 1929

**சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பவற்றுடன் தொடர்புகொண்டு எதிர்காலத்தின் சிற்பிகளாம் எமது இளம் தலைமுறையினரை ஆரோக்கியமுள்ளவர்களாகவும், அறிவானவர்களாகவும் பாதுகாப்போம்.**

**"பிள்ளைகளின் வாழ்க்கை,**
**வெள்ளைக் காகிதத்தை ஒத்தது**
**அவர்களின் வாழ்க்கையூடாக பயணிக்கும்**
**அனைத்தும் நீங்காது நிலைத்து நிற்கும்** - சீனம் பொன்மொழி -

**திருமதி. அனந்சர்மிளா அன்ரன் யூட் டொளஸ்**
B.A. (Hons), Dip.in Edu



இந்து மாமன்றம் – 2015



கத்தோலிக்க மன்றம் – 2015



தமிழ் மன்றம் – 2015



கூட்டுறவு மன்றம் – 2015

# ஆசிரியர் என்பவர்........

ஒவ்வொரு சமூகத்திலும் வரலாற்று காலத்தில் இருந்தே ஆசிரியர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். தனது அறிவை ஒருவர் இனங்காணவும் தனது சூழலை இனங்காணவும், தனது பிரச்சினைகளைக் கண்டறியவும் அடிப்படையான எழுத்தறிவு என்பதனை உருவாக்குபவராக ஆசிரியர் விளங்கினார். இவரே புராதன கிராமிய வாழ்வின் மைய விசையாகவும் விளங்கினார். சமூகத்திற்குத் தேவைப்பட்ட அதிமுக்கியமான உன்னதமான மனிதவளமாக ஆசிரியர்கள் விளங்கினர். குரு என்ற பெயர் வழிகாட்டி, முன்னோடி, நிபுணர், முன்னோக்கிச் சிந்திப்பவர், நல்வழிப்படுத்துபவர், மதியுளறிஞர் என்ற பல்வேறுபட்ட பணிநிலையுடன் ஒன்றிணைந்து தொழில்சார் கூட்டும் சொல்லாக விளங்குகின்றது. குரு என்பவர் தனது சிஷ்யனின் அறிவு, ஆத்மபலம், ஒழுக்கம், மனத்திடம், கடின உழைப்பு என்பவற்றை வளர்த்தெடுப்பதில் அவர் பெரும் பங்கு வகித்தார்.

பெரும்சிறப்பு (Glory) பொருந்தியவர்களால் சந்திக்கப்படுபவர், ஆசிரியர் உயிர்ப்பும் துடிப்பும், ஆர்வமும் உவகையும், இறைமையும் ஆரோக்கியமும் ததும்பும் மாட்சிமைப் பருவத்திலுள்ள மாணவர்களால் சந்திக்கப்படுபவர். உடலாலும், உளத்தாலும் அதிவேக விருத்தியடையும் பருவத்தினரால் ஆசிரியர் சந்திக்கப்படுகின்றார். இவ்வாறான மாணவர்களை நன்நெறிபடுத்துவதற்காக ஆசிரியர் என்பவர் செயற்படும் விதங்களாவன?

**- கற்றல் ஏற்படும் வரை காத்திருப்பவர்**

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களில் சிறப்பான நடத்தை மாற்றம் ஏற்படும்வரை பொறுமையுடன் காத்திருப்பவர் ஆசிரியர். ஒவ்வொருநாளும் தான் சந்திக்கும் மாணவர்களில் தொல்லையும், வேதனையும் தரும் மாணவர்கள் இருந்தபோதும், அவர்களின் நல் மாற்றத்திற்காக தன் உணர்வுகளை அடக்கிப் பொறுமை காப்பவர்.

**- அக உணர்வுடன் செயலாற்றுபவர்**

ஆசிரியர் ஒருவர் கல்வியின் மகிமை, பயன், பெறுமானம் பிரயோகப் பெறுமானம் ஆகியவற்றை அனுபவவாயிலாக உணர்ந்து செயலாற்றுபவர். அக உணர்வுடன் செயலாற்றும் ஆசிரியருக்கு ஊதியமோ, பதவியுயர்வோ பெரிதாகத் தெரியமாட்டாது.

**- உறுதி ஆசிரியரின் வெற்றியின் இருப்பிடம்**

என்னால் எத்தகைய மாணவரையும் கற்றலில் ஈடுபடுத்த முடியும்.

மாணவர்களின் உரிமைகளையும், மாணவர்களின் மகிழ்ச்சியையும், மாணவர்களின் கட்டுப்பாட்டையும் ஒருங்கே பேண முடியும். ஒவ்வொரு மாணவரினதும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர முடியும். என்ற உறுதியின் இருப்பிடமே ஆசிரியராவார்.

**- மாணவரின் வாழ்க்கையில் நகைச்சுவை ஊடாகப் பிரவேசிப்பவர்.**

மாணவரின் தவறுகள், விவேகமற்ற செயல்கள், திறமைகள், ஆற்றல்மிகு வெளிக்காட்டல்கள் என்பவற்றைப் புன்முறுவலுடன் எதிர்கொள்பவராக ஆசிரியர் திகழ்கிறார். நகைச்சுவையில்லா ஆசிரியருக்குத் தொழில் நரக வேதனையாக அமையும். விகடம் மனச்சோர்வைப் போக்கும், ஆசிரியரின் புன்முறுவல் மாணவரிற்கும் புத்துயிரளிக்கும்.

**- எதிலும் இரக்கம் ஆசிரியரின் இயல்பு.**

மாணவரின் தவறுகளில் இரக்கம் கொள்வது ஆசிரியரின் இயல்பாகும். மனிதரில் பலங்களும், பலவீனங்களும் உள்ளன. இவற்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் பரிவுடன் அணுகும் மனப்பாங்கும் ஆசிரியருக்குத் தேவையானவை.

**- நடிப்பாற்றலில் மிகுந்தவர்.**

பொருத்தமான மொழிப் பிரயோகம் உயிரூட்டும். அங்கு அசைவுகள் நன்கு புலப்படுத்தவல்ல சைகைகள், திறன்மிகு முகபாவம் ஆசிரியருக்கு அவசியமான வையாகும்.

**- மனிதர் ஆவதற்கு வழிகாட்டுபவர்.**

கற்பதற்கு வழிகாட்டுதல் எதிர்கால தொழிலுக்கும் மனிதர் ஆவதற்கு வழிகாட்டுதல் தரமான வாழ்விற்கும் அவசியமானதாகும்.

**- திட்ட நுட்பமுடையவர்.**

பேச்சு, நடத்தை, வாக்குறுதி, பாடத்திட்டமிடல், கணிப்பிடல், ஊக்குவித்தல் என்பவற்றில் திருத்தமாகவும், துல்லியமாகவும் தன்னைப் பேணிக் கொள்பவர் சிறப்பான ஆயத்த நிலையுடன் வகுப்பறைக்குள் பிரவேசிப்பார். தர்க்க ரீதியாக மாணவர்களிற்கு சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதில் பல்வேறு நுட்பங்களை கையாளுவார்.

**- நேர முகாமைத்துவம் உடையவர்**

நேர விரயம் தொடர்பாக ஆசிரியர் எப்போதும் கவனத்துடன் இருப்பார். ஒரு நிமிட விரயம் மாணவர்களின் முப்பது நிமிட விரயம் எனக் கருதிச் செயல்படுபவர்

மாணவர்களின் உரிமைகளையும், மாணவர்களின் மகிழ்ச்சியையும், மாணவர்களின் கட்டுப்பாட்டையும் ஒருங்கே பேண முடியும். ஒவ்வொரு மாணவரினதும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர முடியும். என்ற உறுதியின் இருப்பிடமே ஆசிரியராவார்.

**- மாணவரின் வாழ்க்கையில் நகைச்சுவை ஊடாகப் பிரவேசிப்பவர்.**

மாணவரின் தவறுகள், விவேகமற்ற செயல்கள், திறமைகள், ஆற்றல்மிகு வெளிக்காட்டல்கள் என்பவற்றைப் புன்முறுவலுடன் எதிர்கொள்பவராக ஆசிரியர் திகழ்கிறார். நகைச்சுவையில்லா ஆசிரியருக்குத் தொழில் நரக வேதனையாக அமையும். விகடம் மனச்சோர்வைப் போக்கும், ஆசிரியரின் புன்முறுவல் மாணவரிற்கும் புத்துயிரளிக்கும்.

**- எதிலும் இரக்கம் ஆசிரியரின் இயல்பு.**

மாணவரின் தவறுகளில் இரக்கம் கொள்வது ஆசிரியரின் இயல்பாகும். மனிதரில் பலங்களும், பலவீனங்களும் உள்ளன. இவற்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் பரிவுடன் அணுகும் மனப்பாங்கும் ஆசிரியருக்குத் தேவையானவை.

**- நடிப்பாற்றலில் மிகுந்தவர்.**

பொருத்தமான மொழிப் பிரயோகம் உயிரூட்டும். அங்கு அசைவுகள் நன்கு புலப்படுத்தவல்ல சைகைகள், திறன்மிகு முகபாவம் ஆசிரியருக்கு அவசியமான வையாகும்.

**- மனிதர் ஆவதற்கு வழிகாட்டுபவர்.**

கற்பதற்கு வழிகாட்டுதல் எதிர்கால தொழிலுக்கும் மனிதர் ஆவதற்கு வழிகாட்டுதல் தரமான வாழ்விற்கும் அவசியமானதாகும்.

**- திட்ட நுட்பமுடையவர்.**

பேச்சு, நடத்தை, வாக்குறுதி, பாடத்திட்டமிடல், கணிப்பிடல், ஊக்குவித்தல் என்பவற்றில் திருத்தமாகவும், துல்லியமாகவும் தன்னைப் பேணிக் கொள்பவர் சிறப்பான ஆயத்த நிலையுடன் வகுப்பறைக்குள் பிரவேசிப்பார். தர்க்க ரீதியாக மாணவர்களிற்கு சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதில் பல்வேறு நுட்பங்களை கையாளுவார்.

**- நேர முகாமைத்துவம் உடையவர்**

நேர விரயம் தொடர்பாக ஆசிரியர் எப்போதும் கவனத்துடன் இருப்பார். ஒரு நிமிட விரயம் மாணவர்களின் முப்பது நிமிட விரயம் எனக் கருதிச் செயல்படுபவர்

ஆசிரியர். குறிப்பிட்ட நேரத்திற்குள் தனது இலக்குகளை அடைவதில் சிக்கனத்தைப் பேணுவோம்.

**- வாழ்க்கைத் தத்துவம் உடையவர்.**

தனக்கென ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்கி, அதன் மூலம் மாணவர்கள் தம் வாழ்க்கைத் தத்துவத்தை உருவாக்க முன்மாதிரியாகத் திகழ்பவர் ஆசிரியர்.

**- கல்வி உளவியல் நிபுணர்**

கற்பித்தலில் ஈடுபட முன்னர் பிள்ளைகளை இனங்காண்பார். கற்றல் வேகம் குறைந்த மாணவரில் விரக்தி கொள்ளமாட்டார். மாணவர்களின் சுயகற்றலை மாணவர் பணியொழுங்காக மாற்றுவார். மாணவரின் சிறிதளவான தேர்ச்சியிலும் கூட நட்புடன் மகிழ்வு கொள்வார். மாணவர்களை அவர்களாகவே வாழ்வதற்கும், தங்கள் வழியிலே சந்தோசத்தை அனுபவிப்பதற்கும் வழியமைத்துக் கொடுப்பார். மாணவர்களின் உடல், உள, சமூக, மனவெழுச்சி விருத்திக்காகவே தனது கற்பித்தலைத் திட்டமிட்டு கருமமாற்றுவார்.

**- ஆளுமையின் மகுடம்**

மாணவர்களை ஊக்குவிக்கும் திறன், அறிமுகப்படுத்தும் திறன், தொடர்பாடல்திறன், விளவும் திறன், ஆக்கத்திறன், முகாமைத்துவத்திறன், மதிப்பிடல் திறன்கள் போன்றவற்றைக் கொண்டவராகவும், எந்தவொரு சூழ்நிலையிலும், உடல், உள, மனவெழுச்சிச் சமநிலையை பேணும் நடத்தையுடையவராகவும் ஆசிரியர் திகழ்வார்.

**- ஆய்வாளனாகத் தொழிற்படுபவர்.**

ஆசிரியர் ஒரு ஆய்வாளராகவும் தொழிற்படுவார். ஆசிரியர் ஆய்வின் பயன்பாட்டாளராகவும், ஆய்வில் பங்கு பெறுநராகவும், ஆய்வில் சுறுசுறுப்பான பங்காளர்களாகவும் தொழிற்படுவதன் மூலம் மாற்றுக் கருத்துக்களை விருத்தி செய்கின்றார்.

**- செயற்றிட்ட முகாமையாளர்**

செயற்றிட்டம் என்பது பிரச்சினைத் தீர்வுக்கு அடிப்படையாக அமையும். எளிதான ஒரு முறையாகும். ஆசிரியர் செயற்றிட்டங்கள் மூலம் கற்றல் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு முகாமையாளர் ஆவார்.

**- நல்லொழுக்கக் கோட்பாட்டின் கீழ் கடமையாற்றுபவர்.**

தனக்கென ஒரு ஒழுக்கக்கோவையை உருவாக்கி அதனைப் பின்பற்றி வாழ்ந்து காட்டுபவர். ஆசிரியர் மது அருந்துதல், போதைப்பொருள் உபயோகம், புகைப்பிடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடாது வாழ்தல் மாணவரிடையே பிரபல்யம் பெறுவதற்காக முறையற்ற வழிகளைக் கடைப்பிடிக்காது செயல்படல் என்பது முக்கியமானது.

**- சமூக மாற்றத்தின் மாபெரும் சக்தியாக வாழ்பவர்.**

ஆசிரியர் தாம் சமூகத்திற்கு சிறந்த பூரணமான பிரஜை ஒருவரை தோற்றுவிப்பதற்குரிய உரிமை தமக்குண்டு என்ற பரிசுத்த எண்ணத்தின் அடிப்படையில் வாழ்பவர்.

**- மாணவர் தொடர்பான தகவல்களை அறிந்துள்ளவர்.**

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவரினதும் பொதுவான தகவல்கள், உடல் சம்பந்தமான தகவல்கள், குடும்பம் பற்றிய தகவல்கள், அடைவுமட்டம் தொடர்பான தகவல்கள், விசேட தேவைகள் பற்றிய தகவல்கள், விசேட திறன் பற்றிய தகவல்கள், சமூகத் தகவல்கள், மணாவர் தொடர்பான ஏனைய தகவல்களைத் தனித்தனியாக செவ்வனே தெரிந்துள்ளவர் ஆவார்.

**- ஆசிரியர் பங்கின் விஞ்ஞான அடிப்படை**

இது தொடர்பான தத்துவக் கல்விக் கோட்பாடு, கல்வி உளவியல் போன்ற துறைகளின் கோட்பாடுகளையும், அறிவுப் பரம்பரையும் பற்றிய தெளிவான விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். தனது பங்கின் விஞ்ஞான அடிப்படையை ஆசிரியர் விளங்கிக் கொண்டால்தான் ஓர் ஆசிரியர் பயன்படுத்தும் கற்பித்தல் தொழில்நுட்பமானது வெற்றிகரமாகவும், திறமையுடனும் விளங்கும். தமது கடமைகளை தெளிவாக விளங்கிக் கொண்டால்தான் தனது பங்கினை சுலபமாக ஆற்ற முடியும். வரையறுக்கப்பட்ட பதிவேடான ஆசிரியர் கடமைகள் பதியப்படவில்லை ஆசிரியரின் கடமைகள் பற்றி காலத்திற்கு காலம் கல்விமான்களால் வெளியிடப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்த்தல் அவசியம். ஆசிரியர் என்பவர் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியில் வளர்ச்சியடைந்து கொண்டும், தனது நடிபாங்குகளை வளர்ச்சியடைச் செய்து மாற்றியமைத்துக் கொண்டுவரும் ஓர் அறிவுக் கடலாவார்.

**செல்வி. கு. சிவயோகலட்சுமி**
ஆசிரியர்

# மரங்கள் வளர்த்து மாண்புற வாழ்வோம்

ஆரம்பத்தில் எமது கிராமம் பசுமையான சோலை , பூத்துக் குலுங்கும் மலர்கள், குலைகுலையாகத் தொங்கும் கனிகள், இதமாக வீசுகின்ற இளந்தென்றல் காற்று, இன்னிசை பாடும் பறவைகள் , ஆரோக்கியமாக வாழும் விலங்குகள் என விந்தையாக காட்சியளித்தது. ஆனால் இயற்கை அன்னை நமக்கு அளித்த பொக்கிஷங்களுள் ஒன்றான இயற்கைக் காடுகள் இதன் மகிமை தெரியாத இன்றைய நவ யுக மனிதனால் அழிக்கப்பட்டு பல்வகைப்பட்ட இடர்களை எதிர்நோக்கக் காரணமாக அமைந்துள்ளது.

மனிதனின் நாளாந்த வாழ்க்கையிலே பயன்படுத்தப்படுபவையும் பொருளாதார அபிவிருத்தியில் உபயோகிக்கப்படுபவையாகவும் இயற்கையுள் இயைந்துள்ள வளங்கள் எல்லாமே உயிரற்ற வளங்களையும் உயிருள்ள வளங்களையும் கொண்டிருக்கும் இவ் இயற்கை வளங்களில் சில புதுப்பிக்கக் கூடியதாக அமைந்துள்ளன. இச்செயன்முறைக்கு தாவரங்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. தாவரங்கள் உலகில் உயிர்களின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முக்கிய பங்களிப்பை நல்குகின்றன. உணவுச் சங்கிலி, உணவு வலை என்பவற்றை ஆக்குவதில் தாவரங்களே முதன்மை பெறுகின்றன. சூழற்தொகுதியின் உயிர்க்கூறுகளின் முக்கியமானது உற்பத்தியாக்கியாகும். உற்பத்தியாக்கி இல்லையெனில் ஏனைய நுகரிகள், பிரிகையாக்கிகள் தொழிற்பட முடியாது. இங்கு உற்பத்தியாக்கிகளாக விளங்குவது ஒளித்தொகுப்பை மேற்கொள்ளும் தாவரங்களாகும். இங்ஙனம் ஒரு சூழற்றொகுதியை உருவாக்க வேண்டுமெனில் தாவரங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

தாவரங்களின் செயற்பாட்டினால் சூழல்ச் சமனிலை பேணப்படுகின்றது. சூழலில் ஒட்சிசன், காபனீரொட்சைட் வாயுக்களின் செறிவு சமனிலைப்படுத்தப்படுகின்றது. தாவர வளர்ச்சியால் நீரியல் வட்டம் பேணப்படுவதோடு, நீரூற்றுகள் வற்றாமலும் மண்ணரிப்பு, மண்சரிவு போன்றன ஏற்படாமலும் தடுக்கப்படுகின்றன.

எமது கிராம் அபிவிருத்தி நோக்கிய பாதையில் எமது சூழல் மிக வேகமாக மாற்றமடைந்து கொண்டே செல்கின்றது. காடுகளை அழித்தல், தொழிற்சாலைக் கழிவுகள் மண்ணினுள் சேர்தல், இரசாயனப் பசளைகளின் பயன்பாடு, பீடைநாசினிகளின் பயன்பாடு போன்ற பல செயற்பாடுகளினால் எமது கிராமத்தின் தாவர வளர்ச்சிக்கு உகந்த சூழல் பாதிக்கப்படுவதோடு வளியும் மாசடைகின்றது.

இத்தகைய பேராபத்தினைத் தடுத்திடும் வகையிலேயே அரசு வனவளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முடிக்கி விட்டுள்ளது. காட்டு வளங்களை அழிப்போருக்கு எதிராக சூழலைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கைகளை

எடுத்துவருகின்றது. வன வள அமைச்சு எனத் தனியாக ஒரு அமைச்சின் மூலம் காட்டு வளங்களைப் பேணவும், மரம் நாட்டும் பணிகளில் மக்களை ஈடுபடுத்தவும் முயன்று வருகின்றது.

இந்நிலையில் நமது கடமை முக்கியமானதாகும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு மரம் நடுவோம் நாட்டு வளம் பேணுவோம் என்ற இலட்சியத்துடன் செயற்பட வேண்டும். இது நமது நலனுக்கன்றி வருங்காலச் சந்ததியினரின் நலனுக்காக நாம் செய்யும் நன் முயற்சி ஆகும். வீட்டு வளவுகளில் மா, பலா, தென்னை, பனை , வேம்பு முதலிய மரக்கன்றுகளை நாட்டுவதற்குநாம் உறுதி பூண வேண்டும். மரநடுகை மூலமே எமது வீடும், நாடும் நலம் பெற முடியும். வெகுசனத் தொடர்புசாதனங்கள் தற்போது மரநடகையின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கது.

ஆகவே எமது கிராம மக்கள் மரநடுகையின் அவசியத்தை நன்கு உணர்ந்து தம்மால் இயன்றளவிற்கு மரங்களை அழிக்காமல் பாதுகாப்பதோடு அழிக்க வேண்டிய நிற்பந்தம் ஏற்பட்டால் பதில் மரங்களை நாட்டவும் பழக வேண்டும்.

**"முன்னோர் நாட்டிய முதலான மரங்களை**
**வீட்டு முற்றத்திலே இனியேனும் விட்டிடுவீர்**
**உன் வீட்டு முற்றத்திலே நீயே மரங்களை நாட்டி விடு**
**எமது கிராம வளமும் பெருகி விடும் உன் பெயரும் நிலைத்திடும்**
**பசுமைத் தென்றல் தானாகவே உருவாகி விடும் "**

திருமதி. ப. செல்வநாயகம்
ஆசிரியர் (விஞ்ஞானம்)

# உலகமயமாதலில் சமயம்

உலக வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே உலகமயமாதல் காணப்படினும் அது அண்மைக் காலத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்றது. அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டு உலக நாடுகளுக்கு நேரடியாக மறைமுகமாகத் திணிக்கப்பட்ட ஒரு கோட்பாடாக உலகமயமாதல் காணப்படுகின்றது. இக் கோட்பாட்டில் நன்மையும் தீமையும் காணப்படுகின்றது. உலகமயமாக்கலுக்கு சார்பாக வளர்ந்து வருகின்ற மூன்றாம் உலக நாடுகளும் சில ஆதரவு தெரிவித்து வருகின்றன. இக் கோட்பாட்டினை தகவல் தொழினுட்ப தொடர்பு சாதனங்கள் மூலமாக உலகெங்கிலும் முதலாளித்துவ நாடுகள் பரப்பி வருகின்றன. உலகமயமாதலை அரசியல், சமூக, பொருளாதார கட்டமைக்கப்பட்ட கோட்பாடாக செய்திப் பிரச்சாரங்கள் செய்து வருவதைக் காணலாம். உலகமயமாதலுடன் இணைந்து புதிய உலக ஒழுங்கை நிலைநாட்டும் எண்ணம் மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகின்றது.

ஆனாலும் உலகமயமாதலின் தாக்கமானது பண்பாட்டோடு தொடர்புபட்டதாகவே பெரிதும் ஆராயப்படுகின்றது. உலகமயமாக்கல் போக்கின் தாக்கமானது ஏனைய துறைகளை விடவும், பண்பாடு என்பதிலேயே அதிக செல்வாக்கினைச் செலுத்துகின்றது. ஏனெனில் மாற்றுச் சக்திகட்கு முகம் கொடுக்கின்ற மக்களின் பண்பாட்டு அம்சங்கள் மீது உலகமயமாதல் போக்கு பெரும் தாக்கத்தினைச் செலுத்துகின்றது. உலகமயமாதல் போக்கு என்பது பண்பாட்டு ஓரினத் தன்மையினை உருவாக்குகின்றது எனச் சிலர் வாதிடுகின்றனர். வேறு சிலர் பூச்சிய தன்மையினை தோற்றுவிக்கின்றது எனக் கூறுகின்றனர்.

உண்மையில் குறிப்பிட்ட பத்திரிகைகள் செய்தி நிறுவனங்களைத் தவிர ஏனைய பெரிய செய்தித்தாள்களும் செய்தி நிறுவனங்களும் நடுநிலை என்ற பெயரில் தனது மேலாதிக்க சக்திகளுக்கு அனுசரணையாகவே நடந்து கொள்கின்றன. மேற்கு நாடுகளில் காணப்படும் செய்தி நிறுவனங்கள் குறிப்பாக B.B.C.CNN, STARNEWS, ROYOTOR போன்ற செய்தி நிறுவனங்கள் உலகத்துடன் இணைந்து செய்திகளை வெளியடுகின்றன. இச்செய்தி நிறுவனங்கள் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களுக்குச் சொத்தமானவை. குறிப்பிட்ட நாட்டு அரசாங்கத்துடன் கைகோர்த்துக் கொண்டு அவர்களின் நலனில் அக்கறை கொண்டு உழைத்து வருகின்றன. இதனால் ஒரு நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் சுதேசவிழுமியங்கள், கலை கலாசார பண்பாட்டு அம்சங்களின் செல்வாக்குகள் இன்னொரு நாட்டின் மீது திணிக்கப்படுவதும் உலகமயமாக்கலால் கிடைத்த எதிர் வினையாகும்.

உ+ம் - I:

**இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில நடந்த கார்கில்போரை முதன்மைப்படுத்தி செய்திகளை வெளியிட்டது. ஆனால் இரண்டு நாடுகளிலுள்ள ஏற்றத்தாழ்வையோ, தேசிய மத பண்பாட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வளவு கரிசனை கொண்டது என்பது கேள்விக்குரியதாகும்.**

உ+ம் - II:

**இலங்கையின் வடக்குக் கிழக்கு இராணுவச் செய்திகளை மறைத்தும், திரித்தும் கூறுகின்ற நிறுவனங்கள் இந்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் கரிசனை காட்டின என்பது சிந்தனைக்குரியதாகும்.**

மேலைத்தேய விழுமியங்கள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் என்பவை உலகமயமாதல் மூலமாக புற எல்லைத் தேசங்களைச் சென்றடைகின்றன. விருத்தி அடைந்த நாடுகளில் மையங்கொண்ட பண்பாட்டு அம்சங்கள் ஏனைய புற எல்லைத் தேசங்களைச் சென்றடைவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் உலகப் பண்பாட்டில் வளர்ச்சிக்கான விலையாக உள்நாட்டுப் பண்பாடு காணப்படுகின்றது. வேறுவிதமாகக் கூறின் உள்நாட்டு பண்பாட்டின் சரிவில்தான் உலகப் பண்பாடு நிமிர்கின்றது. இதுவும் உலமயமாக்கலால் கிடைத்த எதிர்வினையாகும்.

இன்று வளர்முக நாடுகளில் இளைஞர்கள் இணையத்தளத்தின் ஊடாகப் பெறப்படும் அறிவு முறைப்படுத்தப்படாததனால் மாணவர்கள் அதிகம் பயன் பெறுவதில்லை எனக் கூறலாம். எனவே பாடசாலையில வழிகாட்டலுடன் கூடிய கல்வியே பயனுடையதாகும். அறிவின் உருவாக்கம் பற்றி ஆராய்ந்த சமூகவியல் ஆய்வாளர்கள் "கல்வி அறிவினை மனிதன் மற்றொரு மனிதனிடமிருந்து தான் பெற்றுக கொள்ள முடியும். சகல அறிவுகளும் பரம்பர பரம்பரையாக மனிதர்களுக் கூடாகத்தான் புதிய பரம்பரைக்கு கையளிக்கபட்டு வந்தது" என்ற முறையில் கல்வியறிவை "ஒரு சமூக ரீதியான படைப்பு" என்ற விளக்கியுள்ளனர்.

இன்று வளர்முக நாடுகளில் காணப்படும் சமூகங்கள் மத்தியில் பேணப்பட்டு வரும் குறைந்தபட்ச அமைதி இறுக்கமான குடும்ப வாழ்க்கை சமூகக் கட்டுக்கோப்பு சமூக உறுதிப்பாடு என்பனவற்றுக்கு சமூகவியல் ஆய்வாளர்களது கூற்றுக்கமைய இளந்தலை முறையினர் தமது முன்னோரிடம் இருந்து பெற்றுவந்த வாழ்க்கை முறையும் சமயப் பண்பாடுகளும் அமைந்தன.

இதற்குக் காரணம் உலகில் எல்லா நபடுகளிலும் உள்ள சகல்வி முறைகளில் சமயக்கல்வி முறையே முக்கியமானதும் தொன்மையானதுமாகும். மனித வாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாக இருக்க வேண்டிய ஆன்மீக நெறிகளைக் கூறுவதே சமயக்கல்வியாகும். சமயநெறி என்பது வாழ்க்கை நெறியாகும்.

மனிதன் தனியாக வாழ்பவன் அல்லன். அவன் சமூகத்தில் ஓர் அங்கத்தவன். எனவே சமூக விழுமியங்களுக்கேற்பத் தன் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் மூலம் ஆளுமையை விருத்தியாக்கல் வேண்டும். அதற்குரிய வழிசெய்வதே சமயக்கல்வியாகும். எனவே சமூகம் நல்லன என்றும் சரியானவை என்றும் ஏற்றுக்கொண்டவற்றைத் தானும் ஏற்று அவ்வாறு அல்லாதவைற்றைத் தவித்தல் ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

சமயக்கல்வி "எமது வாழ்க்கை நெறியாக ஒழுக்க நெறியையே காட்டுகின்றது." நேர்மை, அன்பு, எளிமை, அடக்கம், தயை, உறுதி ஆகிய நற்செய்கைகளின் அம்சங்களாகும். இவற்றை அடைதலே நல்லொழுக்கத்தின் குறிக்கோளாகும்.

இவ்வாறான வாழ்க்கைக் கல்வியான சமயபாடம் உலகமயமாக்கலினால் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தான் மாணவர் மத்தியில் தீவிர போட்டி உலகின் பல பகுதிகளிலும் நிலவி வரும் அமைதியின்மை, பாரம்பரிய விழுமியங்களும் பண்புகளும் சமூகத்தில் அருகிவருதல் ஒரு நாட்டின் தனித்துவம் பேணப்படாமை போன்றன நிகழ்கின்றன.

எனினும் சமயம் ஒரு கட்டாய பாடமாகப் பல நாடுகளில் கற்பிக்கப்பட்டு வந்தாலும் அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் சமயக்கல்விக்குப் பதிலாக ஒழுக்கக் கல்வியே போதிக்கப்படுகின்றது. எனவே சமயக் கல்வியின் இடத்தை ஒழுக்கக்கல்வி பெறுவதைக்காணலாம். எனினும் உலகமயமாதல் மூலம் பன்முறைப்பட்ட காலாசாரம் உருவாகின்றது. இதனைத் தவிர்க்க கணினி, இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களினாலும் செய்தித்தாள்கள், செய்தி நிறுவனங்கள் போன்ற ஊடகங்கள் மூலமும் எந்த நாட்டின் எக்கலாசாரத்தின் எம்மொழி பேசுபவர்களின் எவ்வினத்தின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் என்பதை உறுதிப்படுத்தி ஊடகங்கள் ஊடாக வழங்கும் போது எல்லா தேசங்களில் உள்ள அனைத்துப் பிரசைகளும் கலாசாரப் பண்பாடுகளில் தமது வாழ்க்கைக்கு தமது பிரதேசத்திற்கு, தமது வர்கக்த்திற்கு உரியது பாதுகாப்பானது எனக் கருதும் பண்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்வை வளப்படுத்த முடியும்.

எனவே உலகமயமாதல் என்பது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நிகழ்வாகக் காண்பபடுகின்றது. அதிசக்தி வாய்ந்த சமூகத் தாக்கங்களை விளைவிக்கின்ற ஒன்றாக உலகமயமாக்கற் போக்குக் காணப்படுகின்றது. உலகமயமாக்கமானது உள்நாட்டுப் பண்பாட்டிற்கு அதன் நிலைப்பிற்கு அச்சுறுத்தலான ஒரு செய்முறையாகக் காணப்படுகின்ற போதிலும் உள்நாட்டுப் பண்பாடானது முற்றாக அழிந்து விடுகின்றது எனக் கருதமுடியாது. மக்கள் தனது பண்பாட்டின் மீது கொண்ட பற்று, தனித்துவத் தன்மை, தன் ஒருமைப்பாடு போன்ற காலணிணிகள் உள்நாட்டுப் பண்பாட்டின் நிலைப்பிற்குத் தொடர்ந்தும் துணைகுபுரிகின்றன. அதனை மேலும் நிலைநிறுத்த உலகமயமாதலின் மூலம் சமயக்கல்வியின் அவசியத்தை உணர்த்துதல் வேண்டும்.

சந்திரவதனா
ஆசிரியை,
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# "செபம் ஆன்மீக வாழ்வின் ஊற்று"

"இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல்" செபம் எனப்படும் அதாவது எமது உள்ளத்தை இறைவனிடம் எழுப்புவது எனவும் கூறலாம். மேலும் அவரை மகிமைப்படுத்தி புகழ்வதும், அவருக்கு நன்றி கூறுவதும் அவரது அருள் வரங்களை வேண்டிச் செபிப்பதும் செபம் ஆகும் என வரையறுத்துக் கொள்ளலாம்.

தற்கால மனிதனின் ஆன்மீக வாழ்வில் செபம் எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்துகின்றது என ஆராய்ந்து பார்ப்போமானால் இறைவனிற்கும், செபத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது மிகமிக குறைவாகவே உள்ளது. செபம் ஒருவனுடைய வாழ்வில் முக்கியமான ஒரு செயற்பாடு என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். "செபிக்க தெரியாதவனுக்கு வாழத் தெரியாது" என தூய கிறிஸ்தோஸ்தம் அருளப்பர் கூறியுள்ளார் ஒருவன் எவ்வளவு தூரம் தன் வாழ்வை செபமாக்கிக் கொள்கின்றானோ அவன் உயர்ந்த வாழ்வை பெற்றுக்கொள்வதுடன் இறைவனை நெருங்கிச் செல்லவும் முடியும்.

மகிழ்ச்சியின் போது துக்கத்தின் பொது நோயின்போதும், அதிகாலை கண் விழித்து எழுந்தவுடன், மாலை நித்திரைக்கு செல்லும் முன்னர், சாப்பிட முன்னர், சாப்பிட்ட பின்னர், வேலைகளை செய்ய முன்னர், வேலை செய்த பின்னர், பிரயாணங்கள் மேற்கொள்ளும் போதும் மனிதனது ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் செபிக்க கடமைப்பட்டுள்ளான். மேற்கூறப்பட்ட விடயங்கள் செபிக்கும் சந்தர்ப்பங்களாக குறிப்பிடலாம்.

இயேசுவும் தன் வாழ்க்கை காலத்தில் செபிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். "இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்கு புறப்பட்டு சென்றார் அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்" என மாற் 1:3 லும். "தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையில் ஏறினார்." என மத் 14:23 இலும் "அந்நாட்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார் அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்" என லூக் 6:12 இலும் இயேசு செபித்துள்ளார் என்பதை நாம் நற்செய்திகள் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

மேலும் சீடர்கள் பரிசுத்த ஆசியை பெற்றுக்கொள்ள எருசலேமில் மாடி அறையில் செபத்தில் ஈடுபட்டார்கள் என்பதை திருத்தூதர் பணி நூலின் ஊடாக அறிந்து கொள்ளலாம். இச்சீடர்களுடைய போதனையை கேட்டும் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலாலும் உருவாக்கப்பட்ட முதல் கிறிஸ்தவ சமூகம் செபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பதை தி.பணி 2:22 - 23

வசனங்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. **"அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் இடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்"**

இன்று எம்மால், மரியாதையும் வணக்கமும் செலுத்தப்படும் புனிதர்கள் புனித நிலையினை அடைய செபமே மூல காரணமாக அமைந்துள்ளது எனலாம். இவர்கள் செபத்தினூடாகவே பல புதுமைகளை ஆற்றியுள்ளார்கள் புனித யோசவாஸ் அடிகள் செபித்து மழையை பொழியச் செய்தார் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதன் ஊடாக செபத்தின் வல்லமை தெளிவுபடுத்தப்படுகின்றது. ஒருவன் எவ்வாறு செபிக்க வேண்டும். எவ்வாறான செபம் கேட்கப்படும் என இயேசு மத் 6:5-14ல் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். **'நீங்கள் இறைவேண்டல் செய்யும் போது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம், தொழுகைக் கூடங்களிலும், வீதி ஓரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டும் என இறைவேண்டல் செய்கிறார்கள்......'**

நீங்கள் செபிக்கும் போது உள்ளறைக்கு சென்று கதவை அடைத்துக்கொண்டு மறைவாய் உள்ள தந்தையை நோக்கி வேண்டுவார்கள், மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது பிற இனத்தாரைப் போல் பிதற்ற வேண்டாம் இவ்வாறு செபியுங்கள் என இயேசு சீடர்களிற்கு கற்றுக் கொடுத்துள்ளார். இவ்வாறு தான் செபிக்க வேண்டும் என பல உவமைகள் ஊடாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் செபிக்கும் முறை பற்றி கூறும் போது எளிமையான மனநிலையோடு செபிக்க வேண்டும், தாழ்மையாகவும், இடைவிடாமலும் செபிக்க வேண்டும். மற்றவரை தாழ்த்தியும், மற்றவர்களோடு தன்னை ஒப்பிட்டும், தன்னைத் தானே புகழ்ந்தும் செபிக்க கூடாது என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செபம் ஒருவனை எவ்வாறு வாழ வைக்கின்றது என்பதை இயேசுவின் வாழ்வினூடாக அறிந்து கொண்டிருக்கும் நாம் செபத்திக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம் என்பதை சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டுள்ளோம்.

இன்று நவீன உலகில் வாழும் நாம் உலக செல்வங்களின் பின்னால் ஓடோடிக் கொண்டிருக்கின்றோம். ஆன்மீக வாழ்வில் அக்கறை இன்றி பணம், பதவி, புகழ் போன்றவற்றில் பேராசை கொண்டு அதைப் பெற போராடிக் கொண்டிருக்கின்றோம். இவற்றில் இருந்து விடுபட்டு வாழ செபம் அவசியமாக உள்ளது.

ஆரம்பகாலங்களில் மக்கள் அயல்வீடுகளிற்கு சென்று செப வழிபாடுகளில் ஈடுபட்டு அன்புடனும், நட்புடனும் பழகினார்கள். ஆனால் இன்று தொலைக்காட்சி நாடகங்களிலும், சினிமாப் படங்களிலும் தொலைபேசி

பாவனைகளிலும் மூழ்கி இறைவனை மறந்து தமது நேரங்களையும், வாழ்க்கையையும் வீணாக்கிக் கொண்டு அலைகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

எமது வாழ்வின் இறுதி நோக்கம் இறைவனை நாடிச் செல்வதே இதற்கு நாம் ஆயுதமாக செபத்தினை பயன்படுத்த வேண்டும். நாம் நன்மனதோடு செபிக்கும் போது அன்பு, பணிவு, இரக்கம், ஒற்றுமை, நம்பிக்கை, விசுவாசம் போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும். மேலும் எமது செபத்தின் வழியாக எமது பலவீனங்கள், இயலாமைகள் என்பவற்றை அறிந்து கொள்ளவும் அப் பலவீனம், இயலாமைகளை நீக்கிக் கொள்ளவும் செபம் உதவுகின்றது.

எமது வாழ்வின் உறுதியற்ற தன்மை, நிலையில்லா தன்மை, எமக்குள் ஏற்படும் விரக்தி, பயம் என்பவற்றைநாம் செபத்தினால் இலகுவாக்கி கொள்ள முடியும் இதனால் எமது விசுவாச வாழ்வு உறுதிப்படுத்தப்படும்.
**'கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும் தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள்'** என்ற இயேசுவின் கூற்றுக்கு இணங்க தாம் எமது தொலைந்து போன ஆன்மீகத்தை கேட்போம், தேடுவோம் ஆனால் இவற்றை நாம் செபத்தினூடாக தான் பெறமுடியும் என்பதை மறந்துவிட முடியாது.

நாம் செபிக்கும் போது மனதை ஒருநிலைப்படுத்தி செபிக்க வேண்டும். கடமைக்காகவோ, மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்றோ செபிப்பதால் எந்த பயனும் இல்லை என்பதை கருத்தில் கொண்டு தமது முழு இதயத்துடனும், அன்புடனும், பக்தியோடும் செபிக்க வேண்டும். தூய்மையான மனநிலை இல்லாமலும், கபட நோக்கோடும், பழி வேண்டும் சிந்தனையோடும் செபிக்கும் செபமானது அர்த்தமற்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். நாம் செபிக்கும் போது குழுவாகவும், தனியாகவும் செபித்துக் கொள்ள முடியும். குழுவாக செபிப்பதை இயேசுவும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை **'என் பெயரின் பொருட்டு இருவர் அல்லது மூவர் சேர்ந்து எங்கே கூடி இருக்கிறார்களோ அங்கே நான் இருக்கின்றேன'**

என்று கூறி குழுவாக செபிக்கும் பண்மை ஏற்படுத்தினார். எனவே நாம் எவ்வாறு செபிக்கின்றோம். என்பது முக்கியமல்ல, எம் செபம் இறைவனிடம் சேர வேண்டும், நாமும் இறைவனோடு ஒன்றித்து அவரின் இறை வார்த்தைகளோடு வாழ்ந்து, செபத்தினை எம் வாழ்வில் ஓர் அங்கமாக்கி வாழ வேண்டும்.

God Bless You

செல்வி ஆன்சோபியா
கத்தோலிக்க சமயபாட ஆசிரியர்

# நவீன உலகில் சமூக வலைத்தளங்கள்

நவீன உலகில் பல்வேறுபட்ட நவீன கண்டுபிடிப்புக்களில் மனிதனிற்கு இன்றியமையாத துறையாக வளர்ந்திருப்பது தொடர்பாடல் துறையாகும். முழு உலகையும் உள்ளங்கையினுள் அடக்கிவிடும் அளவிற்கு இன்று தொடர்பாடல்துறை அதனுடன் இணைந்த சமூக வலைத்தளங்கள், சாதனங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. முன்னொரு காலத்தில் இணையம் என்றால் என்ன? என்பது தெரியாத மக்கள் தொகை அதிகமாகவும், அதனைப் பயன்படுத்துவோர் தொகை குறைவாகவும் காணப்பட்டது. சாதாரண மக்களிற்கு இணையம் எட்டாக் கனியாகவே காணப்பட்டது. ஆனால் இன்று அதன் பாவனை சாதாரண பாமர மக்கள் பயன்படுத்தக் கூடியளவிற்கு மலிந்து காணப்படுகின்றது.

இணையம், சமூக வலைத்தளங்களினை எடுத்துக்கொண்டால் எதிலும் நன்மை இருப்பதைப் போன்று தீமைகளும் காணப்படுகின்றன. இணையயுகத்தின் அதீத வளர்ச்சியில் சமூக வலைத்தளங்களினை ஒரு புரட்சி எனக் கூறலாம். சமூக வலைத்தளங்கள் என்பவை இணையத்தில் பரீட்சயமானவர்கள் தமது தகவல்களினை (புகைப்படம், சொந்த விருப்பு வெறுப்புக்களினை) ஏனையோர்களுக்குப் பகிர்ந்து கொள்ளுவதற்காக உருவாக்கப்பட்டவை. இதன்மூலம் தம்மிடையே நட்புறவுகளினை மேம்படுத்தல் தகவல்களினை பரிமாறிக் கொள்ளுதல், தமது அனுபவங்களினைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடமுடியும்.

பல்வேறுபட்ட நிறுவனங்கள் இணைய வழி விளம்பரங்கள் செய்வதன் மூலம் தமது வியாபாரங்களை விருத்தி செய்கின்றன. பயனாளிகள் தேடும் தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் விளம்பரங்களினை அவர்களிடத்தில் சேர்ப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. சமூக ஆர்வலர்கள் தமது கருத்துக்களினை மக்களிடம் சேர்ப்பதற்கு சமூக வலைத்தளங்களினைப் பயன்படுத்துகின்றார்கள்.

பயனுள்ள தகவல்களினைத் தேடும் நபர் அவர் பயன்படுத்திய தகவல்களினை ஏனையவரிற்கு பகிர்ந்து கொள்வதற்கு இவை அநேகம் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர் தமது புதிய உற்பத்திகளினை மக்களிடையே அறிமுகம் செய்வதற்கும், உற்பத்தி பொருட்களினை யாரெல்லாம் பார்வையிட்டார்கள், எத்தனை பயனாளிகளினை குறிப்பிட்ட தகவல் சென்றடைந்தது என்பதை அறிந்து கொள்ளவும் சமூக வலைத்தளங்களினை உபயோகப்படுத்துகின்றார்கள். ஒரு நிறுவனத்தால் சுயமாக இணையத்தளத்தினை வடிவமைத்துக் கொள்ள முடியாதவர்களிற்கு சமூக வலைத்தளங்கள் நல்ல வாய்ப்பாக அமைகின்றது. குறுகிய காலத்தில் பல பயனாளிகளினை தகவல் சென்றடைவதற்குச் சமூக வலைத்தளங்கள் பெரிதும் உதவி புரிகின்றன.

தொழில்நுட்பத் துறையில் உள்ள வல்லுனர்களின் அனுபவங்கள் அவர்களின் செயற்பாடுகள், தொழில்நுட்ப அறிவுசார்ந்த கட்டுரைகள் என்பன சமூக வலைத்தளங்களில் பகிரப்படுவதால் கல்வித்துறை சார்ந்த மாணவர்களிற்கு பெரிதும் உதவிபுரிகின்றன. இதுபோன்ற பல ஏராளமான நன்மைகள் சமூக வலைத்தளத்தினால் கிடைத்தாலும் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு குற்றச் செயல்கள், தேவையற்ற செயற்பாடுகளிற்கு சமூக வலைத்தளங்கள் வழிகோலுகின்றன. சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தகவல்களினால் மூன்றாம் நபர் எமது விபரங்களினை பெற்றுத் தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், நட்பு எனும் பெயரில் தொடங்கும் ஆண், பெண் உறவுகள் அரட்டை அடித்தல் மூலமாக தகாத உறவுகளிற்கு வழிகோலி தமது எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்கும் நிலமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களினை செய்பவர்கள் சமூக வலைத்தளங்களினூடாக தகவல் பரிமாற்றமானது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர்கள் சமுதாயத்தில் பலரினை தற்பெருமை மிக்கவர்களாக சமூக வலைத்தளங்கள் மாற்றுகின்றன. இயல்பான வாழ்க்கைக்கு புறம்பான வகையில் தகவல்கள் பதியப்படுகின்றன. இதனால் ஏனையவர்களினையும் ஆபத்தான செயற்பாடுகளினைச் செய்வதற்கு இவை தூண்டுகோலாக அமைகின்றன.

சமூக வலைத்தளங்களினைப் பயன்படுத்துவோர் ஏனைய வேலைகளினைத் தவிர்த்துச் சமூக வலைத்தளங்களினை எப்போதும் நாடியிருப்பது சமூக மட்டத்தில் பின்னடைவான நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

இணைய உரையாடல்கள், இணைய விளையாட்டுக்கள் என்பவற்றைச் சமூக வலைத்தளங்கள் அறிமுகம் செய்து மாணவர்கள் அவற்றினைப் பயன்படுத்துவதை தூண்டுகின்றன. இதனால் மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சூனியமான வாழ்வை நோக்கி நகர்த்தி செல்லப்படுகின்றார்கள்.

எமது தகவல்களினை அனுமதியின்றிப் பயன்படுத்தி நாம் அறிந்திராதவர்களிடம் மோசடிகள் செய்வதற்கும், உறவினர்கள் வீட்டிற்கு வருகின்றபோது அவர்களினை நன்கு உபசரித்து உரையாடாமல் எப்போதும் சமூக வலைத்தளத்துடன் இணைந்திருப்பதால் உறவினர்கள் பலரை இழக்கவேண்டியும் ஏற்படுகின்றது.

பணம், மானம் என்பவை எதிர்பாராத விதமாக சூறையாக்கப்படுவதிலும், பறிபோவதிலும் சமூக வலைத்தளங்களின் வலையமைப்பானது பெரிதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பாலியல் ரீதியிலான தொல்லைகளினை சமூக வலைத்

தளங்களினூடாக கயவர்கள் இன்று மேற்கொள்கின்றனர். சமூக வலைத்தளங்கள் இன்று போதைக்கு நிகரான ஒன்றாக வர்ணிக்கப்படுகின்றன.

சமூக வலைத்தளங்களினை ஆரம்பித்து ஒரு சில வருடங்களிலேயே சீனா, வியட்நாம், ஈரான் போன்ற நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் பல நாடுகள் இதனைத் தடைசெய்வது பற்றி ஆராய்ந்து வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நாடுகள் சமூக வலைத்தளங்களினை தடைசெய்வதற்கு பல்வேறு காரணங்களினை முன்வைத்துள்ளன. மத அடிப்படை வாதத்திற்கு எதிரானதாக காணப்படுதல், சமூக ரீதியிலான குற்றச் செயல்களினை அதிகரிக்க செய்வதற்கு உதவிபுரிகின்றது என்பனவாகும்.

பல நாடுகள் சமூக வலைத்தளங்களினை தனிமனிதனின் எண்ணங்களினை, சிந்தனைளினை கண்காணிக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற அதிர்ச்சியான தகவலினையும், நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் பயன்படுத்தப்படுகின்ற மூன்றாம் நபர் செய்நிரல் மூலமாக மறைக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட தகவல்களைக் கூட எடுத்துவிட முடியும். இது எவ்வளவு பெரிய தீங்கு விளைவிக்கும் செயல் என்று யோசித்துப் பாருங்கள்.

எனவே இதிலிருந்து நீங்கள் சமூக வலைத்தளங்களுடன் எத்தனை மணிநேரம் செலவிடுகின்றீர்கள்? செலவிட்ட நேரத்தில் நீங்கள் எதனைக் கற்றுக் கொண்டீர்கள் இந்தக் கேள்விக்கு தைரியமான பதிலொன்று உங்களிடம் இருந்து கிடைக்குமாயின் உங்களினைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. ஆனால் அதிகமானவர்கள் சமூக வலைத்தளத்தில் செலவிடும் நேரத்தில் என்ன சாதித்தீர்கள் என்றால் பதிலில்லை.

இணையத்தில், சமூக வலைத்தளங்களில் சிறந்த கருத்துக்கள், வரலாறுகள், கலைகள், செய்திகள், விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம், வல்லுனர்களின் அனுபவங்களினைத் தேடிப்படியுங்கள் உங்கள் ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்.

சமூக வலைத்தளங்கள் என்பது தவறான கணிப்புடன் பார்க்கப்படவேண்டிய ஒன்றல்ல, மாறாக உலகத்தை விரல்நுனிக்குத் தரும் ஒரு சிறப்புமிக்கத் தொழில்நுட்பச் சாதனை அவ்வாறானதொரு பயனுள்ள சக்தி மிக்க செயலாற்றலை வீணடிக்காது நொடிக்கு நொடி உங்களை வளர்ப்படுத்திக் கொள்ள உபயோகியுங்கள்.

வி. இரவீந்தர்
ஆசிரியர்

## விசப்பாம்புகளை இனம் காண்பது எவ்வாறு?

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். அதற்கு பாம்புகளின் விசத்தன்மையே ஒரே ஒரு காரணமாகும். உலகில் பாம்புகளைப் போல் அல்லது பாம்புகளை விட விசத்தன்மையுடைய உயிரினங்கள் பல உள்ளன. உதாரணமாக Box jelly fish, Poison arrow frog stone fish, blue - ringed octopus, Death Stalker Scorpion, Brazilian Wandering Spider, Marble cone snail என்பவற்றைக் கூறிக் கொள்ளலாம். இருப்பினும் அனைவரும் பொதுமைப்படுத்திக் கூறும் விசத்தன்மை வாய்ந்த உயிரினமும் மக்கள் அதிகளவில் பயப்படும் உயிர் இனம் என்றால் அவை பாம்புகள் ஆகும்.

இவ் உலகில் எவ் உயிரினம் வாழ வேண்டும், எவ் உயிரினம் வாழக்கூடாது என்பதை மனிதனே தீர்மானிக்கின்றான். மனித இனம் ஆட்சியாக இருப்பதனால் மனிதனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவை யாதாக இருப்பினும் அவற்றை அழிப்பதற்கான உரிமையை மனிதன் தனதாக்கிக் கொள்கின்றான். அந்த வகையில் அவனுடைய பட்டியலில் முன்னுரிமையில் இருக்கும் ஓர் விலங்கு இனமே பாம்புகள் ஆகும்.

பாம்புகளைக் கொல்லும் மனித நடவடிக்கை அன்றில் இருந்து இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் இதில் ஒரு கசப்பான உண்மை இருக்கின்றது. மனிதன் கொல்லும் பாம்பு இனங்களில் பெரும்பாலானவை விசத்தன்மையற்றவை, அவை மனிதனுக்குப் பாதிப்பை எற்படுத்தக்கூடியவை அல்ல இருப்பினும் அவை பாம்பு இனத்தைச் சேர்ந்தவை என்ற ஒரே ஒரு காரணத்திற்காகவே கொல்லப்படுகின்றன. இதற்கு மிக முக்கிய காரணம் எவை நச்சுத்தன்மை உடையவை, நச்சுத்தன்மை அற்றவை என வேறுபடுத்துவதில் உள்ள சிக்கல்களே காரணமாகும். பாம்புகளின் புறத்தோற்ற இயல்பு பற்றி பூரண அறிவு உடையவர் மட்டுமே எவை நச்சுத்தன்மையானவை எவை நச்சுத்தன்மை அற்றவை என்பதை இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியும் இவற்றுடன் சில விதி விலக்கான இனங்களையும் சேர்த்து அறிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இலங்கையில் கிட்டத்தட்ட 100 வகையான பாம்பு இனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் கிட்டதட்ட 25 வரையான இனங்களே விசத்தன்மையானவை. இவை மிகவும் ஆபத்தான விசம் (Highly Poisonous) உள்ள இனங்கள், (Poisonous) குறைந்த அளவு விசம் உடைய இனங்கள் (Mildly Poisonous) எனப் பாகுபடுத்தப்படுகின்றன. ஒப்பீட்டளவில் 1/4 பங்கு இனங்களே மனிதனுக்கு ஏதோ ஒரு விதத்தில் சிறிதளவேனும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இலங்கையில் காணப்படும் இனங்களில் 7 வகையானவை மிகவும் ஆபத்தானவையாகக் கருதப்படுகின்றன. அவையானவை Cobra *(Naja naja)*, Common Krait *(Bungarus caeruleus)*, Srilankan Krait *(Bungarus ceylonicus)*, Russell's viper *(Daboia russelii)*, Saw scale viper *(Echis*

*carinatus)*, Hump nose viper *(Hypnale hypnale)*, Green pit viper *(Trimeresurus trigonocephalus)*

ஏனைய பாம்பு இனங்களை நாம் எமது சுற்றாடலில் காணப்படும் ஏனைய சாதாரண விலங்கு இனங்களைப் போன்றே கருத வேண்டும். இருப்பினும் மலைப்பாம்புகள் பொதுவாக விசத்தன்மை அற்றவை என்றாலும் அவை மனிதனுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை. நச்சுத்தன்மை அற்ற பாம்பு இனங்களைச் சாதாரணமாக நோக்குவது நடைமுறைக்குச் சாத்தியமா? என்ற கேள்விக்குப் பதில் கூறுவது கடினமானதொன்றாகும்.


முன்பு குறிப்பிட்டது போல் பாம்புகளின் புறக்கட்டமைப்புகளின் அடிப்படையில் எவ்வாறு பாம்புகளின் விசத்தன்மையை அடையாளம் கண்டு கொள்வது என்பதை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

பாம்புகளின் வாற்பகுதியின் வடிவத்தின் அடிப்படையில் பாம்புகளின் விசத்தன்மையினை அறிந்து கொள்ள முடியும். வாற்பகுதி பக்கவாட்டுப் புறம் தட்டையாக்கப்பட்டுக் காணப்பட்டால் அவை உண்மையான கடற்பாம்புகள் (True Sea snakes) ஆகும். இவை அனைத்தும் நச்சுத்தன்மையானவை. ஆகவே தட்டையாக்கப்பட்ட வால் அமைப்பு நச்சுத் தன்மைக்கு ஓர் அடையாளமாகக் கொள்ளமுடியும். முனை மழுங்கிய (Blunt) அமைப்பில் வாற்பகுதி காணப்பட்டால் அவை விசத்தன்மையற்ற பாம்பு இனங்கள் ஆகும். வாற்பகுதி சாதாரணமாக பெரும்பாலான பாம்பு இனங்களில் காணப்படுவது போன்று உருளை வடிவமாகவும், நுனிப்பகுதி நோக்கிச் செல்லும் போது ஒடுக்கமடைந்தும் காணப்பட்டால் நாம் வேறு இயல்புகளைக் கருத்திற் கொண்டே விசத்தன்மையை அறியமுடியும்.





Sea snakes (Poisonous) | Non-poisonous | Poisonous or Non-poisonous


இரண்டாவது முக்கிய அமைப்பாக வயிற்றுப்புறச் செதிலினை (Ventral Scale) பாம்புகளை இனம் காண்பதில் பயன்படுத்தலாம். வயிற்றுப்புறச் செதில்கள் சிறிதாகவும், முதுகுப்புறச் செதில்கள் (Dorsal Scale) தொடர்ச்சியாகவும் காணப்பட்டால் அவை நச்சுத்தன்மையற்றவை ஆகும். வயிற்றுப்புறச் செதில்கள் முழுமையாக வயிற்றுப்புறப் பகுதி வரை பரந்து காணப்படாது இருந்தால் அவையும் நச்சுத்தன்மையற்ற பாம்பினங்கள் ஆகும். வயிற்றுப்புறச் செதில்கள் முழுமையாக வயிற்றுப்புறப் பகுதி வரை பரந்து காணப்பட்டால் அவை தொடர்பாக முடிவு எடுக்க முடியாது வேறு கட்டமைப்பு இயல்புகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.




(NON-POISONOUS)





(NON-POISONOUS)




(NON-POISONOUS OR POISONOUS)

மூன்றாவதாக தலையில் உள்ள செதில்களின் அமைப்பைக் கருத்திற் கொள்ளலாம். பொதுவாக பாம்புகளின் தலையின் மேற்பகுதியில் வேறுபட்ட வடிவ அமைப்புகளிலும், அளவுகளிலும் பல வகையான செதில்கள் காணப்படும். இது Head Shield என அழைக்கப்படும். ஆனால் சில பாம்புகளில் அவ்வாறு காணப்படாது உடல் மேற்பரப்பில் காணப்படும் செதில் அமைப்பே தலைப்பகுதி வரை காணப்படும். இவை விரியன் (Viper) பாம்பு இனங்களின் அடையாளம் ஆகும். இவை அனைத்தும் நச்சுத்தன்மையானவையாகும். இவற்றின் முக்கோண வடிவத் தலை, தலைப்பகுதியில் காணப்படும் சிறிய செதில்கள் என்பவற்றை விசத்தன்மையான அடையாளங்களாகக் கொள்ளலாம்.


விரியன் பாம்புகளை இரு வகையாகப் பிரிக்கலாம் Pit viper, Pitiless viper. pit என்பது கன்னச் செதில் (loreal Scale) காணப்படும் பகுதியில் உள்ள குழி போன்ற அமைப்பாகும். இவை பாம்புகளின் வெப்ப வாங்கிகளாகத் (Thermoreceptor) தொழிற்படுகின்றன. மூக்குத்துவாரத்திற்கும் (Nostrill) கண்ணிற்கும் இடையில் (Pit) குழி போன்ற அமைப்புக் காணப்பட்டால் அவை விசத்தன்மைக்குரிய அடையாளம் ஆகும்.




சில Pit Viper களிற்கு Head Shield காணப்படும் (Eg :- *Ancistrodon*)


அடுத்ததாக வாற்பகுதியின் கீழ்புறத்தில் காணப்படும் செதில்களைக் (Sub caudal) கருத்தில் கொள்ளலாம். இச் செதில்கள் சோடியாகக் காணப்பட்டால் அவை நச்சுத்தன்மையற்றவை என்பதற்கு அடையாளம் ஆகும். இருப்பினும்

விதிவிலக்காக Russel Viper இவ் இயல்பைக் காண்பிக்கின்றன. இருந்தபோதிலும் அவற்றின் தலையின் செதில் அமைப்பைக் கொண்டு மேலே குறிப்பிட்டது போன்று அவற்றினை விசப் பாம்புகள் என அடையாளம் கண்டு கொள்ள முடியும். மாறாக Sub caudal Scales ஒரு வரிசையில் காணப்பட்டால் அவை விசத்தன்மைக்குரிய அடையாளம் ஆகும். பாம்புகளின் குதப்பகுதியில் காணப்படும் குதத்தட்டு (Anal plate) பிரிக்கப்பட்டுக் காணப்பட்டால் அவை நச்சுத்தன்மையற்ற பாம்பு இனங்கள் ஆகும். மாறாகப் பிரிக்கப்படாது தனியான தட்டாகக் காணப்பட்டால் அது நச்சுத்தன்மையான பாம்புகளின் அடையாளம் ஆகும்.




முதுகுப்புறச் செதில்கள் சில பாம்பு இனங்களில் முள்ளந்தண்டு காணப்படும் இடத்தில் ஏனைய முதுகுப்புறச் செதில்களைவிடப் பெரியதாகவும், அறுகோண வடிவமாகவும் காணப்படும். இவ்வாறு Vertebral Scales காணப்படுவது நச்சுத்தன்மைக்குரிய அடையாளம் ஆகும்.


Eg :- Krait



மேலும் 4வது கீழ்ச் சொண்டுக்குரிய செதில் (Sub/ Infralabial Scale) பெரியதாகக் காணப்பட்டால் அவை நச்சுத்தன்மையை உடையவை என்பதைக் காட்டும் அமைப்பு ஆகும். இவையும் Krait வகையைச் சேர்ந்த பாம்பு இனங்களில் காணப்படுகின்றன.

Loreal Scale (கன்னச் செதில்கள்) காணப்படுவது அவை நச்சுத்தன்மையற்ற

பாம்பு இனங்கள் என்பதைக் குறிக்கின்றது. பொதுவாக இவை விசத்தன்மையற்ற Colubrids பாம்பு இனங்களில் காணப்படுகின்றன.





மேலும் 3வது மேற் சொண்டிற்குரிய செதில் (Supralabial) கண்ணையும், மூக்குத்துவாரத்தையும் தொடும் வண்ணம் காணப்பட்டால் அவை விசப்பாம்புக்குரிய அடையாளம் ஆகும். இவ் இயல்பு நாக பாம்புகளிலும், Coral Snake இலும் காணப்படுகின்றது. நாக பாம்புகளை (Cobra) அவற்றின் படம் (Hood) மூலம் இலகுவாக அடையாளப்படுத்திக் கொள்ளலாம். Coral Snake இனையும் அவற்றின் வயிற்றுப் புற பகுதியில் காணப்படும் புள்ளிகள் (Spots) மூலம் அறிந்துகொள்ள முடியும். மேலும் அவற்றின் கவர்ச்சிகரமான நிறம் (Bright colours) மூலமும் இலகுவாக அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும்.


இதைவிடப் பாம்புக்கடி (Snake bite) ஏற்பட்ட பின்பு கடியின் அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்டும் எப்பாம்பு கடித்தது என்பதை அதாவது நச்சுப் பாம்பினமா? அல்லது நச்சுத்தன்மையற்ற பாம்பினமா? என்பதை அறியமுடியும். சிறிய இடைவெளியில் அமைந்த இரு புள்ளிகள் காணப்படின் அது நச்சுப்பாம்பின் கடிக்குரிய அடையாளம் ஆகும்.





நச்சுப் பாம்புகளின் கண்மணியானது நிலைக்குத்தாக அமைந்த நீள்வட்ட வடிவானதாகக் (Elliptical Pupil) காணப்படும். ஆனால் நச்சுத்தன்மையற்ற பாம்புகளில் வட்டவடிவமான கண்மணி (Round pupil) காணப்படும். இருப்பினும் Coral Snake இல் round pupil லே காணப்படும்.




Rattle Snake எனப்படும் விசப் பாம்பினங்களின் வாற்பகுதியில் Rattle எனப்படும் அமைப்புக் காணப்படும். இதன் மூலம் அவ் வகைப் பாம்பினங்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளமுடியும். நச்சுப்பாம்புகளின் மேற்தாடையில் Fangs எனப்படும் பல அமைப்புக் காணப்படும். இதனையும் நச்சுப்பாம்புகளை இனம் காண்பதில் பயன்படுத்தலாம்.




பு. சுரேந்தர் B.Sc (Hons)
ஆசிரியர்
மு/ பதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# மின்னுவதெல்லாம் பொன்னல்ல

இன்று உலக சுகாதார பாதுகாப்பு (Global health security)க்கு பாரிய அச்சுறுத்தல்களாக விளங்குபவை பாதுகாப்பற்ற உணவு (Unsafe Food), நீர், காற்று என்பன அசுத்தமடைதல் (Water and air Pollution), சூழல் மாற்றம் என்பனவாகும் என உலக சுகாதார அமைப்பு (WHO) சுட்டிக்காட்டுகின்றது.

அந்த வகையில் பாதுகாப்பற்ற உணவை உட்கொள்வதன் மூலம் நாம் பல்வேறுபட்ட ஆரோக்கிய கேடுகளுக்கு உள்ளாகி இறுதியில் இறப்பைச் சந்திக்கக்கூடும். எனவே மனிதன் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத உணவினை சிறந்த தரமுடையதாக அமைக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். நுகர்வோர் கவர்ச்சியான நிறமுடைய உணவுப்பொருட்களை தரமானது என நம்புகிறார்கள். இதனால் வியாபாரிகள் நுகர்வோரைக் கவரக்கூடிய கவர்ச்சியான நிறத்தை வழங்குவதற்காக நிறமூட்டிகளை உணவில் பயன்படுத்துகின்றனர்.

நிறமூட்டிகள் இயற்கையானவையாக அல்லது செயற்கையானவையாக இருக்கலாம். இயற்கை நிறமூட்டிகளை உணவில் சேர்ப்பது பாதுகாப்பானதாகும். தீங்கை ஏற்படுத்தாத மஞ்சள் தூளானது பண்டைக்காலம் தொட்டு உணவுப்பொருட்களுக்கு நிறமூட்டப் பயன்படுத்தப்படுகின்றது. இது உணவிற்கு மஞ்சள் நிறத்தை கொடுப்பதோடல்லாமல் கிருமிநாசினியாகவும் செயற்படுகின்றது.

இதைத்தவிர தாவரங்களிலிருந்து பெறப்படும் பச்சையம் (Chlorophyll), கரோட்டின் (Carotenoids), பிளேவின் (Flavin), சாந்தோபில் (Xanthophyll), அர்தோசயனின் (Anthocyanin), பீற்றூட் சிவப்பு போன்றனவும் இயற்கை நிறமூட்டிகளாக பாவிக்கப்படுகின்றன. ஆனால் இன்று பலவகையான செயற்கை நிறமூட்டிகளை வியாபாரிகள் பாவிக்கிறார்கள். குளிர்பானங்கள், இனிப்புக்கள், தகரத்தில் அடைத்த பழவகைகளில் இந்நிறமூட்டிகளை பாவிக்கிறார்கள். இவற்றில் சில பாதுகாப்பானவை, சில தீங்கு விளைவிக்கக்கூடியன.

சிவப்பு -காமோய்சின் (Carmosine) - E122
பாஸ்ட்ரேட் (Fasstred E)
பொன்சூ 4R (Ponceau 4R) - E124
எரித்திரோசின் Bs (Erythrosine Bs)

| | |
|---|---|
| மஞ்சள் | -சன்செற் மஞ்சள் FCF (Sunset yellow FCF) - E 110<br>ராக்ற்றாசின் (Tartazine) - E 102 |
| நீலம் | -இன்டிகோகாமைன் (Indico Carmine) - E132<br>பிறில்லியன்ற் நீலம் (Brillient Blue FCF) - E 133 |
| பச்சை | -பச்சை S (Greens)<br>பச்சை FCF (Green FCF) |

மேற்கூறிய செயற்கை நிறமூட்டிகளைத் தவிர ஏனைய நிறமூட்டிகளை உணவுப்பொருட்களில் பாவிப்பது எமது நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு சட்டத்தின்படி (Food act, No - 26 of 1980) பொதி செய்யப்பட்டுள்ள உணவு பொருட்களின் மேலுறையில் உணவில் பாவித்த நிறமூட்டிகளை E இலக்கங்களில் குறிப்பிட வேண்டும். பொதுவாக நிறமூட்டிகள் E-100 க்கும் E-180க்கும் இடைப்பட்டதாக இருக்கும். இவ் நிறமூட்டிகள் ஒரு கிலோகிராம் உணவில் 200 மில்லிகிராமிற்கு மேற்படாததாக இருக்க வேண்டும். இத்துடன் தரச்சான்றிதழுக்கான முத்திரையும் உணவப்பொதிகளில் பதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பின்வரும் உணவுப்பொருட்களுக்கு செயற்கை நிறமூட்டிகளைச் சேர்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இறைச்சி | கிறீம் |
| பால்மா | மீன் |
| தேயிலை | சீஸ் |
| காய்கறிகள் | பட்டர் |
| குழந்தைகளுக்கான உணவுகள் | பாண் |
| பழங்கள் | கட்டிப்பால் |
| கோப்பி | |

எமது நாட்டில் அங்கீகாரம் வழங்கப்படாத நிறமூட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. துணிகளுக்குச் சாயம் போடுவதற்காகப் பயன்படும் மஞ்சள்நிறத்தைத் தரக்கூடிய Metanil yellow மற்றும் சிவப்பு நிறத்தைத் தரக்கூடிய Rhodamine B என்பன குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவை பொதுவாக பூந்தி, மஸ்கட் போன்ற இனிப்பு வகைகளை நிறமூட்டப் பாவிக்கப்படுகின்றன. இதைவிடக் கோதுமை மாவுடன் மெதனில் மஞ்சள் நிறமூட்டியைக் கலந்து உணவிற்குப் பயன்படும் மஞ்சள்தூள் என வியாபாரம் செய்யப்படுகின்றது.

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதியிலேயே நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகமாக இவ் நிறமூட்டிகள் பாவிக்கப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும். உணவுப் பாதுகாப்புச் சட்டம் இப்பகுதியில் சரியாக அமுல்படுத்தப்படாமையே இதற்குக் காரணமாகும். ஆலயங்களிலும், நடைபாதைகளிலும் இனிப்புவகைகள் கண்ணைக் கவரும் நிறங்களிலும், பல வடிவங்களிலும் கண்ணாடிப்பெட்டிகளில் அடுக்கி விற்கிறார்கள். சிறுவர்களும் வண்ணநிற இனிப்புக்களால் கவரப்பட்டு அவற்றை வாங்கி உண்ணுகிறார்கள். இவ்விற்பனையாளர்கள் இனிப்புகளுக்கு விலைகுறைந்த தடைசெய்யப்பட்ட நிறமூட்டிகளைப் பாவிக்கின்றார்கள். இதனால் இவற்றை உண்ணும் சிறுவர்களுக்கு உடலுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. வயிற்றுளைவு, புற்றுநோய், தோல்அழற்சி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. மின்னுவதெல்லாம் பொன்னல்ல'' எனவே நுகர்வோர் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

மஞ்சள்நிற உணவு மாதிரிக்கு ஐதான ஐதரோக்குளோரிக் அமிலம் அல்லது சல்பூரிக்கமிலம் சேர்க்கும்போது அது இளம் மஞ்சள் நிறத்திற்கு மாறினால் அவ்வுணவு தடைசெய்யப்பட்ட மெதனில் மஞ்சள் நிறமூட்டியைக் கொண்டுள்ளது என முடிவு செய்யலாம் றொடமின் B நிறமூட்டியானது புறஊதா ஒளியில் (UV light) ஒளிரக்கூடிய தன்மை கொண்டது. இதன்மூலம் றொடமின் B நிறமூட்டியைக் கண்டறியலாம். பல வியாபாரிகள் இன்னும் பலவிதமான பாதகமான நிறமூட்டிகளைப் பாவிக்கின்றனர். இலாபம் பெருக்குவது மட்டுமே இவர்களது நோக்கமாகும். (உ+ம் : கோழிச்சாயம்)

எனவே நுகர்வோர் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். இதற்காக சுகாதார பரிசோதகர்களும், தொண்டு நிறுவனங்களும் இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இலங்கையில் சகல பாகங்களிலும், உணவுப்பாதுகாப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எனவே நோயற்ற வாழ்வை வாழ்வதற்குத் தரமான, சுத்தமான உணவுப்பொருட்களை உண்பது அவசியமாகும். மற்றும் ஆபத்தான நிறமூட்டிகளின் பாவனையைத் தவிர்த்தாலே போதும் வாய்க்குள் நுழைய முடியாத பலவகை நோய்களும் எம்மை நெருங்காது பறந்தோடிவிடும்.

**ஆக்கம் : செல்வி. ச. சுவர்ணா**

B.Sc. in (Agri)

ஆசிரியர்

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

# இதிகாசங்களில் நவரஸங்களின் பிரதிபலிப்பு

ரஸம் என்பது "ரஸ" என்ற வினையடியில் இருந்து பிறந்தது. இச்சொல் ஆன்ம அநுபவம் என்ற ஒன்றையே குறிக்கும். வேதங்களில் ரஸம் என்ற சொல்லை காணமுடிகிறது. இருக்க வேதத்தில் சாரம், சாறு, பிளிவு, தேறல், என்ற சொற்பதங்கள் ரஸத்தை குறிப்பனவாய் உள்ளன. ரஸம் உருவாவதற்கு சிறந்த கலைஞர்களும், நல்ல ரசிகர்களும் தேவை பரதநாட்டிய சாஸ்திரம் ரஸத்தைப் பற்றிக் கூறுகையில் "ஒரு பார்வையாளனுடைய உள்ளத்தில் உண்டாகுட் மனக்கிளர்ச்சியே ரஸம்" எனப்படும். இந்த ரஸமானது அழகியல் அனுபவமே அதாவது மனத்திற்கு திருப்தியைக் கொடுத்து இறுதியில் இன்பத்தை கொண்டு வரும். அபிநவகுப்தர் "சாதாரணகரண" என்பது ரசத்தின் சாரமாகும் எனக் கூறுகிறார். ரசனை தான் மனிதனுக்கு தெம்பூட்டும் மூல சாதனமாகும்.

பரதரே முதன்முதலாக ரசக் கொள்கையை விளக்கியவராவார். நாட்டிய சாஸ்திரத்தில் 6அவது அத்தியாயத்தில் ரஸக்கொள்கை இடம்பெறுகிறது. ரஸம் என்பது சுவைத்தல், அனுபவித்தல் எனப் பொருள்படும். ரஸத்தை சுவையோடு பரதரே ஒப்பிடுகிறார். அதாவது சமைக்கும் போது பல விதமான திரவியங்களான உப்பு, புளி, காய்கறிகள் யாவற்றையும் கலந்து இறுதியில் அந்த சுவைகள் எதுவுமே தனித்தனியாக நில்லாது கலந்து ஒரு நல்ல சுவையை நமக்கு தருகின்றது. அதேபோல பலவித பாவங்களும் சேர்ந்து ஒரு ரஸத்தை உற்பத்தி செய்கின்றது.

இந்த ரஸங்கள் ஒன்பது வகைப்படும். அவை நவரஸங்கள் என்றழைக்கப்படும் அவையானது.

சிருங்கார காஸ்ய கருணா ரௌத்ர வீர பயானகா / பீபத்ஸாத்புத சாந்தாச்ச நவ நாம்பரஸாஹ ஸ்யிருதாஹ // சிருங்காரம், காஸ்யம், கருணா, ரௌத்ரம், வீரம், பயம், பீபத்ஸம், அற்புதம், சாந்தம் என்பனவையாகும். இந்த இரசங்களின் தோற்றம் பற்றி பரதமுனிவர் தனது நாட்டிய சாஸ்த்திரத்தில் கூறுகையில். "கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல மனம்வழி பாவம் பிறக்க அதனின்று சுவை தோன்றும்" எனக் குறிப்பிடப்படும். இந்த ரசங்கள் யாவும் நமது அன்றாட வாழ்க்கையுடன் ஒன்றிணைந்து காணப்படுகிறது. இந்த ரஸங்களின் பிரதிபலிப்பை நாம் இதிகாசங்களிலும் புராண வாயிலாகவும் நோக்கலாம்.

## சிருங்காரம் :

இராமாயணத்தில் இராமபிரான் சிறந்த உத்தம குணாங்களுடன் சித்திரிக்கப்படுகிறார். இங்கு அயோத்தியாபதியாகிய இராமன் சோலையிடத்து வரும்பொழுது சீதாமேல் உப்பரிகையில் பந்து விளையாடிய வேளையில் பந்து கீழே விழுகிறது. பந்தைப் பார்க்க கீழே இராமபிரான் நிற்கிறார். அழகான இடம், அமைதியான சூழல் முதலிய மனக்கிளர்ச்சியால் ஒருவர் பால் ஒருவர் ஈர்க்கப்படுகின்றனர். இதனை வள்ளுவர்.

"கண்ணோடு கண்ணிலை நோக் கொக்கின் வாய்ச்
சொல்லில் என்ன பயனும் மில" எனவும் கம்பர் கூறுகையில்

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" இங்கு இரு உள்ளங்களுக்கிடையேயும் சிருங்கார ரஸம் பிறக்கிறது.

## ஹாஸ்யம் :

சிருங்கார ரஸத்திலிருந்து பின் தொடர்வது ஹாஸ்ய ரஸமாகும். மகாபாரதத்திலே மயனால் சிருஷ்டிக்கப்பட்டிருந்த மகாசபையில் துரியோதனன் பிரவேசித்து வாயில் இல்லாத இடத்தில் வாயில் இருப்பதாகக் கருதி நுழையப் போய் முட்டிக் கொண்டதும், நீருள்ள இடத்தில் தரையென்று எண்ணி நீரில் விழுந்தும் அவமானமடைந்த துரியோதனனைக் கண்டு திரௌபதி நகைத்ததும் ஹாஸ்ய ரஸமாம்.

## கருணா :

இராமாயணத்தில் ஸ்ரீராகவன் பிதாவின் ஆக்ஞைப்படி 14 வருட காலம் வனவாசம் செய்ய வேண்டும் என்ற கூற்றுப்படி ஆரணியம் வந்த பிறகு தசரத மகாராஜன் ஸ்வர்க்க செய்தி அடைந்தமையைக் கேட்டு துக்கித்ததும் கருணா ரஸமாம்.

## ரௌத்ரம் :

ரௌத்ரம் என்பதன் பொருள் கோபம் ஆகும். மகாபாரதத்திலே திருதராட்டிர அரசனுடைய சபையில் மாயச் சூதாடி வென்று சபையிலே தனக்கும் மற்றைய உடன் பிறப்புக்களுக்கும் தன் மனையாளான திரௌபதியினுடைய துகிலுரிந்து அவமானம் செய்த துரியோதனை வீமசேனன் தீராக் கோபத்தினால் கொன்றதும் ரௌத்ர ரஸமாகும்.

## வீரம் :

மகாபாரதத்திலே எல்லா அரசர்களும் குறிவைத்தும் மிகுந்த பராக்கிரமசாலியான கர்ணன் கூட சாதிக்க முடியாமல் போன பாஞ்சால மகாராஜனுடைய அரசவையில் வைக்கப்பட்டிருந்த மத்சய யந்திரத்தை வீழ்த்திய அர்ச்சுனனுக்கு வீரம் உண்டாகிறது. வீர ரஸம் உண்டான படியால் தான் நினைத்ததை அடைந்தான். இதே ரஸம் ராமாயணத்திலும் இராமன் சிவதனுசுவை உடைத்தமை குறிப்பிடத்தக்கது.

## பயம் :

பயங்கரமான மனக்கிளர்ச்சியால் பயானக ரஸம் உண்டாகின்றது. கலிங்கத்துப் பரணியிலேயே ஒரு காட்சியில் சோழ வீரனான கருணாகரன் கலிங்கப்படையை வென்றான். கலிங்கர் அச்ச மிகுதியால் சிதைவுற்று நாலாபுறமும் ஓடினர். இதனை

"ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
அபயம் அபயமென நடுங்கியே"

எனக் கூறப்படுகிறது. மேலும் இராமாயணத்தில் இளைய பெருமானாகிய லக்ஷ்மணசுவாமியுடன் யுத்தம் செய்து சக்தியற்றுப் போன இந்திரஜித்து மேகத்தில் போய் ஒளிந்து கொண்டதும் பயானக இரஸமாகும்.

## பீபத்ஸம் :

சித்திரகூட பர்வதத்தில் இலக்குவன் இருக்கையில் சூர்ப்பனகை பெண் உருக்கொண்டு தன்னை மணக்கும்படி கூற இலக்குவன் அவள் மீதுள்ள வெறுப்பினால் மூக்கை வெட்டுகின்றான். வெறுப்பான மனக்கிளர்ச்சியே பீபத்ஸ ரஸமாகும்.

### அற்புதம் :

மகாபாரதத்திலே ஸ்ரீ கிருஷ்ணன் வெண்ணெய் திருடியிருப்பானோ என்று கருதி வாயை திறக்க சொல்கிறாள் யசோதை. அப்படி திறந்த சிறிய வாயிலே அண்ட சராசரங்கள் அனைத்தையும் அங்கு காண்கின்றாள் வானத்தைக் காட்டிலும் பரந்துள்ள அக்காட்சியினைக் கண்டு வியப்புடன் மூர்ச்சையாகின்றாள். இங்கு அற்புதரஸம் இடம்பெறுகின்றது.

### சாந்தம் :

இறுதியாக சாந்த ரஸத்தை நோக்குவோமாயின் அரிச்சந்திர மகாராஜனை விஷ்வாமித்ர மகாரிஷி அனேகவித உபாதைகள் செய்தும் முடிவில் அக்கௌசீகரையே அரசன் வணங்கி பிரார்த்தித்ததும் தபோதனர் பிரபஞ்சத்தை மறந்து தவம் செய்ததுமாம். இதுவே சாந்த ரஸமாகும்.

இவ்வாறு இந்த நவரஸங்களும் நாட்டியத்தில் மட்டுமல்லாது பல்வேறுபட்ட சம்பவங்களுடனும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. ஒரு சாதாரண மனிதனுடைய அன்றாட வாழ்க்கையிலே இவ் ரஸங்கள் ஊடுருவிக் காணப்படுகின்றன. இச் சம்பவங்கள் யாவற்றுக்கும் உயிரூட்டம் கொடுப்பவை ரஸங்கள் என்று சொன்னால் மிகையாகாது. இவை பழமும், சுவையும் போன்று ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கும். ஆகவே ஒரு கலைப்படைப்பை படைப்பவருக்கும் சரி அதனை ரசிப்பவருக்கும் சரி ரஸமே குறிக்கோளாக விளங்குகின்றது. எனவே மேலே கூறியுள்ள இதிகாச சம்பவங்கள் மூலமாக நவரஸங்கள் தமது பிரதிபலிப்பை வெளிப்படுத்துகின்றன.

**'கலை இன்பமே நிலை இன்பமாம்'**

ஆக்கம் :
நிருத்தியவேந்தன், திரு. நடராசா - குமரவேல்
நடன ஆசிரியர்,
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



பான்ட் அணியினர்



இனியம் குழுவினர்

# மனித வளர்ச்சியும், ஓவியக்கலையும்

வாழ்வின் நியமங்களெல்லாம் நிச்சயமற்றதாகி மாற்றம் ஒன்றே நிச்சயமான நிகழ்வாகி விட்ட காலகட்டம், மண்ணில் சஞ்சரித்துச் சலித்த மனிதன் விண்ணையும் ஆக்கிரமித்து இந்த பிரபஞ்சம் எங்கும் தன் ஆதிக்கத்தை விஸ்தரிக்க விழைந்து நிற்கும் காலகட்டம், முன்னைய காலங்களிலும் மாற்றங்கள் நிகழவே செய்தன. ஆயினும் அவை மெதுவாகவே நிகழ்ந்தன. ஆற அமர சிந்தித்து இந்த மாற்றங்களைக் கிரகித்து அதனுடன் இயைந்து வாழ மனிதன் பழகியிருந்தான்.

நாடுகளிடையே அறிவியல் பேதங்கள் குறைவாகவே இருந்தன. ஒரு கலாசார பகைப் புலத்தில் வாழ்பவன் வேறொரு கலாசாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதாய், விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருந்தது. ஒவ்வொரு கலாசாரமும் தனித்துவமானதாய் இருந்தது. ஒவ்வொரு இனமும் தனக்கென ஒரு தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரியத்தை கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தன் கலாசார பாரம்பரியங்களை நன்கு உள்வாங்கி இருந்தனர். ஆனால் தற்போது இந்த ஸ்திரப்பாட்டை சிதைத்து விட்டது. விஞ்ஞானம் முதற்கொண்டு சமூகவியல் ஈறாக புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. இவ்வாறாக மனிதன் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், அவன் இப்பரந்த உலகின் ஒரு ஜீவராசி என்பதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாதபடி அவனை இவை எப்பொழுதும் உறுத்திக் கொண்டே இருக்கின்றன. உலக நடப்புக்கள் அவனுக்கு உடனுக்குடன் தெரியவருகிறது.

ஆரம்ப காலங்களில் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்களும் பின்னர் இரண்டு உலக மகாயுத்தங்களும் இதன் தொடர்ச்சியாக பல்வேறு அரசியற் போராட்டங்களும் வலுப்பெற்றன. சிறுசிறு வேறுபாடுகளை எல்லாம் மனிதன் விகாரப்படுத்தி பார்க்கத் தொடங்கினான். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் அணுவாயுதங்களின் வருகை எதிர்காலத்தையே சூனியமயமானதாக, பொய்மையின் வடிவாகக் காட்டி நிற்கின்றன. முழு மனித குலமுமே சில கணப் பொழுதுகளில் அழிந்து போகக் கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையாமையை உணர்ந்த மனிதனுக்கு எதிர்காலமோ, கடந்த காலமோ பெரும் பொருட்டல்ல. அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் கணமே அவனுக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது. இந்நிலையில் தனது சமூகம், பாரம்பரியம், அறிவு, அனுபவம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் தனது சார்பு நிலையில் இருந்து அக்கணத்தில் தான் காண்பனவற்றையும் அவை தன்னில் ஏற்படுத்தும் தாக்கத்தையுமே மிக முக்கியமானதாக அவன் காண்கிறான். அவனது பார்வையே அவனுக்கு முக்கியமானதாக மாறியுள்ளது. தனது பார்வையின் தனித்துவத்தை அவன் உணர்ந்துள்ளான். இதனையே கலை இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றன. இதனால் கலை இலக்கிய துறைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் விளைவாக வாதங்கள் உருவாகின. வாழ்க்கை முறையிலே ஏற்பட்ட மாற்றங்கள் இந்த வாதங்களுக்கான தேவையை ஏற்படுத்தின.

தொன்று தொட்டு கலைஞன் கூலிக்காகத்தான் தொழில் செய்து வந்தான். தன்னிடம் சொல்லப்பட்டதை செய்து கொடுத்தான். கூலி கொடுத்தோரை திருப்திப்படுத்துவதே அன்றைய தேவையாக இருந்தது. பிற்பட்ட நூற்றாண்டுகளில் கலைஞன் இந்நிலையை வெறுக்கத் தொடங்கினான். தன்னை திருப்திப்படுத்துபவற்றையே அவன் படைக்கவிரும்பினான் ஓவியனைப் பொறுத்த வரைக்கும் அவன் இன்னொரு சவாலை எதிர்நோக்கினான். முன்னர் நிகழ்ச்சிகளையும் ஏனைய முக்கிய விடயங்களையும் காட்சிப் பதிவுக்குள்ளாக்குவது ஏனைய ஓவியனின் பெரும் கடமையாக இருந்தது. எனவே ஓவியனின் வெறுமனவே காட்சிப் பதிவுடன் நின்று விடாது அவற்றை தன் சார்பு நிலையில் நின்று நோக்கினான். தன் கருத்துநிலைகளுக்கு ஊடாக அவற்றில் விகாரங்களை ஏற்படுத்தினான். தன் படைப்புக்களில் தன் பார்வையை ஏற்றினான். தன் விருப்பத்தின் படி நிறங்களை மாற்றினான். குயூபிஸ்டுகள் (Cubist) தாம் காண்பவற்றை கேத்திர கணித உருவங்களின் தொகுப்பாக கருதினார்கள். பல கோவைக்களிலிருந்து தான் காண்பவற்றை ஒரே தளத்தில் வரைந்தார்கள். ஒரு பொருளின் பக்கங்களுக்கு இடையிலான தொடர்பை தம் விருப்பப்படி மாற்றினார்கள். இன்னமும் சிலர் உருவங்கள் இல்லாத சமூகப்பாணியை நாடினார்கள். உருவமற்ற இசையானது எப்படி ஒரு மனிதனின் உணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்துகிறதோ அதே போல நிறங்களை மட்டும் அடிப்படையாக வைத்து அத்தகையவொரு உணர்வுத் தாக்கத்தினை ஏற்படுத்த நினைத்தார்கள்.

இவ்வாறாக மனிதனின் வளர்ச்சிப் படிநிலைக்கேற்ப கலைகளும் வெளிப்பட்டன. இவ்வாறாக ஓவியக்கலைகளில் வாதங்கள் உருவாக்கப்பட்டு அந்த வாதங்கள் அடிப்படையில் ஓவியங்கள் வரையப்பட்டன. இதனால் ஓவிய வெளிபாட்டை வெளிப்படுத்தல் என்பது ஒரு பக்கம் இருக்க அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், மனத்தில் தோன்றியவை, கனவு வெளிப்பாடு, பொழுதுபோக்கு, மகிழ்ச்சி, துன்பம் என்பவற்றை அடிப்படையாக வைத்து ஓவியங்கள் வரையப்பட்டன. இவையே பிற்காலத்தில் பெரும் படைப்புக்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறாக ஓவியங்கள் மனிதர்களின் மன ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தி தமது வாழ்க்கையாக மதிக்கின்றனர். தமக்கு துன்பம் வரும் பொழுதும், இன்பம் வரும் பொழுதும் ஓவியங்களை வெளிப்படுத்துகின்றனர். இதனால் நோய்களை தீர்க்கும் மருந்தாகவும் ஓவியக்கலை கருதப்படுகின்றது.

இவ்வாறாக கலை வெளிப்பாடுகள் என்பது மனித வளர்ச்சியின் ஒரு அங்கமாக இருந்தது. இவை அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் ஓர் கருவியாக தொழில்பட்டது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

ப.ராகுலன் B.A (Hons),
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

# தொழில்நுட்பக் கல்வி ஓர் அறிமுகம்

"மாற்றம் ஒன்றே மாறாதது" கணம் தோறும் மாறிக்கொண்டிருக்கும் உலகிலே மாற்றங்களிற்கேற்ப எம்மையும் மாற்றி அமைக்காவிடில் நாம் காலத்தால் பின் தள்ளப்படுவோம். அந்த வகையிலே இலங்கை முறைசார் கல்வி முறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வியானது வெவ்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறுசீர் அமைப்புக்கள் மற்றும் பாடக்கொள்கையின்படி பல்வேறு மாற்றங்களிற்கு உட்பட்டு படிபடியாக விருத்தியடைந்துள்ளது.

அந்த வகையில் 2007ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்களின் விளைவாக கற்றல் கற்பித்தலில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு "வடிவமைப்பும் தொழினுட்பவியலும்" எனும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்களின் ஆக்க சிந்தனையைத் தூண்டத்தக்க வகையிலும், ஆக்கத்திறன் மிக்க செயற்பாடுகள் விருத்தி செய்யத்தக்க வகையிலும் இப்பாடமானது அறிமுகம் செய்யப்பட்டது. மேலும் 6 – 9 வரையான தரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "செயன்முறைத் தொழிநுட்பத் திறன்" எனும் பாடத்தின் தார்ப்பரியத்தை மாணவர்களுக்கு மேலும் உறுதிப்படுத்துவதோடு 2013ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட தொழிநுட்பத்துறை பாடங்களிற்கான முன்னோடிப் பாடமாகவும் விளங்கும் என்பதே உறுதி....

சாதாரண தரத்தில் தொழிநுட்ப பாடத்தை பயின்ற மாணவர்கள் உயர்தரத்தை கற்க செல்கின்ற போதும், வேலை உலகிற்கு தயாராகின்ற போதும் குறித்த துறை சார்ந்த அடிப்படை பொறியியல் அறிவை வழங்குவதை விட பல துறைகள் சார்ந்த பொறியியல் அறிவை வழங்குவது பயன்மிக்கதாகையால் பாடசாலை முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக உயர்தர வகுப்புக்களில் பொறியியல் தொழிநுட்பவியல் எனும் புதிய பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடமானது சிவில் தொழிநுட்பவியல், இயந்திரத் தொழிநுட்பவியல், மின் மற்றுமட் இலத்திரனியல் தொழிநுட்பவியல் ஆகியவற்றின் தொகுப்பாக நாட்டிற்கு பொருத்தமானவாறு திட்டமிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. வேலை உலகிற் உழைப்பாளிகள் நுழையும் போது பொருத்தமான பொருட்களை தெரிவுசெய்தல், சரியான நுட்பத்தில் பரீச்சயம் பெற்றிருத்தல், விஞ்ஞான பூர்வமான செயன்முறை அறிவை பெற்றிருத்தல் ஆகியவற்றிற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டு இலங்கை பல்கலைக்கழகங்களில் நுழையும் மாணவர்களுக்கு இப்பாடத்துறை சார்ந்த உயர்கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழங்கள் இணங்கியுள்ளமை. இம் மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பேறாகும். அத்தோடு பல்கலைக்கழக நுழைவுத் தகுதியை பெறாதோருக்காக உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனங்களை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தொழில் வாய்ப்புக்களை தாமாக உருவாக்கிக் கொள்ளவும், சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் சந்தர்ப்பங்கள் அமைக்கப்படுகின்றன. அத்துடன் வேலையில்லாப் பிரச்சினைகள் குறைவடைந்து செல்வதற்குப் வழி சமைக்கப்படுகின்றது.

"அனுபவங்களை வாழ்க்கையாக்கி கொள்ளுங்கள்" என்ற தத்துவத்திற்கு அமைவாக தொழினுட்ப பாடங்கள் அனுபவகல்வியினை வழங்குவதாலும், மாணவர்களில் மறைந்திருக்கும் தனிப்பட்ட திறமைகளை வெளிக்கொணர்வதாலும், எதிர்கால சவால்களிற்கு முகம் கொடுக்க கூடிய மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காக இத் தொழிநுட்ப பாடங்களை பயில்வதே வாழ்க்கையின் திறவு கோலாக இருக்கும் என்பது கல்வியலாளர்களின் சிந்தனை.

"தொழிற்கல்வி நாடு அதுவே
உன் வாழ்வை தொலையாமல் பேணும்"

வி. அனுரன்
ஆசிரியர்
பொறியியல் தொழினுட்பம்

# ஓவியக்கலையில் அறிந்தும் அறியாதவை

- சாஞ்சிதூபி இந்தியாவில் போபாவில் உள்ள 25 - 30 தூபிகளில் மிகவும் சிறந்தது. கும்மட்டத்தின் அடிவிட்டம் 106அடி, உயரம் 42 அடி, உச்சியில் உள்ள தட்டையான இடத்தின் விட்டம் 34 அடி.

- பொலநறுவை இரண்டாம் சிவாலயம் (வானவன் மாதேவி ஈஸ்வரம்) தென்னிந்தியாவின் சோழக் கட்டிடக்கலை மரபிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- கண்டியகால தம்புள்ள விகாரையானது கூரைச்சித்திரத்துக்கு மட்டுமன்றி சம அளவாக நின்ற, இருந்த, துயில் நிலை புத்தசிலைகளையும் கொண்டமைந்துள்ளது.

- சிகஷ்ரையின் தேவாலயத்தின் ஓவியங்கள் 5595 சதுரஅடி பரப்பில் வரையப்பட்டுள்ளன. இதனை வரைந்தவர் சிற்பியாகவும், ஓவியனாகவும் புகழ்பெற்ற மைக்கல் அஞ்சலோ.

- "அலறல்" (Sercam) என்ற ஓவியம் "எட்வார்ட்மஞ்" (Edvard munch) என்ற ஓவியனால் வரையப்பட்டது.

- புள்ளி புள்ளியாக நிறங்களை வைத்து வரையும் ஓவியப்பாணி Neoimpressionism ஆகும்.

- விமானப் பொறியியல், கப்பல் கட்டுதல், யுத்த தளபாடங்கள் வடிவமைப்பு, உடற் கூற்றியல் என சகல துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற ஓவியக் கலைஞன் லியானோடோ டாவின்சி ஆவார்.

- சிற்பத்திலும், ஓவியத்திலும் செல்வாக்குப் பெற்ற நவீனகலைப் பாணி கியூபிகஷம் (Cubism) ஆகும். இது 1907ம் ஆண்டில் பிக்காஸோ என்ற ஓவியனால் தொடங்கப்பட்டது.

- சந்திரவட்டக்கல் கலைமரபு இலங்கைக்கேயுரிய தனிக்கலையம்சம்.

- காளைகளின் குகை என வர்ணிக்கப்படும் ஐரோப்பிய வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களை கொண்ட குகை லஸ்கோ குகையாகும்.

- நிர்வாணமான ஆண்பிள்ளைச் சுற்றி பெண்கள் நடனமாடும் ஓவியம்

வரலாற்றுக்கு முற்பட்டகால கோகுல் குகையில் வரையப்பட்டுள்ளது.

- இறந்த பேரோக்களின் உடல்கள் மருந்திட்ட நீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் பாதுகாக்கப்பட்டு வைக்கப்படும் உடல் மம்மி எனப்படும்.

- உலகப்புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் எண்ணெய் வர்ணம் (oil paint) கொண்டு வரையப்பட்டது.

- "ஜோர்ஜ் பரேன்" என்ற இத்தாலிய கலைஞன் முதன் முதலாக கொலாஜ் கியூபிய ஓவியங்களை படைத்தார்.

- புத்தபெருமான கபிலவஸ்து புரத்துக்கு வருகை தந்து வீடுவீடாக தானம் கேட்கும் ஓவியம் அஜந்தாவின் (india) 17வது குகையில் உள்ளது.

- நாகரம், திராவிடம், வேசரம் என்பன இந்துக்கோவில் விமானங்களின் வடிவங்கள் ஆகும்.

- அஜந்தா ஓவியங்களில் கறுப்பு, வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம், கபிலம் போன்ற நிறங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. கறுப்பு விளக்குக் கரியிலிருந்தும், வெள்ளை சுண்ணக்கல்லிருந்தும், மஞ்சள் சு ண் ண ா ம் பு க் கல்லிருந்தும் பெறப்பட்டுள்ளன. நீலம், சிவப்பு என்பன முறையே நீலத்தாமரை, குங்குலியம் ஆகியவற்றிலிருந்து பெற்று உபயோகிக்கப்பட்டுள்ளன.

- தென்னிந்தியாவின் "தன்புர், மைசூர்" ஆகிய பிரதேசங்களில் நிலவிய ஓவியப்பாணி ராஜபுத்திர கலைமரபு ஆகும்.

- ரவீந்திர நாத்தாகூர், அபிந்திரநாத்தாகூர், ஜெமினிரோய், நந்தலால் போஸ், அம்டொ சர்கில் போன்றோர் இந்தியாவின் பாரம்பரிய சித்திரக்கலையை புதியவழியில் இட்டுச் சென்ற கலைஞர்கள்.

- கிரேக்க கட்டிடங்களில் காணப்படும் தூண் போதிகைகள் டொறிக், அயோனிக், கொறிந்தியன் எனும் மூன்று வளர்ச்சிகளை காட்டுகின்றது.

செல்வி. ஜெயசுஜி சவுந்தரசிங்கி
சித்திரப்பாட ஆசிரியர்,
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

# விசேட கல்வியின் அவசியம்

மனிதன் சிந்திக்கும் ஆற்றலினாலேயே விலங்குகளிலிருந்து வேறுபட்டு மதிப்பிடப்பட்டான். இதன் வரப்பிரசாதமே கற்றலுக்கு தூண்டியாக அமைந்தது. கற்றல் என்ற எண்ணக்கருவுக்கு பலர் பல கருத்துக்களை முன்வைக்கின்றனர். அந்தவகையில் R.S.பிற்றரஸ் என்பவர் கல்வியென்பது யாதேனுமொரு இலக்கை அடைதல் எனவும் யோன் டூஜி என்பவர் மாறிக்கொண்டிருப்பது கல்வி அதாவது சூழல் மாற்றத்திற்கேற்ப தானும் மாற்றத்தை ஏற்றுக்கொண்டமைவது என்றார். எனவே கல்வி என்பது நடத்தை மாற்றத்தை உயிர்களிடத்தே ஏற்படுத்தும். நல்லொழுக்கம், அறிவு, திறன், விழுமியங்கள், சீரிய மனப்பாங்கு என்பவற்றை வளர்த்தல் உண்மையான கல்வியின் உயர்ந்த நோக்கமாகும். எண்ணக்கருவாக்கம், சிந்தனைத்திறன், தனியாா் விருத்திக்கூடாகச் சமூகத்தை மேம்படுத்த கல்வி உதவுகிறது. இவ்வாறான கல்வியானது ஒரு சிலருக்கு மட்டுப்படுத்தப்படாது அனைவருக்குமுரியதாகும். எனவே விசேட தேவையுடைய மாணவர்களும் இக்கல்வியினைப் பெறும் போதே கல்வி என்னும் நீரோட்டம் முழுமையடையும். மனிதனை ஆக்குபவன் ஆசிரியன். இவர் மாணவர் நடத்தையில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்பாடுகளை ஒவ்வொருவருக்குமேற்ப திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டும்.

தற்காலத்தில் எமது பிரதேசத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்து வருகிறது. இதற்கு பரம்பரை, சூழல், சமூக, விஞ்ஞான நோய்க்காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இதனால் இவர்களுக்கான கல்வியூட்டல் முறைகளும், பழக்கப்படுத்தல் முறைகளும் பல பரிமாணங்களில் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. வகுப்பறை வசதிகள், போக்குவரத்து இதர வசதிகள் அனைத்தும் இவர்களும் பயன்படுத்தும் வண்ணம் அமைதல் வேண்டும். மாணவர் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் எனினும் பாடசாலை பாடவிதானம் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான அமைப்பியலைக் கொண்டுள்ளமையால் பல சந்தர்ப்பங்களில் தனியாள் வேறுபாடுகளை அறிந்து கற்றலுக்கு வழிகாட்டும் துறையாக விசேட கல்வித்துறை காணப்படுகின்றது.

சாதாரண பிள்ளைகளை விட வேறுபட்ட தன்மைகளையுடைய பிள்ளைகள் வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தாங்கள் துலங்கலை ஏற்படுத்த முடியாது அவதியுறுபவர்களே விசேட தேவையுடைய பிள்ளைகள் எனலாம். இவ்வாறானவா்களுக்கு கற்பிக்கப்படும் கல்வியே விசேட கல்வி ஆகும். அதாவது உடல்உள சமூக மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவா்களுடன் இணைந்து கற்பதற்கு இடர்ப்படுகின்ற போது அவர்களுக்கு

வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி ஆகும். இவ்வாறு விசேட தேவையுடையோராக மீத்திறனுடையோர், மெல்லக் கற்போர், கற்றல் இடரப்பாடுடையோர், கேட்டல் குறைபாடுடையோர், பல்லின குறைபாடுடையோர், மனவெழுச்சிக் குறைபாடுடையோர், (துற்சிந்தனை) போசாக்குக் குறைபாடுடையோர், சுகாதாரக் குறைபாடுடையோர், மொழிக் குறைபாடுடையோர், பூரண பார்வை, பூரண கேட்டல் அற்றோர் எனப் பல வகையினர் உள்ளடங்குவர்.

தற்கால வகுப்பறைகளில் இக்குறைபாடுகளைக் கொண்டிருக்கும் மாணவர்கள் அதிகம் காணப்படுகின்றனர். எனவே அவர்கள் ஒவ்வொருவரையும் நன்றாக இனங்கண்டு அவர்களுக்கேற்ற கற்றல் சந்தர்ப்பங்களை ஆசிரியர் வழங்கும் போதே வகுப்பறையில் அனைத்து மாணவர்களுக்கும் பயன்பெற முடியும். பல தரப்பட்ட பிரச்சினைகளுடன் வகுப்பறைகளில் உட்கார்ந்திருக்கும் மாணவர்களை கற்றலுக்கு ஏற்றவர்களாக மாற்ற வேண்டும்.

கற்பதில் சாதாரண பிள்ளைகளை விட ஆர்வமுள்ள நுண்ணறிவு 130உம் உயர்வாகவுள்ள தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றலுள்ள உடல்நலமுள்ள மித்திறன் மாணவர்களை வழங்க வேண்டும். தொழில்நுட்பம், சுயகற்றல், தேடல், தர்க்கரீதியான வினாக்கள் என்பவற்றுக்குள் ஈடபடத்த வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் வழங்க்கபடாதுவிடின் அம்மாணவர்களது ஆற்றல்கள் வீணடிக்கப்பட்டு நெறிபிறழ்வாளவனாக மாற்றமடைவான்.

மொழித்திறன் குறைந்த நுண்மதி ஈவு குறைந்த புதுமை நாட்டமற்ற கற்றலில் விருப்பற்ற வசதிக்குறைபாடுள்ள மெல்லக் கற்போருக்கு பாடவிதானத்தை எளிமையாக்கி கவின்நிலையுடன் சிறுசிறு பகுதிகளாக, விளையாட்டாக, குழச் செயற்பாடுகளாக கற்றலில் ஈடுபடுத்த வேண்டும். இதன்போதே இவ்வகை மாணவனின் கற்றல் சிறப்படையும்.

பார்வை, கேட்டல் குறைபாடுடைய மாணவர்களை அவர்களத நடத்தைகள், செயற்பாடுகள் பரிசோதனை மூலம் இனம்கண்டு கண்ணாடி, காதுகேள் கருவி என்பவற்றினை பெற்றுக்கொடுக்க ஆசிரியர் உதவ வேண்டும். வகுப்பறையில், ஏனைய இடங்களில் அவர்களின் கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அவர்கள் வகுப்பறையில் கற்கும் போது பொருத்தமான கற்பித்த முறைகள், நுட்பங்கள், கற்றல் கற்பித்தல் சாதனங்கள் என்பன பயன்படுத்தப்படவேண்டும். பூரணமான பார்வை, கேட்டல் அற்றவர்களாயின் அவர்களுக்கு பிறைல், சைகை போன்ற கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். இதுவே அவர்களின்

கற்றலுக்கு பொருத்தமான முறையாகும். இதனால் சாதாரண மாணவர் போன்று செவிப்புலன், விழிப்புலன் அற்றோரும் சகல வகையான கல்வித்துறைகளிலும் முன்னேற முடியும்.

வகுப்பறையில் காணப்படும் இன்னொரு வகையினரே உடற்குறைபாடுடையோர். இவர்களுக்கு ஏற்ற இரக்கை வசதிகள் போக்குவரத்து வசதிகள் என்பன ஒழுங்கமைப்பட்டதாக அமைய வேண்டியதுடன் கற்றல் வாய்ப்புக்கள் மாணவனது இயலுமைக்கேற்ப அமையப் பெற வேண்டும். பொருத்தமான உபகரணங்கள் வழங்கப்பட்டு கற்றலில் ஈடுபடுத்த வேண்டும். மூளையின் செயல்திறனில் ஒரு குறிப்பிட்ட நிலைக்குமேல் வளர்ச்சியடையாது நின்றுவிடுவதே மன வளர்ச்சிக் குறைபாடாகும். இது பிறப்பிலேயே ஏற்படும் குறைபாடு. இவர்களுக்கு தமது அன்றாட கருமங்களான பல் துலக்குதல், குளித்தல், முகம் கழுவுதல், ஆடை அணிதல் போன்றவற்றை ஆற்ற உதவுவதே போதுமானது.

வறுமை, சமூக சூழ்நிலை, போர், வன்செயல் போன்ற காரணிகளால் நெருக்கீடுகளுக்குள்ளான மாணவர்கள் கட்டாயம் வகுப்பறையில் உட்கார்ந்திருப்பர். அவர்களது சிந்தனைகள் கற்றலில் ஈடுபடுத்தப்படாது எங்கோ பறந்து திரியும். நாளாந்த வெறுப்பூட்டும் சம்பவங்கள் உளநலத்தைப் பாதிப்படையச் செய்யும். எனவே நெருக்கீட்டுக்கான காரணிகளை இனங்கண்டு அதிலிரந்து மீட்டெடுக்க பல உபாயங்களை மேற்கொள்ள வேண்டும். அதன் மகிழ்ச்சிகரமாக ஆடல், பாடல், நடிப்பு போன்றவற்றூடாகவும் சுற்றுலாக்கள், களப்பயணம் என்பவற்றூடாகவும் பிரச்சினைகளை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களையும் வழங்க வேண்டும். பிள்ளையின் சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்த வேண்டும். இதற்கு தியானச் செயற்பாடுகளும் உதவும். இவர்களுக்கு கற்றலை மேற்கொள்ள ஆசிரியர் பொருத்தமான வழிவகைகளை கையாள்வதன் மூலம் அவர்களையும் நன்மாணாக்கராக மாற்ற முடியும்.

கற்றலில் இடர்பாடகளை கொண்டவர்களின் இடர்பாடுகள் எவ்வகை என்பதனை அறிந்து அதனைத் தீர்க்க உதவுவதன் மூலம் கற்றல் மேம்படும் நோய்கள், போசாக்கு, சுகாதாரம் என்பவற்றால் பாதிப்புற்றோருக்கு தகுந்த உதவிகளைப் பெற்றுக் கொடுத்து கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலைகளை வழங்கி அவர்களையும் கற்றலில் ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறாக பல்தரப்பட்ட வேறுபாடுகளைக் கொண்ட மாணவர் கூட்டமாக

வகுப்பறையில் காணப்படுவர். இவர்கள் ஒவ்வொருவரதும் கற்றல்பாணி வேறுபடும். ஒவ்வொருவரதும் மனநிலைகள் குறைபாடுகளை அறிந்து பொருத்தமான கற்றல் கற்பித்தல் முறைகளை பயன்படுத்தி வகுப்பறையில் மாணவர் ஆற்றல்களை வளர்க்க வேண்டும். விசேட தேவையுடையோர், சாதாரண மாணவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் மாணவர்களே? என்று கருதி அவர்களுக்கு சம வாய்ப்புக்களை வழங்க வேண்டும். இதனையே அதாவது உட்படுத்தல் கல்வி முறை மூலம் சகல மாணவர்களும் பயன்பெற வழிகாட்ட வேண்டும். மாணவர்கள் ஒருவருக்கொருவர் நட்புறவுடன் பழகவும், நற்பண்புகளை வளர்க்கவும் ஆளுமையை விருத்தி செய்யவும் வகுப்பறைகள் சிறந்த களமாக அமைய வேண்டும். சந்தோசமாக, தேவைகள், விருப்புக்கள் நிறைவேறுமிடமாக வகுப்பறைகள் அமையும் போது எல்லா வகை மாணவர்களின் ஆற்றல்களும் வளர்க்கப்படும். இதுவே வினைத்திறனான கற்றல் கற்பித்தல் நடைபெற்றமைக்கு ஆதாரவாகும்.

எனவே வகுப்பறைகளில் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விசேட தேவையுடையோராகவே காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கேற்ப கற்பித்தலை திட்டமிட்டு ஆசிரியர் வழிகாட்டுவதன் மூலம் ஒவ்வொரு மாணவரும் தமது இலக்கை அடைந்து கொள்ள முடியும்.

**K. Sobika**
ஆசிரியர்
விசேடகல்வி

## Ten tips in improving your brain health and performance.

The brain acts as a super computer and guides your entire life from birth to death. Brain malfunction will cause lapses in good judgement and decision making, transgressions from socially acceptable behaviours and even death. Therefore, brain health and performance is of utmost importance in your chosen way of life.

The brain has to be customized according to expect goals and objectives. Mainly, there are five core brain areas to be focused upon when improving your brain health and performance.

* Memory * Attention
* Speed * Flexibility * Problem solving

The ten simple ways, how can you improve the above five core brain areas are discussed below.

**1. Physical make up**

A well balanced schedule of exercises will build a better brain and a smarter person. Refresh your brain by going for fitness with music or with your friends.

**2. Laugh out loud**

Laugh to yourself and avoid mental stress and pressure. Remember that laughing out loud will refresh your blood vessels.

**3. Become a fish lover**

Have fish in your meals on a more regularly basic. It will absorb omega - 3 to better your heart performance and to avoid mental depression.

**4. Walk in the memory lane**

Recollect your past memories of your children and enjoy sweetness of those memories.

**5. Solve puzzles**

Train your brain to solve puzzles. Crosswords, jigsaw puzzles or game logic can be fun to do and they keep your brain active and alert.

**6. Avoid : Alcohol**

Brain cannot easily recover the distraction caused by alcohol. Avoid alcohol or keep to your limit.

**7. Play**

Play games to refresh your soul and brain. No matter whether it's a card game, video game or outdoor game, they will improve the power of strategic decision making.

**8. Be concentrated**

"What do I have to do right now? Find it and perform it right away. Do not wait till tomorrow and do not allow things to just happen. Make it happen today itself. Keep your brain relaxed to increase brain power.

**9. Build a community**

Associate with people from different lines of work and build close relationships, Never be alone. Unload your brain's burdens by exposing yourself to others. Always surround yourself with others. Have many friends and less enemies.

**10. Search for Novelty**

Go for a new dish, taste a new drink, drive on a new lane or visit a place you have never been to. Search for innovations and strive hard till the end. Remember total satisfaction lies only at the moment of completion.

**Sahana Selvaratnam**
**Bsc (MIT)**

# ஏன் இந்தக் கண்ணீர்



"பார்கவி.... பார்கவி..... இஞ்சை..... இஞ்சை...... பாரம்மா....... டக்..... டக்...... டக்....." மோசிகரனியின் சிணுங்கல் சத்தம் கிளிக் சத்தத்துடன் முடிவுக்கு வந்தது. அன்று பார்கவியின் முதலாவது பிறந்தநாள். போட்டோக்கார சிவம் அண்ணையுடன் மட்டும் சுருக்கமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிவமண்ணை கனக்கப் போட்டோக்கள் கழுவ வேண்டாம்........ முக்கியமானதுகளை மட்டும் கழுவினால் போதும்...... கமலக்கண்ணனின் குரல் ஒலிதது முடிவதற்குள் ஏனப்பா...... அவளின்ர முதலாவது பிறந்தநாள் தானே நல்லா உள்ள போட்டோக்கள் எல்லாத்தையும் கழுவட்டும்மேன்.....; அமுதவிழியின் மெல்லியகுரல் ஆதங்கத்துடன் இடையிட்டது. "ஓமோம்...... எனக்கு ஒண்டும் சொல்லத் தேவையில்லை. நான் பாத்துச் செய்யிறன்........" என்றபடி வாசலால் வெளியில் வந்தார் சிவமண்ணை. இஞ்சருங்கோ இந்தப் பலகாரப் பையை சிவமண்ணையிட்ட குடுத்துவிடுங்கோ.....; உள்ளேயிருந்து அவசரமாய் வந்தது அமுதவிழியின் அன்பான குரல். ம்ம்..... என்னத்தைச் சொல்லிறது.... எப்படி இருந்தனாங்கள்... இப்ப..... இப்படி.....! சொல்லி முடிப்பதற்குள் விழியின் விழிகள் நிரம்பி பொலு பொலுவெனக் கொட்டிய கண்ணீர் கமலக்கண்ணனின் தோள்களை நனைத்தது.

அடர்ந்து வளர்ந்த ஆலமரங்களும், பரந்து விரிந்த பச்சைப் புல்வெளிகளும், சலசலக்கும் நீரோடைகளும் கொண்டமைந்த அழகிய கிராமம்தான் முல்லைச்சோலை. பெயருக்கு தகுந்தாற்போல முல்லை மாவட்டத்தின் அழகிய சோலைதான் முல்லைச்சோலை. கிழக்குப் புறமாக ஆர்ப்பரித்தெழும் வெள்ளிக்கரங்கள் கொண்ட நீலக்கடல் இங்கு இரவும், பகலும் வெள்ளி அலைகள் துள்ளி விளையாடும் அழகே தனியழகு. வடக்கும், தெற்கும் வந்தாரை வாழவைக்கும் வன்னி சிறப்பம்சமான பரந்து விரிந்த நெல் வயல்கள் மேற்குப் பக்கம் எல்லையில்லா அருளினை அள்ளி அள்ளி வழங்கும் வற்றாப்பளை அம்மன் ஆலயமும் அதனுடன் இணைந்த நந்திக்கடலும் முல்லை சோலையின் எல்லை வனப்புக்கள். இந்த ஊரில் உழவுத்தொழிலில் ஏற்றம்கண்டு ஊரிலேயே பண்பும், பணமும் கொண்ட ஏரம்புச் செட்டியாரின் இளைய பேர்த்திதான் அமுதவிழி இவள் பெயரிற்கு தகுந்தாற்போல விழிகளில் அமுதம் தாங்கிய அழகுமயில்.

அவளின் விழிகளின் அசைவினால் சிறைப்பட்டுப் போனவன்தான் கமலக்கண்ணன். கலைமகளின் பார்வையினால் பல்கலைக்கழகம் சென்றவன் அமுதவிழியின் கடைக்கண் பார்வையினால் இல்லறச் சோலையில் இனிதாக இணைந்து கொண்டான். அன்பினால் இருவரும் இன்புற்றத்தினால் முத்துக்கள் மூன்று சொத்துக்களாயின.

எல்லோரையும் எழும்பி வைரவர் கோயிலடிக்குப் போகட்டாம்........ ஒருத்தரையும் வீடுகளில் இருக்க வேண்டாமாம்.......! பக்கத்து வீட்டு பர்வதமக்காவின் பரபரப்பான குரல் அவதியாய் ஒலித்தது. கையில் கிடைத்த சொப்பின் பைகளுடன் அவசர அவசரமாய் வீட்டை விட்டு வெளியேறியவர்கள் தமது இறுதிப் பயணம் இதுவென்று அறியாம அப்பாவிகளாய் இருந்தார்கள். கமலக்கண்ணனின் குடும்பத்தின் மூத்தபிள்ளை மேனகனுக்கு ஐந்து வயது, தங்கை மோசிகரனிக்கு இரண்டு வயதும் இரண்டு மாதமும்.

"இஞ்சருங்கோ...... பிறந்தநாளுக்கு வாற எல்லாருக்கும் சில்வர் குத்துவிளக்கு குடுத்து விடுவமே..... அதோட படமெடுக்கவும் வீடியோவுக்கும் கொழும்பில ஒரு நல்ல பேமசான ஸ்ரூடியோக்காரரைப் பிடிப்பமே........" மனதிலிருந்த ஆசைகளையெல்லாம் செல்ல மொழியில் சொல்லிக் குதூகலித்தாள் அமுதவிழி "ஓமப்பா.... நானும் பிறந்தநாளை நல்லாப் பெரிசாச் செய்யத்தான் நினைக்கிறன்.... ஆனால் பிறந்தநாளுக்கு வாற ஆக்களை எப்பிடிச் சரியான முறையில் கவனிக்கிறதெண்டுதான் யோசனையாய்க் கிடக்கு..... உவன் தம்பியும் இப்ப எங்களோட இல்லை...... அவனும் புதுவீடு, கட்டவெண்டு முள்ளியவளைக்குப் போட்டான்....." சொல்லி முடிப்பதற்குள் அமுதவிழி குறுக்கிட்டாள். "இஞ்சை உவங்கட தம்பியைக் கெதியாய் இஞ்சை கூப்பிடுங்கோ....." எங்களுக்கு இஞ்சை இருக்கிற வீடுகள் காணாதெண்டு ஏன் அங்கையும் கட்ட வெளிக்கிட்டனீங்கள்...... இருக்கிற வீடுகளில் ஆக்கள் இருக்கக் காணயில்லை பேந்தென்னத்துக்கு உங்களுக்குப் புதுவீடு......! செல்லமாய்ப் பொரிந்து தள்ளினாள் அமுதவிழி இஞ்சைபார் விழி எங்களுக்கும்..... எத்தினை பெட்டையளோ தெரியாது........ வசதி இருக்கேக்க இரண்டு மூண்டு வீட்டைக் கட்டிவைப்பம் அதில் என்ன குறையப் போகுது..." பொறுப்புடன் பதிலளித்தான் கமலக்கண்ணன். "ஓமோம் நீங்கள் உங்களை விட்டுக் கொடுக்க மாட்டீங்களே......" என்று செல்லமாய்க் குழைந்து தோளில் சாய்ந்தாள். அமுதவிழி.

"கொஞ்சக் கொஞ்சக் குடும்பமாய்ப் போய் உங்கட வீடுகளைப் பாக்கலாம்...... எல்லாரும் ஒண்டாய்ப் போக ஏலாது..... உங்கட இடங்களைப் பாத்திட்டு ஆறு மணிக்கு முன்னம் திரும்பி வரவேணும்......" கிராம அலுவலரின் குரல் சற்றுச் சத்தமாக ஒலித்தபோது பாலைவனத்தில் ஒர் பனிமழை பெய்தது போன்றிருந்தது. எல்லோர் முகங்களிலும், இனம் புரியாத மகிழ்ச்சிப் புன்னகை பூத்தது. "எத்தினை வருடங்களுக்குப் பிறகு எங்கட வீடுகளைப் பாக்கப் போறம்." என்று ஆறுதல் பெருமூச்சுவிட்டு அனைத்து மக்களும் கடவுளுக்கு நன்றி கூறினர்.

"ராசன்..... டெ ராசன் இஞ்சை ஓடிவாடா.... மாமா மயங்கி விழுந்திட்டார்....." உரத்துக் கத்தினான் கமலக்கண்ணன். நெற்றி வியர்வை சிந்தச் சிந்த சொந்த

உழைப்பில் கட்டின வீடுகளெல்லாம் சுடுகாடாய்க் கிடப்பதைக் காணப் பொறுக்காமல் மயங்கி விழுந்தவர் பின்னர் எழும்பவேயில்லை.

"கண்ணண்ணை உங்களுக்கு தற்காலிக வீடு பாஸ் பண்ணியாச்சாம்..... உங்கட விதானையார் ஒருக்கால் உங்களை வந்து தன்னைச் சந்திக்கட்டாம்" பக்கத்துவீட்டு பார்வதமக்காவின் குரல் அன்புடன் ஒலித்தது. எனக்கு உவங்களின்ர வீடும் வேண்டாம். ஒண்டும் வேண்டாம். நாங்கள் சாகிற வரையில இந்த ஓலைக் கொட்டில்ல எண்டாலும் கௌரவமாய் இருந்திட்டுச் செத்துப் போவம்..." தேம்பித் தேம்பி அழுதான் கமலக்கண்ணன். தினமும் தோள்களை நனைக்கும் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்படுத்தும் கமலக்கண்ணன் இன்று வெடிகுண்டாய் வெடித்து அழுவதைப் பார்த்த அமுதவிழி அசைவற்ற மரமாய் விரிந்தபோது உணர்வற்றுச் சாய்ந்தவளாக அமுதவிழி தாங்கி அணைத்த கமலக்கண்ணனின் கண்ணீர்த் துளிகளை, அமுதவிழியினை நனைத்தபோது கதவுகள், மெல்லத் திறந்து கொண்டன.

"ஏன் அம்மா அழுவுறியள், ஏன் அப்பா அழுவுறியள்....; பார்கவியின் மழலை மொழி இருவரையும் சுயநினைவுக்குக் கொண்டு வந்தது."

(2014ம் ஆண்டிற்கான உலக ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்தினால் ஆசிரியர்களிடையே நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறுகதை இதுவாகும்)

க. வாணிமுகுந்தன்
ஆசிரியர்



விஞ்ஞான மன்றம் – 2015



ஆங்கில மன்றம் – 2015



வணிக மன்றம் – 2015



சுகாதாரக் குழு – 2015

# பாடசாலையில் கல்வி பயின்றோரின் சிந்தனைகள்

# BE SMART .......

இன்று பலதரப்பட்ட துறைகளில் சாதித்தவர்கள் எல்லாம் ஆரம்ப காலத்திலேயே ஒரு இலக்குடன் செயற்பட்டதால் தான் அவர்களால் சாதிக்க முடிந்தது. எமது வாழ்க்கையின் வெற்றியும் எமது இலக்கை சரியாக தீர்மானிப்பதிலேயே தங்கியுள்ளது. எமது இலக்கை **SMART** எனும் கோட்பாடு மூலம் இலகுவாக தீர்மானிக்க முடியும்.

**S - Specific -** எமது இலக்கு ஆனது பொது இலக்காக அல்லாமல் வரையறுக்கப்பட்ட இலக்காக அமைதல் வேண்டும். உதாரணமாக நாங்கள் நன்றாக கல்வி கற்க வேண்டும் என்பது ஒரு பொதுவான இலக்காகும். ஆனால் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட இலக்காக அமையும். இலக்கை வரையறுப்பதற்கு யார்?, என்ன?, எங்கே?, எப்பொழுது?, எந்த? எனும் வினாக்களை வினவுவதன் மூலம் வரையறுத்துக் கொள்ளலாம்.

**M - Measurable -** எமது இலக்கு ஆனது எம்மால் அளவிடக் கூடியதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக "க.பொ.த சாதாரண தரத்தில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெற வேண்டும்". இங்கு அதிவிசேட சித்தி என்பதன் மூலம் எமது இலக்கை அளவிடக் கூடியதாக உள்ளது. எவ்வளவு?, எத்தனை? எனும் வினாக்களின் மூலம் அளவைத் தீர்மானிக்கலாம்.

**A - Achievable -** எமது இலக்கானது எம்மால் அடையக் கூடியதாக இருத்தல் வேண்டும். இலக்கை அடைவதற்கு தேவையான மனப்பான்மை, திறமைகள், திறன்கள் போன்றவற்றை வளர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. அத்துடன் சரியான முறையில் இலக்கை அடைவதற்கு திட்டமிடல், நேரத்தை வகுத்தல், அதை நடைமுறைப்படுத்தல் என்பன அவசியமாகின்றது. இங்கு நான் எவ்வாறு எனது இலக்கை அடைய முடியும்? என்று சிந்திப்பதன் மூலம் இலக்கை அடைவதற்குரிய வழியை தீர்மானித்துக் கொள்ளலாம்.

**R - Realistic -** எமது இலக்கானது யதார்த்தமானதாக இருத்தல் வேண்டும். அதாவது எமக்கு மனமுவந்ததாகவும் எம்மால் முடிக்க கூடியதாகவும் இருத்தல் அவசியம். உயர் இலக்கானது எளிதாக முடிக்கக் கூடிய இலக்கை விட இலகுவாக முடிக்க முடியும். ஏனெனில் உயர் இலக்கை அடைவதற்கு எமது கடின உழைப்பை பிரயோகிப்பதே காரணமாகும்.

**T - Time - bound -** ஒரு இலக்கை அடைவதற்கு கால எல்லையைத் தீர்மானித்தல் அவசியமாகும். இது எமது இலக்கை நோக்கிய எமது முயற்சியை துரிதப்படுத்துவதுடன், விரைவாக எமது இலக்கை அடைய வேண்டும் என்ற உணர்வையும் தோற்றுவித்து எமது இலக்கை அடைய வழிவகுக்கும்.

இவ்வாறு நாமும் எமது இலக்கை மிகச்சரியான முறையில் தீர்மானித்துக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த சாதனையாளர்களாக மிளிர முடியும்.

**Miss. S. ABISHATHANA**
**B.Sc in (Ani. Sci & Fishenes)**

## செஞ்சிலுவை அமைப்பின் வரலாறும் அதன் மனிதாபிமான பணிகளின் சர்வதேச வியாபக தன்மையும்.

உலக ஒழுங்குகளையும் மனிதகுல நாகரீகப் பெறுமானங்களையும் மதித்து அவற்றைப் பேணிப்பாதுகாப்பதில் இன்று சர்வதேச மட்டத்தில் ஓரிரு அமைப்புக்களே உள்ளன. இவற்றில் செஞ்சிலுவை சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பன முக்கியமானவை. ஒரு மனிதன் இவ் உலகில் பிறக்கிறான் அவன் என்ன மொழி, சமயம், இனம், நாடு, நிறம், தொழில் ஆகியவற்றைக் கொண்டிருந்தாலும் அவனுக்கு நின்மதியாக சுதந்திரமாக வாழ உரிமையுண்டு. எனினும் புராதன ஆற்றங்கரையோர வாழ்வு முறை முதல் இன்றுவரை இவை பேணிப்பாதுகாக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறியே, பலவிதமான முரண்பாடுகள், யுத்தங்கள், அழிவுகள் ஏற்பட்டுவருகின்றன. நாடுகளுக்கிடையேயும் நாட்டுக்குள்ளேயும் இனக்குழுக்கள் மதக்குழுக்களுக்கிடையேயும் மோதல்கள் ஏற்படுகின்றன. பெறுமதியான உயிர்கள் சொத்துக்கள் அவர்களது அருமையான வாழ்வியல் பண்பாடுகள் அழிக்கப்படுகின்றன.

இந்த வகையில் 1ம் உலகப்போர் 2ம் உலகப் போர் பாரிய அளவில் உலகை ஆட்டிப்படைத்த யுத்தங்களாகும் இவை போன்ற பாரிய யுத்தங்கள் ஏற்படாதிருக்கவே ஐக்கிய நாடுகள் அமைப்பு (U.N.O) 1945 இல் ஏற்படுத்தப்பட்டது. எனினும் 1859 இல் இருந்து செஞ்சிலுவைப் பணி ஆரம்பித்துவிட்டது இவை இரண்டும் இன்று யுத்தம் அனர்த்தம் ஆகியவற்றால் பாதிப்போருக்கு மனிதாபிமான மற்றும் மீள்கட்டமைப்பு பணிகளை ஆற்றி வருகிறது. எப்படியிருந்தாலும் இன்று நாடுகளுக்கு நாடு பல ஆயிரம் உயிர்கள் யுத்தத்தினால் கொல்லப்படுவது நாம் அறிந்தவையே இவ்வாறான ஒரு சூழலில் செஞ்சிலுவை அமைப்பின் தோற்றம், அதன் வரலாறு அதன் மனிதாபிமானப் பணிகள் பற்றிப் பார்ப்பது காலத்தின் தேவையாகும்.




சர்வதேச ரீதியில் மே 08 ம் தேதி உலக செஞ்சிலுவை - செம்பிறை (World Red Cross and Red Crescent Day) தினமாகும். உலகில் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிப்படைவோருக்கு மனிதாபிமான நோக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக செஞ்சிலுவைச் மற்றும் செம்புறைச் சங்கம் ஆகியன சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் செம்பிறைச் சங்கம் என்பன பெயரில் ஒரு வித்தியாசத்தை காட்டி நின்றாலும் கூட, அடிப்படையில் இரண்டு அமைப்புக்களும் ஒரே நோக்கத்தை கொண்டுள்ளது.

தற்போது உலக நாடுகளில் இறுதியாக சேர்த்து கொண்ட தென்சூடான், சைப்பிறஸ் உட்பட 191 தேசிய சங்கங்களினூடாக தனது மனிதாபிமானப் பணிகளை

மேற்கொண்டு வருகின்றது. செஞ்சிலுவை- செம்பிறை அமைப்பின் பிரதான கருப் பொருள் யுத்தங்களினாலும் அனர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி பேதமின்றி உதவி செய்வதும் முரண்பாடுகள் மிக்க தரப்பினரிடையே நடுநிலை வகித்து சமாதானத்திற்கு உதவுவதுமாகும். இச் சங்கத்தின் ஸ்தாபகரான ஜீன் ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்த தினமான மே மாதம் 8 ம் தேதி அம் மனிதாபிமான மிக்க மனிதப் புனிதரை கௌரவிக்க இத் தினத்தை உலக செஞ்சிலுவை தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

சுவிஸ் நாட்டில் ஜெனிவாவில் செல்வந்தக் குடும்பம் ஒன்றில் 1828 ம் ஆண்டு மே மாதம் 8 ம் தேதி ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) பிறந்தார். தனது பெற்றோரிடமிருந்து கற்ற அனுபவங்கள் காரணமாக சிறுபராயத்திலிருந்தே சமூக சேவைகளில் ஆர்வமிக்கவராக விளங்கினார். சிறிய பராயத்திலே அயலவர் படும் இன்னல் கண்டு வேதனையுற்றார். சிறைக் கைதிகள் அனுபவிக்கும் கடும் தண்டனைகளுக்காக மனம் நொந்தார். சிறைக் கூடங்களிற்குச் சென்று கைதிகளுக்கு ஆறுதல் கூறி வந்தார். பின்னர் வங்கித் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கையில் முன்னேறினார் . 1859 ஜுன் 25ல் அவர் வட இத்தாலிக்குச் சென்றபோது அங்கு சோல்பரினோ யுத்தம் நடைபெற்றிருந்தது. ஆஸ்திரிய, பிரான்சிய, இத்தாலியப் படைகளின் 3லட்சம் பேர் 16 மணித்தியாலங்கள் போரிட்டதன் விளைவாக பல்லாயிரக்கணக்கானோர் போர்க்களத்தில்

குற்றுயிராய் கிடந்தனர் இவ்வாறு குற்றுயிராய்க் கிடந்தவர்களிடத்தே எத்தரப்பினரும் அக்கறை காட்டவில்லை இந்தக் காட்சி டியூனண்ட்டின் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைத் தோற்றிவித்தது. ஊரவர் உதவியுடன் காயப்பட்டோருக்கு எத்தகைய பேதங்களுமின்றி சிகிச்சையளித்தார். பகை நிரம்பிய அச்சூழலில் இவரது பணி புரட்சிகரமானதாக அமைந்தது. பின்பு ஜெனீவா திரும்பிய டியூனண்ட் "சோல்பரினோ நினைவுகள்" என்ற நூலை எழுதினார். இன் நூலில் அவர் மனித சமுதாயத்திற்கு உதவக் கூடிய அறிவுரைகளை வழங்கினார். இந்நிகழ்வினையடுத்து நாடு நாடாக சென்று யுத்த களப் பணிகள் பற்றிய அவசியததை எடுத்துரைத்தார். பிற்காலத்தில் வறுமையின் பிடியில் அவர் சிக்கினாலும் ஈற்றில் நோபல் பரிசுக்குரியவரானார். 1910 அக்ரோபர் 30 ல் உயிர் நீர்த்த ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) அவர்களின் பிறந்த நாளான (மே 08 1828) இந்நாள் 1948 ம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கிகரிக்கப்பட்டது. 1863 ல் போர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொண்டர்களை இனங்காட்டுவதற்காக வெள்ளைப்பின்னணியில் செஞ்சிலுவைச் சின்னம் தெரிவுசெய்யப்பட்டது. 1864 ல் ஐவர் அடங்கிய குழுவொன்றினால் ஜெனிவாவில் மாநாடொன்று இடம்பெற்றது. இம் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களே ஜெனீவா சாசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பின்பு 1876 இல் இக் குழு சர்வதேச செஞ்சிலுவைக் குழு எனப் பெயரிடப்பட்டது. (I.C.R.C) ஆகும்.



ஒவ்வொரு மனிதனையும் அவரின் பெருந்தன்மைகளையும் கௌரவிக்கவே ஜெனீவா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதில் தரையில் காயமடைந்த அல்லது நோய்வாய்ப்பட்ட அல்லது கப்பல் உடைந்ததால் பாதிக்கப்பட்ட ஆயுதம் தரித்தோரைக் காப்பாற்றல் யுத்தக் கைதிகளைப் பாதுகாத்தல் பொதுமக்களைக் காத்தல் சர்வதேச ஆயுத மோதல்களினாலும் உள்நாட்டில் ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டோரை பாதுகாத்தல் என்பன ஜெனீவா சாசனத்தில் காணப்படுகின்றது. முதலாம் உலகப் போரின் பின்னர் சமாதானத்திறகான தேவை உணரப்பட்டது. செக்கோஸ்லவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922 ல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோள் விடப்பட்டது. இதுவே பின்னர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம். 1934 ம் ஆண்டு டோக்கியோவில் இடம் பெற்ற செஞ்சிலுவை சங்கத்தினரின் 15 வது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும் 1948 ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டு தோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது. முதலில் இந்நாள் செஞ்சிலுவைச் சங்க நாள் என்றே அழைக்கப்பட்டது. எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984 ல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் என அழைக்கப்படுகிறது.

செஞ்சிலுவை, செம்பிறை இயக்கம் உலகிலேயே மிக விரிவாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களில் ஒன்றாகும். செஞ்சிலுவை கிறிஸ்தவ சமயத்தைப் பிரதிபலிப்பது போல அமைந்துள்ளமையினால் இஸ்லாமிய நாடுகளில் அதன் சின்னம் செம்பிறையாகக் கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் யுத்தங்களினால் காயமுற்ற மக்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பின செயற்பாடுகள் தற்போது விரிவடைந்துள்ளன. செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் ஏழு பிரதான கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்ப்பட்டு வருகின்றன.

01) மனிதாபிமானம்
02) பாரபட்சமின்மை
03) நடுநிலமை
04) சுதந்நிரத் தன்மை
05) தொண்டுச் சேவை
06) ஒற்றுமை
07) சர்வவியாபகத் தன்மை என்பனவே அவை.

யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிப்புறும் மக்களுக்கு இன, மத, மொழி, பிரதேச பேதமின்றி இவ்வியக்கம் அன்புக்கரம் நீட்டி

உதவுகின்றது. முரண்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் எத்தரப்பினரையும் சாராது, அரசியல் வேறுபாடுகளில் அக்கறைகாட்டாது, நடுநிலமையுடனும் சுதந்திரத்துடனும் இது செயற்பட்டு வருகின்றது. அதே வேளை அந்தந்த நாடுகளின் சட்டத்திற்கு உட்பட்டு கருமமாற்றுகிறது.

1936 இல் இலங்கை மக்களை தாக்கிய மலேரியா மற்றும் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்தவென இலங்கை அரசுக்கு உதவி புரியும் வண்ணம் பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்திய கிளையொன்று இலங்கையில் அமைக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இக் கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமென மாறியது. 1952 ல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் இலங்கை இணைந்து கொண்டது.

ஆரம்பத்தில் இரத்ததானம், முதலுதவிக்கான பயிற்சி வழங்கல், நடமாடும் சுகாதார சேவை வழங்கல், விபத்துக்குள்ளான வர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பவற்றை வழங்கல், வரட்சி, வெள்ளப் பெருக்கு, யுத்தம் வரட்சிகளுக்கு முகம்கொடுப்பதற்கான பயிற்சிகள் போன்ற சேவைகளை வழங்கியது. இலங்கையில் வடக்கு பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதில் இது முன்னின்று செயற்பட்டுள்ளது. போரின் நிமித்தம் சிறைபட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிடல், தடுப்புக்காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடல், எதிர்த்தரப்பினரின் தடுப்புக்காவலிலுள்ள இராணுவத்தினரையும், பொதுமக்களையும் பார்வையிடல், காணாமல்போகும் நபர்களைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் அக்கறை காட்டுதல், யுத்தப் பிரதேசத்திலுள்ளவர்களை அழைத்துவருதல், குடும்பச் செய்திகளைப் பரிமாறுதல் போன்றவற்றுடன் இரு தரப்பினரிடையே சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுகிறது. பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரணப்பொருள் எடுத்துச் செல்ல, நோயாளிகளுக்குப் போக்குவரத்து வசதியளித்தல், தொழில் மீட்சிக்கு உதவுதல், மருத்துவ உதவி வழங்கல் தற்காலிக கூடாரங்களை அமைத்தல் நிரந்தர வதிவிடங்ளை அமைத்தல் போன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபடுகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் அதன் அனுபவத்தையும் சர்வதேச அமைப்புக்களின் அனுபவமிக்க தொண்டர்களையும் இலங்கையில் நீண்ட கால சேவையில் ஈடுபடுத்தி வருகின்றது. எனினும் யுத்த நடவடிக்கைகளினால் இத் தொண்டர்கள் பாதிப்புக்குள்ளாகியமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 25 மாவட்டங்களிலும் அதன் கிளைகளை அமைத்து அதனூடாக மாவட்ட ரீதியில் தனது சேவைகளை விஸ்தரித்துள்ளது குறிப்பாக இலங்கையில் சுனாமி அனர்த்தத்தின் போது மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் யுத்தத்திற்கு பின்னராக மேற்கொண்டு வரும்

சேவைகள் குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளாகும்

ஏவ்வாறாயினும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் உள்ளகச் செயற் திட்டங்களாக நான்கு கூறுகள் உள்ளன.

- ❖ அனர்த்த முகாமைத்துவம்
- ❖ சுகாதார மேம்பாட்டுத் திட்டம்
- ❖ மனிதாபிமான பணிகளின் மேம்பாடு
- ❖ நிறுவனத்தின் அபிவிருத்தி

**அனர்த்த முகாமைத்துவம்**

- எவ்வகையான அனர்த்த நிலைகளிலும் பாதிப்புற்றோருக்கு உதவிகள் மற்றும் அனர்த்த முன்னாயத்தம் மீளமைப்பு நிவாரணம் வழங்கல்.
- குடும்பங்களின் தொடர்புகளை மீளிணைக்குமுகமாக இலங்கையிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் தேடுதல் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சுகாதார மேம்பாட்டுத் திட்டம்

- அனர்த்தத்தின் பின்னரான நடமாடும் சுகாதார சேவை
- சமூக அடிப்படையிலான சுகாதாரத் திட்டங்கள்
- எச்.ஐ.வி/எயிட்ஸ் பற்றிய பாதுகாப்பு விளிப்புணர்வூட்டல்
- முதலுதவி சேவை வழங்குதலும் முதலுதவிப் பயிற்சியும்
- இரத்ததான ஆட்சேர்ப்பு
- நோயாளர் காவு வண்டி சேவை

**மனிதாபிமானப் பண்புகளின் மேம்பாடு**

- மனிதாபிமானப் பண்பை முன்னேற்றமான தரத்தில் மேற்கொள்ள ஊழியர் மற்றும் தொண்டர்களுக்கு அவசியமாய் இருக்க வேண்டிய பண்புகளை மேம்படுத்த முயற்சி எடுத்தல் செஞ்சிலுவைக் கோட்பாடுகள் மற்றும் மனிதாபிமானப் பணிகளான மக்கள் நேர்மைத் தன்மை, பங்காளியாய் இருத்தல் தலைமைத்துவம் மற்றும் சமாதான முன்னெடுப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் ஒவ்வொருவருக்குமிடையில் சமாதானத்தையும் கௌரவத்தையும் ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

**நிறுவனத்தின் அபிவிருத்தி**

- சங்கத்தின் சிறந்த செயற்பாட்டிற்கும் ஆதரவளிப்பதற்கும் இளைஞர் மற்றும் தொண்டர் சேவை உள்ளடங்கலாக அவர்களின் திறன்கள் மற்றும் கிளைகளில் இருக்கும் வளங்கள் என்பவற்றின் அபிவிருத்தியினை நாடு பூராக விருத்தி செய்தல்.

எமது நாட்டின் இட அமைவும் அதன் தரைத் தோற்ற வேறுபாடுகளுமே அனர்த்தத்தங்களுக்கான பிரதான காரணியாகும். 25 மாவட்டங்களில் 15 மாவட்டங்கள் கரையோர மாவட்டங்களாகும். சுனாமி வெள்ளப் பெருக்கு சூறாவளி இடிமின்னல் என்பன ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக வடகிழக்கு பருவ மழையின் போது சூறாவளியும் வெள்ளப் பெருக்கும் தென்மேற்கு பருவ மழையின் போது பாரிய வெள்ளப்பெருக்கும்

ஏற்பட்ட வண்ணமே உள்ளது. குறிப்பாக வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்க மையம் எமக்கு எப்போதும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்த வகையில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் முல்லைத்தீவு கிளை அனர்த்த முன்னாயத்தம், பதிலிருப்பு செயற்பாடுளில் மாவட்டத்தில் பிரதான பங்கு வகிப்பதுடன் சுகாதார மேம்பாடு, மனிதாபிமான விழுமிய மேம்பாடு, நிறுவன அபிவிருத்தி மற்றும் யுத்தத்திற்கு பின்னரான மீள் நிர்மாண பணி (வீடமைப்பு வாழ்வாதாரம்) போன்ற செயற்திட்டங்களையும் மேற்கொள்ளப்படுகின்றது இவை எமது தேசிய தலைமைக் காரியாலயத்துடனும் (NHQ) அல்லது தேசிய சங்கங்களுடனும் ( National Society ) அல்லது சம்மேளனத்துடனும் (IFRC) சேர்ந்து சில சமயங்களில் தனித்தும் மேற்கொண்டு வருகின்றோம். எனவே மனிதனின் பாதுகாப்புக்கும் நல்வாழ்விற்கும் சமூக மேம்பாட்டிற்கும் அமைதிக்கும் செஞ்சிலுவை சங்கம் பேருதவி புரிகிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது. இவை யாவும் ஒரு தேசிய நிகழிச்சித் திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு :- ச.நாகரட்ணம்
கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
முல்லைத்தீவு கிளை.

# அறிவாலயத்தில் நான் கண்ட பசுமையான நினைவுச் சுவடுகள் ..................

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அறுபது வயதைப் பூர்த்தி செய்து வைரவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் இவ் அறிவுத்தாய் உதித்ததிலிருந்து இன்று வரையிலான காலத்தில் அதன் வளர்ச்சிப் பாதையில் நான் கண்ட அனுபவித்த பங்காற்றிய வரலாற்றில் மறக்க முடியாத பசுமையான நினைவுகளை வெளிக்கொண்டு வருவதில் பெருமிதம் அடைகின்றேன். 1955 ம் ஆண்டு தை 15 ம் திகதி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை என்னும் நாமத்துடன் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் அனுசரணையில் திரு . மு. நேசரத்தினம் அதிபரின் தலைமையில் உதித்த இவ்வாலயத்திற்கு எனது முதலாம் தரம் கல்வி கற்க ஆரம்பித்த காலமும் ஒன்றேயாகும். அதனால் மாணவனாக இருந்த காலத்திலும் எனது அறிவுப்பசிக்கு தீனி போட்ட இவ்வாலயத்திலேயே எனது முதல் ஆசிரியர் நியமனமும் கிடைத்தமை. 12 வருடங்கள் இப்பிரதேச மாணவச் செல்வங்களுடனும், பாடசாலை சமூகத்துடன் கொண்ட உறவாலும், பின்பு புதுக்குடியிருப்புக் கோட்டக்கல்வி அதிகாரி, பிரதிக்கல்விப் பணிப்பாளராக சேவை செய்யக் கிடைத்த வாய்ப்பாலும், பெற்றோர், பழைய மாணவர் என்ற நிலையாலும் இன்று வரை இவ்வறிவாலயத்துடன் உள்ள அன்பான கருணையான உறவு கிடைத்தமையைப் பெரும் பேறாகப் பார்க்கின்றேன். இவ்வேளையில் மாணவனாக, ஆசிரியராக இவ்வறிவாலயத்துடன் நேரடிப் பங்களிப்பின் போது கண்ட அனுபவத்த வரலாற்றுச் சம்பவங்கள் சிலவற்றை வெளிப்படுத்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

பாடசாலை ஆரம்பித்த போது ஒரு நீளக் கிடுகினால் வேயப்பட்ட கொட்டில், சுவர் அமைக்கப்படவில்லை, வகுப்பறை பிரிக்கப்படவில்லை. சாணத்தினால் மெழுகப்பட்ட அந்தத் தரையில் தளபாடங்கள் எதுவுமின்றி மாணவர்கள் தரையில் இருந்து கற்றல் செயற்பாடும், ஆசிரியருக்கு ஒரு சிறிய மேசை, ஒரு கதிரை, சிறிய கரும்பலகை கொட்டிலின் கப்பில் கட்டித் தொங்கிய நிலையில் கல்விச்செயறய்பாடு நடந்தமையும் இனிப்புக்கள் வழங்கிப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு இழுக்கின்ற நிலைப்பாடும் பாடசாலைக்கு மாணவர் ஒழுங்கற்று இருந்த போது ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைக் கூட்டிவந்து பாடசாலையில் கற்பித்த சம்பவங்களும் என் நினைவில் இன்றும் உண்டு. நிரந்தர கட்டடம் அமைக்கும் முயற்சியில் மாணவர் வீடு வீடாகச் சென்று கோலாட்டம், கும்மி அடித்து, கரகம் ஆடி காசு சேர்த்தமையும், அவர்களை ஆசிரியர்கள் திரு.நா. மகாலிங்கசிவம், திரு க. சிதம்பரப்பிள்ளை போன்றோர் வீடு வீடாக கூட்டிச் சென்றமையும் நாங்கள் பின்னால் சென்று பார்த்து இரசித்த சம்பவங்களும் மறக்கமுடியாதவையே. இவ்வடிப்படையில் 120' x 20' நீளமான நிரந்தரக் கட்டடம் இவ்வித்தியாலயத்தில் 1957-1958 ல் புதிதாகத் தோற்றம் பெற்றது. அக்கட்டத்தின் வடக்கே வழிபாட்டிற்கான சுவாமி அறையும், தெற்கே 20' x 20'

மேடையும் அமைக்கப்பட்டிருந்தது. இச்சுவாமி அறை அன்றிலிருந்து 2009 ம் ஆண்டு இடப்பெயர்வு வரை நாளாந்த, வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகளுக்காகவும், சரஸ்வதி பூஜை போன்ற ஏனைய விசேட சைவ விழாக்களுக்காகவும் பயன்பட்டமையும், இங்கு அமைக்கப்பட்ட மேடை ஆயிரக்கணக்கான மாணவர்களின் இயல், இசை, நாடக நிகழ்வுகள் அரங்கேறவும் மாணவ மன்ற செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் திறமைகள் வெளிக்கொண்டுவரவும் அதனூடாக பல்துறை சார்ந்த அறிஞர்களை உருவாக்க ஊன்றுகோலாக, களமாக அமைந்த அரங்கம் என்பதையும் இப்பிரதேச மக்களின் பல நிகழ்வுகளை அரங்கேற்றிய மேடை என்பதையும் நாம் மறக்கலாகாது.

இவ்வித்தியாலயம் 1962ல் அரசு பாடசாலையாக மாற்றப்பட்ட பின்னர் திரு.நா.சிவ சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது அதிபர் அலுவலகம், நூல்நிலையம் சேர்ந்த கட்டடத் தொகுதி 100' x 20' கட்டடம் அமைக்கப்பட்ட வேளையில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாகக் கட்டடம் அமைப்பதற்குப் பல வேலைகள் சிரமதான அடிப்படையில் பெற்றோர், ஆசிரியர், மாணவர்களாகிய எம்மால் மேற்கொள்ளப்பட்டது. அச்சிரமதானப் பணியில் ஊரில் உள்ள அனைத்து உழவு இயந்திரங்களையும் ஈடுபடுத்தி அமரர் கா. தம்பாபிள்ளை அவர்களின் முன்னிலைப்படுத்தலில் 50 இற்கு மேல் உழவு இயந்திரப்பெட்டி மணல் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒரு இரவில் ஏற்றியமை மறக்க முடியாத சம்பவம். அதே போல் ஆரம்பப் பாடசாலை வளர்ச்சியில் அமரர் திரு கா. தம்பாபிள்ளை அளப்பரியது.

ஆரம்ப கால அதிபர்களான அமரர். மு. நேசரத்தினம், வே. நமசிவாயம் அவர்களின் உருவம் ஞாபகம் உண்டு. ஆனால் சேவைகளை அறியக் கூடிய பருவம் இல்லை. அதே போல் ஆரம்ப கால ஆசிரியர்களுள் ஒரு சிலரை மட்டும் ஞாபகம் உண்டு. ஆனால் அடுத்து வந்த பண்டிதர் ஆ. சின்னத்துரை வகுப்பு வகுப்பாகப் பிரம்புடன் ஓடித்திரிவதும் தமிழ், சமயம் சிறப்பாகக் கற்பிப்பதும் அவருடைய கற்பித்தல் செயற்பாட்டைப் புகழ்ந்த செயற்பாடுகளும் ஞாபகத்தில் உண்டு. ஆரம்ப கால ஆசிரியர்களுள் திரு க. சிதம்பரப்பிள்ளை அவர்கள் இவ்வறிவாலயத்திற்கு பல வருடங்கள் அதன் வளர்ச்சிப் பணிகளிலும் கற்பித்தல் செயற்பாடுகளிலும் அரும்பணியாற்றியமை மறக்கமுடியாது. நாட்டுக்கூத்தில் மிகப்பற்றுடையவர். கோவலன் கூத்து எங்களுக்கு பழக்கி மாவட்டத்தில் 1 ல் இடம் பெற்றதும் அதில் நான் பாண்டியனாக பாத்திரமேற்று ஆடியதும் பசுமையான நினைவே. அது போல திரு. ச. சண்முகம் ஆசிரியர் அவர்களும் ஆரம்பகால வளர்ச்சியில் குறிப்பாகப் கட்டிடவாக்கம் கற்பித்த மாணவரது ஒழுக்கத்திலும் அரும்பணியாற்றியவர் என்பது நாம் அறிந்ததே.

மேலும் ஆரம்ப கால ஆசிரியர்களுள் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் இவ்வித்தியாலயத்தில் 10 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியமை நாம் அறிவோம். பாடசாலை வளவின் மேற்கே மண்வீடமைத்து இரவு பகலாகக் கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமன்றி சைவமும் தமிழும் வளர்ச்சி பெற பாடசாலையிலும் ஆலயத்திலும்

மக்களுடன் இணைந்து அரும்பணியாற்றியவர். அவரது துணைவியார் ஆசிரியர் வள்ளியம்மை பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்து கணவருடன் இணைந்து அவர் பணி சிறப்புறவும் சமூகத்துடன் இணைந்து அன்றிலிருந்து இன்றுவரை சகல நிகழ்வுகளையும் சிறப்பிப்பதும் நாம் அறிவோம்.

ஆரம்பகால ஆசிரியர்களுள் திரு. நல்லையா ஆசிரியரும் அவரின் துணைவியார் அன்னம்மா அவர்களும் பாடசாலை வளவினுள் வீடமைத்து குடும்பமாக இருந்து கற்பித்தல் செயற்பாட்டிலும் புறச் செயற்பாடுகளிலும் அரும்பணி செய்தவர்கள். நல்லையா ஆசிரியர் சனி,ஞாயிறு நாட்களிலும் இரவு வேளைகளில் குப்பி விளக்கில் இரவு 10 மணி வரையிலும் எமக்குக் கணிதம் கற்பித்த அந்த நாட்கள் பசுமையான நினைவே.

இவ்வித்தியாலய வரலாற்றில் 1962 ம் ஆண்டு இவ்வறிவாலயம் அரச பாடசாலையாக மாற்றம் பெற்றதும் 1964ல் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் என்ற தரத்தைப் பெற்று க. பொ. த (உ/த) கலைப்பிரிவு ஆரம்பிக்கும் தகைமை பெற்றமை வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்வே. இது வித்தியாலய, பிரதேச கல்வி வரலாற்றில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் எனலாம். அதிபர் , ஆசிரியர்களின் உடை வெள்ளை வேட்டியும் நைசனல் சேட்டும் அணிந்து பாடசாலைக்கு வருவதும், க. பொ. த (சா/த) மாணவர்கள் வெள்ளை வேட்டி, சேட்டும் பெண்பிள்ளைகள் பாவாடை சட்டை துண்டுத்தாவணி போட்டுப் பாடசாலைக்கு வரும் தமிழர் பண்பாட்டை இவ்வித்தியாலயத்தில் கண்டோம். இவ்வித்தியாலயத்தில் இருந்து மகாவித்தியாலயத்தின் முதல் அதிபராகக் கரவெட்டியைச் சேர்ந்த வ. தங்கராசா அவர்கள் பொறுப்பேற்றார். அவர் இப் பாடசாலைக்கு கடமையாற்ற வந்தவர்களுள் முதலாவது பட்டதாரி என்பதும் நீளக் கால்சட்டை சேட் அணிந்து வந்தவர் என்பதும் குறிப்பிடக்கூடிய ஒன்று. அக்கால கட்டத்தில் பெற்றோர் மாணவர்கள் கற்க வேண்டும் என்பதில் அக்கறையின்மை என்பதும், வயல் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை, வீடுகளில் கற்பதற்கான வசதிகள் இல்லாத நிலை, மேசை கதிரைகள் இல்லாத நிலை, வீட்டுத்திண்ணை குந்துகளில் இருந்து படுத்துப்படிக்கும் நிலையே காணப்பட்டது. அதனால் O /L பரீட்சை எடுக்கும் மாணவர்கள் சனி, ஞாயிறு மாலை, இரவு நேரங்களில் பாடசாலைத் தளபாடங்களைப் பயன்படுத்தியமையும் பிற கற்றல் வசதிகளின்மையால் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களே முழுமையாகக் கல்வித் தேவைகளை நிறைவேற்ற மேலதிக வகுப்புக்கள் இலவசமாக நடத்தியமையும் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

1965 இல் திரு. கு. வி. செல்லத்துரை அவர்கள் அதிபர் பொறுப்பைப் பெற்ற காலம் பாடசாலை வரலாற்றில் செழிப்பான வளர்ச்சியான காலகட்டமாகும். பாடசாலையின் கட்டிடங்கள் க. பொ. த. (சா/த) இற்கான விஞ்ஞான ஆய்வுகூடம்,

அதிபர் விடுதி, பாடசாலைக் கிணறு அமைக்கப்பட்டன. என் போன்ற பலர் க. பொ.த (சா/த) ( உ / த) கற்று பட்டதாரிகள் உருவாவதற்கும் உயர்பதவிகள் பெறுவதற்கும் வித்திட்டவர்.

புதுக்குடியிருப்பு பிரதேச வரலாற்றில் 1965 இற்கு பின்னர் கல்வி மறுமலர்ச்சி காலம் எனலாம். ஏனெனில் இதன் பின்னரே பல்துறை சார்ந்த பட்டதாரிகள் உருவாவதற்கும் ஏனைய துறைசார்ந்தோர் உருவாவதற்கும் அடித்தளமான க. பொ.த. (உ /த) ஆரம்பிக்கப்பட்டது. கு. வி. அதிபர் அவர்களினால் 1964 இல், 1965 இல் ஆண்டுகளில் க. பொ. த ( உ/ த) ஆரம்பிக்கப்பட்டபோதும் 1966 இல் பரீட்சை எடுக்காமலே அம் மாணவர்கள் நின்று விட்டார்கள். அடுத்த கட்டமாக திரு. கதிரவேலு ஆசிரியர் (புவியியல்) கனகயன் (வரலாறு) கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்துடன் அவர்களின் சிறந்த கற்பித்தலும், நம்பிக்கையிலான வழிகாட்டலுடன் 1966 இல் க.பொ.த. ( உ /த) ஆரம்பித்து 1968 இல் பரீட்சைக்கு தோற்றி து.மரியாம்பிள்ளை அவர்களும் 1969 இல் திரு. ச. நாகரத்தினம், சி. ஆறுமுகம் அவர்களும் 1970 இல் நானும் பல்கலைக்கழகம் சென்ற நிகழ்வும் எம் வாழ்விலும் மறுமலர்ச்சிக் காலமே. திரு. இ. விசாகலிங்கம் ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் சேவையையும் ஆரம்பகால க. பொ.த. ( உ / த) பட்டதாரிகள் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர். பொருளியல், தமிழ் பாடங்கள் இரண்டையும் இலகுவான முறையில் கற்பித்து விசேட திறமைச்சித்தி பெற வழிவகுத்தவர்.

புதுக்குடியிருப்பின் முதல் பட்டதாரி ஆசிரியரான சரவணபவன் 1973 இல் இவ் வித்தியாலயத்திற்கு நியமனம் பெற்றுக் கலைப்பட்டதாரிகள் உருவாக்க பாரிய பங்காற்றியமை பாடசாலை வரலாற்றில் முக்கிய பதிவே. A / L ஆசிரியர்கள் இல்லாத போது இவ்வாசிரியர் பொருளியல், தமிழ், வரலாறு மூன்று பாடங்களையும் க.பொ.த உயர்தர வகுப்பிற்கு கற்பித்து 1973 – 1987 காலப்பகுதியில் பல மாணவர்கள் பட்டதாரியாவதற்கு வழியமைத்ததோடு இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் பாடசாலையில் வளர்த்துப் பல பட்டதாரிகளையும் தமிழ் அறிஞர்களையும் உருவாக்கியமை மறக்க முடியாது. அவரின் இராவணேஸ்வரன் வடமோடி நாட்டுக்கூத்து இன்றும் இம்மாவட்டத்தில் நிலைத்திருக்கின்றது. பின்பு கல்வித் திணைக்களத்தில் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளராகப் பணிபுரிந்த போதிலும் ஓய்வு நிலையிலும் கூட அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஊடாக இவ்வித்தியாலய வளர்ச்சியில் அரும்பெரும் பங்காற்றிய பெருமகன் என்பதை மறுப்பதற்கில்லை. எடுத்துக் காட்டாக இவ்வறிவாலயத்தில் பொன் விழா நிகழ்விலும் , கட்டடக்குழுவிலும் பொன்விழா மலர்க் குழுவின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியமையும் இதற்குச் சான்றாகும்.

1976ல் எனக்கு முதல் ஆசிரியர் நியமனம் கிடைத்த போது எனது அறிவுப் பசிக்கு தீனி போட்ட அறிவாலயத்திற்கு கிடைத்தமையைப் பெரும் பேறாகப் போற்றுகின்றேன். எனது நியமனம் கணிதபாட நியமனமாக இருந்த போதும் கணிதமும், உயர்தரத்துக்குப் புவியியல், பொருளியல் பாடங்களையும் கற்பித்தேன். 1977 இல் நண்பர் அமரர் ஆறுமுகம் ஆசிரியர் நியமனம் பெற்று புவியியல் பாடத்தை கற்பிக்க நான் பொருளியியலும் சரவணபவன் ஆசிரியர் தமிழ், வரலாறு கற்பித்து க.பொ.த ( உ / த) கலைத்துறைக்கு இவ்வித்தியாலயத்தில் கற்ற எமது பிரதேச ஆசிரியர்களே முழுமையான தேவையைப் பூர்த்தி செய்தமை முக்கிய அம்சமாகும்.

எனது ஆசிரியப் பணியில் 1974 – 1985 வரை அதிபராக இருந்த திரு.அ.கா.மகாலிங்கம் அவர்களுடன் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றக் கிடைத்தமையும் அக் காலத்தில் எம் அறிவாலய வளர்ச்சிக்கு பங்காற்றக் கிடைத்த வாய்ப்பையும் பெரும் பேறாகக் கருதுகின்றேன். இக் கால கட்டத்தில் அதிபர் தலைமையில் பல கலைப் பட்டதாரிகளை உருவாக்க முடிந்த அதேவேளை, கலைத்துறையில் 1987 ஆம் ஆண்டு முதலாக சட்டத்துறைக்கு ப. அன்ரன் புனிதநாயகம் தெரிவாகியமையும் வரலாற்றில் ஒரு முக்கிய பதிவே.

இவ்வித்தியாலயத்தில் விஞ்ஞானப் பிரிவை ஆரம்பித்து முக்கியமானதொன்றே. விஞ்ஞானம் கற்பிப்பதற்குரிய ஆசிரியர் வளம் இன்மையால் அதற்கான அனுமதி பெறுவது கடினமான விடயமே. அதிபர் அ. க. மகாலிங்கம் அவர்களின் முயற்சியால் உயர்தரத்துக்கு 4 பாடங்களில் 2 பாடங்களைத்தான் கற்பிப்பதற்கு இணங்கியதன் அடிப்படையில் விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்க அனுமதி கிடைத்த போதும் (இரட்டை அலகு விஞ்ஞான கூடம் அமைப்பதற்குப் பணம் ஒதுக்கியும் அக் கட்டிடத்தை கட்ட எவரும் முன்வரவில்லை. அக் கட்டிடம் கட்டும் பொறுப்பை நான் ஏற்று 12 ஆசிரியர்களிடம் தலா ஆயிரம் பெற்று அத்திவார வேலைகளை ஆரம்பித்து பிற்பகுதி கொடுப்பனவுகளுடன் ஸ்திரமாக ஆய்வுகூடம் அதிபர் தலைமையில் கட்டியதும் அவர் தோழோடு தோள் நின்று உழைத்தமையும் மறக்க முடியாத நிகழ்வே. 1977 இல் விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் அதனாலேயே 1979 இல் அதன் மூலம் 2A, 2B எடுத்து சந்திரசேகரம் ஏபிரகாம் மருததுவபீடத்துக்கும் அவ்வாண்டு சண்முகம் பாசமலர் முதற்தடவையில் விவசாய பீடத்துச் சென்றதும் 1980 இல் திரு. யேசுதாஸ் மருத்துவபீடத்துக்கும் தவசீலன், சி. சத்தியா விஞ்ஞான பீடத்துக்கும் தெரிவானது முக்கிய நிகழ்வே. அதிபர் அவர்களுடன் அமரர் திரு S. கனகசபை, திரு இராமநாதன், செல்வி S. சுப்பிரமணியம், திரு சிவசம்புநாதன் போன்ற ஆசிரியர்கள் விஞ்ஞனத்துறைக்கு உழைத்த ஆரம்பகால ஆசிரியர்களாவர்.

1981 இல் வர்த்தகத்துறை ஆரம்பிக்கப்பட்டு 1983 இல் அத்துறை சார்ந்த முதன்முறையாக விசேடசித்தி பெற்று க. பார்தீபன், தி. நேசராசா, த. ஜெயலட்சுமி முகாமைத்துவ துறைக்கும் அமரர் கு. சபாரத்தினம், இ. சாரதாநிதி வர்த்தக துறைக்கு

தெரிவாகி 5 மாணவர்களும் பல்கலைக்கழகம் புகுந்தமை இவ்வித்தியாலயத்துக்குக் கிடைத்து சாதனை படைத்தது வரலாற்றில் முக்கிய நிகழ்வே. அவ்வேளை செல்வி சின்னத்தம்பி (மட்டுவில்) வர்த்தக ஆசிரியராக கிடைத்தமை அவர் வர்த்தகம், கணக்கியல் ஆகிய இரண்டு பாடங்களையும் க. சரவணபவன் ஆசிரியர் தமிழ்பாடத்தையும் கற்பிக்க நான் பொருளியல் கற்பிக்கக் கிடைத்த சந்தர்பத்தையிட்டு பெருமையடைகின்றேன்.

1983 ஆம் ஆண்டு இவ் வித்தியாலய வர்த்தகத்துறை சாதனையுடன் பொறியியற் துறைக்குச் ச. டேவிற் முதல் மாணவனாகத் தெரிவாகியமையும், க. குணமலர் நுண்கலைத் துறைக்கு முதல் மாணவியாக தெரிவாகியமையும், கலைத்துறைக்கு 9 பேரும் தெரிவாகி மொத்தம் 17பேர் பல்கலைகழகம் புகுந்தமை முக்கிய வரலாற்றுப் பதிவே. மேலும். 1983 இல் பல்கலைக்கழகம் புகுந்த ந. ரவீந்திரகுமார் கலாநிதியாக கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகத் திகழ்வதும், அதேயாண்டு பல்கலைக்கழகம் சென்ற க. ஜீவராணி புனிதா உதவிப்பரீட்சை ஆணையாளராக சேவையாற்றுவதும் குறிப்பிடக் கூடிய முக்கிய நிகழ்வே.

1981ல் கலை விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பல்துறை கற்கை வசதிகளையும் பெற்று 1AB என்ற தரத்துடன் வன்னியில் முதல்தரப் பாடசாலைகளில் ஒன்றாக அன்றிலிருந்து இன்று வரை கல்விப்பெறு பேற்றிலும், ஏனைய இணைபாடவிதான செயற்பாட்டிலும் மிளிர்ந்து கொண்டிருப்பது பெருமைக்குரியதே. இக்கால கட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு அதிக மாணவர்களை அனுப்ப வேண்டும். ஏனைய பாடசாலைகளின் போட்டித்தன்மை இருந்தமையால் கலை, வர்த்தக பிரிவுகளில் கற்கும் மாணவர்களுக்கு மேலதிக கல்வி வழங்க பழைய மாணவர்களினால் ஜனசக்தி சனசமூக நிலையத்தினூடாக எனது தலைமையில் அதிபர், ஆசிரியர்களின் அனுசரணையுடன் பல்கலைக்கழகத்தில் எமது வித்தியாலயத்திலிருந்து சென்று கற்றுக் கொண்டிருந்த மாணவர்களின் இணைப்புடன் விரிவுரையாளர்களை சனி, ஞாயிறு தினங்களில் அழைத்து விசேட வகுப்புகள் வைத்து சிறந்த பெறுபேறுகள் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியதே. அவ்வகையில் அப்போது பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்களுள் அமரர் சி. கணேசமூர்த்தி ஆசிரியர், கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி பொ. சிங்கரத்தினம், அமரர் த. குணலட்சுமி உ. க. பணிப்பாளர் எம்முடன் பங்காற்றியமை மறக்க முடியாது.

இணைபாடவிதான செயற்பாட்டிலும் தமிழ்தினப் போட்டிகளில் இயல், இசை, நாடகத்துறையில், விளையாட்டுத்துறைகளிலும் மாவட்ட, மாகாண மட்டங்களில் பல சாதனைகள் இக்காலத்தில் இவ்வித்தியாலயம் நிலைநாட்டியது. 1981 ஆம் ஆண்டு மனித உரிமைக் மன்றத்தினால் நடாத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் ச. முருகையா, ச. சாந்தகுமார், ச. டேவிற், நே. யோசெப், இ. நிமல் ஆகிய மாணவர்களுக்கு பயிற்சி அளித்து அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்று அன்றைய ஜனாதிபதி

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்தம் பாரியாரிடம் பாடசாலைக்கு தொலைக்காட்சி பெட்டியொன்றையும், ஒவ்வொருவருக்கும், ரொக்கப் பணப்பரிசும் சான்றிதழ் பெற்றமை பாடசாலை வரலாற்றில் முக்கிய பதிவே. இச்செயற்பாட்டிற்கு நான் பொறுப்பாசிரியராக இருந்து சாதனை படைத்தமை என்பது ஆசிரியப்பணியில் பசுமையான மறக்க முடியாத நினைவே. இதன்மூலம் புதுக்குடியிருப்புக்கு வந்த முதலாவது தொலைக்காட்சி பெட்டியென்பதையும் குறிப்பிட வேண்டும்.

இக் கால கட்டத்தில் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு கிடைக்கப் பாடுபட்ட அமரர் திரு.சி. ஆறுமுகம் அவர்களையும் மறக்க முடியாது. புவியியல் பாடத்தில் சிறந்த பெறுபேறு பெறவும், ஏனைய பாடசாலையின் பௌதீகவள விருத்தி மாணவர்களின் ஒழுக்கம் ஒழுங்கு நடவடிக்கைகளிலும், பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்நின்று உழைத்த ஒரு பெருமகன். இக்கால கட்டத்தில் கனிஸ்ட பிரிவில் க. பொ.த (சா / த) பரீட்சை பெறுபேறுகளும் மிக உயர்வாகவே இருந்தது. அதில் திரு. க. திருச்செல்வராசா ஆசிரியர் அவர்கள் சமூகக்கல்வியில் விசேட சித்தி பெறவும், பாடசாலை புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர் என்பதை மறப்பதற்கில்லை. திரு. நாகராசா நேர காலம் பாராது கணிதத்தை கற்பித்தது சிறந்த பெறுபேறுகள் பெற்ற நிலைப்பாடும் மறக்க முடியாதாது அத்தோடு செல்வி.நடராசா திரு. திருமதி மகேந்திரன் அமரர் ம. தங்கனாச்சி ஆசிரியர்கள் இக்காலத்தில் சிறந்த கற்பித்தலை மேற்கொண்டு O/ L பெறுபேறுகள் சிறப்பாக இருந்ததை மறக்க முடியாது.

வித்தியாலய வரலாற்றில் 1985 ஆம் ஆண்டு எமது வித்தியாலய திரு. ச. நாகரத்தினம் ஆகிய பழைய மாணவனே அதிபராக பொறுப்பேற்று பாடசாலைக்காக உழைத்தமையும் முக்கிய அம்சமாகும். 1986 இல் கொத்தனி மூலாதாரப் பாடசாலையாக இவ்வித்தியாலயம் அமைந்ததுடன் திரு. ச. நாகரத்தினம் கொத்தனி அதிபராக இருந்த போது நான் பிரதி அதிபராக கடமையாற்றினேன். இவ்வேளை பாடசாலை வளர்ச்சிக்கு பல வழிகளில் உதவிகள் பெறப்பட்டு சகல துறைகளிலும் வளர்ச்சியை நோக்கிய சென்றது. ஆனால் பாடசாலைக்கு, கண்ணூறுபட்டது போல சூறாவளி அடித்தது. எமது வித்தியாலயம் சிதறுண்டது. 1986 ஆண்டு ஆகோரப் போர்களாலும் 1987 இல் வந்த இந்திய அமைதிப்படை பாடசாலையை தமது முகாமாக்கியதாலும் இதுவரை வித்தியாலயம் அடைந்த கட்டுமாணப்பணிகள், ஆவணங்கள் அத்தனையும் அழிக்கப்பட்டதோடு புதுக்குடியிருப்பு மக்களே இடம்பெயர்ந்திருந்தால் எமது அறிவாலயம் செயலிழந்தமை பெரும் வேதனைக்குரிய

நிகழ்வே. இந்த நிலையில் இருந்து மீள அதிபர், ஆசிரியர்களின் உதவியுடன் அபிவிருத்தி சங்கத்தினருடன் இணைந்து 1988 இல் ஏப்ரலில் புதுக்குடியிருப்பு றோ. க. வித்தியாலயத்திலும் 1988 இல் யூலையயில் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் பாடசாலை நாடாத்தப்பட்டது. இதன்போது இடப் பற்றாக்குறை, தளபாட வசதி பற்றாக்குறையால் அயல் வீடுகளில் திண்ணைமால், சூசையப்பர் ஆலயமுற்றம், ஆலமரங்களின் நிழல்களுக்கு கீழும் கல்வி உபகரணங்கள் அற்ற கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடந்தமை பாடசாலை வரலாற்றில் கசப்பான அனுபவமாக இருந்த போதும் அவ்வேளைகளில் கூட க.பொ.த, (சா/ த) உயர்தரங்களில் உயர் பெறுபேறு பெற்று சாதனையீட்டியமையும் முக்கிய அம்சமே.

திரு. ச. நாகரத்தினம் அதிபராக இருந்த காலத்திலே இன்றைய மத்திய கல்லூரி என பெருமை பெற்று விளங்கும் இக் கல்லூரி தனக்கென நிரந்தர விசாலமான தளத்தையும் பெரிய விளையாட்டு மைதானத்தையும் பெற்றது என்பதும் முக்கிய வரலாற்றுப் பதிவே. பௌதிக வளங்கள் அனைத்தும் அழிந்த நிலையிலும் இக் கால கட்டத்திலும் சில பல நிரந்தர கட்டிடங்களையும், சில தற்காலிக கொட்டகைகளையும் அமைத்து கல்விப் பெறுபேறுகளை உயர்த்திய பெருமை அதிபர் அக்காலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களையும் சார்ந்ததாகும். இணைபாடவிதான செயற்பாட்டுக்கு நாட்டின் சூழல் இடங்கொடுக்காமையும் இங்கு குறிபிடக்கூடியது

1994 இல் ச. நாகரத்தினம் கோட்டக்கல்வி அதிகாரியாக நியமனம் பெற நீண்ட நாள் பௌதிக பாடத்தை கற்பித்து பல மருத்துவ விஞ்ஞான துறைசார் பட்டதாரிகள் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய பெ. சிவலிங்கம் அதிபராக பொறுப்பேற்று சிறப்பாக செயற்பட்டமையும் அக்காலத்தில் லண்டன், பிரான்சு, கனடா, பழைய மாணவர்களின் அனுசரணையுடன் கேட்போர் கூடம், பிரஞ்சு மண்டபம் போன்ற கட்டிடம் உருவாகவும், இணைபாடவிதான செயற்பாட்டின் மேம்பாடு பொன்விழா செயற்பாடுகள் சிறப்புற ஒழுங்கமைத்தமை பல சந்தர்ப்பத்திலும் நானும் பங்கு கொள்ளக் கிடைத்த வாய்ப்புக்களையும் நினைவு கூருகின்றேன்.

2007 ஆம் ஆண்டு தொடர்ந்து திரு. சி. சுப்பிரமணியேஸ்வரன் எனது A / L மாணவன் என்னுடன் குமுளமுனை ம. வி, முல்லைத்தீவு ம. வியிலும் பிரதி அதிபராக கடமையாற்றியவர், அதிபர் பொறுப்பேற்று இவ்வறிவாலயத்தை வளர்த்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றே. இவர் காலத்தில் 2009 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு முன்னய அழிவிலிருந்து மீட்ட பௌதிக வளங்கள் அழிவும், அகதிமுகாம் கல்வி, வவுனியா காமினி வித்தியாலயத்தில் கல்வியை தக்க வைக்க எடுத்த முயற்சியும்

அவ்வேளையிலும் கல்விப் பெறுபேற்றை உயர்த்த எடுத்த பிராயஸ்தனங்களும் மறக்க முடியாதவையே. 2011 இல் மீளக்குடியேறி மீள் கட்டுமானப் பணிகள் அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார்களுடனான பிணைப்பை ஏற்படுத்தி கல்லூரி உச்ச பயனைப் பெற்ற அடிப்படையில் இவ்வறிவாலயம் வைரவிழாக் காணுகின்றது. இக்கால கட்டத்தில் பௌதிக வளங்கள் நிறைவாகப் பெற்று தேவையான ஆசிரிய வளத்தை முறைமையாகப் பயன்படுத்தி க.பொ.த (சா/த), க.பொ.த ( உ/ த) பிரிவுகளில் மாவட்டத்தில் சிறந்த பெறுபேற ஆசிரியர்களுடன் இணைத்து பணியாற்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்நிலையைப் பெற்று வைர விழாக் காணும் இவ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும், உதவும் புலம்பெயர் மாணவர்களையும், ஏனைய பாடசாலை சமூகத்தையும் நினைவில் வைக்க வேண்டும். (இச் சந்தர்ப்பத்தில் பழைய பசுமையான நினவுகளின் ஆவணங்கள் அழிவடைந்தமையால் அவற்றில் சிலவற்றை மத்திய கல்லூரியான இவ் அறிவுத்தாய்க்கு வைர விழாக்காணும் இன்று மலர் ஊடாக சமர்ப்பிப்பதில் பெருமை அடைகின்றேன்.

என்னையும் நண்பர் ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. நாகரத்தினம் அவர்களையும் பா. அ. சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆலோசகர்களாக ஏற்று இவ்வறிவாலய பாட, இணைபாடவிதான, பௌதிகவள, ஆசிரியவள விருத்தியில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து பங்கு கொள்ளக் கிடைத்த வாய்ப்பையும் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை இவ்வறிவுத்தாயுடன் இணைத்திருக்கின்றமையும் பெரும் பாக்கியமாக கருதுகின்றோம். இவ்வறிவாலயத்தில் இருந்து மேலும் பல்துறை சார்ந்த பட்டதாரிகள், பலர் உருவாக்கம் பெறவும், இணைபாடவிதான செயற்பாடுகளின் வெற்றிகளினூடாகவும், எமது பிரதேசத்தில் மட்டுமல்ல சர்வதேசத்திலும், இவ்வறிவாலயத்தின் புகழ் மேலும் ஓங்கி ஒலிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பொன். பேரின்பநாயகம் J.P.
ஓய்வுநிலை பிரதிப் கல்விப் பணிப்பாளர்.



விளையாட்டுக் குழு



மாகாண மட்டத்திற்குத் தெரிவான சதுரங்க அணி - 2014

# வாழ்க்கையில் வெற்றிபெற கற்றுக் கொள்ளுங்கள்......

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 60வது வருட நிறைவினை சிறப்பிக்கும் முகமாகக் கல்லூரிச் சமூகத்தினால் வெளியிடப்படும் வைரவிழா மலரிற்கு 'வாழ்க்கையில் வெற்றிபெறக் கற்றுக் கொள்ளுங்கள்.......' என்ற தலைப்பில் எனது கட்டுரையை சமர்ப்பிப்பதில் மகிழ்வடைவதோடு வைரவிழா இனிதே நடைபெற வாழ்த்தும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மானிடராகப் பிறப்பதற்கே நாம் மாதவம் செய்திடல் வேண்டுமடி"

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே! நமக்குக் கிடைத்த இந்த வாழ்க்கை சிறப்பாக அமைவது நம் ஒவ்வொருவரினதும் கைகளிலேயே இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நம்மில் பலர் தமக்கு கிடைத்த வளமான வாழ்க்கையைத் தொலைத்துத் தம்மையும் வருத்தி, தம் சுற்றத்தையும் வருத்தி, தான் சார்ந்த சமூகத்தையே தலைகுனிய வைத்த பல வரலாறுகள் நமக்கு சான்றாகின்றன. இன்றைய எமது சமூகத்திலே வாழ்க்கையில் வெற்றிபெறுபவர்களை விட தோற்பவர்களையே அதிகமாக காண்கின்றோம். பல தடவை நான் என்னிடம் கேட்ட ஒரே ஒரு வினா வாழ்க்கையில் ஒருவன் தோல்வியடைவதற்கு காரணம் என்ன? பணம், பட்டம், பதவி, சொந்தம், இவற்றில் ஏதாவதொன்று இல்லாமைதான் தோல்விக்கு காரணமா? அல்லது அவனது இயலாமைதான் காரணமா? பணத்தில் மிதந்த பலர் வாழ்க்கையில் தோற்றதைப் படித்துள்ளோம், பட்டம் பெற்று உயர் பதவிகளை வகித்தவர்கள். வாழ்க்கையில் தோற்றதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். சொந்த பந்தங்களுடன் சுகமாக வாழ்ந்தவர்கள் வாழ்க்கையில் தோற்றதை கண்டிருக்கின்றோம். தோல்வி என்பது நிரந்தரமல்ல.

தோல்வி என்பது வெற்றிக்கான முதற்படி என்பார்கள் வாழ்க்கையில் சாதனை புரிந்த மகான்கள் அனைவரும் தோல்வியை

முத்தமிட்டவர்கள். மாணவப் பருவத்தில் தோல்விகள் வருவதும், வெற்றிகளைக் குவிப்பதும் அன்றாட நிகழ்வுகளே. தோல்வி அடைபவர் துவண்டு விடுவதும், வெற்றி அடைபவர் மமதை கொள்வதும் சிறந்ததல்ல. இன்றைய தோல்வி நாளைய வெற்றியாகலாம். இன்றைய வெற்றி நாளைய தோல்வியாகலாம். தோல்வி என்பதே சிலரது வாழ்க்கையில் நிஜமாகிவிட்ட இன்றைய சமூகத்திலேயே தமது வாழ்க்கையில் வெற்றியைப் பெற்ற பலரது அனுபவங்களையும் அவர்களிற்கு வெற்றி வழங்கிய வழிமுறைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

எனது வாழ்விலும் பல தடவை நான் தோல்விகளைச் சந்தித்ததுண்டு. தோல்வியடைந்த போது புரியாத பல உண்மைகள் இன்று என் தோல்விக்கான காரணத்தைப் புரிய வைத்துள்ளன. எனது வாழ்க்கையில் நான் பழகிய எனது குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பலரது வாழ்க்கை முறைமை எனக்கு உணர்த்திய ஒரேயொரு உண்மை இவர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கையை எவ்வாறு கற்றுக்கொண்டனர் என்பதைப் பொறுத்தே அவர்களது வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நானும் வாழ்க்கையை ஓரளவு கற்றுக்கொள்ள முனைந்தேன். அதனால் பல சந்தர்ப்பங்களில் தோல்வி அடைவதிலிருந்து தப்பிக்கொண்டேன். நான் கற்றுக்கொண்ட வாழ்க்கை முறையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

முதலாவதாக, நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான வாழ்க்கைப் பாடம் எமது பெற்றோர். நாம் ஒவ்வொருவரும் எத்தனை புத்தகங்களை படித்தாலும், கற்றுக்கொள்ள முடியாத ஒரேஒரு பொக்கிசம் எமது பெற்றோர். அம்மாவின் அன்பினையும், அப்பாவின் பாசத்தினையும் எந்த ஒரு புத்தகத்திலிருந்தும் எம்மால் கற்றுக்கொள்ள முடியாது. நம் ஒவ்வொருவரையும் பெற்று வளர்த்து சிறந்த கல்வி போதித்து சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாக நாம் வாழ ஒவ்வொரு கணமும் எமது பெற்றோர் படும் வேதனைகள், வார்த்தைகளால் அளவிடவே முடியாது. பெற்றோரின் கண்டிப்புக்கள் எமக்கு கசப்பானவையாக இருக்கலாம்.

ஆனால் எங்களைக் கண்டிக்கும்போது எமது பெற்றோர் அனுபவிக்கும் வேதனைகள் எமக்குப் புரிவதில்லை. வலியைத் தமக்குள் சுமந்துகொண்டு எங்களை வழிப்படுத்த எமது பெற்றோர் படும் வேதனையைக் கற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் தோல்வியடைவதில்லை.

எமது பெற்றோர் எமக்காகப் புரியும் அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மற்றும் விட்டுக்கொடுப்புக்களை நாம் எப்போது நன்றாகக் கற்றுக்கொள்ள முனைகின்றறோமோ, அந்தக் கணத்திலிருந்து நமது வாழ்க்கை வெற்றிநடை போடத் தொடங்குகின்றது. நம்மைப் பெற்று வளர்த்து உயர்வான ஒரு வாழ்க்கையை நாம் அடைய வேண்டும் என்பதிலேயே குறிக்கோளாக இருக்கும் நமது பெற்றோர்களின் கனவுகளை மதியாது அவர்களைத் தினம்தோறும் கவலைப்படுத்துவதால் நாம் எந்த வித நன்மையையும் அடைந்துவிட முடியாது. ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளிடம் எந்தவித பலனையும் எதிர்பாராது பிள்ளைகளுக்குரிய பணிவிடைகளைச் செய்கின்றார்கள். அப்படிப்பட்ட பெற்றோர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறுதான் என்ன? இதுவரை காலமும் உங்களால் உங்கள் பெற்றோர் அனுபவித்த இன்ப துன்பங்களை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்! இனிவரும் காலங்களிலாவது அவர்கள் உங்களை நினைத்து வேதனைப்படுவதைத் தவிர்த்து உங்களால் சந்தோசத்தை அனுபவிக்க முயற்சி செய்யுங்கள். தமது பெற்றோர்களின் அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மற்றும் விட்டுக் கொடுப்புக்களைப் புரிந்து கொள்ளாத எந்த ஒரு பிள்ளையும் வாழ்க்கையில் வெற்றியை அடைவதென்பது கடினமானதொரு முயற்சியே. ஆகவே வாழ்க்கையின் வெற்றிக்கான முதற்படி எங்கள் பெற்றோர்களை நாம் நன்றாகக் கற்றுக்கொள்வதே. ஒவ்வொரு நாளும் நாம் அனைவரும் வணங்க வேண்டிய தெய்வங்கள் எங்கள் பெற்றோர்களே. நாம் ஒவ்வொருவரும் நமது பெற்றோரிற்குச் செய்ய வேண்டிய கடமை அவர்களது கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைப்பதேயாகும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பார்கள். முன்னறி தெய்வமான உங்கள் பெற்றோர் மீது அன்பு வைத்து அவர்கள் இதுவரை உங்களுக்காகச் செய்த அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மற்றும் விட்டுக்கொடுப்புக்களை

கற்றுக் கொள்வீர்களானால் வெற்றி எப்பொழுதும் உங்களுடனேயே இருக்கும்.

பெற்றோரைக் கற்றுக்கொண்ட நீங்கள் உங்களுடன் உடன் பிறந்த சகோதரர்களையும் கற்றுக்கொள்ளத் தவறிவிடாதீர்கள். எமது உடன்பிறப்புக்கள் எமக்காகச் செய்த பணிவிடைகள் சிறியனவாக இருப்பினும் ஏதோ ஒரு வகையில் அவை எமது வாழ்வை மேன்மையடையச் செய்திருக்கின்றன. படிப்பதற்காகவோ, விளையாடுவதற்காகவோ அல்லது வேறு ஏதாவது தேவை கருதி தமது பொன்னான நேரத்தினை எமக்காக எமது உடன்பிறப்புக்கள் பல தடவைகள் செலவு செய்திருக்கின்றார்கள். பெற்றோரைப் போன்று உடன்பிறப்பக்களும் இவ்வாறாகப் பல சந்தர்ப்பங்களில் எமது வாழ்க்கையை வழிப்படுத்த பல தியாகங்களையும், விட்டுக்கொடுப்புக்களையும் செய்திருக்கின்றார்கள். எமது உடன் பிறப்புக்கள் எமக்காக தியாகம் செய்த விட்டுக்கொடுப்புக்களை கற்றுக் கொள்வதும் எமது வாழ்வின் முன்னேற்றத்திற்கான ஒரு படிக்கல்லே. உடன்பிறப்புக்களின் உயர்வான பண்புகளைக் கற்றுக்கொண்டு முன்னேற்றகரமான வாழ்வைத் தேடிப் பயணிப்போமாக. உடன்பிறப்புக்கள் போன்றே எமது உறவினர்கள் பற்றியும் கற்றுக்கொள்ள மறந்து விடாதீர்கள். எமது பெற்றோர் மற்றும் உடன் பிறப்புக்கள் போன்றே எமது இன்ப துன்பங்களில் அதிகம் பங்கெடுத்து எமக்கு உறுதுணையாக இருப்பவர்கள் உறவினர்கள் என்பதால் அவர்கள் பற்றியும் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

பெற்றோர், உடன்பிறப்புக்கள் மற்றும் உறவினர்கள் என்ற வரிசையிலே அடுத்து நாம் கற்க வேண்டிய உறவு எங்கள் நண்பர்கள், நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் அதிகம் கற்கவேண்டும். பாடசாலை, பல்கலைக்கழகம், மற்றும் பணிபுரியும் வேலைத்தலங்களில் நாம் பலருடன் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். நாம் பழகும் அனைவரையும் நண்பர்களாக ஏற்றுக் கொள்வதில்லை. நண்பர்களைத் தேர்வு செய்வதில் அவசரப்படக்கூடாது. நல்ல நண்பன் உயிரையும் கொடுப்பான் என்பர். வாழ்க்கையில் தோல்வியடைந்த பலரை நாம் சந்தித்தபோது சிறந்த

நண்பர்கள் கிடைக்காமையே அவர்களது தோல்விக்கான காரணமாகக் குறிப்பிட்டனர். உங்கள் நண்பர்களைப் பற்றி கொஞ்சமாவது கற்றுக்கொள்ள முனையுங்கள். எதற்காக ஒருவர் உங்களுடன் நட்புக்கொள்ள முனைகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நல்ல நண்பர்களை இழந்து விடாதீர்கள். தீய நண்பர்களுடன் சேர்ந்து உங்களின் பொன்னான வாழ்க்கையை இழந்து விடாதீர்கள். சந்தோசமான வாழ்க்கை நமக்காகவே காத்திருக்கின்றது. ஒருகணம் உங்களின் நண்பர்கள் ஒவ்வொருவரையும் சிந்தித்துப் பாருங்கள். இதுவரை காலமும் உங்கள் நண்பர்களால் நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள் என்ன என்பதை பட்டியலிடுங்கள். மற்றவரிற்கு நீங்கள் நல்ல ஒரு நண்பனாக இருப்பீர்களானால் உங்களிற்கும் நல்ல ஒரு நண்பன் கிடைப்பான்.

நல்ல ஒரு நண்பனாக இருக்க உங்களிற்கு தகுதி இல்லையென்றால் நீங்களும் நல்ல ஒரு நண்பனைப் பெற முடியாது. உங்கள் நண்பர்களால் நன்மையை விடத் தீமைகளே அதிகம் கிடைத்திருந்தால் நீங்கள் உங்கள் நண்பர்களைப் பற்றி நன்றாகக் கற்றுக்கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். இப்பொழுதே உங்கள் நண்பர்களைக் கற்றுக்கொள்ள முனையுங்கள். நீங்கள் யாருடன் நண்பனாக இருக்கின்றீர்கள் என்பதை வைத்துக்கொண்டே உங்களை எடைபோட முடியும். உங்கள் நண்பர்கள் நல்லவர்களாக இருந்தால் நீங்களும் நல்லவரே. நீங்களும் நல்ல நண்பனாக இருந்து உங்கள் வாழ்விலும் நல்ல நண்பர்களைப் பெற முயற்சியுங்கள். நல்ல நண்பர்கள் கிடைத்தால் என்றும் உங்கள் வாழ்க்கையில் வசந்தம்தான்.

பெற்றோர்களைப் போன்று எமது வாழ்வின் முன்னேற்றத்தில் அதிகம் பங்கெடுக்கும் ஆசிரியர்களையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பன்னிரெண்டு வருட பாடசாலை வாழ்க்கை, நான்கு வருடப் பல்கலைக்கழக வாழ்க்கை மீண்டும் பல வருடங்கள் உயர்கல்வி வாழ்க்கை எனப் பல ஆண்டுகள் கல்வி கற்ற நான் பல சந்தர்ப்பங்களில் எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களை முழுமையாகக் கற்றுக்கொள்ள முடியாமையினால் தோல்விகளைத் தழுவியிருக்கின்றேன். பாடசாலை நாட்களிலே சில பாடங்களைப்

பயிற்றுவித்த ஆசிரியர்களை நான் கற்றுக்கொள்ளத் தவறியமையினால் பல சந்தர்ப்பங்களில் அப்பாடங்களில் தோல்வியை சந்தித்திருக்கின்றேன். சிறுவயதினிலே ஆசிரியர்களின் கண்டிப்புக்கள் மற்றும் தண்டனைகள் எனக்குக் கசப்பானவையாக இருந்தது உண்மைதான். ஆனால் அவ்வாறான தண்டனைகளும், கண்டிப்புக்களும்தான் என்னை வழிப்படுத்தி வாழ்க்கையில் ஓரளவிற்கேனும் வெற்றி பெற வழிசமைத்தன என்பதைப் பிற்காலங்களில்தான் என்னால் உணர முடிந்தது.

எந்த ஒரு ஆசிரியரும் ஒரு மாணவன் தோல்வியடைவதற்குக் காரணமாக இருப்பதில்லை. ஒரு ஆசிரியர் மாணவர்கள் மீது அதிகளவில் கட்டுப்பாட்டுடனும், கண்டிப்புடனும் இருக்கின்றார் என்றால் அந்த ஆசிரியர் மாணவர்களின் வாழ்க்கையைச் செப்பனிடுகின்றார் என்பதே அர்த்தமாகும். கல்வி கற்றவரிற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். அந்தக் கல்வியைக் கற்பித்த ஆசிரியர்களை நன்றாக புரிந்து கொண்ட மாணவனிற்குத் தோல்வியே வருவதில்லை. உங்கள் ஆசிரியர்கள் ஒவ்வொருவரையும் கற்றுக்கொள்ளுங்கள். உங்களிற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள், ஆசிரியர் இல்லாத மாணவ உலகம் வெற்றிகளைப் பெறுவதற்கு அதிகம் முயற்சிக்க வேண்டியிருக்கும். உங்கள் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக இருக்கவேண்டும் என விரும்புகின்றீர்களா? உங்கள் ஆசிரியரைக் கற்றுக்கொண்டு அவர்களின் கண்டிப்புக்களையும், கட்டுப்பாடுகளையும் மதித்து அவர் மீது அன்பு வைத்து பாடசாலைக் கல்வியையும் வாழ்க்கை என்னும் பாடத்தையும் கற்பீர்களானால் உங்கள் வாழ்க்கையில் என்றும் வெற்றியே.

இத்தனை நபர்களையும் கற்றுக்கொண்ட நாம் எமது சமூகத்தையும் கற்றுக் கொள்வதில் தவறில்லையே. நாம் வாழும் இந்தச் சமூகம் எம்மை ஒரு நற்பிரஜையாக வாழ பல வழிகளில் துணைபுரிந்துள்ளது. எமது சமூகத்திற்கான தேவை என்ன? எமது சமூகத்தைக் கட்டிஎழுப்புவதில் எம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு என்ன? இவ்வினாக்களுக்கு விடை காண்பதனூடாக எங்கள்

சமூகத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். எமது சமூகத்தில் எமக்கென ஒரு தனியிடம் எப்போதும் இருக்கின்றதென்பதை மறந்துவிடாதீர்கள். நாம் செய்கின்ற ஒவ்வொரு நடவடிக்கைக்குமான நன்மை, தீமைகள் எமது சமூகத்தின் பிரதிபலிப்பாக அமைந்துவிடுகின்றன. இந்த சமூகம் எனக்கு என்ன செய்கின்றது என்பதை எதிர்பாராமல் இந்த சமூகத்திற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படுவோமாயின் நல்ல ஒரு சமூகத்தை எம்மால் கட்டி எழுப்ப முடியும். பசித்தவனுக்கு ஒருவேளை உணவளிப்பதைவிட அவன் தொடர்ந்து பட்டினியால் வாடுவதைத் தவிர்ப்பதற்கான வழிமுறையை அவனுக்கு போதிப்பதே சிறந்த ஒரு முறையாகும்.

மக்களுக்குப் பயன்படுகின்ற கனி மரங்கள் எங்கோ தூரத்தில் ஒரு வனாந்தரத்தில் அல்லது கொடிய மிருகங்கள் வாழும் அடர்ந்த காட்டுக்குள் வளர்ந்திருந்தால் யாருக்குப் பயன்படும்? அதனால் மக்களுக்கு எந்தவிதத்திலும் பயனே இல்லை. அவ்வாறு யாரும் அணுக முடியாத இடத்தில் அம்மரம் இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமல் போனாலும் ஒன்றுதான். ஆனால், பயன்மிகு கனிமரம் ஊருக்கு நடுவே வளர்ந்திருந்தால், கடும் வெயிலில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள அதன் நிழலில் தங்கிக் களைப்பாறவும், சுவைமிகுந்த கனிகளைப் பறித்து உண்டு மகிழவும் மக்களுக்கு எவ்வாறு உதவுகின்றதோ, அதே போல உதவி செய்கின்ற மனம் என்கின்ற மரமானது நல்ல குணங்களை உடையவனிடத்தில் இருக்கும்போது மக்களுக்குப் பல வகையிலும் பயனுடையதாக அமையும். அதேபோல. மருந்தாகப் பயன்படுத்தக் கூடிய மரம் ஒன்று மக்கள் வாழ்கின்ற பகுதியில் வளர்ந்திருந்தால் எவ்வாறு பலருக்கும் பலவகையில் பயன்படுகின்றதோ, அது போல உங்களிடம் இருக்கின்ற 'மற்றவர்க்கு உதவி செய்கின்ற நல்ல மனம்' உங்கள் பெற்றோர், உறவினர்கள், மற்றும் சமூகத்திற்கு சந்தோசத்தையே கொடுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. 'தனக்கென வாழ்பவன் இருந்துமே இறக்கின்றான். பிறர்க்கென வாழ்பவன் இறந்தாலும் இருக்கின்றான்' பிறர்க்கென வாழ நாம் ஒவ்வொருவரும் எம்மைத் தயார்படுத்த வேண்டும். இன்று எம்மில் பலர் நாடுகடந்து தூர தேசங்களில் வாழ்ந்தாலும் பிறந்த மண்ணையும், கல்வி கற்ற பாடசாலையையும்,

தாம் வாழ்ந்த பிரதேசத்தையும் மறந்துவிடாமல் ஏதோ ஒரு விதத்தில் தங்களாலான உதவிகளைப் புரிந்த வண்ணமே இருகின்றனர் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்களைப் போன்று நாம் வாழும் சமூகத்திற்கு எம்மால் முடியுமான நன்மைகளை வழங்க வேண்டியது எமது கடமையாகும். சில வேளைகளில் எமது சமூகத்திற்கு நன்மையை வழங்க முடியாது போனாலும் எம்மால் எமது சமூகத்தின் நற்பெயர் பாதிப்புறாது இருந்தால் அதுவே நாம் எமது சமூகத்திற்கு செய்யும் மிகப்பெரிய நன்மையாகும். சமூகத்தைக் கற்றுக்கொள்ளுங்கள் சென்ற இடமெல்லாம் உங்களிற்கு சிறப்புகள் உண்டாகும்.

இறுதியாக உங்களை நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குள் இருக்கும் திறமையை நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. உங்களிடம் இருக்கும் திறமையை அடையாளங்கண்டு அதனைக் கெட்டியாகப் பிடித்து வாழ்க்கையில் முன்னேறுங்கள். உங்களிடம் இருக்கும் நல்ல குணத்தினையும் தீய குணத்தினையும் நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். உங்களை நீங்கள் முழுமையாகக் கற்று எது சரி எது பிழை என்பதை உணர்வீர்களானால் நீங்கள் போகும் பாதை எப்பொழுதும் வெற்றிப் பாதையாகவே அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

வாழும்போது மாத்திரமன்றி வாழ்ந்த பின்பும் உங்கள் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மற்றும் அனைவரதும் மனதில் நிலைத்திருக்க வேண்டுமா? அனைவரையும் கற்றுக்கொள்ளுங்கள் என்றென்றும் வெற்றி உங்கள் வசமே.

**கலாநிதி நவரத்தினம் ரவீந்திரகுமாரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்

# உற்பத்தித்திறன் விருத்தியும், பாடசாலை முகாமைத்துவமும்

"வளங்கள் என்பது அரிதானவை அரிதான வளங்களில் நிறைவான பயன்பெற வேண்டின் அவை விளைத்திறன் (Efficiency), வினைத்திறன் (Effectiveness) உடையதாக செயற்பட வேண்டும்."

விளைத்திறன + வினைத்திறன் = உற்பத்தித்திறன்

எனவே இவை குறைந்த உள்ளீட்டின் மூலம் கூடிய வெளியீட்டை பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது.

$$\frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}} = \text{உற்பத்தித்திறன்}$$

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மனிதவளம், பௌதிகவியல், நிதிவளம், தகவல் (தரவு), வளம் என பலதரப்பட்ட வளங்கள் கையாளப்படுகிறது. எனினும் அவை வினைத்திறன் உடன் செயற்படுத்தப்படுகிறதா? என்பது கேள்விக்குரியதாகிறது. பல இடங்களில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருந்தபோதும் உரிய பாடங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. சில பாடசாலைகளில் மாணவர் தொகையை விட கட்டிடங்களில் கூடுதலாகவும், சில இடங்களில் மாணவர் மரங்களின் கீழ் இருந்த கல்வி பயில்விக்கும் நிலைமையும் காணப்படுகிறது. சில பாடங்களில் அளவுக்கதிமாக நிதியை கொண்டிருந்த போதும் உரிய அளவு வெளியீடுகளைத் தருவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் கல்விசார் முகாமைத்துவக் குறைபாடே. உற்பத்தித்திறன் உரிய வகையில் நடைமுறைப் படுத்தப்படுமாயின் வளங்கள் சிக்கனமானதாகவும், வினைத்திறன் உடையதாகவும் பயன்படுத்தப்படும்.

உற்பத்தித்திறன் நடைமுறைப்படுத்தும் போது உற்பத்தித்திறன் கருவிகளை பின்பற்ற வேண்டும். அவையாவன 5S, KAIZEN, தரவளையம், வீண்விரயம் என்பனவாகும். இவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பாடசாலைகள் சமூக சிந்தனையும் தொழில்திறன் உடைய ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். பாடசாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மனித வளங்கள் சமூக அபிவிருத்தியில் பங்கேற்கின்றன. இவை விளைத்திறனும், வினைத்திறனும் உடையதாக வெளியேறும் போது ஒட்டுமொத்தமான சமூகமும் அபிவிருத்தியடைகிறது. பாடத்திட்டத்தில் கூட உற்பத்தித்திறன் ஒரு பாடமாக்கப்பட வேண்டும் அப்போதுதான் பிள்ளைகள் சரியான எதிர்கால இலக்கை நோக்கி நகர முடியும்.

5S என்பது உற்பத்தித்திறனை அடைவதற்கான ஒரு கருவியாகும். இது யப்பானிய சொல்லான செய்ரி, செய்தேன், செய்சோ, செய்கெத்சு, சிற்சுகே என அழைக்கப்படும். செய்ரி என்பது தேவையற்ற பொருட்களை வேலைத்தளங்கள் அல்லது எமது சூழலில் இருந்து நீக்குவதைக் குறிக்கும். எமது வீடுகளிலும் சரி,

பாடசாலைகளிலும் சரி, அலுவலங்களிலும் சரி தேவையற்ற பொருள் நிறையவே காணப்படுகின்றது. குறிப்பாக வீடுகளில் பழைய தளபாடங்கள், பாவனைக்குதவாத கட்டடப் பொருட்கள், உடைகள், கடதாசிகள், பாத்திரங்கள் என்பன காணப்படும். அவை நாம் படுக்கும் அறைகளை தூசு, மற்றும் மகிழ்ச்சியற்ற ஒரு சூழலை உருவாக்கிவிடும். இதனால் வாழ்க்கை நோயுற்றதாய், நிம்மதியற்றதாய் போய்விடும். அதுமட்டுமல்ல எமது தேவைகளை விரைவாக நடைமுறைப்படுத்த முடியாது போய்விடும்.

அதே போன்று பாடசாலைகளிலும் பயனற்ற பொருட்கள், பழுதடைந்த தளபாடங்கள், புத்தகங்கள் என ஏராளமான பொருட்கள் வகுப்பறைகளை முடக்கியிருக்கும் அதே வேளை மாணவர் கல்வி பயில இடமின்றி மரங்களின் கீழ் கல்வி பயில்வர். அத்துடன் வகுப்பறையின் ஒருபுறம் பழுதடைந்த பொருட்கள் காணப்படும் போது மாணவரின் கற்றலையும் அசாத்தியமாக்கிவிடும். இதனால் கற்பித்தல் செயற்பாடு பாதிப்படையும்.

நாம் இச் செய்ரி (Sort it) நடைமுறைப்படுத்தும் போது முதலில் தேவையற்ற பொருட்களை தரம் பிரிக்க வேண்டும். அதாவது தேவையற்றது ஆனால் பெறுமதியுடையது. தேவையற்றது, அதேவேளை இலகுவில் அகற்ற கூடியது. தேவையற்றது, இலகுவில் அகற்றமுடியாதது. சிலது தேவையற்றது இருப்பதும் எதிர்காலத்தை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது. இதில் தேவையற்றதும், பெறுமதியற்றதுமான பொருட்களை அழித்துவிட வேண்டும். அதேவேளை தேவையான அகற்ற முடியாதது. புத்தாக்க உணர்வோடு மாற்று உபாயம் கையாள வேண்டும். உதாரணமாக அகற்றமுடியாத மரம் காணப்படின் அவற்றை மாணவர் ஓய்வு நேரத்தில் அமரும் வகையில் அழகுற வடிவமைக்க வேண்டும். அதேவேளை தேவையற்றது. ஆனால் எதிர்காலத்தில் பேண வேண்டியவைகள் அதற்கென ஒரு இடத்தில் பேண வேண்டும்.

“செய்தோன்” என்பது ஒவ்வொரு பொருளையும் நாம் இலகுவில் கையாளக்கூடிய விதத்தில் ஒழுங்கமைத்தல், வீட்டில் உடைகள் காணப்படும் அலுமாரியை பொறுத்தவரையில் மேலுள்ள தட்டில் தாய், தந்தையுடைய உடைகளை பிரிந்து அடுக்க வேண்டும். கீழுள்ள தட்டில் பிள்ளைகளின் உடைகளை ஒழுங்கமைக்க வேண்டும். அதே போல் சமையலறையில் சுவைச்சரக்கு மற்றும் பாவனைப் பொருட்களுக்கு பெயர்ச் சுட்டியிட வேண்டும். மின்சார உபகரணங்கள் பெயர்ச் சுட்டியிட வேண்டும். உதாரணமாக லைற் இல L1 என குறிப்பிட்ட அதற்குரிய ஆழியில் L1 என குறிப்பிட வேண்டும். அதேபோல் பாடசாலைகளில் மாணவர் நடந்து செல்லல் நடைபாதைகளில் மஞ்சள் கோட்டின் அடையாளமிடல் வேண்டும்.

மின்சார உபகரணங்களுக்கு பெயர்ச் சுட்டிகள் இடுதல், நூலகத்தில் கோவைகளில், புத்தகங்களுக்கு கலர் குறிகள் இடுதல், வகுப்பறைகளில் மேசை, கதிரைகளை வைக்கும் இடங்கள் தீந்தை (Paint) மூலம் நிழற்படுத்தல், அதிபர் அலுவலகத்தில் கோவைகள் அலுமாரிகளின் சுட்டிகள் கலர் சுட்டிகள் இடப்படும் போதுதான் பாடசாலை பூங்கா, மைதானம் போன்றவற்றை சுட்டிகள் இட்டும் தூய்மையாகவும், பராமரித்து வருவதும், வகுப்பறைகளில் ஒவ்வொரு வகுப்புக்கு ஒரு நிறம் என வழங்குவதும் அதன்படி மாணவர் புத்தகம், கொப்பிகளின் உறை, புத்தகப்பை, வகுப்பறைக்கான வர்ணப்பூச்சுக்களை நிர்மானித்தல் இதன் மூலம்

மாணவரிடையே ஒரு ஒழுக்கத்தையும், உயர் நோக்கத்தையும் உருவாக்க முடியும்.

பாடசாலை நுழைவாயிலில் பாடசாலை தளவரைபடம், காட்சிப்படுத்தல் பாடசாலை அதிபரின் அறையிலும் பாட, வகுப்பு ரீதியாக ஆசிரியர்களின் புகைப்படம், பெயர், தொலைபேசி இலக்கங்களும், அவர்கள் உள்வருகை, வெளிச்செல்லுகை குறியீட்டின் மூலம் காட்சிப்படுத்தல், ஆசிரியர்கள் லீவு விபரங்களை வரைபுகள் மூலம் காட்சிப்படுத்தல், பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை குறிகள் செய்தல், முதலியவற்றை மேற்கொள்வதன் ஊடாக அதியுயர் உற்பத்தித்திறனை ஏற்படுத்த முடியும். அத்துடன் எந்தவொரு சேவையையும் விரைவாக வழங்க முடிவதோடு நேரமுகாமை பேணப்படும். அத்துடன் ஆசிரியருக்கான நேர அட்டவணையை முறையாக அமைப்பதன் மூலம் எல்லா ஆசிரியர்களதும் உயர்சேவையை பெறமுடியும்.

செய்சோ என்பது தூய்மையைப் பேணுதல். எமது உற்பத்தித்திறனில் கூடுதலான பாதிப்பைத் தருவது அசுத்தமான சூழல், வகுப்பறை அசுத்தமாக காணப்படின் மாணவர்கள் நோயால் பாதிப்படைய நேரிடும். அதேபோல் பாடசாலை வளாகம் நீர் தேங்கி அசுத்தமாக காணப்படின் மாணவர்கள் நோயால் பாதிப்படைய நேரிடும். அதே போல் டெங்கு முதலான நோய்களை தோற்றுவிக்கும். அத்துடன் அங்கு கல்விபயிலும் மாணவர்களும் அதற்கேற்ப பயிற்றப்படுவதால் அவர்களுடைய வாழ்க்கையில் அது நடத்தையாக மாற்றம் பெறும். எனவே பாடசாலை சூழல் சுத்தம் பேணப்படுதல் அவசியம். இது மாணவரிடையே அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தியடைய செய்யும் குறிப்பாக அவை அறிவாக போதிக்கப்படுவதோடு செயன்முறையிலான திறன் ஊட்டப்படுவதோடு அவர்களுடைய மனதில் நேர்வகையான மனப்பாங்குகள் உருவாகும். அதுவே அவர்களின் நல்ல நடத்தைக்கு வழிவகுக்கும். இதனை எமது வீடுகளிலும் கடைப்பிடிக்க முடியும். அதன் மூலம் பிள்ளைகளிடையே நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும். காலையில் எழுந்தவுடன் காலைக்கடன் கழித்தல், குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடைகளை மின் அழுத்தியில் அழுத்தி அணிந்து செல்லும் போது மாணவரிடையே நல்ல எண்ணங்களையும், மனப்பாங்கையும், நடத்தையையும் உருவாக்கும். இதுவே ஒட்டுமொத்தமான நாட்டின் அபிவிருத்திக்கு ஆணிவேராக அமையும்.

"செய்கெத்சு" என்பது "முறையை தாபித்தல்" அதாவது கிரமங்கள், நிர்ணயங்கள், முறைமையை தாபித்தல், பராமரிக்கவும், சுத்தத்தை பேணுவதற்காகவும், சேவைகளை வழங்குவதற்காகவும், கிரமங்கள், நிர்ணயங்கள், முறைமைகளை தயாரித்தல். இது ஒரு வகையான பயிற்சி தொடர்ச்சியான, தொடர்ச்சியான பயிற்சி மூலம் எல்லோரிடம் நேர் மனப்பாங்கை உருவாக்கும். இதன் மூலம் சீரான ஒழுங்கை பின்பற்ற முடியும்.

"சிட்சுகெ" என்பது தொடர்ச்சியாக பேணுதல். அதாவது அர்ப்பணிப்புடன் இவற்றை தொடர்ச்சியாக மேற்கொள்ளவும், இதனை தமது வாழ்வின் ஒரு பகுதியாகவும் கொள்ள வழிசமைத்தல். எனவே இது ஏற்கனவே சொல்லப்பட்ட நான்கு விடயங்களை செய்ரி, செய்தோன், செய்சோ, செய்கெத்சு ஆகியவற்றை இடைவிடாமல் பின்பற்றுவதைக் குறிக்கும். பாடசாலையைப் பொறுத்தவரையில் மாணவரிடையே வகுப்பறை, ஒழுங்கமைப்பு, பாடங்களை அழகுபடுத்தல், விதிமுறைகளைப் பின்பற்றல் போன்றவற்றை தொடர்ச்சியாக பின்பற்ற செய்ய

வேண்டும். அப்போது தான் இளவயதிலேயே மாணவர்களின் மனப்பாங்கு நடத்தைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நாட்டின் அபிவிருத்தியின் இடைவெளிக்குரிய காரணம் சமூகத்திடையே நல்ல மனப்பாங்கையும், நடத்தையும் வளர்க்கத் தவறியமையே. மாணவர் சமுதாயத்திடமே எளிதாக புதிய கருத்துக்களையும், புத்தாக்க சிந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கையும் உருவாக்க முடியும். அதுமட்டுமன்றி மாறிவரும் சமூகத்திடம் கூடுதலான ஆதிக்கம் செலுத்துபவர்கள் மாணவர்களே. எனவே நாட்டின் அபிவிருத்தியில் பாடசாலை முகாமைத்துவமே அளப்பரிய பங்காற்றுகிறது.

“கைஸன்” (KAIZEN) என்பது ஒரு நிறுவனத்தில் தொடர் மேம்பாட்டை அடைவதற்கு ஒரு வழிமுறையாகும். நாம் வழங்குகின்ற சேவை வாடிக்கையாளர் திருப்திக்கு ஏற்ப மேம்பாடைய வேண்டியது இன்றியமையாதது. இவ்வாறான மேம்பாட்டின் போது சேவையின் தரம், தொழில்நுட்பம், செயல்நிலை, கலாசாரம், விளைத்திறன், வினைத்திறன் மேம்பாடு ஏற்படுத்தலைக் குறிக்கும். குறிப்பாக பாடசாலையைப் பொறுத்தவரையில் ஆசிரியர் கற்பித்தலில் மாணவர் திருப்தி, விளங்கும் தன்மையை அதிகரிக்க வருடாவருடம் கற்பித்தல் முறைகளில் மாற்றங்களையும், மேம்படுத்தலையும் ஏற்படுத்த வேண்டும். இது பாடசாலை அடைவுமட்டத்தில் படிப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்தவல்லது.

கைஸன் என்பது யப்பானிய சொல் இதில் “கை” - என்பது மாற்றம் எனவும் “ஸன்” - என்பது நன்று என்பதையும் குறிக்கும். எனவே தைஸன் என்பது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தலைக் குறிக்கும். இதனை பின்பற்றுவதன் மூலம் பாடசாலைகளில் அடைவு நிலைகள் உயர்வடையும் சேவை வழங்கல் விரைவுபடுத்தப்படுவதோடு தரமானதாக்கப்படும். தொடர்பாடல் முறைமைகள் விருத்தியடையும் ஆசிரியர்கள் கற்பித்தலில் தாம் விடும் தவறுகளை உணர்ந்து சரி செய்து கொள்ளமுடியும். இதன் மூலம் உற்பத்தித்திறன் விருத்தியடையும்.

தரவளையம் (Quality Circle) என்பது நிறுவனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்பாடாகும். அங்கு காணப்படும் குறைபாடுடைய அல்லது பின்னடைவிலுள்ள திறன்களை மேம்பாடு அடையச் செய்வதற்கான குழுக்களை அமைத்து அதனூடாக நிறுவனத்தின் தரத்தை மேம்படுத்தல் ஒரு செயற்பாடாகும். இத்தரவளையம் ஒரு பாடசாலையைப் பொறுத்தவரையில் பல செயற்பாடாக முடியும். இதில் திறனுள்ள ஒரு குழு ஏனைய திறனற்ற அல்லது திறன் குறைந்த அணிக்கு வலுவூட்டும் ஒரு செயற்பாடு குறிப்பாக ஒரு வகுப்பறையில் கணிதபாடத்தில் மடக்கை அல்லது கேத்திர கணிதப்பகுதியில் சில மாணவர் பின்னடைவும் காணப்படின் கணிதபாட ஆசிரியர் ஒரு தரவளையத்தை உருவாக்கி அதில் குறித்த பகுதியில் தேர்ச்சியுடைய மாணவர் ஆசிரியர்களை ஒன்றிணைத்து 4 - 5 பேர் கொண்ட குழு மூலம் அந்த மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்க முடியும். அதேபோல் தமிழ்ப்பாட ஆசிரியர்கள் 10 பேர் காணப்பட அதில் அனுபவமும், ஆற்றலும் மிக்க நான்கு ஆசிரியர்கள் தரவளையம் உருவாக்கி அதிலிருந்து ஏனைய ஆசிரியர்கள் வலுவூட்டல் மேற்கொள்ள முடியும். இதன் மூலம் ஒட்டுமொத்தமான பாடசாலையும் சக்திபெறும். இதனூடாக பாடசாலையின் உற்பத்தித்திறன் மட்டம் அதிகரிக்கும்.

அதேவேளை ஒரு வகையான வீண்விரயம் (Eight wastage) உற்பத்தித்திறனை பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

1. தேவையற்ற அசைவு (Unnecessary Movement)
2. தேவையற்ற இருப்பு (Unnecessary Stock)
3. தேவையற்ற செயற்பாடு (Exceeding Process)
4. தவறான உற்பத்தி (Faulty Product)
5. மேலதிக உற்பத்தி (Over Product)
6. தேவையற்ற இடமாற்றம் (Unnecessary transport)
7. காத்திருப்பு (Waiting time)
8. தேவையற்ற உணர்வு வெளிப்பாடு (Unnecessary Motion)

பாசாலைகளைப் பொறுத்தவரையில் குறிக்கப்பட்ட 40 நிமிட நேரத்தில் ஆசிரியர் மாணவர்களை வேதியம் கொண்டு சென்று கற்பிக்கும் போது மாணவர்கள் அசைவுகளால் 10 நிமிடங்கள் வீணாகின்றது. அதேபோல் தர உள்ளீட்டில் அளவுக்கதிமாக பொருட்களை கொள்வனவு செய்து வீண்விரயத்தை ஏற்படுத்துகிறது. அதேபோல் தேவையற்ற மேலதிக செயல் மற்றும் தவறான உற்பத்தி அதாவது பாடசாலை சில ஆசிரியர்கள் தமக்கு தெரியாதவற்றை தவறாக கற்பிக்கின்றனர். அது மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் மாங்கொக்கு" என்ற பாடலை மாங்கொக்கு என பிரித்து பொருள் சொல்லும் போது அது பாடலை தவறான அர்த்தத்தை கொடுக்கும். இது மாணவரிடம் தவறான எண்ணக்கருத்துக்களை ஏற்படுத்தும். அதேபோல் "ழ", கர, "ல" கர, "ள" கர வேறுபாடு தவறாக போதிக்கப்படுமாயின் அது தவறான பாடத்தைத் தரும். மேலும் சில ஆசிரியர்கள் ஒரே பாடத்தை தமது வசதிக்காக மீளமீள கற்பித்துக் கொள்ளலாம்.

இது வீண்விரையமாகும். அதேபோல் தேவையற்ற இடமாற்றம் அதாவது அடிக்கடி ஆசிரியர் இடமாற்றம் செய்வது, வகுப்புக்களை மாற்றம் செய்வது போன்றன வீண்விரயத்தை ஏற்படுத்தும். மேலும் காத்திருப்பு என்பது மிகப்பெரிய வீண்விரயமாக ஆசிரியர் வகுப்பறை சமூகமளித்த போது மாணவர்கள் 40 நிமிடம் காத்திருக்கின்றன. இது 1600 நிமிடங்கள் வீண்விரயமாக்கும். எனவே இது மிகப்பெரிய வீண்விரயமாகும்.

தொகுத்து நோக்கும்போது உற்பத்தித்திறன் விருத்தி என்பதே பாடசாலை முகாமைத்துவத்தின் வெற்றியாகும். பாடசாலை அதிபர் அது பற்றிய பூரண அறிவுடையவராய் இருப்பராயின் வீண்விரயங்களைத் தவிர்த்து எப்பொழுதும் பாடசாலையை இயங்கு நிலையிலும் திறன் மேம்பாட்டுடனும் வைத்திருக்க முடியும். அப்பொழுது பாடசாலையின் விளைவு அதன் அடைவு மட்டம் அதிகரித்தல் உடனடி வெளியீடாகவும், நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு நீண்டகால வெளியீடாகவும் காணப்படும். இதுவே ஒரு நாட்டின் தேசிய குறிக்கோளுடன் பாடசாலையின் இலக்கை இணைக்க ஒரு உன்னத செயற்பாடாகும்.

**சீ. குணபாலன்**
பிரதேச செயலாளர், துனுக்காய்.

# இலங்கைப் பாடசாலைகளின் கல்வி முறைமை

காலனித்துவ காலத்துக்கு முன்னர் புராதன காலத்தில் இருந்தே, இலங்கையினது பண்பாட்டு மரபினில் கல்வி மிக முக்கியமான இடத்தை வகித்தது. கீழைத்தேய சம்பிரதாயங்களைப் பின்பற்றிய கற்றல் முறைமை ஒரு செல்வமாகக் கருதப்பட்டது. சமய அறிவுரைகளையும், பிரயோகங்களையும் பயிற்றுவிப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாக இருந்தது. எனினும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்வி நிலைகளிலும், எழுத்தறிவிலும் நாடு குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை அடைந்து கொண்டது. இலங்கை கல்விக்காக அர்ப்பணிப்பது மட்டுமன்றி, அபிவிருத்திக்கான அதன் நிகழ்ச்சி நிரலில் முதன்மை விடயமாக கல்வியை கொண்டிருப்பதை தனது செயல்களினால் எடுத்துக் காட்டவும் செய்கிறது.

வளர்ச்சியடைந்துவரும் இன்றைய உலகில் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதிலும், அதன் மூலம் சமூகத்தினைத் தாங்கி நிற்கும் ஊன்று கோலாகவும் நிறுவனங்கள் காணப்படுகினறன. அவற்றுள் பாடசாலைகள் மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இவற்றின் வினைத்திறனான வளர்ச்சியே சமூக வளர்ச்சிக்கும், நாட்டின் விருத்திக்கும் அடிப்படையானதாக அமைகின்றது. இவ்வகையில் சிறந்த கல்வியையும், ஒழுக்கத்தையும் வழங்கி சிறந்த உயிர்த்துடிப்புள்ள, வினைத்திறனான சமூகத்தை உருவாக்குவதில் பாடசாலைகள் முக்கியமானவையாகத் திகழ்கின்றன.

நாட்டில் சிங்களம், தமிழ் ஆகிய இரு பிரதான மொழிகள் காணப்படுகின்றன. தமிழர்கள் மற்றும் பெரும்பான்மையான முஸ்லிம்களது தாய்மொழியாக தமிழ் விளங்குகிறது. பிரதானமாக சிங்களமும், தமிழும் அரச பாடசாலைகளின் போதனா மொழியாக உள்ளது. பொதுவாக சிங்கள மாணவர்கள் சிங்கள மொழி மூலமும், தமிழ் மாணவர்கள் தமிழ் மொழி மூலமும், முஸ்லிம் மாணவர்கள் அவர்களது தெரிவிற்கேற்ப இரண்டில் ஓர் மொழியில் கல்வி பயிலுகின்றனர். எனினும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் பாடசாலைகளும் உள்ளன. மூன்று மொழிகளுக்குரிய பாடசாலைகளும் நாடெங்கிலும் காணப்படுகின்றன. மற்றும் பல்கலைக்கழகக் கல்வி பிரதானமாக ஆங்கிலத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை பாடசாலை முறைமையில் 10012 அரச பாடசாலைகளும், அனுமதி பெற்றுள்ள 104 தனியார் பாடசாலைகளும், பொருத்த சூழலில் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் 736 பிரிவெனாக்களும் உள்ளன. இதற்கு மேலதிகமாக சர்வதேச பாடசாலை வலையமைப்பும் நாடு பூராகவும் நடைமுறையில் உண்டு. சமூக அபிவிருத்தியில் எமது நாடு அபிவிருத்தியடைந்துவரும் ஏனைய நாடுகளிடையே ஒரு முன்மாதிரியாக கொள்ளப்படக் கூடிய கல்வியைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதில் இப் பாடசாலைகள் ஆற்றியுள்ள சேவை அளப்பரியதாகும். அரசினால் முதலாம் தரத்திலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசமாக கல்வி வழங்கப்பட்டுள்ள அதேவேளை கல்வியில் சமவாய்ப்பும், சம உரிமையும் உறுதிப்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசின் இலக்கு, இலங்கையை தென்கிழக்காசியாவின் அறிவுக் கேந்திர நிலையமாக மாற்றுவதாகும். இந்தக் குறிக்கோளை உறுதிப்படுத்திக் கொள்ள முழவது எல்லாப் பாடசாலைகளையும் அதிசிறந்த மத்திய நிலையங்களாக அபிவிருத்தி செயவதனூடாகவே ஆகும். கல்வி அமைச்சின் மூலம் பாடத்திட்டத்தில் அடங்கும் எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்காக வசதிகள் அடங்கிய 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் மற்றும் அவற்றுடன் இணைந்த 5000 போசணைப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கும், பிரமாணங்களுக்கேற்ப மாகாணக் கல்வித் திணைக்கங்களால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளை வரைகுறித்தல் செயற்பாட்டின் அடிப்படையிலும், குறித்த பாடசாலைச் சமூகத்தினரின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டு பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் நாடாளவிய ரீதியில் தேர்ந்தெடுத்த ஒர தொகைப் பாடசாலைகளை 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து அபிவிருத்தி செய்யப்பட்டது. அவ்வாறு தேர்ந்தெடுத்த பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதிகளை வழங்கியதுடன் சிறு திருத்த வேலைகள், பராமரிப்பு வேலைகளுக்கும், கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டும் பாடசாலை மட்ட கற்றல் மேம்பாட்டு நிதியுதவி வழங்கப்பட்டது. அப்பிரதான வேலைத்திட்டத்துக்கு இணைவாக பிரதேச ரீதியில் ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலைக்கிடையில் வினைத்திறன் மிக்க மாணவர் பரம்பலை உறுதிப்படுத்துவதற்கு தேர்ந்தெடுத்த போசணை ஆரம்பப் பாடசாலைகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் நிதியுதவி வழங்கப்பட்டது.

இங்கு போசணைப் பாடசாலைகள் தரம் 1 – 5 வரை அமையும். இடைநிலைப் பாடசாலைகள் தரம் 6 – 13 வரை தரங்களைக் கொண்டமைவதுடன் க.பொ.த (உ/த) பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைக் கொண்டமைந்திருக்கும். எனினும், இப்பாடத்துறைகளிற்கு மேலதிகமாக தொழினுட்பவியல் பாடத்துறை, முதற்கட்டமாக தொழினுட்ப ஆய்வு கூடங்களுடன் கூடிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 12ம் தரத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வேகமாக மாற்றம் பெறும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப தேர்ச்சியுடன் கூடிய மாணவர் பரம்பரையொன்றை கட்டியெழுப்புவதற்காக, பாடசாலை மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் நோக்குடனேயே "தொழினுட்பவியல் பாடத்துறை" எனும் பெயரில் புதிய பாடத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டமைப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. Super AB with Technical Streams
2. AB with Science streams
3. 1C with Non - Science classes (1 - 11 and A/L)
4. Type II (Grade 1 - 11)
5. Type III (Grade 1 - 5 or 1 - 8)

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியானது, அந்நாட்டின் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. கல்வி கற்ற ஒரு சமுதாயம் உள்ள ஒரு நாகரிகமுள்ள நாட்டிலேயே, மனித நேயம் படைத்த மக்களைக் காணமுடியும். அதனைக் கருத்தில் கொண்டே ஒவ்வொரு நாட்டு அரசாங்கங்களும் கல்விக்கான மூலதனத்தை அதிகளவு செலவிட முன்வருகின்றன.

எனவே எமது நாட்டின் கல்வியானது, நல்ல விழுமியங்களை உடையதாகவும், சிறந்த நோக்கங்களை கொண்டதாகவும் அமைந்திருத்தல் முக்கியமானதாகும். அந்தவகையில் எமது பாடசாலைகளின் கல்வி முறைமையானது எமது சூழல், கலை, பண்பாட்டு விழுமியங்களை உடையதாகவும், எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்


1. Ministry of Education, Sri Lanka, (2012). The National Strategic Plan for the General Education Sector, Colombo, State Printing Corporation.

2. கல்வி அமைச்சு, இலங்கை, (2008), அனைவருக்கும் கல்வி, கொழும்பு, அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம்.

3. கல்வி அமைச்சு, இலங்கை, (2013), பாடசாலைத் திட்டமிடல் பற்றிய வழிகாட்டல் கைநூல், கொழும்பு, சிசர பதிப்பகம்.

4. ஆசிரியர், அன்பு ஜவஹர்ஷா, (2012), திசைமாறும் 1000 பாடசாலைத் திட்டம், கொழும்பு, cbc பதிப்பகம்.

5. பேராசிரியர் க. சின்னத்தம்பி பொன்விழா மலர், தி. வேல்நம்பி, (2010), பாடசாலையை நெறிப்படுத்துவதில் அதிபரின் பங்கு, கொழும்பு, குமரன் பதிப்பகம்.

6. சுற்றுநிருபம் 25/2013, க.பொ.த (உ/த) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்.

7. https : // ta. Wikipedia. org / Wiki / இலங்கையில் கல்வி.

8. https : //en. wikipedia. org/wiki/G.C.E (A/L) Sri Lanka.

9. Central Bank of Sri Lanka, June 2014, Sri Lanka Socio - Economic Data 2014 - Vol xxxviii, Colombo, Central Bank Printing Press.

10. ந. அனந்தராஜ், (2005), தேசியத்தை நோக்கிய கல்வி, வல்வெட்டித்துறை, நந்தி பதிப்பகம்.



திருமதி. தட்ஷாஜினி வஜிகரன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.

# புற்றுநோயும், புற்றுநோயை தவிர்ப்பதற்கான எளிய வழிமுறைகளும்.

புற்றுநோய் எனப்படுவது ஆரம்பகாலங்களில் ஒரு உயிர்கொல்லி நோயாக காணப்பட்டது எனினும், மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், சிகிச்சை முறைகளும் புற்றுநோய் எனும் சவாலை ஓரளவிற்கேனும் எதிர்கொள்ளக்கூடிய சூழலை ஏற்படுத்தியுள்ளது.

புற்றுநோய் உடலின் பல்வேறு அங்கங்களிலும் பல்வேறு இழையங்களிலும் ஏற்படுகின்றது அல்லது குறிப்பிட்ட ஒரு அங்கத்தில் வெவ்வேறு வகையான புற்றுநோய்களும் ஏற்படுகின்றன. புற்றுநோயின் வகை பாதிப்புக்குட்பட்ட உடலின் பகுதி என்பனவற்றிற்கமைய அதன் தீவிரம், அறிகுறிகள், பாதிப்புக்கள், விளைவுகள் என்பன வேறுபடுகின்றன.

சாதாரணமாக கலங்கள், கலப்பிரிவு, கலவளர்ச்சி, முதிர்வு இயைபாக்கம், கலஇறப்பு என கலவட்டச் செயற்பாடுகளுக்குட்படுகின்றன. இச்செயற்பாடுகளுக்கான செய்தி கலத்தின் கருவில் காணப்படும் நிறமூர்த்தங்களில் காணப்படுகின்றன. அவசியமான நேரங்களில் இந்நிறமூர்த்தங்களின் செயற்பாட்டின் மூலம் கலவட்டம் நடைபெறுகின்றது. இச்செயற்பாடு சரியான முறையில் நடைபெறுகின்றதா என கண்காணிக்கவும், தேவையற்ற கலங்களை அகற்றவும் உடலில் பாதுகாப்பு பொறிமுறைகளும் காணப்படுகின்றன.

இந் நிறமூர்த்தங்கள் திரிபடையும் பொழுது அல்லது பாதுகாப்பு பொறிமுறை செயலிழக்கும் பொழுது அசாதாரணமான கலங்கள் உடலில் தோற்றம் பெறுகின்றன. இவ்வசாதாரணமான கலங்கள் தமது தாய்க்கலங்களை, உருவ அமைப்பிலோ, அல்லது நிறமூர்த்த அமைப்பிலோ ஒத்திருப்பதில்லை.

இவ்வசாதாரண கலங்களின் கலவட்டச் செயற்பாடு ஒரு கட்டுப்பாட்டை கொண்டிருப்பதில்லை. இதனால் இவை கட்டுப்பாடற்ற வளர்ச்சியடைகின்றன. இதன்மூலம் கட்டிகள் உருவாகின்றன. அத்துடன் இக்கலங்கள் அயல் இழையங்களுக்குள் ஊடுருவும் இயல்பையும், இரத்த ஓட்டம், நிணநீர் ஓட்டம் மூலம் வேறு இடங்களுக்கு பரவும் வல்லமையும் கொண்டவை. இவ்வாறு பரவுவதன் மூலம் ஏனைய கலங்களின் போசணையை பெற்றுக் கொள்வதுடன் அவற்றின் செயற்பாடுகளிற்கும் பங்கம் விளைவிக்கின்றன. இச்செயற்பாடு விரிவடையும் போது உடலின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு நோய் வாய்ப்புக்குள்ளாவதுடன் இறப்பும் ஏற்படுகின்றது. இதுவே புற்றுநோய் உருவாக்கத்திற்கான பொதுவான பொறிமுறையாகும்.

புற்றுநோயை தவிர்ப்பதற்கு பல வசதிகள் உண்டு. ஏனெனில் பலவகையான புற்றுநோய்கள் பல்வேறு மாற்றியமைக்கக் கூடிய காரணிகளில் இருந்து உருவாகின்றன. அல்லது புற்றுநோயாக உருவாக்கம் பெற்று மற்றைய இடங்களுக்கு பரவக்கூடிய நிலைக்கு முன்னர் கண்டறியக் கூடியதாகவுள்ளது என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**புற்றுநோயை தடுப்பது என்பது வெவ்வேறு நிலைகளில் மேற்கொள்ள முடியும்.**

1. புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய காரணிகளை தவிர்த்தல். (Primary Prevention)

2. புற்றுநோயை அதன் அறிகுறிகள் ஏற்படுவதற்கு முன்னர் கண்டறிந்து அது வளர்ச்சியடைவதை தவிர்த்தல். (Secondary Prevention)

3. நோய் ஏற்பட்ட பின்னர் அது முதிர்ச்சியடைவதையும், அதனால் ஏற்படும் பாதக விளைவுகளையும் தவிர்த்தல். (Terlary Prevention)

அமெரிக்காவின் புள்ளிவிபரம் ஒன்றின் படி 2001 இலிருந்து 2006 வரையான காலப்பகுதியில் புற்றுநோயாலான இறப்புவீதம் ஆண்டுக்கு 1.5%ல் குறைவடைந்துள்ளது. புதிதாக கண்டறியப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 1999 இல் இருந்து 2006 வரையான காலப்பகுதியல் ஆண்டுக்கு 0.7% ஆல் குறைவடைந்துள்ளது. இவ்வளர்ச்சியானது மேற்கூறப்பட்ட வெவ்வேறு படிநிலைகளில் மேற்கொள்ளப்படும். நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்டுள்ளது என கூறப்படுகின்றது.

தனியொருவருக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்பின் அளவை கண்டறிதலே அந்நோயை தடுப்பதற்கான முதற்படியாகும். இதன்மூலம் அதிக வாய்ப்புள்ளவர்களை இலகுவாக கண்டறிந்து கொள்ளலாம். ஒருவருடைய தனிப்பட்ட மருத்துவ தரவுகள், தொழில் முறை குடும்ப அங்கத்தவர்களது மருத்துவத் தரவுகள் ஆகியவை அவருக்கு புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய காரணிகளை கண்டறிந்து கொள்வதற்கு உதவியாகவுள்ளன.

## புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய காரணிகள்

இவற்றை இரு வகையாக பிரிக்கலாம்.

1. மாற்றியமைக்கக்கூடிய / கட்டுப்படுத்தக்கூடிய காரணிகள்

   (உ+ம்) புகைப்பழக்கம், மதுபாவனை, மேலும் பல

2. மாற்றியமைக்க முடியாத / கட்டுப்படுத்த முடியாத காரணிகள்

   (உ+ம்) பால், இனம், வயது ஓமோன்களின் அளவு போன்றவை

## * மாற்றியமைக்கக்கூடிய புற்றுநோய் காரணிகளை பார்ப்போமானால்.

(i) புகைப்பழக்கம் (Smoking)
(ii) சூரிய ஒளிக்குட்படும் அளவு (Exposure to sunlight)
(iii) உணவு (Food)
(iv) உடற்பயிற்சி (Excercise)

(v) உடற்பருமன் (Obesity)
(vi) மதுபாவனை (Alcohol)
(vii) ஓமோன் சிகிச்சை (Homone treatment)
(viii) சூழல், தொழில் சார்ந்த காரணிகள்
(Environmental, and occupational Factors)
(ix) தொற்றுநோய்கள் (Infectious Diseases)
(x) பாலியல் நடவடிக்கைகள் (Sexual activities)

## I. புகைப்பழக்கம் (Smoking)

அமெரிக்காவில் புற்றுநோயால் ஏற்படும் இறப்புக்களில் மூன்றில் ஒரு பகுதி புகைப்பழக்கத்தால் ஏற்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது. புகைப்பழக்கத்தால் ஏற்படும் புற்றுநோய்களில் நுரையீரல் புற்றுநோயே மிகவும் பொதுவானது. ஆனாலும் இரத்தப் புற்றுநோய், தலை, கழுத்து, களம், சிறுநீரகம், ஈரல், சதையி, இரைப்பை, கருப்பைக்கழுத்து, குடல், சிறுநீர்ப்பை ஆகிய பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய்களுக்கும், புகைப்பழக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

சிகரட், சுருட்டுப் புகையில் 69 வகையான புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்கள் உள்ளன. மூக்குப் பொடிப்பாவனை, புகையிலை மெல்லுதல், ஆகிய பழக்கமுடையவர்கள் 29 வகையான புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். புகைபிடிக்கும் பழக்கமற்றவர்கள் கூட புகைபிடிப்பவர்களில் இருந்துவரும் புகையை சுவாசிப்பதால் (Passive smoking) பொதுவாக நுரையீரல், மண்டையோட்டுக் கற்றைக்குழி ஆகிய இடங்களில் புற்றுநோய்க்கு ஆளாகுதல் வாய்ப்பை அதிகமாக கொண்டுள்ளனர்.

**புகைப்பழக்கத்தால் புற்றுநோய் உருவாகுதல் பல படிமுறைகளில் நடைபெறுகின்றன. அவையாவன.**

1. புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் நேரடியாக உடலில் சேர்தல்.
2. தொடர்ச்சியாக புகைப்பதால் உடற்கலன்கள் வீக்கமடைதல். (Inflammation)
3. உடலின் நோயைத் தடுக்கும் பௌதீக ரீதியான பாதுகாப்பு பொறிமுறைகள் சிதைவடைதல்.

புகைப்பழக்கத்தை நிறுத்துவதன் மூலம் புற்றுநோயாலும் ஏனைய நோயாலும் ஏற்படும் இறப்புவீதம் குறைவடைகின்றது. மேலும் உடல் ஆரோக்கிய ரீதியான நன்மைகள் புகைப்பழக்கத்தை நிறுத்தியவுடனேயே ஆரம்பிக்கின்றன. இவ் நன்மைகள் நீண்டகால புகைப்பழக்கம் உள்ளவர்களிலும் (Chronic Smokers) ஏற்படுகின்றது.

புகைப்பழக்கத்தை கடந்த 10 வருடங்களாக நிறுத்தியவர்களில் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு தற்போது புகைப்பிடிப்பவர்களில் உள்ள வாய்ப்பின் 50% மாக காணப்படுகின்றது.

அதேபோல் முப்பது வருடங்களாக புகைப்பழக்கத்தை நிறுத்தியவர்களில் இவ்வாய்ப்பானது 10% மாக காணப்படுகின்றது. மேலும், வாய்க்குழி, தொண்டை, களம் ஆகிய பகுதிகளில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் புகைப்பழக்கத்தை, நிறுத்தி ஐந்து வருடங்களில் மிகவும் கணிசமான அளவு குறைவடைகின்றன.

## II. சூரிய ஒளிக்குட்படும் அளவு (Exposure to sunlight)

தோலிலுள்ள மெலனின், மெலனினல்லாத கலங்களில் ஏற்படும் புற்றுநோய்க்கு சூரிய ஒளியிலுள்ள புறவூதாக் கதிர்களின் பிரதான காரணியாக அமைகின்றது.

மெலனின் அல்லாத தோற்கலங்களில் ஏற்படும் புற்றுநோயானது மொத்தப் புற்றுநோய்களின் 40% மாக அமெரிக்காவில் காணப்படுகின்றது. சூரிய ஒளிக்குட்படும், விதத்தில் ஏற்படும் வேறுபாடானது வெவ்வேறு வகையான தோற் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது. தோலின் மேலணிக்கலங்களில் ஏற்படும் புற்றுநோயானது (Squamous cell carcinom, Basal cell carcinoma) தொடர்ச்சியாக சூரிய ஒளிக்குட்படும் போது ஏற்படுகின்றது. இது பெரும்பாலும் தொழில்சார்ந்ததாக அமைகின்றது. அதாவது வெளியிடங்களில் வேலை செய்பவர்களில் இது அதிகம் ஏற்படுகின்றது. தொடர்ச்சியற்ற ஆனால் செறிவான புறவூதாக் கதிர்களுக்குட்படும் போது மெலனின் கலங்களில் புற்றுநோய் ஏற்படுகின்றது.

காலை 10 மணிக்கும், மாலை 4 மணிக்கும் இடைப்பட்ட நேரமே புறவூதாக் கதிர்களின் உச்ச வீச்சுக்குரிய காலமாக கருதப்படுகின்றது. இந்நேரங்களில் சூரிய ஒளிக்குட்படுவதை தவிர்ப்பதாலும், இயலாத சந்தர்ப்பங்களில் பாதுகாப்பான உடைகளை அணிவதாலும் (உ+ம்: தொப்பி, கண்ணாடி, சூரிய ஒளித்திரை) தோற் புற்றுநோய் ஏற்படுவதைக் குறைக்க முடியும்.

அண்மைக் காலங்களில் விற்றமின் D யானது பல்வேறு வகையான புற்றுநோயை தடுக்கும் ஒரு பதார்த்தமாகக் கருதப்படுகின்றது. இது சூரியஒளியில் இருந்து எமது தோற்கலங்களால் இலகுவாக தொகுக்கப்படுகின்றது. இதனால் சூரியஒளிக்குட்படுவதும், புற்றுநோயை தவிர்ப்பதும் ஒரு முரண்பாடான கருதுகோளாகவே இருக்கின்றது. ஆனாலும், விற்றமின் D க்கு புற்றுநோயை தடுப்பதற்குமான தொடர்பும் இன்னமும் ஆராய்ச்சியளவிலேயே உள்ளதுடன் துரிதமாக ஆராயப்பட்டு வருகின்றது.

## III. உணவு (Food)

உணவின் வெவ்வேறு போசணைப் பொருட்கள் தனியாகவும், ஒன்றிணைத்தும், புற்றுநோயுடனான தொடர்புபற்றி ஆராயப்பட்டுள்ளது. உணவிலுள்ள கொழுப்பு முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோய் ஏற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆனாலும் கொழுப்பிற்கும் மார்பு, குடற்புற்று நோய்க்குமான தொடர்பு கண்டறியப்படவில்லை.

அதிக கொழுப்புள்ள இறைச்சி (Red meat) (உ+ம் பன்றி, ஆடு, மாடு) கூடுதலாக உட்கொள்வதால் பெருங்குடல், நேர்குடல் பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுவதை அதிகரிக்கின்றது.

தினமும் 800g க்கும் அதிகளவான மரக்கறி, பழவகைகள் உட்கொள்பவர்களில் பெருங்குடல் (இறங்கு பெருங்குடல்), நேர்குடல்) புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு 25% ஆல் குறைவடைகின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தக்காளி சேர்ந்த உணவை உட்கொள்வதால் அதில் காணப்படும் (Lycopene) லைகோபின் எனப்படும் பதார்த்தம் முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோய் ஏற்படுவதை தவிர்க்கின்றது. கல்சியம் சேர்ந்த உணவு வகைகளை உட்கொள்ளுவதன் மூலம் பெண்களில் எல்லா வகையான புற்றுநோய்களும், ஆண், பெண் இருபாலரில் குடற்புற்று நோயும் ஏற்படும் வாய்ப்பு குறைவடைகின்றன.

அதிகளவு நார்ப்பொருட்களை (Fiber diet) உட்கொள்வதன் மூலம் குடற்புற்றுநோய் ஏற்படுவதை தவிர்க்க முடியும். அத்துடன் அடினோமா (Admoma) எனப்படும் ஒரு வகைக் கட்டிகள் ஏற்படுவதையும் தவிர்ப்பதாக கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் புற்றுநோய்க்கான அமைப்பின் (American Cancer Society) உணவுமுறைப் பரிந்துரைகளாவன.

1. பல வகைப்பட்ட ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்.
ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வகையான காய்கறி, பழவகைகள் தினமம் உட்கொள்ளப்படல் வேண்டும்.
2. தீட்டப்படாத (தவிடு நீக்கப்படாத) தானிய வகைகளை உட்கொள்ள வேண்டும்.
3. அதிக கொழுப்புள்ள இறைச்சி (Red meat), பதப்படுத்தப்பட்ட இறைச்சி, அதிகளவு கொழுப்புச்சத்துள்ள உணவுகள் உட்கொள்வதை கட்டுப்படுத்தல் வேண்டும்.

## IV. உடற்பயிற்சி (Excercise)

உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறையானது (Sedentary life) 5% மான புற்றுநோய் இறப்புக்களுக்கு வழிவகுப்பதாக கனியுப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன. உடற்பயிற்சிக்கும், புற்று நோய்க்குமான தொடர்புகள் கண்டறியப்படவில்லை எனினும், உடற்பயிற்சி மூலம் நீர்ப்பீடனம், ஓமோன்களின் அளவு, புறஸ்டசிளான்டின் எனப்படும் கூறு, ஆகியவைகளில் ஏற்படும் மாற்றத்தால் இப்பாதுகாப்பு பொறிமுறை ஏற்படுகின்றது என கருதப்படுகின்றது. மிகையான உடற்பயிற்சி குடல், மார்பு புற்றுநோய்கள் ஏற்படுவதை தவிர்ப்பதுடன் கருப்பை மேலணிப் புற்றுநோய், முன்னிற்கும் சுரப்பி, ஈரல், சதையி, இரைப்பை, நுரையீரல் ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோயின் அளவைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டிய காலஅளவு அதன் தீவிரம், எத்தனை தடவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகியவற்றிற்கும் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பிற்குமான தொடர்பு இன்னமும் கண்டறியப்படவில்லை.

அமெரிக்க புற்றுநோய்க்காள அமைப்பு (American Cancer Society) கீழுள்ளவற்றை பரிந்துரை செய்கின்றது.

1. பெரியவர்கள் நாளொன்றிற்கு முப்பது நிமிடத்திற்கு குறையாதும், வாரத்திற்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

2. சிறுவர்கள் நாளொன்றிற்கு 60 நிமிடமேனும் வாரத்திற்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

## V. உடற்பருமன் (Obesity)

அதிகப்படியான உடற்பருமன் ஆண்களில் 14%மான புற்றுநோய் மரணத்திற்கும், பெண்களில் 20% மான புற்றுநோய் மரணத்திற்கும் காரணமாக அமைகின்றது.

புற்றுநோய்க்கும் அதிக உடற்பருமனுக்குமான தொடர்பு புற்றுநோய்க்கும் உடற்பயிற்சியற்ற வாழ்க்கை முறைக்குமுள்ள தொடர்பை போன்றது.

உடற்பருமன் குறைப்பு சத்திரசிகிச்சை (Bariatnic Surgery) அல்லது உடற்பருமன் குறைப்பதற்கான நடவடிக்கைகள் புற்றுநோயால் ஏற்படும் மரணத்தை 60% ஆல் குறைக்கும் என நம்பப்படுகின்றது.

## VI. மதுபாவனை (Alcohol)

புற்றுநோயாளர்களில் 4% மானவர்கள் தொடர்ச்சியான மதுபாவனையுடன் தொடர்புபட்டுள்ளனர். புற்றுநோய் உருவாவதற்கும், மதுபாவனைக்குமான நேரடித் தொடர்பு தற்போது கண்டறியப் படவில்லையெனினும், மதுபாவனை உடலின் ஓமோன்களின் அளவிலும் அனுசேபத் தொழிற்பாடுகளிலும் ஏற்படும் மாற்றத்தினால் புற்றுநோய் உருவாகும் வாய்ப்பை அதிகரிக்கின்றது என நம்பப்படுகின்றது.

## VII. ஓமோன் சிகிச்சை (Homone treatment)

பெண்களின் ஈஸ்ரஜன் எனப்படும் ஓமோனின் தொழிற்பாடு உடலில் காணப்படும் கால அளவிற்கும் மார்பு புற்றுநோய்க்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வெடுகோளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் பொழுது கீழ்வரும் வகுப்பிற்குட்பட்டவர்கள் மார்பு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகமாக கொண்டுள்ளனர்.

1. சிறிய வயதில் பருவமடைதல் / பூப்பெய்தல்.
2. முதிர்ந்த வயதிலும் மாதவிடாய் தொடர்தல்.
3. குழந்தைப் பேறின்மை.
4. முதற்பிள்ளையின் பிரசவம் தள்ளிப்போதல் அல்லது தாயின் வயது அதிகரித்து செல்லல்.
5. உடலில் ஈஸ்ரஜன் எனும் ஓமோனின் செறிவு அதிகமாக காணப்படுதல்.

கருத்தடை மாத்திரைகள் தொடர்ச்சியாக பல வருடங்களுக்கு பாவிக்கும் பொழுது மார்பு புற்றுநோய்க்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது.

## VIII. சூழல், தொழில் சார்ந்த காரணிகள் (Environmental, and occupational Factors)

தொழில் நிமித்தம் இரசாயனப் பதார்த்தங்களுடன் தொடர்ச்சியாக தொடர்புபடுதல் புற்றுநோய் ஏற்படுவதை அதிகரிக்கின்றது. இவ்விரசாயனப் பதார்த்தங்களாவன தார், கரி

சார்ந்த பொருட்கள், கட்மியம், பென்சீன் யுரேனியம், அஸ்பெஸ்ரோஸ் நிக்கல், அலுமினியம், தீந்தை வகைகள், பெற்றோலியம், இறப்பர், ஆடைத்தொழிலில் உபயோகிக்கும் இரசாயனப் பதார்த்தங்கள் போன்றவையாகும். இவற்றுடன் தொடர்புடையவர்களில் சிறுநீர்ப்பை புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது. அஸ்பொஸ்ரோஸ், றாடன் (Radon) ஆகிய இரசாயனப் பதார்த்தங்களாலும், வளிமாசடைவதாலும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகின்றது.

ஆசனிக் எனப்படும் இரசாயனப் பாவனை ஒரு வகையான தோல்ப் புற்றுநோயுடன் (Non melnomatous slan cancer) தொடர்புபடுகின்றது.

## IX. தொற்றுநோய்கள் (Infectious Diseases)

உலகளாவிய ரீதியில் 17% மான புற்றுநோய்கள் நுண்ணங்கித் தொற்று மூலம் ஏற்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றினால் ஏற்படும் புற்றுநோய்களாவன.

கியுமன் பப்பிலோமா எனப்படும் வைரஸ் (Human papiloma virus) கருப்பை கழுத்து, குதம் ஆகிய இடங்களில் ஏற்படும் புற்றுநோயுடனும், கெப்பரைற்றிஸ் பி. சி (Hepatitis B.C) வைரஸ் ஈரல் புற்றுநோயுடனும், கியுமன் கேப்பீஸ் வைரஸ் (Human Herpis virus) கப்போசி சாக்கோமா (Kaposi sarcoma) எனப்படும் ஒருவகைத் தோற் புற்றுநோயுடனும் தொடர்புபட்டுள்ளன.

மேலும் கியுமன் லிம்போறோபிக் வைரஸ் (Human T. cell Lymphotropic virus) நிணநீர் முடிச்சுகளில் ஏற்படும் புற்றுநோயுடன் தொடர்புபடுகின்றது. எப்ஸ்ரைண் பா வைரஸ் (Epstain Bar Virus), கொட்சின் லிம்போமா (Hoclgbin Lymphoma) எனப்படும் ஒரு வகை புற்றுநோயுடன் தொடர்புபடுகின்றது.

(HIV) எயிட்ஸ் வைரஸ் கப்போசி சாக்கோமா (Kaposi Sareomo), நொண் கொட்சிஞ் லிம்போமா (Non koolgkin Lympoloma) ஆகிய புற்றுநோய்களுடன் தொடர்புபடுகின்றது.

சில வகையான பக்ரீரியாத் தொற்று (உ+ம் : Holico bauter pylori) இரைப்பைப் புற்றுநோயுடன் தொடர்புபடுகின்றது.

## X. பாலியல் நடவடிக்கைகள் (Sexual activities)

புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய சில வகையான வைரஸ் கிருமிகள் உடல் திரவத்தின் மூலம் பரம்பல் அடைகின்றன. உதாரணமாக எயிட்ஸ் வைரஸ், Hepatitis வைரஸ், Human papilloma போன்றவையாகும். இவை ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் துணையுள்ளவர்களிலும், கிருமித்தாக்கம் உள்ளவர்களை பாலியல் துணையாகக் கொண்டவர்களிலும் பரவல் அடைகின்றன.

**பாலியல் நடவடிக்கை மூலம் புற்றுநோய் கிருமிகள் பரவுவதை கீழுள்ள முறைகள் மூலம் தடுக்கலாம்.**

1. துணையின் பாலியல் சுகாதார ஆரோக்கிய நிலையினை அறிந்திருத்தல்.
2. புணர்ச்சியின் போது தடுப்பு முறைகள் (உதாரணமாக ஆணுறை போன்றவை) உபயோகித்தல்.

*** மாற்றியமைக்க முடியாத காரணிகளை பார்ப்போமானால்.**

1. இரத்த உறவுகளில் புற்றுநோய் (Family History of Cancer) காணப்படுதல் உதாரணமாக குடும்ப அங்கத்தவர் ஒருவரில் மார்புப் புற்றுநோய், குடற்புற்றுநோய், அல்லது கருப்பைப் புற்றுநோய் இருப்பின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்ட புற்றுநோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு சாதாரண ஒருவரை விட அதிகமாக காணப்படுகின்றது.

2. பால் : சிலவகையான புற்றுநோய்கள் அதிகமாக பெண்களையும், இன்னும் சில வகையான புற்றுநோய்கள் அதிகமாக ஆண்களையும் பாதிக்கின்றன. உதாரணமாக மார்புப் புற்றுநோய் அதிகமாக பெண்களிலும், களப் புற்றுநோய் அதிகமாக ஆண்களிலும் ஏற்படுகின்றது.

3. வயது : ஒருவருடைய வயது அதிகரித்து செல்கையில் அவருக்கு சில வகையான புற்றுநோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரித்துச் செல்கின்றது. உதாரணமாக மார்புப் புற்றுநோய், குடற் புற்றுநோய், முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய்கள்.

4. இனம் : சில இனத்தை சேர்ந்தவர்கள் சில வகையான புற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனா. அதாவது ரோல் புற்றுநோய்கள் ஆஸ்திரேலிய நாட்டவர்களிலும், இரைப்பை புற்றுநோய் யப்பான் நாட்டவர்களிலும் அதிகமாக ஏற்படுகின்றது.

புகைத்தல், மதுபாவனை போன்ற கெட்ட பழக்கங்களை தவிர்ப்பதன் மூலமும் ஆரோக்கியமான உணவு முறைகள், பாலியல் முறைகள், உடற்பயிற்சி என்பனவற்றை கடைப்பிடிப்பதன் மூலமும் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளவர்கள் காலம் தாமதிக்காது மருத்துவ ஆலோசனை பெறல், அல்லது உரிய சிகிச்சைக்கு உட்படுதல் போன்றவை மூலம் உயிர்கொல்லி நோயான புற்றுநோயை கணிசமான அளவிற்கு குறைக்க முடியும்.

**Dr. V. Suthagaran**
MBBS. MD (Surgery), MRCS (Eng),
Consultant General Surgeon.

# இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒரு குறுகிய ஆய்வு

ஒரு நாட்டின் யாப்பினையும் அதன் அடிப்படைச் சட்டங்களையும் கொண்டு அந்நாடு எவ்வாறானதொரு ஆட்சிமுறையைக் கொண்டுள்ளது என இனங்கண்டுகொள்ள முடிகின்றது. அந்த வகையில் எமது இலங்கை நாட்டை எடுத்துக்கொண்டால் எமது நாடு ஒரு எழுதப்பட்ட உன்னதமான அரசியல் யாப்பினைக் கொண்டுள்ள ஒரு நாடாகும். எமது அரசியல் அமைப்பு யாப்பில் உள்ள சட்டங்களில் சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட சட்டங்கள் எவை என ஆராய்வது மிக முக்கியமான ஒன்றாகும்.

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இரண்டாம் குடியரசு யாப்பே தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள யாப்பாகும். அவ் யாப்பின் ஆறாம் அதிகாரத்தில் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான மூலதத்துவங்கள் பதின்நான்கும் அடிப்படைக் கடமைகள் ஆறும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இவ் நாட்டின் அடிப்படை யாப்பில் 12 (4) இல் உறுப்புரை 27 (13) சிறுவர்கள், இளைஞர்கள் உடல், உளம், பண்பாடு, சமயம், சமூக ரீதியில் பூரண விருத்தியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும், சிறுவர்களை ஏனையோர் தமது சுய நலன்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும், பாகுபாட்டிற்கு உள்ளாவதிலிருந்து பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் சிறுவர்களின் நலன்களை அரசு விசேட கவனத்துடன் விருத்தி செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அரச கொள்கைகள் நடைமுறைப்படுத்தும் கொள்கைகள், அடிப்படைக் கடமைகள் என்பவற்றுக்கும் அவ் யாப்பின் ஏனைய சட்டங்களுக்கும் இடையில் வேறுபாடுண்டு. ஏனை ய சட்டங்களைப் போன்று இவ் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எவருக்கும் சட்ட ரீதியான உரிமை இல்லை. எனவே இக் கொள்கைகளை நீதி மன்றத்தினால் நடைமுறைப்படுத்த முடியாது.

அரசியல் யாப்பின் உறுப்புரை 27 (13) தவிர, அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் மூலதத்துவங்கள், அடிப்படைக் கடமைகளுடன் தொடர்புடைய பின்வரும் உறுப்புரைகள் மூலமும் சிறுவர் உரிமைகளில்

செல்வாக்கு செலுத்துகின்ற அரச கொள்கை என்ன என்பது தெளிவாகின்றது. உறுப்புரை 27 (2) அ "சகல பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் பூர்த்தி செய்தல்" பற்றிச் சொல்லுகிறது.

உறுப்புரை 27 (2) ஊ " எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாதொழித்தல், கல்வி நடவடிக்கைகளின் போது சகல சந்தர்ப்பங்களிலும் அனைவரும் நியாயமான முறையிலும், சமத்துவமான முறையிலும் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தல்" எனச் சுட்டிக்காட்டுகின்றது.

**அரசியல் யாப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் மொழி உரிமை**

13, 16 ஆம் யாப்புச் சீர்திருத்தங்களின் போது திருத்தப்பட்ட மொழி பற்றிய சட்ட மூலங்கள், அடிப்படை உரிமைகளுக்குச் சமனாக மொழி பற்றிய உரிமைகளை உறுதிப்படுத்துவதால் சிறுவர்களின் மொழி உரிமையை நிர்ணயிக்கின்ற சட்டமாகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது உயர் நீதிமன்றத்தின் அனுசரணையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மொழி தொடர்பான பின்வரும் சட்டங்கள் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அரச கரும மொழி, தேசிய மொழி, நிர்வாக மொழி, சட்டங்களை இயற்றும் மொழி, நீதிமன்றத்தின் மொழி என்பனவும் சிங்கள, தமிழ். மொழிகள் அரச கரும, தேசிய, நிர்வாக, சட்டங்களை இயற்றும், நீதிமன்ற மொழிகளாக விளங்குகின்றன். இவற்றைத் தவிர ஆங்கிலம் இணைப்பு மொழியாக விளங்குகின்றது. எமது அரசியல் யாப்பில் தேசிய மொழிகள் இரண்டில் தான் விரும்பிய மொழியில் கல்வி கற்கும் உரிமை ஒவ்வொரு சிறுவனுக்கும் உண்டு எனக் கூறும் அதே சமயத்தில் அரச கரும மொழி அல்லாத ஒரு மொழியில் உயர் கல்வி நிலையம் ஒன்றில் கல்வி கற்பிப்பதற்கு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிச் சட்டம் தொடர்பற்றதாகும்.

**சிறுவர்களின் அடிப்படை, மொழி உரிமைகள் மீறலுக்கான யாப்பில் சொல்லப்படுகின்ற சட்ட நிவாரணங்கள்.**

ஒரு சிறுவனுக்கு உரிய அடிப்படை உரிமை ஒன்று மீறப்படுகின்றபோது அது தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு முறையிட்டு சட்ட

ரீதியான நிவாரணம் அல்லது உதவி பெற்றுக் கொள்வதற்கு அரசியல் யாப்பில் இடமுண்டு. உரிமை மீறல் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்திற்குள் சிறுவனின் பாதுகாவலா் அல்லது சட்டத்தரணி மூலம் நீதிமன்ற விதிமுறைகளுக்கிணங்க உயர் நீதி மன்றத்திற்கு எழுத்து மூல மனு தாக்கல் செய்யப்படுதல் வேண்டும் என உறுப்புரை 126 (2) கூறுகின்றது.

**அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு மனு சமா்ப்பிக்கின்ற போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான விடயங்கள்.**

அடிப்படை உரிமை. மொழி உரிமை மீறப்படும் பட்சத்தில் சட்ட ரீதியான நிவாரணம் வழங்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்தைத் தவிர வேறெந்த நீதிமன்றத்திற்கும் கிடையாது எனவும் நீதிமன்ற நடவடிக்கை ஒன்றின் விளைவாக அடிப்படை அல்லது மொழி உரிமை மீறப்படும் பட்சத்தில் அதை நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாடாகக் கொள்ளப்படுவதில்லை எனவும் தனது உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுதாரா் உணர்ந்தது சம்பவம் நடந்த சில தினங்களின் பின்னா் எனின் ஒரு மாத காலம் கணிக்கப்படுவது அவா் தனது உரிமை மீறப்பட்டுள்ளதாக உணர்ந்த தினத்தில் இருந்தாகும் எனவும் மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயா் நீதிமன்றம் உறுதி செய்யும் பட்சத்தில் அவ்வுரிமைகள் மீறப்பட்டமைக்கான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொடுக்கவும் உயா் நீதிமன்றம் கட்டளையிடும் என்பன போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் கூறுகின்றது.

**சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சட்டம் நிறைவேற்றியுள்ள கடமைகள்**

இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ள சட்டங்களில் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்டமானது அண்மைக் காலத்தில் பலரது அவதானத்திற்கும் இலக்கானது. இச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உரிமை மீறல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தொகை பெருமளவில் அதிகரித்ததுடன், இச் சட்டத்துடன் தொடர்புடைய பெருமளவு நூல்களும் வெளியிடப்பட்டன. இவ் அடிப்படை உரிமைகள் மீறலினால் சமூதாயத்தில் தோன்றிய அக்கறை காரணமாகச் சிறுவர் உரிமை தொடர்பான கணிசமான மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

சிறுவர்களைப் பாடசாலைக்குச் சேர்த்தல், சிறுவர்களை உடல் ரீதியாகத் துன்புறுத்தல், சிறுவர்கள் விளையாட்டுத் தலைவராக, மாணவத் தலைவராக தெரிவு செய்வதில் பாகுபாடு காட்டாமை, புறக்கணிப்புப் போன்ற காரணங்களுக்காக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட யாப்புக்களைப் பரிசீலனை செய்த பின்னர் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கள், விளக்கங்கள் என்பன இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் காரணமாக உள்ளது.

**சிறுவர் உரிமைகளும் குற்றவியல் சட்டமும்**

வீடுகள் பாடசாலைகள், வீதி போன்ற பல இடங்களில் சிறுவர்கள் இம்சைகளுக்கும் பாலியல் வன்முறைகளுக்கும் உட்பட்ட சந்தர்ப்பங்கள் பல உள்ளன. போதைப்பொருள் வியாபாரத்திற்கு சிறுவர்களை ஈடுபடுத்தல், பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சிறுவர்களை விற்றல், ஆபாச நடவடிக்கைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு வழிகளிலும் சிறுவர்களுக்கு எதிரான தவறான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. சிறுவர்களின் முதிர்ச்சி இன்மை, இத்தகைய குற்றங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாமை என்பவற்றின் விளைவாக நிர்க்கதியாகும் சிறுவர்கள் உடல், உள ரீதியாகத் துன்புற்ற சந்தர்ப்பங்கள் பல உள்ளன.

இத்தகைய துன்புறுத்தல்கள் சமூகத்திற்கும் சட்டத்திற்கும் முரணான செயல்களாகக் கருதி சமூகம் எதிர்க்கின்றது. இருப்பினும் வெறுமனே எதிர்ப்பதனாலோ, வெறுப்பதனாலோ பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவியோ, நிவாரணமோ அழிக்க முடியாது. அவ்வாறே இத்தகைய துன்பங்களுக்கு உட்படும் சிறுவர்களின் நலனுக்கும் இத்தகைய சட்டங்களினால் கிடைக்கும் நன்மை மிகக் குறைவு. இவ்வாறன சிறுவர்களுக்கெதிரான குற்றங்கள் சட்டத்தின் முன் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கிக் கொடுப்பதற்கான வழிமுறைகளைச் செய்கின்றது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் சிறுவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு நிவாரணம் அளிக்க முயல்கின்றது.

**குற்றவியல் சட்டமும் தண்டனைச் சட்டக்கோவையும்**

இவ்வாறான சிறுவர்களுக்கு எதிரான குற்றவியல் நடவடிகடகைகள் ஒரு நபருக்கு எதிரான தனிப்பட்ட குற்றம் எனக்கருதாமல் முழுச் சமூகத்திற்கும் எதிரான குற்றமாகக் கருதப்படுகின்றது. எனவே இத்தகைய குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவருக்கு எதிராக அரசாங்கம் வழக்குத்தாக்கல் செய்கின்றது. இத்தகைய குற்றவியல் நடவடிக்கைகளுக்கு வழங்க வேண்டிய தண்டனைகள் என்பவற்றை உள்ளடக்கிய குற்றவியல் சட்டத்துடன் தொடர்புடையதுமான சட்டக்கோவை ஒன்று உண்டு. அச்சட்டக்கோவை தண்டனைச்சட்டக்கோவை (Penal Code) எனக்குறிப்பிடப்படுகின்றது.
இதற்கிணங்க 1995 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 22ம் இலக்கச் சீர்திருத்தம் உட்பட பல சீர்திருத்தங்கள் மூலம் சிறுவர்களுக்கெதிரான குற்றங்கள், துஷ்பிரயோகங்கள் என்பவற்றைத் தடுப்பதற்கும் அத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்குத் தண்டனை வழங்குவதற்கு பொருத்தமான சட்டங்களும் தண்டனைச்சட்டக் கோவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

**தண்டனைக்குரிய குற்றங்களும் அவ்வாறான குற்றங்களைப்புரிந்தோர்க்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகளும்**

பன்னிரெண்டு வயதிற்குக் குறைந்த ஒரு பிள்ளையை தந்தையோ தாயோ பாதுகாவலரோ அக்குழந்தையை ஏதேனும் ஒரு இடத்தில் விட்டுச்சென்றால் அவருக்கு ஏழு வருட கால சிறைத்தண்டனை வழங்கவோ அபராதம் விதிக்கவோ அல்லது இவ்விரண்டு தண்டனைகளையும் வழங்கவோ முடியும் என 308 ம் இலகத் தண்டனைச்சட்டக்கோவை கூறுகின்றது.

12 வயதிற்குக் குறைந்த ஒரு பிள்ளையின் பாதுகாவலராகவோ, பராமரிப்பாளராகவோ, பொறுப்பாளராகவோ இருக்கும் ஒருவர் பிள்ளைக்கு உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ, பிள்ளையைப் புறக்கணித்தல் அல்லது கைவிட்டுச்செல்லல் போன்றவற்றில் ஈடுபட்டால் அப்பிள்ளையை இம்சித்தவர் என்ற வகையில் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கொள்ளப்படுவர். அத்தகைய குற்றத்தைப் புரிந்தவர்க்கு 2 வருடங்களுக்குக் குறையாததும் 10 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படுவதுடன் பிள்ளைக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக நீதிமன்றம் விதிக்கின்ற தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்க நேரும் எனவும் இச்சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

360ம் இலக்கத் தண்டனைச் சட்டக் கோவையில் 12 வயதிற்கு குறைந்த ஒரு பிள்ளையின் உடலிலிருந்து ஏதேனுமொரு உறுப்பைத் திருடும் நோக்கில் பிள்ளையைத் துஷ்பிரயோகம் செய்கின்ற ஒரு நபருக்கு ஏழு வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படவேண்டும் எனக் கூறுகின்றது. 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு நபர் 16 வயது சிறுமி ஒருவருடன் உடலுறவில் ஈடுபடுத்துவது தொடர்பான குற்றவியல் நடவடிக்கைக்கு 10 வருடங்களுக்குக் குறையாததும் 20 வருடங்களுக்கு மேற்படாததுமான கடூழியச் சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கக்கூடிய ஒரு குற்றமாகும் தண்டனைச் சட்டக் கோவை 365 பிள்ளைக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக நீதிமன்றம் விதிக்கின்ற தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்க நேரும் எனவும் இச்சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாடசாலையில் பெரியவர்களுக்கு வழங்கப்படும் கண்காணிப்பு என்னும் சட்ட ரீதியான பொறுப்பின் இயல்பு**

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் கவனக் குறைவினால் ஏற்படும் அனைத்து சம்பவங்களும் சட்ட ரீதியான பொறுப்புகளை மீறியதாகக் கொள்ளப்படுவதில்லை. எல்லோரையும் போன்று அவர்களும் தவறிழைக்க வாய்ப்புண்டு. அவர்களது தவறின் விளைவாக மாணவர்களுக்கோ சக ஆசிரியர்களுக்கோ தீங்கு நேரக் கூடும். அவ்வாறு ஒரு ஆசிரியரோ, அதிபரோ, தனது கடமையிலிருந்து தவறியமை சட்ட ரீதியான பொறுப்பை மீறியதாகக்கருதப்படுவதற்கு அத் தவறு பின்வரும் தன்மைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமெனத் தீங்கியற் சட்டம் கூறுகின்றது.

1. **ஏனையோரைப் பராமரிப்பது குறிப்பிட்ட நபரின் கடமையில் ஒரு பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.**

2. **அவர் தனது கடமையைத் திட்டமிட்டு மீறியிருத்தல் வேண்டும்.**

3. **அவர் தனது கடமையை மீறியதால் மற்றொருவருக்குப் பாதிப்பு ஏற்பட்டிருத்தல் வேண்டும்.**

மேற் குறிப்பிட்ட சம்பவங்களில் இருந்து கூட பெற்றோரால் பாடசாலைக்கு ஒப்படைக்கப்படுகின்ற சிறுவர்களின் பொறுப்பு அவ்வேளையில்

இருந்து பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் சாருகின்றமை மிகத்தெளிவாகின்றது. அதற்கிணங்க வகுப்பறையிலும் பாடசாலைச் சுற்றாடலிலும் மாணவர்களைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பு அதிபரையும் ஆசிரியர்களையும் சாருகின்றது. மேலும் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் பாடசாலை ஆரம்பித்த பின்னரும் வகுப்பறையில் ஆய்வு கூடத்தில், விளையாட்டுத்திடலில், இடைவேளையில், பாடசாலை நேரம் முடிந்து மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் போது பாடசாலையுடன் தொடர்புடைய போட்டிகள், வைபவங்கள், சுற்றுலாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்காக பாடசாலைக்கு வெளியில் செல்லும் போதும் மாணவர்களைக் கண்காணித்து பராமரிக்கும் பொறுப்பு அதிபரையும், ஆசிரியரையும் சாரும். மாணவர்களைக் கண்காணிக்கும் பொறுப்புடைய ஒரு ஆசிரியர் கவனக் குறைவினால் தனது கடமையை மீறியதன் விளைவாக மாணவர், சக ஆசிரியர் அல்லது வெளி நபர் ஒருவருக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் நஷ்ட ஈடு வழங்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

**அதிபர், ஆசிரியர்களின் சட்ட ரீதியான கடமையின் எல்லைகள்**

பாடசாலை நடைபெறுகின்ற காலப்பகுதியில் மாணவர்களை பராமரிக்கும் பொறுப்பை மீறியமை தொடர்பாக நிரூபிக்கப்பட்ட சில வழக்குகளில் நீதிமன்றம் எவ்வாறு நடந்து கொண்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த சில சம்பவங்களை மேலே பார்த்தோம். மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகள், வைபவங்கள், சுற்றுலாக்கள் போன்றவற்றில் கலந்து கொள்வதற்காக பாடசாலைக்கு வெளியில் சென்ற வேளையில் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட பல வழக்குகள் உள்ளன. தவறு செய்தவர் ஆசிரியராக இருந்த போதிலும் அதற்கான பொறுப்பு ஆசிரியர், அதிபர், பிராந்தியக் கல்வி அதிகாரி ஆகிய அனைவரையும் சார்ந்ததை இவ்வழக்குகளில் தெளிவாகக்காண முடிந்தது. ஒரு தொழிலாளி தனது தொழில் தருணர் சார்பில் கடமையில் ஈடுபட்டுள்ள போது கவனக் குறைவால் ஏற்படும் சம்பவங்களுக்கு தொழில் தருணரும் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதற்கிணங்க அதிபர், பிராந்தியக் கல்வி அதிகாரி ஆகியோரும் இங்கு பொறுப்புக் கூற நேர்ந்தது.

இருப்பினும் ஆசிரியர்களின் பொறுப்பிலுள்ள மாணவர்களுக்கு நிகழும் எல்லாப் பாதிப்புக்களுக்கும் ஆசிரியர் அல்லது அதிபர் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்பதும் நீதிமன்றத்தீர்ப்புக்கள் பலவற்றில் இருந்து உணர முடிகின்றது. தடுக்க முடியாத செயற்பாடுகளினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களுக்கு இல்லை. அவ்வாறே உரிய முறையில் பராமரிப்புப் பொறுப்பு வகிக்கும் மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படின் ஆசிரியர்களால் பொறுப்புக் கூற முடியாதென நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் தெளிவாகியுள்ளது.

எனவே இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றமையால் சமூக அங்கத்தவர் என்ற ரீதியில் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வோடு இருப்பது மட்டுமல்லாது நாட்டினுடைய சட்ட திட்டங்களையும் குற்றத்திற்கான தண்டனைகளையும் அறிந்திருப்பது மிக அவசியமான தொன்றாகும். இதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படுகின்ற சிறுவர் வன்முறைகளையும், சிறுவர் துஷ்பிரயோகங்களையும் குறைத்துக் கொள்ளலாம்.

ப. அன்ரன் புனிதநாயகம் LLB (COL)
சட்டத்தரணி, உத்தியோகப்பற்றற்ற நீதவான்
பிரசித்த நொத்தாரிசு, சத்தியப்பிரமாண ஆணையாளர்

# வெற்றிபெறப் பயன்படும் உணர்வுசார் நுண்ணறிவு

# Usage of Emotional Intelligence to Succeed

நாம் எல்லோரும் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுவதால் பல சந்தர்ப்பங்களில் எங்களின் வெற்றிகள் மற்றும் இலக்குகளை அடைவதில் கடினத்தன்மையை ஏற்படுத்திக்கொள்கின்றோம். இதனால் கோல்மன் போன்ற உளவியலாளர்கள் உணர்வுசார் நுண்ணறிவின் பயன்பாடுபற்றி ஆய்வுசெய்து எழுதியுள்ளார்கள். அவர்களின் கருத்துப்படி நாங்கள் எங்களது உணர்வுகளை புரிந்துகொள்வதுடன் மற்றவர்களின் நிலையிலிருந்து அவர்களது உணர்வுகளையும் புரிந்துகொண்டு நிலைமைக்கேற்றபடி உணர்வுகளை வழிப்படுத்தி அதனைப் பயன்படுத்தினால் வாழ்வில் வெற்றிபெற முடியும். இதற்காக சுய விழிப்புணர்வு மற்றும் சுய முகாமைத்துவத்தை நாங்கள் பின்பற்றினால் அவை உணர்வுசார் நுண்ணறிவை மேம்படுத்த உதவும்.

**1. அறிமுகம்**

கடந்த இரண்டு தசாப்தங்களாக நிறுவனங்கள் முகாமைத்துவ வடிவகங்களின் அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பத்திருக்கின்றன. முகாமைத்துவ வகிபங்கானது வாடிக்கையாளரை மையப்படுத்தியதாக அமைந்துள்ளதுடன் அதனை நோக்கியதாகத் தனிநபர்களும் குழுக்களும் அதிகம் சுயமாக இயங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது சர்வாதிகார தலைமைத்துவத்தைக் குறைத்துப் பங்குபற்றும் தலைமைத்துவத்தை மையப்படுத்திய கலாச்சாரத்திற்கு வழிவகுத்தது. இவ்வாறான முகாமைத்துவ பணிக்கு உணர்வுசார் நுண்ணறிவின் பங்கு அளப்பரியதாக அமைகின்றது. இந்த உணர்வுசார் நுண்ணறிவு என்ற எண்ணக்கருத்தானது புதியதொன்றல்ல.

நாங்கள் எங்களது உணர்வுகளையும் அவற்றின் விளைவுகளையும் அறியாமல் இருக்கும் பொழுது நிம்மதியான, வெற்றிகரமான வாழ்வை வாழ்வதென்பது கடினமானது. நிச்சயமாக, எம்மை சிறப்பாக வைத்திருப்பது எவ்வகை உணர்வுகள் என்பதை நாங்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் எவ்வகையான உணர்வுகள் எம்மைப் பாதிக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

**2. நுண்ணறிவு தொடர்பாக ஆய்வாளர்களின் பார்வை**

உளவியலாளர் சலோவி மற்றும் மேயர் என்போர் 1990 களில் உணர்வுபூர்வ நுண்ணறிவு என்ற பதத்தை பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். எனினும் டானியல் கோல்மன் தனது பிரபலமாக விற்பனையான "உணர்வு பூர்வமான நுண்ணறிவு: ஏன் நுண்ணறிவைவிட உணர்வு பூர்வ நுண்ணறிவு முக்கியம்" என்ற தலைப்பிடப்பட்ட புத்தகத்தின் காரணமாக 1995ல் பிரபல்யடைந்தார். கோல்மன் நுண்ணறிவை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகின்றார்.

"ஒருவருடைய சொந்த உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளல், மற்றவர்களுடைய உணர்வை அவர்களின் நிலையிலிருந்து புரிந்துகொள்ளல், மற்றும் வாழ்வினை மேம்படுத்துவதற்கு ஏற்றவகையில் உணர்வுகளை வழிப்படுத்தல்" இவருடைய புத்தகம் பிரபல்யமடைவதற்கான காரணங்களை இரண்டு வகைப்படுத்தலாம். முதலாவது, உணர்வுபூர்வ நுண்ணறிவானது தனிப்பட்ட வெற்றிக்கு நுண்ணறிவைவிட முக்கியமானது. இரண்டாவது, நுண்ணறிவைப் போலல்லாமல் உணர்வுபூர்வ நுண்ணறிவானது மேம்படுத்தக்கூடியது.


கோல்மனைத் தொடர்ந்து பல எழுத்தாளர்கள் உணர்வுபூர்வ நுண்ணறிவு தொடர்பாக பல நூல்களை எழுதியுள்ளார்கள். எல்லோரும் பின்வரும் மூன்று விடயங்களில் கோல்மனுடன் ஒத்துப்போகின்றார்கள். அவையாவன

1. உணர்வுபூர்வ நுண்ணறிவு ஏற்கனவே எல்லோரிடமும் உள்ளது.
2. தனிப்பட்ட மற்றும் தொழில்ரீதியான வெற்றிக்கான காரணிகளில் இதுவும் ஒன்று
3. இது முன்னேற்றப்படக்கூடிய ஒன்று.

முகாமையாளர்களின் பணி என்பது தமது இலக்குகளை ஏனையவர்களைக் கொண்டு நிறைவேற்றுவதாகும். இங்கு ஏனையவர்கள் என்பது, தமது அணியினர், நிறுவனத்திலுள்ள ஏனைய முகாமையாளர்கள், நிறுவனத்துடன் தொடர்புடையவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களைக் குறிக்கும். நீங்கள் வெற்றிபெறுபவராக இருப்பதற்கு நீங்கள் உணர்வுபூர்வ நுண்ணறிவைப் பயன்படுத்தி உங்களை அறிந்து கொள்வதுடன் ஏனையவர்களையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

### 2.1 கோல்மனின் உணர்வுசார் நுண்ணறிவு மாதிரி

பணியிடங்களில் பயன்படுத்தக்கூடிய கோல்மனின் உணர்வுசார் நுண்ணறிவு மாதிரியானது ஐந்து பரிமாணங்களில் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஐந்து பரிமாணங்களும் பல வியாபார முகாமைத்துவ கோட்பாட்டாளர்களால் இரண்டு பிரதான பகுதிகளாகக் கொண்டு நான்கு தளங்களாக நோக்கப்படுகின்றன. இரண்டு பிரதான பகுதிகளும் தனிநபர் கொண்டிருக்கக்கூடிய போட்டித்திறன் மற்றும் சமூகரீதியான போட்டித்திறன் என்பவற்றை குறித்துநிற்கின்றன.




**வரைபடம் -1: கோல்மனின் உணர்வுசார் நுண்ணறிவு மாதிரி**

#### 2.1.1 தனிநபர் போட்டித்திறன்கள்

கோல்மனின் ஐந்து பரிமாணங்களில் மூன்று பரிமாணங்களை இந்த தனிநபர் போட்டித்திறன்கள் கொண்டுள்ளன. இங்கு சுய விழிப்புணர்வு மற்றும் சுய முகாமைத்துவம் என்பன தனிப்பட்ட போட்டித்திறனை வளர்க்க உதவும்.

**2.1.1.1 சுய விழிப்புணர்வு** – சுய விழிப்புணர்வு என்பது நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்வதுடன் எவ்வளவு துல்லியமாக உங்களைப் புரிந்துகொள்கின்றீர்கள் என்பதுடன் தொடர்புபட்டது.

**2.1.1.2 சுய முகாமைத்துவம்** - சுயவிழிப்புணர்வில் உங்களால் புரிந்து கொள்ளப்பட்டதன் அடிப்படையில் உங்களை முகாமைசெய்துகொள்ளலை இது குறிக்கின்றது. இங்கு நீங்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போது எவ்வளவு

தூரத்திற்கு உங்களது உணர்வுகளைக் கட்டுக்குள் வைத்திருந்து பிரச்சனைகளைக் கையாள்கின்றீர்கள் என்பது முக்கியம். இதுவே உங்களது வெற்றிக்காக உங்களை ஊக்கப்படுத்தி உங்களது இலக்குகளை அடைவதற்கு வழிசமைக்கும்.

**2.1.2 சமூகம் சார்ந்த போட்டித்திறன்கள்**

இது கோல்மனின் மாதிரியின் எஞ்சிய பரிமாணங்களை விளக்கிநிற்கின்றது. இங்கு சமூக விழிப்புணர்வு மற்றும் சமூகத் திறன்கள் உள்ளடக்கப்படுகின்றன. இவை எவ்வளவு தூரத்திற்கு நீங்கள் மற்றவர்களைப் புரிந்துகொண்டு அவர்களுடன் உறவு வைத்திருக்கின்றீர்கள் என்பதனைக் குறிக்கின்றது.

**2.1.2.1 சமூக விழிப்புணர்வு**

உங்களைச் சூழவுள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்காக உங்களது புரிந்துகொள்ளலை விரிவாக்குவதை இது குறிக்கின்றது. இது மற்றவர்களின் நிலையில் நின்று சிந்திப்பது மற்றும் எவ்வகையான நிறுவனச் சூழலில் நீங்கள் வேலை செய்கின்றீர்கள் என்பதை அறிந்துகொள்வது போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.

**2.1.2.2 உறவு முகாமைத்துவம்**

உங்களது உணர்வுகள் மற்றும் உங்களைச் சூழவுள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களுடன் உறவைப்பேணுவதை இது வெளிப்படுத்துகின்றது. உங்களுடன் இருப்பவர்கள் மற்றும் வெளியிலுள்ளவர்கள் தொடர்பான உணர்வுகளை அடையாளம் கண்டு பகுத்தறிந்து புரிந்துகொள்வதனை உள்ளடக்குகின்றது. இது நீங்கள் மற்றவர்களிடமிருந்து விலகி நிற்காமல் மற்றவர்களுடன் தொடர்புகொண்டு, அவர்களை இணங்கச் செய்து அவர்களைத் தலைமைதாங்கி இலக்கை அடைந்துகொள்வதற்கு உதவும். இதனாலேயே சிலரை நாம் சிறந்த தலைவர்கள், அதிபர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் என்று அடையாளம் கண்டுகொள்கின்றோம்.

**3. உணர்வுசார் நுண்ணறிவை மேம்படுத்தத் தேவைப்படும் சுய விழிப்புணர்வு**

உணர்வுசார் நுண்ணறிவை மேம்படுத்துவதற்கு சுயவிழிப்புணர்வே ஆதாரமாக அமைகின்றது. உங்களது உணர்வுகளை அறிந்துகொள்வதற்குப் பயிற்சி

எடுத்துக்கொள்ளுங்கள். முதலில், ஆரம்பத்தில் உங்களது உணர்வுகளில் குறிப்பிடத்தக்கவற்றை அடையாளப்படுத்திக்கொள்வது கடினமானதாக இருக்கும். ஆனால் காலப்போக்கில் உங்களது உணர்வுகளை அடையாளப்படுத்திக் கொள்ளும் திறமை அதிகரிக்கும். கீழ்வருவன உங்கள் சுயவிழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளாகும்.

**படி 1. உங்களைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.**

உங்களது உணர்வுகளைப் புரிந்துகொள்ளவதற்குக் காலம் எடுக்கும். நீங்கள் ஒரு நாளில் தனிமையாகவும் அமைதியாகவும் இருக்கக்கூடிய குறிப்பிட்ட நேரத்தை அட்டவணைப்படுத்துங்கள். அநேகமாகக் காலை, மதிய உணவு நேரம், படுக்கைக்குச் செல்லும் நேரம் போன்றன தொடங்குவதற்கான சரியான நேரமாகும். முதலில், ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் இதனைப் பயிற்சி செய்தால் அந்தப் பழக்கத்திற்கு இலகுவாக வரமுடியும். முடிவில், நீங்கள் பலமான, அழுத்தமான அல்லது ஏனைய உணர்ச்சி நிலைகளில் அதனை உணர்ந்து கொள்ளக்கூடிய திறனை வரவழைக்க முடியும்.

அமைதியாக இருந்து, சாத்தியமானால் கண்களை மூடிக்கொண்டு, உங்களிடம் பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டு அவற்றிற்கு நேர்மையாக விடையளியுங்கள். இதற்கான விடை சாரியாகவோ அல்லது தவறாகவோ இருக்கும் என்று சிந்திக்கவேண்டியதில்லை. உங்களுடைய விடைகளை செவிமடுங்கள். சில மாதிரி வினாக்கள் கீழே தரப்படுகின்றது.

i. நான் எப்படி உணர்கின்றேன்?
ii. நான் என்ன உணர்கின்றேன்?
iii. எவ்வளவு காலமாக இப்படி உணர்கின்றேன்?
iv. இந்த உணர்வுகள் எனது உடலில் எங்கு பாதிக்கின்றது? நான் பதட்டமாக இருக்கின்றேனா? சோர்வாக உணர்கின்றேனா? தலைவலி இருக்கின்றதா? வயிற்று வலி இருக்கின்றதா?

**படி 2 உமது உணர்வுகளை அடையாளப்படுத்தல்**

எதை உணர்கின்றீர்கள் என்று நீங்கள் சொல்லும் வேளையில் உங்களால் எதிர்மறையான உணர்வுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். நீங்கள் உங்கள் உணர்வுகளை அடையாளம் கண்டுகொள்ளும்

வேளையில், நீங்கள் உங்கள் உணர்வுகளைக் குறிப்பான பெயரிட்டு அடையாளப்படுத்திக்கொள்ள முடியும் (உதாரணம், நான் கோபமாக இருக்கின்றேன், நான் தோற்றுப்போயுள்ளேன் போன்றன). எல்லா உணர்வுகளும் எதிர்மறையானவை அல்ல என்பதையும் புரிந்துகொள்ளுங்கள், சாதகமான அல்லது நேரான உணர்வுகளையும் அடையாளம் கண்டுகொள்ள (உதாரணம்: நான் மற்றவர்களால் மதிக்கப்படுகின்றேன், நான் வெற்றி பெற்றுள்ளேன் போன்றன) பயிற்சி செய்யுங்கள்.

உங்களது உணர்வுகளைத் தூண்டும் காரணிகளை அடையாளம் கண்டுகொள்வதற்கான சில மாதிரிவினாக்கள் கீழே வருகின்றது.

1. எப்பொழுது அந்த உணர்வு ஆரம்பமானது?
2. அந்த உணர்வு ஆரம்பமானபொழுது என்ன நடந்தது?
3. உணர்வின் பலம் முழுவதுமாக மாற்றமடைந்துள்ளதா? (உதாரணம்: கோபம் குறைதல்) எப்படி?

**படி 3. அந்தக் கணப்பொழுதுடன் இருங்கள்**

உங்களது உணர்வுகளை அவை இடம்பெறும்போதே செவிமடுக்க முயலுங்கள். அவை உங்களுக்கு எதைச் சொல்லுகின்றன? நாங்கள் ஒரு புதிய இடத்திற்குள் நுழையும் பொழுது அல்லது முற்றிலும் அறியாத ஒருவரை சந்திக்கும்பொழுது எங்களை எங்கள் உணர்வுகள் எச்சரிக்கை செய்வதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எங்கள் உணர்வுகளே எங்களை ஆபத்தான நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எமது உடலுக்குத் தகவலை வழங்குகின்றன. எமது பதட்டம் என்பது ஆபத்தான நிலையில் எங்களைப் பாதுகாப்பதற்காக எமது உடல் எடுக்கும் ஆரம்பகட்ட எச்சரிக்கையாகும். இவற்றை நீங்கள் உங்கள் வாழ்வில் உணர்ந்திருப்பதுடன் அவை உள்ளுணர்வு அல்லது இயல்பூக்கம் என்று அழைத்திருப்பீர்கள். ஆனால் இதேமாதிரியான அனுபவங்கள் உங்களது வாழ்வில் அல்லது வேலை இடத்தில் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும்.
உதாரணம்: நீங்கள் ஒரு வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்போது நீங்கள் கோவம் அல்லது எரிச்சல் அடைகின்றீர்களானால், அது உங்களுக்கு எதைச் சொல்லுகின்றது? உண்மையில் உங்களது

வேலைச் சுமைக்கு மேலதிகமாக இந்த வேலைத்திட்டம் அமைவதுடன் அது சம்பந்தமான தீர்மானத்தை மாற்றுவதைப்பற்றி பேசுவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்கள்.

**படி 4. உணர்வுகளின் மூலங்களை அடையாளம் காணுதல்**

நீங்கள் உணர்வுகளை பெயர்குறித்து அடையாளப்படுத்தி, அவை எதை உங்களுக்கு தெரிவிக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டுள்ளீர்கள். நீங்கள் அனுபவிக்கும் விடயங்களை உணர்ந்துகொள்ளும் ஒரு சிறிய பகுதியே உணர்ச்சிகள் என உணர்வீர்கள்.

உதாணரமாக நீங்கள் கோபப்படுகின்றீர்கள். உங்கள் கோபத்திற்கு பின்னால் உள்ள காரணம் என்ன? நீங்கள் பலவீனமாக இருப்பதனாலா? அல்லது கட்டுப்படுத்த முடியாமையினாலா? கோவப்படுகின்றீர்கள். மற்றவர்கள் உங்களைப் பாதித்ததுடன் மற்றவர்கள் உங்களை ஏளனமாகப் பார்ப்பார்கள் என்பதாலா கோபப்படுகின்றீர்கள்? உங்களுக்கு உண்மையில் விருப்பமில்லாத வேலையை ஏற்றதாலா நீங்கள் கோவப்படுகின்றீர்கள்? இங்கு குறிப்பிட்ட மூலகாரணங்கள் எல்லாம் வேறுபட்டவை. எனவே நீங்கள் இந்த உணர்ச்சிகளுக்கு அப்பால் இவை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இல்லையேல் உங்களால் உங்கள் உணர்வுகளை முகாமை செய்துகொள்ள முடியாது.

இன்னொரு முக்கியவிடயம், நீங்கள் ஒரு உணர்வினை மட்டும் ஒரு நேரத்தில் உணர்வதில்லை. மாறாகப் பல உணர்வுகள் எங்களைப் பாதிக்கின்றன. எனவே நேரமெடுத்து ஒவ்வொரு உணர்வுக்கான மூலங்களைப் பகுத்தறிந்து அவற்றிற்கு ஏற்ப உங்களை முகாமை செய்துகொள்ளுங்கள்.

**4. உணர்வுசார் நுண்ணறிவை மேம்படுத்தத் தேவைப்படும் சுய முகாமைத்துவம்**

சுய முகாமைத்துவம் என்பது உணர்வுசார் நுண்ணறிவை மேம்படுத்தச் சிறந்த வழிமுறையாகும். இது எமது உணர்வுகளுக்கான பொறுப்பை நாம் எடுத்துக்கொள்வதைக் குறித்துநிற்கின்றது. நாங்கள் உணர்ந்துகொள்ளும் விடயங்களுக்கான பொறுப்பை எடுத்து அதன்படி தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அது எமது உள உடல் ஆரோக்கியத்துக்கு உறுதுணையாக நிற்கின்றது. இது மாறாக எங்களது இலக்குகளை

அடைவதற்கு எங்களை ஊக்கப்படுத்துவதாகவும் அமைகின்றது. இதன் மூலம் எமது வாழ்வில் தோன்றும் தடைக்கற்களைத் தாண்டி முன்னேறிச் செல்ல வழிகாட்டும். இது உணர்வுகளால் கட்டுப்படுத்தப்படாமல் எமது உணர்வுகளை அனுபவிக்கவிடுவதுடன் தொழில் வாழ்க்கையிலும் அப்பாலும் நல்ல உறவுகளை மேம்படுத்த உதவும்.

**சுய முகாமைத்துவமானது ஆறுவகையான ஆற்றல் பண்புகளைக் கொண்டுள்ளது.**

i) **சுய கட்டுப்பாடு**

சுய கட்டுப்பாடு என்பது உங்களது உணர்வுகளுக்கு உடனடியாகப் பிரதிபலிக்காமல் உங்கள் நடவடிக்கைகளை கட்டுக்குள் வைத்திருப்பதாகும். இது செயற்படுவதற்கு முன்னர் நின்று நிதானித்து நிலமைக்கேற்றவகையில் பொருத்தமான நடவடிக்கையைத் தேர்ந்தெடுப்பதற்கான திறனாகும். இது எது முக்கியம் மற்றும் முக்கியமற்றது என்பதை நீங்கள் தீர்மானிப்பதற்கும் அவை எவ்வாறு உமது நடத்தையை மாற்றுகின்றது என்பதைப் புரிந்துகொள்வதில் ஈடுபடுகின்றது.

ii) **நம்பகத்தன்மை**

நாம் நாளாந்த வாழ்க்கையில் அளவுக்கதிகமாக ஈடுபாடுகாட்டுகின்றோம். அனேகமான சந்தர்ப்பங்களில் அநேகமான விடயங்களைச் செய்வதாக ஒத்துக்கொள்கின்றோம். ஆனால் நேரவரையறை காரணமாக எம்மால் அவற்றைச் செய்ய முடியாமல் போகின்றது. இதனால் எமது நம்பகத்தன்மை கேள்விக்குறியாகின்றது. இதனால் நாம் சுய முகாமைத்து வத்தினூடாக எம்மால் எது முடியும் மற்றும் முடியாது என்பதனைத் தெரிந்துகொண்டு செயற்பட்டு நம்பகத்தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

iii) **மனச்சாட்சிக்கு கட்டுப்படுதல்**

எங்கள் எல்லோருக்கும் மனச்சாட்சி என்ன என்பது தெரியும். இங்கு உணர்வுசார் நுண்ணறிவை வளர்த்துக்கொள்வதற்கு நாம்

மனச்சாட்சியின்படி எமது உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளுக்குப் பொறுப்பெடுத்து எம்மை முகாமை செய்துகொள்ளவேண்டும். இதன் மூலம் எமது உணர்சிவெளிப்பாடுகள் பலமானதாக இருந்தபோதும் எமது வேலைக்கும் வெளியீடுகளுக்குமான பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருந்தால், அவன் என்னை இப்படி ஆக்கிவிட்டான், அவள் என்னைக் குழப்பிவிட்டாள், அவர்கள் என்னை எரிச்சல் ஊட்டுகின்றார்கள் என்று மற்றவர்கள் மீது எமது நடத்தைக்கான காரணத்தைச் சுமத்த முயற்சிப்போம்.

### iv) ஒத்துப்போகும் தன்மை

சிலர் மாற்றத்திற்கான உணர்ச்சிகளை அனுமதிக்காத போது செயற்திறனுக்கு மற்றும் உணர்வுகளுக்கான தடைக்கல்லாக மாறுகின்றார்கள். உண்மை என்னவெனில், மாற்றங்கள் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருக்கும், இடமாற்றங்கள் வரும், புதிய தலைவர்கள் வருவார்கள், வேலைப் பொறுப்புக்கள் மாற்றமடையும், பிரியமானவர்களைப் பிரிய நேரிடுதல் போன்ற பல மாற்றங்கள் இடம்பெறும். எனவே எமது உணர்வுகளை முகாமைசெய்து இந்த மாற்றங்களுக்கு ஒத்துப்போகும்படி எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### v) இலக்குகளை அடைதல்

நீங்கள் சுயமுகாமைத்துவத்தை சரியாகப் பின்பற்றினால் உங்களது இலக்குகளை அடையக்கூடிய நடவடிக்கைகளைத் தெரிவுசெய்து நடைமுறைப்படுத்தி வெற்றியடைய முடியும். இந்தத் திறனினைப் பலமாகக் கொண்டவர்கள் பின்வரும் விடயங்களை ஆற்றுவார்கள்.

i எது முக்கியமானது என்பதை உணர்ந்து அதன்படி தொழிற்படுதல்.
ii. தமது நடத்தையின் விளைவால் கௌரவத்தை பெற்றுக் கொள்வார்கள்.
iii. தொடர்ச்சியாக தமது இலக்குகளை அடைவதற்குத் தேவையானத் நடத்தைகளை தேடுவதுடன் தேவைய ற்றவற்றைக் கைவிடுவார்கள்.
iv. தேவையானவற்றை மட்டும் செய்வார்கள்.

v. சிறப்பாகச் செயற்படுவதற்காகத் தங்களைப் பராமரித்துக் கொள்வார்கள்.

vi. தேவைப்படும்போது உதவியை நாடுவார்கள்.

vii. இலக்கை அடைவதற்காகத் தங்களுக்கே வெகுமதியளிப்பர்.

### vi) முயற்சியெடுத்தல்

உணர்ச்சிசார் நுண்ணறிவைப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுப்பவர்கள் தொடர்ச்சியாகத் தம்மை விருத்தி செய்வார்கள். இது, தமது வாழ்க்கை முறையை மாற்றியமைத்தல், தொடர்ச்சியாகக் கல்விகற்றல், புதிய திறன்களை கற்றுக்கொள்ளல், புதிய பழக்கவழக்கங்களை விருத்திசெய்தலுடன் தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்துகொள்வார்கள். அவர்கள் பிரச்சனைகளைக் கையாள் வதிலும், முரண்பாடுகளைக் கையாள்வதிலும் முயற்சி எடுப்பார்கள். தமது முன்னேற்றத்தைப் பாதிக்கும் எதிர்மறை உணர்வுகளைக் களைவதற்கும் முயற்சியெடுப்பார்கள்.

## 5. முடிவுரை

ஆரம்பகால ஆய்வுகள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திறன்கள் மற்றும் ஏனைய அளவிடக்கூடிய கணிய ரீதியான திறன்களிலேயே கவனம் செலுத்தின. எப்படியாயினும், ஒருவருடைய வெற்றியில் பங்காற்றுவதில் ஏனைய திறன்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் விளைவாகவே உணர்ச்சிசார் நுண்ணறிவின் தாக்கம் உணரப்பட்டு ஆய்வு செய்து அதன் பயன்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி ஒருவரால் உணர்ச்சிகளை அடையாளம்கண்டு, புரிந்துகொண்டு, வழிப்படுத்தி, சரியான முறையில் பயன்படுத்த முடிந்தால் அவரது தொழில்வாழ்வும் தனிவாழ்வும் சிறப்பாக அமையும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே நீங்களும் உங்களது உணர்ச்சிகளை நுண்ணறிவுடன் சரியானமுறையில் கையாண்டு வாழ்வில் வெற்றிகொள்ளுங்கள்.

கலாநிதி. சிவராசா ராஜ்உமேஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சந்தைப்படுத்தல் துறை,
முகாமைக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



சாரணிய அணி - 2015



சுற்றாடல் குழு - 2015



மாகாண மட்டத்திற்குத் தெரிவான உதைபந்தாட்ட அணி - 2014



பாடசாலைப் பணியாளர்கள்

# புதுக்குடியிருப்பு பிரதேசமும் ஆரம்பிக்கக் கூடிய தொழில் முயற்சிகளும்

முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய பரந்த வளம்மிக்க பிரதேசம் புதுக்குடியிருப்பு. அடர்த்தியான சனத்தொகையையும் சாதகமான காலநிலை, சிறந்த தரைத்தோற்ற அமைப்பையும் தன்னகத்தே கொண்ட இப் பிரதேசமானது 2013 / 2014 இல் சிறந்த உற்பத்தித் திறனுக்கான (Productivity Award) விருதை பெற்றுக் கொண்டது. இதற்கு பிரதான காரணம் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் தொழில் முயற்சியாளர்களும் (Enter prince) அவர்களுடைய அனுபவங களுமாகும். ஒரு தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்கத் தேவையான உற்பத்திக் காரணிகளை (Inputs) நிலம், மூலதனம், முயற்சி, மனிதவளம், தகவல், நேரம் போன்ற அனைத்தும் இங்கு சிறப்பாகக் காணப்படுகின்றன. இருப்பினும் தொழில் முயற்சியாளர்கள் வணிக சந்தர்ப்பங்களை (Business Opportunities) இனங்காணுவதிலும், ஆபத்தை எதிர்கொள்வதிலும் (Rise taking) சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் கட்டுரை உடைய பிரதான நோக்கம் வெளிநாடுகளிலுள்ள முதலீட்டாளர்களுக்கும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் சரியான வணிகங்களை அடையாளப்படுத்துவதுடன் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதுமாகும். வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துல், தன்னம்பிக்கை, நேர்மனப்பாங்கு, பிரச்சினைகளுக்குரிய சரியான தீர்வை முன்வைத்தல்,புத்தாக்கம் புனைதல் போன்ற ஆற்றல்களை கொண்ட முயற்சியாளர்களுக்கு இன்றைய மாறிவிடும் உலகம் (Global world) முதன்மையளிக்கின்றது. புதிய முயற்சிகள் தோற்றம் பெறுவதன் மூலம் வருமானம் உயர்வடைந்து, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வடைவதுடன், புதிய வேலைவாய்ப்புக்களும் கிடைக்கப் பெறும். மக்கள் பிரதேச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தினால்தான் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியின் பங்காளராக மாற முடியும். ஒரு முயற்சியாண்மை வெற்றியடைவதன் மூலம் பல முயற்சியாண்மைகள் தோற்றம் பெறும்.

கடந்த கால யுத்தத்திற்கு முன்னர் காணப்பட்ட தெங்குசார் உற்பத்திகளை தற்போது காணமுடியவில்லை. இருப்பினும் மூலப்பொருள் கிடைப்பனவுக்கு பற்றாக்குறை என்பதே கிடையாது. மூலப்பொருட்களாக தகுந்த குறைவான விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டு அவை முடிவுப் பொருட்களாக நமது பிரதேசத்திற்கே அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. தென்னையிலிருந்து நாம் பல்வேறு முயற்சிகளை ஆரம்பிக்க முடியும். குறிப்பாக தேங்காய் எண்ணெய், விளக்குமார், தும்புத்தடி, இவற்றைவிட இன்று இலங்கையில் ஏற்றுமதி வருவாய் பெற்றுத் தரும் தும்பு தாவரங்களுக்கு உரமாக பயன்படுத்தப்படுகின்றது. இவற்றை விட கால் துடைப்பம், பொம்மைகள், குருவிகள், பூக்கள் போன்ற அலங்கார பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறான இயற்கை பொருள் உற்பத்திகள் மூலம் நமது சூழலையும் பாதுகாக்க முடியும். பனை மரத்திலிருந்து ஏராளமான உற்பத்திகளை ஆரம்பிக்க முடியும்.

போரிற்கு முன்னர் மிகவும் உச்ச பயன்பாட்டை கொண்டதாக கற்பகத் தரு காணப்பட்டது. வடிசாலை எனும் உற்பத்தி மையத்திலிருந்து சாரயம், பனம் வெல்ல், பதநீர், கள் போன்றவை உள்ளீர் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்தது. இன்று இவற்றின் தொழிற்பாடுகளோ, உற்பத்திகளோ காணப்படவில்லை. மேலும் படுக்கை விரிப்பு, அழகுசாதன பொருட்கள் போன்ற உற்பத்திகளையும் ஆரம்பிக்க முடியும்.

கால்நடை வளர்ப்புக்கு ஓர் உகந்த பிரதேசமாக புதுக்குடியிருப்பு காணப்படுகின்றது. குறிப்பாக ஆடு, மாடு, கோழி போன்றவை முக்கியம் பெறுகின்றன. இவற்றிலும் மாடு வளர்ப்பு பண்ணையாளர்கள் கூடுதலாக வாழ்ந்து வருகின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மட்டும் நாளொன்றுக்கு சராசரியாக 5000$l$ பால் உற்றபத்தியாகின்றது. இவை மூலப்பொருட்களாகவே வெளிமாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றது. பால் சார்ந்த உற்பத்திகளான யோக்கட், நெய், வெண்ணெய், தகரத்தில் அடைக்கப்பட்ட பால், பால் பைக்கட் போன்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடியும். இதனை விட இயற்கைக்கு தீங்கு விளைவிக்க முடியாத இயற்கை வாயு (Bio gas) உற்பத்திகளையும் ஆரம்பிக்க முடியும்.

புதுக்குடியிருப்பு நன்னீர், உவர்நீர் தரைத்தோற்ற அம்சங்களைக் கொண்ட பிரதேசம். குறிப்பாக இறால், நண்டு, கணவாய் அதிகளவு கிடைக்கின்ற இடங்களில் ஒன்றாகும். இங்கு நீண்டகாலத்திற்கு பேணுகின்ற வகையில தொழிற்சாலைகளோ, உற்பத்திகளோ ஆரம்பிக்கப்பட வில்லை. தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கருவாடு, ஐஸ்கட்டித் தெரிற்சாலை, குளிரூட்டல் தொழிற்சாலை (Coola) என்பவற்ற்ற ஆரம்பிக்கலாம். கடல் உணவு சார் உற்பத்திகளுக்கு அதிகளவான கேள்வி எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. இத்தகைய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து களஞ்சியப்படுத்தி சந்தை விலை அதிகரிக்கும் போது இவற்றை சந்தைப்படுத்துகின்ற போது அதிகளவு இலாபத்தைச் சம்பாதிக்க முடியும்.

புதுக்குடியிருப்பின் பாரம்பரிய பிரதான உற்பத்தியாக நெற்செய்கை காணப்படுகின்றது. சிறுபோகம், பெரும்போகம் என காலம் முழுவதும் இது இடம்பெறுகின்றது. இருப்பினும் உற்பத்தியாளர்கள் இவற்றை குறைந்த விலைகளில் ஏற்றுமதி செய்து வருகின்றனர். காரணம் எல்லா உற்பத்தியாளர்களும் ஒரே நேரத்தில் நிரம்பல் செய்வதனால் பொருத்தமான கேள்வி கிடைப்பதில்லை. இதனை மையமாகக் கொண்டு பாரியளவு களஞ்சியசாலை, அரைக்கும் அரிசி ஆலை, அரிசி சார்ந்த உற்பத்திகள் சிறுசிறு அளவுகளில் பைக்கட்டுககளில் பொதி செய்தல் போன்றவற்றை அடிப்படை வசதிகளைக் கொண்டு தொழிற்முயற்சிகளை ஆரம்பிக்கலாம். தற்காலத்தில் அதிகமாக மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை சேமிப்பு. மற்றும் கடன் பெறுதல் போன்றனவாகும். புதுக்குடியிருப்பில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்ற அரச வங்கிகளைத் தவிர எவ்வித தனியார் வங்கிகளோ, நிதிக்கம்பனிகளோ காணப்படவில்லை. புதுக்குடியிருப்பு பிரதேசமானது விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், பாடசாலை மாணவர் போன்ற பல்வேறு வர்க்கத்தினரும் வாழுகின்ற மையமாகும். இவர்களிடமிருந்து அதிகளவு சேமிப்புக்களை

திரட்டுவதுடன் சிறுதொழில் கடன்களை வழங்கவும் இவர்களுக்கு ஒரு வாய்ப்பாக காணப்படுகின்றது. இவற்றைவிட புதுக்குடியிருப்பு பிரதேசம் குடிதண்ணீருக்கு மிகவும் சிறந்ததாக விளங்குகின்றது. அத்துடன் தாராளமாகவும் கிடைக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் தொழிற்சாலையொன்றையும் ஆரம்பிக்கமுடியும். இயற்கை பசளைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பழங்கள், மரக்கறிகளுக்கும் அரச உத்தரவாத சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இவற்றை இலகுவில் சந்தைப்படுத்த முடியும். இதற்கு உகந்தாற்போல் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மண்வளம். நீர்வளம் காணப்படுகின்றது. மிகவும் பிரதானமாக புதுக்குடியிருப்பில் ஏராளமான மனிதவளம் வீணடிக்கப்டுகின்றது. எந்தவித உயர்கல்வி நிறுவனங்களோ, தொழில்சார் பயிற்சிக் கம்பனிகளோ காணப்படவில்லை. பட்டதாரிகள் முதல் உயர் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களும் கிடைக்கும் மேலதிக நேரங்களை பயன் படுத்திக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் துப்பரவு செய்யும் கம்பனி (Cleaning Company) ஒன்றை ஆரம்பித்து வங்கிகள், அரச நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி வருமானம் ஈடட முடியும். அத்துடன் சிறுதொழில் முயற்சிகளான மிக்சர், மரவள்ளி, பப்படம் போன்ற சிறுசிறு முயற்சிகளை ஆரம்பிக்க தாராளமான வசதிகளை புதுக்குடியிருப்பு பிரதேசம் கொண்டிருக்கின்றது. பல தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க இருக்கும் புதிய முயற்சியாளர்களை அன்புடன் வரவேற்பதுடன், இருக்கின்ற முயற்சியாளர்களை ஊக்குவிப்பதுடன் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

***"Interprenuers are able to see what others have the courage and skill to action on the Opportunities the Preceve."***

***S. Satheesan (2008 A/L. P.C.C)***
Pan Asin Bank ( B. A (Hons)

# Fundamental Rights of Sri Lankan People

## Introductions

Universal Declaration Of human Rights (UDHR) sets out comprehensive guidelines for Human Rights, no country in the world can ensure all rights of its citizens are protected. Therefore countries have selected a certain amount of rights from the Universal Declaration Of human Rights (UDHR) and included them in their constitution, and this segment of rights are known as "Fundamental Rights".

Fundamental Rights are included in chapter III of the Second Republican Constitution of 1978 of Sri Lanka. This Chapter (chapter III) recognizes and guarantees a board range of Fundamental rights including : Freedom of thought and conscience; sex or cast; legal protection including freedom from arbitrary arrest or detention; freedom of speech; freedom to engage in any lawful occupation; and freedom of movement. Next in this paper I will attmpt to discuss every Fundamental Rights in detail.

## Freedom of Thought, Conscience and Religion. Article - 10

Every person is entitled to freedom of thought, conscience and religion. This right includes freedom to have or to adopt a religion or belief of his or her choice. The right to conversion is implicitly guaranteed in this article.

## Freedom from Torture. Article - 11

This article states, no person shall be subjected to torture or to cruel, in human or degrading treatment or punishment. According to the CAT (Convention Against Torture) convention "torture" means "Any act by which servere pain or suffering, whether physical or mental, is intentionally inflicted on a person in order to obtain information or confession and it's caused by public officers or other persons acting in an official capacity".

## Right to Equality. Article - 12

Equality is the foundation of justice and equity. This article sets out that all persons are equal before the law and are entitled to the equal protection of the law, and no citizen shall be discriminated on the ground of race, religion, language, cast, sex, political opinion, place of birth or any one of such grounds and also no person shall be subject to any disability to access shops, public restaurants, hotels, places of public entertainment and places of public worships of his own religion due to these disabilities. anyhow right to equality doesn't prevent the special provisions being made for the advancement of women, children or disabled persons.

## Freedom from Arbitrary arrest, Dentention and Punishment and Prohibition of Retroactive penal legislation. Article - 13.

This article deals with various aspects aspects of arrest and other criminal procedures. No person shall be arrested except according to the procedure established by the law and any person arrested shall be informed of the reason for his or her arrest. The arrested person shall be brought before the judge of the nearest competent court according to the procedure established by the law and shall be entitled to be heard in person or by an attorney-at-law (Lawyer), at a fair trial by a competent court. Further this article guarantees, No person shall be punished with death or imprisonment except by an order of a competent court, this arrangement impliedly guarantee the "Right to Life"[1]. Every person shall be presumed innocent until he is proven guilty, no person shall be held guily of an offence which did not, at the time of an offence and no penalty shall be imposed for any offence more serve than the penalty in force at the time such offence was committed. Also the retroactive effect of the legislation is prohibited by this article.

## Freedom of Speech, Assembly, Association, Movement and etc. Article - 14

This article sets out every citizen is entitled to the freedom of speech and expression including publication; the freedom of peaceful assembly; the

freedom of association; the freedom to from and join a trade union; the freedom to manifest his or her religion or belief in worship, observance, practice or teaching; to enjoy and promote his own language; to engage in any lawful occupation, profession, trede, business or enterprise are guaranteed in this article. The right to movement and freedom to return to SriLanka are prescribed by this article and Right of Access to Information also has been included through the latest 19th amendment to the constitution.

## Limitations

Even though it is enshrined in our constitution, there are some restrictions and barriers to ensure the fundamental rights in our country. These fundamental rights can be restricted in the interest of national security, national economy, racial and religious harmony, public order and projection of public health or morality, etc. Apart from these The Prevention of Terrorism Act (PTA) and Emergency Rules and Regulations also have been suggested big barriers to ensure the fundamental rights in Sri Lanka.

## Conclusion

Any person can apply to the Supreme Court in respect of the infringement or imminent infringement of fundamental rights by the Executive or Administrative actions. The Supreme Court of Sri Lanka has the sole and exclusive jurisdiction to here and determines fundamental rights petitions. The petition must be made within 30days of the infringement and only a petitioner or his attorney-at-law on his behalf can make the petition., these arrangements are seen barriers for Fundamental Rights Remedies in some aspects. So in this context, there is no doubt that to ensure the rights of all people fully. SriLankan legislatures definitely have to take some certain steps. Then only people can enjoy or get the real virtue of Fundamental Rights.

Thank You.

**VSS. Thananchayan**
Law Student,
Dept of Law University Of Jaffna.

# கடல் கடந்து வந்த கருத்தாடல்கள்

# என் நினைவிலிருந்து ...............

உவப்போடு எனைச் சுமந்து
உயிர்வலி அனுபவித்துப்
பெற்றென்னை இவ்வுலகைத்
தரிசிக்க விட்ட அன்னையையும் ...
கருவில் நான் உருவான
நாள் முதலே – என்னில்
உதிரம் சுரக்கத் தன்
ஊனை உணவாக்கி – எனக்கு
உயிர் கொடுத்த தந்தையையும் ....
பாதந்தொட்டு வணங்கி ....!
என்போன்ற
குறும்புக் குழந்தைகளையும்
எறும்பு போல் சலியாது – கல்வியை
அரும்பு முதலே தந்த
அத்தனை ஆசான்களையும்
பணிந்தேன் நன்றியையும்
அன்பையும் தெரிவித்து ...

ஆறாம் வகுப்புப்படிக்க
அனுப்பினர் பள்ளிக்கே !
முருங்கையிலை காய்பறிக்க
குரங்குகளும் நிறையும் – அந்த
முன்னோர் மீதிருக்கமின்றிக்
கவண்கல்லும் பறக்கும் !
சிலவேளை சீனவெடி – சாம்பல்
சிரட்டையுள்ளே வெடிக்கும்
எழும்பும் புகையால் அவைபயந்து
எண்திசையும் ஓடும் .......!
முகட்டினிலே தினைக்குருவி
தன்கூடு கட்டும் – தம்
இனம்பெருக்க முட்டைகளும்
அவையங்கே போடும் ...

காலையில் வயலில்
கடல் மணக்கும்!
மாலையில் கடலில்
நெல் மணக்கும் ! – தெங்கு
ஓலையில் காற்றின்
இசைபிறக்கும்!
ஊரெல்லாம் முக்கனியின்
மணம் நெருக்கும் !

கறகறக்கும் மிதிவண்டி
ஓடும் சத்தம்!
கடகடக்கும் கால்நடைகள்
வண்டில் சத்தம் ! – உறுமி
ஊரெழுப்பும் மண்ணெண்ணெய்
மோட்டார் சைக்கிள் ... – ஊர்கமுக்கப்
புகையடித்து ஓடிச்செல்லும்
வாகனங்கள் !
என்றும் கலகலக்கும் அங்காடிக்
காக்கைகள் கூட்டம் ....
பெருமீன்கள்
வெட்டிக் கூறுபோடும்
கூவல் ஒலி ...

தேனுண்டு மானுண்டு
தேளுண்டு கள்ளுண்டு – அந்தக்
கள்ளுண்ட பின்னே
கைதட்டிப்பாடும் பாட்டுண்டு !
ஆழ்கிணறு எங்குமுண்டு
அள்ளிக்குளிக்கும் மரபுண்டு !
ஊரெல்லாம் கோயிலுண்டு
ஒன்றிரண்டு கல்வீடுண்டு !
ஒருசிலகால்ப் பஞ்சமுற்று
ஒருவாறுய்து உண்ட கதையுமுண்டு ...
மரவள்ளிக் கிழங்கிற்கந்த
மாறாத நன்றியுண்டு !
யோகமுண்டு போகமுண்டு – அயலில்
தண்ணீரில் விளக்கெரியும்
கோவிலுண்டு
தான்தோன்றியீசனும் அங்குண்டு ...
இவ்வளவும் ஒருங்கேயுள்ள
அற்புத ஊரிற் பிறந்த
அகந்தையும் சிறிதுகொண்டு
அலைந்த சிறுவன் என்னை ...

இவ்வளவும்
எம்மூரில் எம்வாழ்வில்
இருந்தவை தானோ !
நடந்தவை தானோ ! – என்று
மகிழ்ச்சியும் வெட்கமும்
முகத்தை வருட

ஒருங்கே .....
சிறுதுக்கம் வந்து
நெஞ்சத்தை நெருட ....
இத்தனை நினைவினிலும் ...
இத்தனை நிகழ்வினிலும் ...
மெத்தப்பெரும்பங்கை
குத்தகைக்கு எடுத்ததிந்த
வித்தியாலயந்தானே !
புதுக்குடியிருப்பு மகா
வித்தியாலயந்தானே !
அப்போது இருந்தது
வித்தியாலயமாய்
இப்போது அதுவே
கல்லூரியானதில்
முதல் மகப்பேறு போல்
புழுங்காகிதம் எனக்கு !
இவள் பிரசவித்த
துறைவல்லோர் எல்லாம்
ஊர் அல்ல – பிரதேசம்
மாவட்டம் – மாகாணம்
அயல்நாடு – கண்டம்
அதுமட்டுமல்ல

உலகெல்லாம் பணிசெய்து
உயர்ந்து நின்றிடவும் ...
பொறியியல் – மருத்துவம்
பொருளியல் –வர்த்தகம்
கணனித்துறையிலும்
கால்பதித்து
ஆசிரியர் – விஞ்ஞானம்
ஆன்மீகம் – தேடல்
ஓங்குபுகழ் விவசாயம் என்று
எண்ணிலடங்காத்துறைகள் கண்டு
வல்லுனராய்க் – கலாநிதிகளாய்ப்
பேராசிரியராய் ஆகக்
களமமைத்துக்கொடுத்து
ஊரின்புகழை
உலகறியச் செய்தபெருமை
உன்னையே சாரும் – என்
அன்னையை நிகர்த்த
கல்லூரியே !!
இப்போது ....
வைரவிழாக் காணும்
திருவிழாக் கலைமகளே – நீ
மணிமண்டபம் பெற்று
மகிழ்வுற்று இருக்கின்றாய் !

வெள்ளியிலே கால்கடுக்கச்
சிவபுராணம் சொன்னதுமுண்டு !
பின்னாளில்
இன்னும் இன்னும்
எண்ணில்லா அறிஞர்களை
ஈன்றளிக்கக்
காத்துக்கிடக்கின்ற
காமதேனுவே ....!
உனக்காய்ப் பணிசெய்ய
உலகெங்கும் காத்திருக்கும்
பழைய மாணவர் பட்டாளத்தில்
நானும் ஒருவன் ...
உன் சேவையும்
இத்தேடு முடிவதல்ல ....
எம் பணியும்
இத்தோடு நிர்ப்பதல்ல ...
பத்துதலையும் தாண்டி
உன்பணியும் எம்பணியும்
நிற்காது தொடரணும் என்ற
வற்றாத ஆசைகொண்டோர்
வரிசையில் காத்திருக்கின்றோம்!
தாயே .....
எக்காலமும் உன்பணி
நிற்காது தொடரட்டும் ....
கலைமாலைப் பொழுதுகள்
கணக்கின்றி நடைபெறட்டும் ....
பவள விழா
நூற்றாண்டு விழா என
பலநூறு விழாக்கள் நீ
காணவேண்டும் என வாழ்த்தித் ...
தாய்க்கு வாழ்த்துச் சொன்ன
மகிழ்வு என்
மனதை நிறைக்க – என்
கவி மடலை முடிக்கின்றேன்.

நன்றி - வணக்கம்
கவிஞர் புதுநகர் இதழோன்
பழைய மாணவன் - இங்கிலாந்து

# நிறுவன சமூகப் பொறுப்புணர்வு

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சமூகத்தினால் வெளியிடப்படும் வைரவிழா மலரிற்கு "நிறுவன சமூகப் பொறுப்புணர்வு" என்ற தலைப்பில் எனது கட்டுரையை சமர்ப்பிப்பதில் மகிழ்வடைவதோடு வைரவிழா இனிதே நடைபெற வாழ்த்துகின்றேன்.

தற்காலத்தில் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு என்பது மிக அவசியமான செயற்பாடாக மாறி வருவதனை நாம் அவதானிக்கின்றோம். நிறுவன சமூகப் பொறுப்புணர்வு என்பது வணிக நடைமுறைகள் மற்றும் சட்ட வரையறைகளுக்கு அப்பால் சென்று அவ் நிறுவனத்தினால் வழங்கப்படும் ஒரு சமூக நலன்சார்ந்த செயற்பாட்டினைக் குறிக்கும்.

அண்மைக் காலங்களில் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு சமூகமும் அதனைச் சார்ந்தவர்களும் அனுமதி வழங்கும் அதிகாரத்தினைக் கொண்டவர்களாக இருக்கும்போது, நிறுவனங்களும் சமூகத்தின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்காக சமூக நலன்சார்ந்த செயற்பாடுகளுக்கு முக்கியம் கொடுக்கின்றன. சமூக அனுமதி என்பது சமூகத்தினால் ஒரு நிறுவன செயற்பாட்டிற்கு வழங்கப்படும் ஒப்புதல் அல்லது அங்கீகாரமாக கொள்ளலாம். இதனால் நிறுவனங்கள் தமது தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில் பொருளாதார, சட்ட நெறிமுறை மற்றும் மனிதநேய சமூக செயற்பாடுகளினை உள்ளடக்குகின்றன.

வணிக நிறுவனங்களின் அடிப்படை நோக்கமான இலாபத்திற்கு மேலதிகமாகத் தமது நிறுவன வளங்களினைப் பயன்படுத்தி சமூக நலன்சார்ந்த செயற்பாடுகளினை ஏன் மேற்கொள்கின்றன என்பதனை இரண்டு முரண்பாடான வாதங்களின் மூலமாக விளக்கலாம். முதலாவதாக, நிறுவனங்கள் சமூக நலன் சார்ந்த விடயங்களினை மேற்கொள்வதன் மூலமாக நிறுவனத்தின் நன்மதிப்பினை உயர்த்துவதன் ஊடாக அதிக வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவன நலன் விரும்பிகளின் ஆதரவினைப் பெறுவதும் அதன் மூலமாக இலாபத்தினை உயர்த்துவதுமாகும்.

குறிப்பாக வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், பங்குதாரர்கள், மற்றும் நிதிநிறுவனங்களின் ஆதரவு நிறுவனத்திற்குக் கிடைக்கலாம். பொதுவாகச் சமூகப் பொறுப்புணர்வுடைய நிறுவனங்கள் வணிக

நெறிமுறைகளையும், சட்டங்களையும் மதித்து நடப்பதோடு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தமது செயற்பாடுகளினை மேற்கொள்வார்கள். இதன் மூலமாக நிறுவன நம்பகத் தன்மை என்பது வாடிக்கையாளர்கள் மத்தியில் உயர்வடையும்.


இரண்டாவதாக, சில நிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வு என்பதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வணிக நெறிமுறைகளுக்கும் சட்டத்திற்கும் மாறான செயற்பாடுகளினை மேற்கொள்வார்கள். அதாவது, சமூகப் பொறுப்பற்ற முகாமையாளர்கள் சமூகப் பொறுப்புணர்வு என்ற மேலாடையை அணிந்து கொண்டு நிறுவனச் சட்டத்திற்கு மாறான செயற்பாடுகளினை மேற்கொள்வார்கள். உதாரணமாக, சில நிறுவனங்கள் உயர்வான சமூக நலன் சார்ந்த விடயங்களினை மேற்கொள்ளும் அதேவேளையில் நிறுவனத்தின் நிதி அறிக்கையில் சட்ட வரையறைகளுக்கும் அப்பால் சென்று தமது நன்மைக்காக மாற்றங்களினைச் செய்து நிறுவன இலாபத்தினை உயர்வாக அல்லது முறையாகப் பதிவு செய்வார்கள்.

இந்தியாவில் இயங்கிய ஒரு தொழில்நுட்ப நிறுவனம் சமூகப் பொறுப்புணர்வுக்காக பல்வேறு விருதுகளினைப் பெற்றது. இவ் நிறுவனம் நிறுவன சமூகப் பொறுப்புணர்வுக்காக 2008 ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விருது ஒன்றினையும் பெற்றுக் கொண்டது. இக்கம்பனி தனது நெறிமுறையற்ற செயற்பாட்டின் மூலமாக நிறுவன, சமூகப் பொறுப்புணர்வு என்பதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி உருமறைப்புச் செய்து தனது நிறுவனத்தின் பங்குதாரர்கள் அனைவரையும் ஏமாற்றியது.

ஒரு நிறுவனம் நான்கு வகையான சமூகப் பொறுப்புணர்வுகளைக் கொண்டுள்ளது. அவையாவன பொருளாதார, சட்ட, நெறிமுறைசார்ந்த மற்றும் சமூக நலன் சார்ந்த பொறுப்புணர்வுகளாகும். ஒரு நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வின் அடிப்படையான பொறுப்புணர்வு பொருளாதாரப் பொறுப்புணர்வாகும். சட்டப் பொறுப்பணர்வு என்பது அரச மற்றும் நிறுவனத்தின் சட்டங்களினை மதித்து நடப்பதனைக் குறிக்கும். நெறிமுறை சார்ந்த பொறுப்புணர்வு என்பது நெறிமுறைக்கு அல்லது சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நிறுவனச் செயற்பாடுகளினை மேற்கொள்வதனைக் குறிக்கும். சமூக நலன்சார்ந்த பொறுப்புணர்வு

என்பது சமூக நலன்சார்ந்த செயற்பாடுகளினை நிறுவன செயற்பாடுகளில் உள்ளடங்குவதனைக் குறிக்கும்.

மேலே கூறப்பட்ட நான்கு வகையான பொறுப்புணர்வுகளும் ஒரு பாடசாலைக்குப் பொருந்தும், இதனைப் பின்வரும் வரைபடம் மூலமாக விளக்கலாம்.




பாடசாலைச் சமூகத்தின் பொறுப்புணர்வு

ஒரு பாடசாலையின் அடிப்படையான சமூகப் பொறுப்புணர்வு என்பது மாணவர்களின் கல்விசார் அடைவு மட்டத்தினை அதிகரதிப்பதாகும். பாடசாலையின் சட்டப் பொறுப்புணர்வு என்பது மிகவும் முக்கியமானதாகக் தற்போது காணப்படுகின்றது. சட்டங்களை மதித்து நடப்பதோடு பாடசாலை மற்றும் வகுப்பறை நடைமுறை விதிகளினை மாணவர்கள் பின்பற்றுபவர்களாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, வகுப்பறைச் சட்ட நடைமுறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

* ஆசிரியர் மற்றும் சக மாணவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்.
* ஒருவர் மட்டும் ஒரு நேரத்தில் கருத்துக்களைப் பகிர்தல்.
* வகுப்பறைக்குள் தேவையற்ற கழிவுகள் எறிவதனைத் தவிர்த்தல்.
* கைகளினை உயர்த்தி ஆசிரியரின் கவனத்தை எடுத்தல்.
* எல்லோருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளித்தல்.
* ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்றல்.
* வகுப்பறைக்குள் உணவு மற்றும் தண்ணீர் போன்றவற்றை எடுப்பதைத் தவிர்த்தல்.
* மற்றவர்களைப் பார்த்து சிரிப்பது அல்லது ஏளனம் செய்வதைத் தவிர்த்தல்.

பாடசாலையின் அடுத்த பொறுப்புணர்வு சூழலுக்கும் பாடசாலை நெறிமுறைகளுக்கும் ஒவ்வாத விடயங்களினைத் தவிர்ப்பதாகும். பாடசாலைச் சூழலினை மேம்படுத்தக்கூடிய செயற்பாடுகளினை மேற்கொள்வதாகும். பாடசாலையின் அடுத்த பொறுப்புணர்வு, சமூக நலன் மற்றும் மனித நேயச் செயற்பாடுகளினை மேற்கொள்வதாகும். பாடசாலையின் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் முக்கியமானது சிறந்த மாணவர்களை உருவாக்குவதன் மூலமான சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாகும்.

மாணவர்கள் நாளாந்த பொழுதுபோக்கு மற்றும் சமூகத் தொடர்புகளுக்குத் தற்போது சமூக ஊடகங்களில் தங்கியுள்ளார்கள். சமூக ஊடகம் என்பது இணைய வலையமைப்பைப் பயன்படுத்தி புதிய தொழிநுட்பங்கள் மற்றும் பிரயோகங்கள் மூலமாக பல்வேறுபட்ட சமூகங்களுடன் தொடர்புகொள்ளுதல், பங்குபற்றுதல், பிரசுரித்தல் மற்றும் ஒன்றிணைத்தல் செயற்பாடுகளினை உருவாக்குவதற்கும், பங்குபற்றுவதற்கும் பயனர்களுக்கு உதவுவதனைக் குறிக்கும். சமூக ஊடகத்தினை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

சமூக வலைப்பின்னல் கருவிகள் (முகநூல்), சமூக பகிர்தளிக்கும் கருவிகள், சமூக மற்றும் உள்ளடக்க முகாமைத்துவக் கருவிகள் மற்றும் மெய்நிகர் மற்றும் விளையாட்டுத் தளங்கள், மாணவர்கள் சமூக

ஊடகங்களினைப் பயன்படுத்துவதனால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பலர் வாதிடும் அதேவேளையில் மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் அதிகரிப்பதாக மறுபக்கம் சிலரும் வாதிடுகின்றனர்.

மாணவர்களின் கூடுதலான சமூக ஊடகங்களின் பாவனை மூலமாக பல எதிர்மறையான விளைவுகள் காணப்படுகின்ற போதிலும், சமூக ஊடகத்தில் காணப்படுகின்ற நல்ல சிறப்பியல்புகள் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதாகச் சிலர் கருதுகின்றனர். தற்காலத்தில் சமூக ஊடகம் பற்றிய அறிவும் அதன் பாவனைத் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கின்ற போதிலும் பல பல்கலைக்கழகங்கள் சமூக ஊடகத்தினைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் ஒன்றிணைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. இச் சந்தர்ப்பத்தில், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமூக ஊடகத்தினை உள்வாங்குவதன் மூலமாக ஏற்படக்கூடிய சாதக மற்றும் பாதக விடயங்களினைப் பார்ப்போம்.

சமூக ஊடகங்கள் பௌதிக புவியியல் எல்லைகளைத் தாண்டி ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்வதற்கு உதவுகின்றன. இத்தகைய சமூகமயப்படுத்தப்பட்ட செய்முறை கல்வியில் மிகவும் முக்கியமான கூறாகக் காணப்படுகின்றது. கல்வி என்பது அடிப்படையில் ஒரு சமூகச் செய்முறையாகும். சமூக ஊடகம் ஒருவர் பல்வேறுபட்ட சமூகங்களுடன் அணுகும் வாய்ப்பினை வழங்குவதால், அவ் நபர் உள்ளூரில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் மக்களிடமிருந்து தகவல்களினைப் பெறக்கூடியதாக இருக்கும். இச் செயற்பாட்டின் மூலம் ஒருவர் உலகளாவிய ரீதியில் கருத்துக்களினை எடுத்து உள்ளூரில் அவற்றினை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் சமூக ஊடகத்தின் மூலமாகக் கிடைக்கின்றது. அதாவது, புதிய கருத்துக்களினைக் கல்வியில் உள்வாங்குவதற்கு சமூக ஊடகம் உதவுகின்றது.

அடுத்து, இணையத்தில் அதிகளவான கல்வி சார்பான கருத்துக்கள் சமூக ஊடகங்கள் மூலமாகப் பகிரப்படுவதால் முறையான கல்வி முறையில் பாரிய மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மாணவர்கள் வலைத்தளங்களில் தமது கருத்துக்களினைப் பதிவு செய்வதற்கும், அதேவேளை மற்றவர்களின் கருத்துக்களினை வாசிக்கவும் சமூக ஊடகமானது வழிகோலுகின்றது.

சமூக ஊடகங்களினை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் ஒன்றிணைப்பதால் பல பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடிய சாத்தியங்களும் காணப்படுகின்றன. இவற்றில் மிகவும் முக்கியமானது மற்றைய சமூக ஊடகப் பயனர்களின் வன்முறையாகும். இலக்க முறையில் ஒருவரினால் பகிரப்படும் அல்லது பதிவு செய்யப்படும் கருத்துக்களுக்கு மிகக் கடுமையான விமர்சனங்களைப் பெறும் சாத்தியம் காணப்படுகின்றது. அடுத்து, சமூக வலைத்தளத்தில் பகிரப்படும் தனிநபர் தொடர்பான தகவல்கள் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. சமூக ஊடகங்கள் பெரும்பாலும் வணிக நலன் சார்ந்தவையாகும். வணிக நலன் கொண்ட சமூக ஊடகங்கள் சிறந்த கல்வியினை வழங்குவதற்கு ஆதரவாகச் செயற்படுவார்களா? என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இறுதியாக, பாடசாலைச் சமூகத்தின் பொறுப்புணர்வு என்பது உயர்வான மாணவர் கல்வி அடைவு மட்டத்தினைப் பெறுவதன் ஊடாக சமூக வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய சிறந்த மாணவர்களினை உருவாக்குவதாகும். இதனை அடைவதற்கு மாணவர்களின் பங்களிப்பு என்பது மிக மிக அவசியமானதாகும். ஒவ்வொரு மாணவரும் அணியும் வெள்ளை நிற பாடசாலைச் சீருடை சிறந்த மாணவருக்குரிய சமூக அடையாளம். அதனை நல்லவற்றுக்கு மட்டும் பயன்படுத்துங்கள். பாடசாலைச் சமூகத்தின் தேவையும் அதுவே.

**கலாநிதி வேலாயுதம் ஈஸ்வரன்**
தென் குயின்ஸ்லன் பல்கலைக்கழகம்,
அவுஸ்திரேலியா.

## பின்லாந்து கல்வி முறையின் சில பரிணாமங்கள்

இலங்கையில் நீண்ட காலமாகவே எது சிறந்தகல்வி முறை அல்லது சிறந்த கற்பித்தல் செயற்பாடு என்பது தொடர்பான விவாதம் இருந்து வருகிறது. இந்த விவாதம் மற்றும் கல்விசார் ஆய்வுகளின் நோக்கம், சிறந்த கல்வி முறையை எமது மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் மிகவும் வளமான எதிர்கால சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதேயாகும். உலகளாவிய ரீதியில் மிகவும் வெற்றிகரமான கல்வி முறையாக கல்வியாளர்கள்மற்றும் அறிஞர்களால் பின்லாந்து, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளின் கல்விமுறை ஏற்று கொள்ளப்படுகிறது. கல்வித் தேர்ச்சிக்கான சர்வதேச மதிப்பீட்டுச் சபையின் (Programme for International Student Assesment or PISA) வாசிப்பு, விஞ்ஞான மற்றும் கணிதக்கல்வி பரீட்சைகளில் இந்த நாட்டுமாணவர்களே தொடர்ச்சியாக முன்னணியில் இருக்கிறார்கள். மேற்கூறிய நாடுகளில் பின்லாந்து மிகவும் தனித்துவமாக காணப்படுகிறது. இதன் கல்விதரம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து உலகளாவிய ரீதியில் முன்னணியில் இருப்பதற்கு பின்லாந்து கையாள்கின்ற முறை தனித்துவமானதும், பெரும்பாலான செயற்பாடுகள் மற்றைய நாடுகளில் இருந்து எதிர்மறையானவையாகவும் உள்ளன.

பின்லாந்து நாட்டு மக்களின் வாழ்க்கை முறையும், அதுசார்ந்த நம்பிக்கையுமே அவர்களின் தனித்துவமான கல்வித் திட்டத்திற்கும் அதன் வெற்றிக்கும் காரணமாகும். அவர்களின் வாழ்வியல் அடிப்படை சித்தாந்தம் குறைவே நிறைவாகும் (Less is more) என்று கூறப்படுகிறது . இதை சரியாக புரிந்து கொள்வதன் மூலம் அவர்களின் கல்வியின் வெற்றிக்கான காரணங்களை இலகுவாக அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக அவர்களுடைய வீடுகள் பெரிதாக இருப்பதில்லை ஆனால் அவை மிகவும் சௌகரியமாகவும் எல்லாத்தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியனவாகவும் இருக்கும். அதே போன்று அவர்கள் விலை குறைந்த பல ஆடைகளை வாங்குவதற்கு பதிலாக ஒரு சில விலையுயர்ந்த ஆடைகளை வாங்கி ஒரு சில மாதங்களுக்கு பதிலாக பலவருடங்களுக்கு உபயோகப்படுத்துவார்கள்.

Less is more என்ற மனநிலையில் இருந்து வடிவமைக்கப்பட்ட அவர்களின் கல்வி முறையின் அடிப்படையான சிலவிடயங்கள் கீழே தொகுத்து தரப்படுகின்றன.

### 1. மிகக் குறைந்த தரப்படுத்தப்பட்ட பரீட்சை (less standard testing)

அதிகளவான பரீட்சைகளுக்கும் அதற்கான தயார்ப்படுத்தல்களுக்கும் மாணவர்கள் தம்முடைய பெரும்பான்மையான நேரத்தை பயன்படுத்தினால் அவர்களுக்கு சுயமாகச் சிந்திக்கின்ற மற்றும் கற்ற பாடங்களை கேள்விக்கு உட்படுத்தி தர்க்க ரீதியாக புரிந்து கொள்வதற்கான நேரம் இல்லாமல் போய்விடும் என்பதால் பின்லாந்து பாடசாலைகளில் தரப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு முக்கியத்துவம் இல்லை. ஆனால் மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்களாலும் கல்வித்துறைசார் வல்லுனர்களாலும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவார்கள். அதே போன்று பாடசாலை மட்டத்தில் பரீட்சை பெறுபேறுகள் பதினொரு வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பல ஆய்வுகள் மீண்டும் மீண்டும் உறுதி செய்வது என்ன வென்றால் பரீட்சைகளை நோக்கிய கல்வி மாணவர்களுடைய படைப்பாற்றல் (creativity) ஆளுமையை இல்லாமல் செய்கிறது.

**2. குறுகியகால முறைசார்ந்த பாடசாலைக்கல்வி** (less formal schooling )

பின்லாந்து மாணவர்கள் ஏழாவது வயதில் சாதாரண பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கிறார்கள். குழந்தைகள் குழந்தைகளாக இருக்க வேண்டும் என்பதிலும், மிகவும் சிறிய வயதில் அவர்கள் கற்றலை விளையாட்டு மற்றும் சிறிய ஆய்வுகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகிறார்கள். சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கும் பொழுது அவர்கள் கற்றலுக்கும் அவற்றில் போதிய கவனம் செலுத்துவதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் உறுதி செய்கிறார்கள்.

**3. குறுகியகால பாடசாலை நேரம் மற்றும் குறைந்த போதனை**
(less time in school and fewer instruction hours)

பாடசாலை பொதுவாக 9.00 அல்லது 9.45 மணியளவில் ஆரம்பித்து 2.00 அல்லது 2.45 மணியளவில் முடிவடைகிறது. பாடசாலைகள் 9.00 அல்லது 9.45 மணியளவில் ஆரம்பிப்பதற்கான மிகமுக்கிய காரணம் இளவயதுமாணவர்களுக்கு காலையில் தரமான நித்திரை (quality sleep) தேவை என்பதை தொடர்ச்சியான ஆய்வுகள் (research) உறுதி செய்வதே ஆகும். அதே போன்று பின்லாந்து மாணவர்கள் ஒரு நாளைக்கு 75 நிமிட 4 பாட அலகுகளை கற்கிறார்கள். ஒவ்வொரு பாடஅலகுக்குஇடையிலும்நீண்டஇடைவேளைஇருக்கும், அந்த இடைவேளைகளில் போதிய ஓய்வையும் அடுத்த பாடத்திற்கான தயார்படுத்தலையும் செய்கிறார்கள். இந்தநடைமுறை ஆசிரியர்களை மிகசிறப்பாக பாடங்களை தயார் செய்வதற்கும் பெரிதும் உதவுகிறது.

**4. குறைந்த கற்பித்தலும் அதிக கற்றலும்** (less teaching and more learning)

மேற் குறிப்பிட்டது போன்று மாணவர்கள் நான்கு தொடக்கம் ஐந்து மணி நேரமே ஒரு நாளைக்கு கல்வி கற்கிறார்கள். மிகுதி நேரங்களில் மாணவர்கள் தனியாகவே அல்லது குழுவாகவோ கற்பிக்கப்பட்ட பாடங்கள் குறித்து மேலதிக சுயகற்றலை நூலகத்தில் அல்லது கணனி மற்றும் இணைய உதவியுடன் மேற்கொள்கிறார்கள். சுயகற்றல் மற்றும் சுயமாக விடயங்களை புரிந்துகொள்ளும் ஆற்றல் அவர்களை உலகளவில் முன்னிலைப்படுத்துகிறது. கற்றலுக்கான கற்றல் (learn to learn) என்பதே கல்வியின் அடிப்படைநோக்கமும் ஆகும். இவ்வாறான கல்வித்திட்டம் ஆசிரியர்களை புதிய விடயங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதற்கு ஊக்கம் தருகிறது.

**5. குறைந்த பாட தலைப்புகளும் ஆழமான கற்றலும**
**(fewer topics but depth learning)**

இங்கு மாணவர்கள் ஒரு பாடத்தை மிகவும் ஆழமாக கற்கிறார்கள். உதாரணமாக கணித பாடத்தை எடுத்தால் ஒரு வருடத்தில் சில தலைப்புகளிலே மட்டுமே ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள், இது இலங்கையில் உள்ளது போல் ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை கற்பித்து முடிக்க வேண்டும் என்னும் அவசரம் மற்றும் பதட்டம் இல்லாமல் அந்த பாடத்தை ஆழமாக கற்பிக்க உதவுகிறது.

## 6. குறைந்தவீட்டுப்பாடங்கள் (less homework)

உலகில் பின்லாந்து மாணவர்களே மிகக் குறைவான வீட்டுப்பாட வேலைகளை செய்பவர்கள் எனகூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான பொருளாதார அமைப்பின் (organisation for Economic Co-operation and Development) தகவல் கூறுகிறது. சராசரியாக அவர்கள் அரை மணி நேர வீட்டுப்பாட வேலைகளை செய்கிறார்கள் என மேலும் தெரிவிக்கிறது. பின்லாந்து மாணவர்கள் பொதுவாக பாடசாலையிலேயே தமது கற்றல் தொடர்பான எல்லா வேலைகளையும் முடித்து விடுகிறார்கள். மேலும் அவர்கள் மிகக்குறைவான மேலதிக வகுப்புகளுக்கே (tution) செல்கிறார்கள்.

## 7. குறைந்தளவில் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்கள் (fewer accepted teachers)

ஒருவர் ஆரம்பபாடசாலை ஆசிரியராக வரவேண்டும் எனில் அவர் அடிப்படைக் கல்வியில் (primary education) முதுகலைமாணிப் (M.Ed) பட்டம் பெற்றிருக்க வேண்டும். அடிப்படை கல்வியில் பட்டம் பெறுவது மிகவும் போட்டியானதாகவும் மதிப்புடையதாகவும் அங்கு இருப்பதால் பல ஆயிரம் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பிக்கிறார்கள். ஆனால் பின்லாந்து பல்கலைக்கழகங்கள்பத்துசதவிகிதமான (10%) விண்ணப்பிக்கும் மாணவர்களையே ஒவ்வொருகல்வியாண்டும் தேர்ந்தெடுக்கிறார்கள். பல ஆயிரம் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் நிராகரிக்கப்படுகிறார்கள். மேலும் ஒருவர் கல்வியில் மிகைத்திறன் உடையவராகமட்டும் இருந்தால் போதாது அவர் தனிநபர் நடத்தையில் அல்லது ஒழுக்கத்தில் மிகச்சிறப்பாக இருக்க வேண்டும். இதை பல நேர்காணல்கள் மற்றும் பாடசாலை அல்லது கல்லூரி நிர்வாகத்திடம் இருந்தும் உறுதி செய்கிறார்கள். இதுமட்டும்மன்றி ஒருவர் இயற்கையாகவே கற்பித்தல்திறனும் அதில் அதிக ஆர்வமும் உடையவரா என்பதையும் பரிசோதிக்கிறார்கள். இவ்வாறு பல சவால்களையும் தேர்வுகளையும் ஒருவர் கடந்து ஆசிரியராக வருவதால் அவர்கள் மிகவும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் கற்றல் கற்பித்தல் இரண்டிலும் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். பின்லாந்து ஆசிரியர்களின் தரம் மிகமுக்கியமான காரணியாக மாணவர்களின் சர்வதேசதரத்திலான வெற்றிக்குக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை விடவும் மேலும் பலகாரணங்கள் இருந்தாலும் இவையே மிக முக்கியமான வெற்றியின் தூண்களாகக் கருதப்படுகிறது. மேலும் ஒரு மாணவன் கல்வி கற்றலில் பின்தங்கி இருந்தால் அவர்கள் மாணவனிலோ அல்லது ஆசிரியரிலோ தவறை தேடுவதில்லை மாறாக கல்வித்திட்டத்தில் என்ன தவறு இருக்கிறது என்பதை ஆராய்கிறார்கள். இது அவர்கள் ஆசிரியர் மற்றும் மாணவனில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு மிகச்சிறந்த சான்றாகும். இந்த நம்பிக்கை ஆசிரியர் மற்றும் மாணவனுக்கு கல்விச் செயற்பாட்டில் சிறப்பாக செயல்ப்படுவதற்கு முக்கியமாகும். மேலும் அமைதியான பாடசாலைச் சூழல், ஆசிரியர் மற்றும் மாணவர்களில் நிர்வாகம் கொண்டிருக்கும் அக்கறை, எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகள்அற்ற எல்லா மாணவர்களையும் சமச்சீராக நடத்துகின்ற தன்மை, முற்றிலும் இலவசக்கல்வி, பாடசாலையில் வழங்கப்படுகின்ற இலவசசத்துணவு ஆகியவையும் முக்கியமானவையாகும்..

கலாநிதி நல்லதம்பி சிவசிதம்பரம்

# கற்றலும் மொழியும் கல்விக் கூடங்களும் : ஓர் நோக்கு

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனும் குறள் வாக்கிற்கமைய மானிடப் பிறப்பெடுத்த எல்லோரும் இவ்வுலக வாழ்வில் கற்கும் கல்வியை கசடறக் கற்க வேண்டும். அதாவது பூரண புரிதலுடன் சந்தேகம் இல்லாமல் கற்றதை தன்னதும் தான் சார்ந்த மனித குலத்துக்கும் பயன் படும் வகையில் கற்றலால் தான் பெற்ற அறிவூசார் துறையில் நின்று தான் கற்ற கல்விக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். அதனால் தன்னையூம் தான் கற்ற கல்வி நிறுவனத்தையூம் மனிதப் பிறவியெடுத்த ஒவ்வொருவரும் பெருமைப் படுத்துகிறார்கள்.

கற்றலுக்கு மொழியும் அம் மொழி சார்ந்த இனத்தின் இருத்தலும் உலகில் மிக அவசியமான தொன்றாகும். அப்போது தான் கற்றவர் ஒரு சிறப்பியல்பான வாழ்வில் தன்னை இணைத்து தன்சார் சமூகத்துக்கும் அதனூடு உலகிற்கும் சேவையாற்ற முடியும். வள்ளுவர் கூற்றானது 4000 வருடங்களுக்கு முற்பட்ட இருக்கு வேதத்திலும் 2000 ஆண்டுகளுக்கு மேலான பைபிளிலும் கி பி 18ம் நூற்றாண்டில் நிகழ்ந்த தொழிற் புரட்சியான பிரன்சுப் புரட்சிலும் 21ம் நூற்றாண்டில் நிகழும் தொழில்நுட்ப புரட்சியிலும் பொருந்தும் படியான சிந்தனையை 3000 ஆண்டுகளுக்கு முன் தீர்க்க தரிசனமாக கூறிய திருவள்ளுவரின் திருக்குறள் சிறந்த சங்க இலக்கியமாக பார்க்கப்பட்ட போதிலும் மற்றவை எல்லாம் மாறிய போதும் முக்காலங்களில் எக் காலத்திலும் மாறாததாக நிலைத்து வருவதும் அது எக்காலத்துக்கும் பொருந்தும் சிந்தனைகளைக் கொண்டு தமிழ் மொழிக் கல்வி அதன் சிறப்பு அதன் பால் கல்வியூட்டும் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவம் அதனால் ஏற்படும் சிறப்பு கல்வி மற்றும் கல்வி நிறுவனங்கள் மொழிகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது.

பாடசாலைகள் ஒவ்வொன்றும் கோவில்களுக்கு ஒப்பானவை. அதன் ஆசிரியர்கள் பூசகர் போன்றவர்கள். கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர்கள். மனிதனோடு தொடர்பான விடயங்கள் பற்றி

அறிஞர்கள் கூறும் போது கல்வியை மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை கற்பதன் மூலமே தனது மனித வாழ்வை மேம்படுத்த முடியும். இந்த உலகில் இருப்பதை எல்லாம் முற்றாக ஒருவர் தன் வாழ்க்கைக் காலத்தில் கற்றுவிட முடியாது. இதை விளக்கும் முது மொழியே "கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதாகும். இதனால் உலகில் ஒவ்வொருவரதும் கல்வி என்பது இன்று தாம் வாழும் சூழல், காலம், அவர்களின் தேவை, வசதி, எதிர் பார்க்கும் வாழ்க்கை, வாழ்க்கையின் இலட்சியம் போன்ற பல காரணிகளால் கல்வியின் கற்றலலுக்கான எல்லைகள் வரையறுக்கப் படுகின்றன. மனித இனம் தனது அனுபவங்களை தன்னைச் சூழவுள்ள தன் இனத்துடன் மொழிப் பரிவர்த்தனையூடாக தனது பரம்பரைக்கு தான் கற்ற கல்வியையும் தன் அனுபவங்களையூம் தன் மொழியினூடாக கடத்திச் செல்லுகிறது. தொடர்ந்து வரும் சமுதாயம் தம் முன்னோர்கள் விட்ட இடத்தில் இருந்து தொடரும் போது மனித சமுதாயத்தின் வளர்ச்சி வேகம் அதிகரிக்கிறது. இந்த வகையில் கல்விக் கூடங்களின் பங்கும் முக்கியத்துவமும் மிகவும் அதிகமான, காத்திரமான பங்காக காணப்படுகிறது.

இதில் ஒரு சமுதாயத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியானது அவர்களின் முன்னோர் விட்டுச் சென்ற நல்ல விடயங்களை மட்டும் எடுத்துச் செல்லுவதாலேயே சாத்தியமாகும். அது போல நாமும் நல்ல விடயங்களில் ஆர்வம் காட்டி அதில் நல்ல விடயங்களை எமது அடுத்த சந்ததிக்கு கடத்துவதால் மட்டுமே நாம் இந்த உலகில் நன்றாக வாழ்ந்ததிற்கான சான்றை உறுதிப் படுத்திக் கொண்டு எம் சந்ததியையும் ஆரோக்கிய மாக வாழவைக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

மனிதனை மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபடுத்தி ஆளுமை மிக்க ஓர் உயிரினமாக நிலைக்க வைத்திருப்பது மொழியும் அதனூடக மனித இனம் செய்யும் கற்றலும், அதனால் பெற்ற அறிவுமேயாகும். மனித சமுதாயத்தின் வயதுடன் மொழியை ஒப்பிடும் போது பூமியின் குறுக்களவிற்கும் புவியோட்டின் தடிப்பு அளவிற்குமான விகிதாசாரமே. தீப்பிளம்பாக இருந்த புவியானது புவியோட்டின் உருவாக்கத்தின் பின் எவ்வாறு புவியின் உயிரினச் சூழலை விரைவாக உருவாக்கியதோ அதே போன்றே மொழியும் மனிதனின் வளர்ச்சியை குறுகிய காலத்தில் மிக விரைவாக இட்டுச் சென்றது. விலங்கோடு விலங்காக இருந்த மனித இனம் இன்று உலகை ஆளும் அளவுக்கு முன்னேறியுள்ளமைக்கு மொழியும் அதை மனித இனம் கற்றதன்

விளைவுமேயாகும்.அதன் பயனால் புவிமண்டலத்தை மட்டுமல்ல சூரியமண்டலத்தையே இன்று மனித இனம் ஆளத் தலைப்படுகிறது. இதனால் புவியின் உயிரினச் சூழல் மூலக் கூறுகளில் இருந்து மனித இனம் தனிக் கூறாக நிற்பதற்கு மொழியும் அதைக் கற்றதுமே காரணம். விலங்கு நிலையான அஃறிணை நிலையில் இருந்து மனிதர்களை உயர்திணையாக மாற்றியது மொழி என்பதால் அதை எம் உயிரினும் மேலாக மதிக்கிறோம். மனிதர்களை ஓர் முழு மனிதக் கூற்றுப் பின்னத்தில் (Fraction) இருந்து இறையாண்மை கொண்ட பின்னக் கூற்றாக மாற்றி நிலைக்க வைத்து தனியான அடையாளம் தந்ததும் மொழியே ஆகும்.

மொழி என்பது கூட காலமாற்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வளர்ச்சி பெற்றதாகும். கேட்டல், பேச்சு, எழுத்து, வாசிப்பு என்று மொழியும் கூட நான்கு பிரதான தூண்களில் கட்டப்பட்ட வீடாகும். காலம் செல்ல செல்ல கட்டிடக் கலையில் ஏற்பட்ட வளர்ச்சி எவ்வாறு வீட்டின் வடிவமைப்புக்களில் வளர்ச்சியை ஏற்படுத்தியதுவோ அதே போன்றே மொழியும் மனித அறிவு விருத்தியால் வளர்ச்சி பெற்று பரிணாமம் பெற்றுக் கொண்டதால் உயிருக்குச் சமமானது. மொழியானது தன்சார்ந்த மனித இனத்தின் சிறப்பு பண்புகளின் அடிப்படையில் முழுமையான மனிதக் கூற்றில் இருந்து தனியாக சிறப்பு பண்புகளினடிப்படையில் மனிதக் குழுமங்களை வரையறை செய்வதில் முக்கியமாக தொழிற் பட்டது. அதாவது மொழியினூடாக கல்வியில் ஏற்பட்ட சிறப்புத் தேர்ச்சி மனித சமுதாயத்தில் மொழி வாரியான மனிதக் குழுமங்களை அடையாளப் படுத்தியது.

இந்த அடிப்படையில் தம் மொழியினூடாக கற்றலின் சிறப்பால் சிறப்புப்புத் தேர்ச்சி பெற்ற மனித குழுமங்கள் தம் மொழிகளை அடிப்படையாக கொண்ட மக்களின் இறையாண்மை கொண்ட வாழ்விடப் பகுதிகளை மொழியின் அடித்தளத்தில் நின்று வரையறை செய்து கொண்டன. இதனால் புவிப் பரப்பில் பல பிரிவூகளாக பிரதேசங்கள் தோன்றவும் அப் பிரதேச எல்லைக் கோடுகளை வரையறை செய்யும் முக்கிய கருவியாக மொழியும் தொழிற் பட்டது. அதை தொடர்ந்து நாடுகளின் உருவாக்கம். நாடுகளுக்குள்ளே தேசியங்கள் அதன் பின் தனித் தேசிய அரசுகள் மற்றும் பல நாடுகளை ஒன்றாக கொண்ட பல் தேசிய அரசு ஒரு நாட்டினுள்ளேயே பல தேசியங்களைக் கொண்ட அரசு என இவற்றின் தோற்றங்களுக்கும் அவற்றின் இன்று வரையான பரிணாம வளர்ச்சிக்கும் மொழி என்பது ஓர் முக்கிய கருவியாகத் தொழிற்பட்டுள்ளது.

நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றுடன் மொழியை அடிப்படையாக கொண்டு வளர்ந்த அரசுகள், நாகரிகங்கள் என்பனவற்றின் அதி உன்னத வளர்ச்சியின் பின் அவற்றின் பிரதேச விஸ்தரிப்பிற்கான போட்டிக்கும் மொழி என்பது கருவியாக இருந்து மனித சமூகக் கட்டமைப்புக் குழுக்களுக் கிடையே அதிகாரப் போட்டிகள் ஏற்படவும் வளங்களுக்கான தேடல், ஆக்கிரமிப்பு போட்டிகள் ஏற்பட்ட போது போர்கள் தோன்றின. அப் போர்களுக்கான படையை கல்வியில் சிறப்படைந்த நாடுகள் தம் மொழிக்கான பிரதேச விஸ்த்தரிப்பில் போர் என்ற கருவியை கையிலெடுத்தன.

உயிரினும் மேலான மொழிக்கென ஒரு தேசத்தை காப்பது அல்லது உருவாக்குவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. போராட்ட மக்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்திய மகா சக்தியாகவும் மொழி தொழிற் பட்டிருக்கின்றது. நாடோடியாகத் திரிந்த மனிதன் உணவுக்காக தினமும் போராடிய வாழ்வை மாற்றிய பெருமை மொழியையும் அதனூடு வளர்ந்த கற்றலின் சிறப்பால் மனித இனக்குழுக்கள் நாகரீக வளர்ச்சி பெற்று தேவைகள் அதிகரிக்க தன் தேசம், தன் மொழி என்பனவற்றைப் பாதுகாக்கவும் அதை விஸ்தரிக்கவும் போர் என்ற கருவி புடம் போடப் பட்டு புகுத்தப்பட்டது. உலகில் காணும் பல்லாயிரம் மொழிகளின் இன்றுள்ள வளர்ச்சி காண இழக்கப்பட்ட உயிர்கள் பல கோடி என்பது கண் கூடு. ஆதலினால் தான் மொழியின் பெறுமதி உயிரினும் மேலானது என்பதாகும்.

திரு சங்கரப்பிள்ளை முருகையா
BAHons.MA
(முன்னாள் உதவி விரிவுரையாளர்
-யாழ் பல்கலைக்கழகம்)

# பொன்விழா ஒரு புதிய பரிணாமம்

ஐம்பது அகவையின் பூர்த்தியாகக் கொண்டாடும் பொன்விழா, இப் பள்ளியின் வரலாற்றுக் காலகட்டத்தைக் குறிக்கும் படிக்கட்டு, வெளிவரும் மலரும் காலத்தின் பதிவு. வரலாற்றுச் சான்று.

இந்தப் பள்ளியில் ஆரம்பமுதல் படித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு பொன்விழாக் காண்பது பெரும்பேறே.

இது வரை கற்றவர்களுக்கும் கிடைக்கும் பெரும் பாக்கியம். இதே ஆண்டில் கற்றுக் கொண்டிருப்போரும்.

வைரவிழா, மணிவிழா, நூற்றாண்டு விழாக்கள் காணும்போது யார்? யாரோ? எவர்? எவரோ?

இது 2005 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற பொன்விழா மலரில் இடம்பெற்றுள்ள மலர்க்குழுவின் நுழைவாயிலில்... எனும் பகுதியிலுள்ள சில வரிகள்.

இம் மலர்க்குழுவிற்குப் பொறுப்பாக இருந்து அதனை உருவாக்க அல்லும் பகலும் உழைத்த அமரர் உயர் திரு. க சரவணபவன் அவர்கள் வைரவிழாக் காணும்பொழுதில் எம்முடன் இல்லை. இந் நாட்களில் அவர் எம்முடன் இருக்கமாட்டார் என்பதை முன்னுணர்ந்து இவ் வாசகத்தை எழுதியுள்ளார் போலத் தோன்றுகின்றது.

பல பெரியார்கள், சமூக நலன் விரும்பிகளின் பெருமுயற்சி மற்றும், அர்ப்பணிப்புக்களின் மூலம் தான் எமது கல்லூரி பெரு வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது.

கல்லூரியின் 50 வருட வரலாறு பொன்விழா மலரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 25 ஆவது வருட நிறைவில் வெளிவந்திருக்க வேண்டிய வெள்ளிவிழா மலர் துரதிஸ்டவசமாக வெளிவராமல் இருந்த குறையை பொன்விழா மலர் போக்கியுள்ளது. வைரவிழா மலரில் பொன்விழா காலத்து முக்கிய நிகழ்வுகள் சிலவற்றைப் பதிவு செய்வது இச்சிறு கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

2005 ஆம் ஆண்டு மிக இறுக்கமான அரசியல் சூழ்நிலை பொருட்கள் மற்றும் நபர்களின் போக்குவரத்து மட்டுப்பாடுகள் ஆகியவற்றின் மத்தியில் வன்னிப்பகுதியில் எங்கும் இல்லாத ஒரு பாரிய கலையரங்கம் கட்டப்படுகிறது.

சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் இருந்த நம்பிக்கை ஒன்றுதான் பலம். தேவையான கட்டடப் பொருட்களினை தேவையான நேரத்தில் பெற்று கொள்ளமுடியாது. துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்ற வேலையாட்களினை வருவிப்பதிலுள்ள சிரமம், பாரிய கட்டடப்பணிகளில் அனுபவமும், நிபுணத்துவமும் பெற்ற ஒப்பந்தகாரர்களினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை, தேவையான பாரிய இயந்திர உபகரங்களினைப் பெற்றுக்கொள்ளமுடியாதநிலை போன்றதொரு பின்னணியில் பொன்விழாவின் மகுடமான பொன்விழா ஞாபகார்த்தக் கலையரங்கம் அமைக்கப்பெற்றது.

நிகொட் கருத்திட்டத்தின் முல்லைத்தீவு மாவட்ட ஆலோசனைப் பொறியியலாளர் எந்திரி ஜெகக்குமாரன் தலைமையில் பல பொறியியலாளர்களின் பெரும் பங்களிப்பு, மேற்கூறிய பல தடைகளினை வெற்றி கொள்வதற்கான நலன்விரும்பிகளின் உதவி, ஒப்பந்தகாரர்கள் திரு.தா.குமாரசிங்கம், திரு சி. நாகேஸ்வரன் அவர்களின் துணிவும் முயற்சியும் திராவிடக் கலையம்சங்களினைக் கலையரங்கில் உட்புகுத்தியதில் (பெயர் ஞாபகமில்லை) அவர்களின் பங்களிப்பு திரு ச. நாகரத்தினம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்- திட்டமிடல் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயற்பட்ட கட்டடக்குழுவின் வழிகாட்டல்கள் பழைய மாணவர்களின் உளப்பூர்வமான அர்ப்பணிப்பு இவையெல்லாம் கலையரங்கம் என்னும் கனவை மெய்ப்பித்தன. எல்லாவற்றிற்கும் மேலாக பொன்விழா ஞாபகார்த்தச் சின்னம் ஒன்றினை அமைக்க எண்ணி அதற்கான நிதியை வழங்கிய ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்கள். இப் பெரும் நிதித்தேவை அவர்களுடைய சங்கத்தைப் பொறுத்த வரையில் குருவியின் தலையில் பனம் பழம் வைத்தது போல ஆயினும் பெரும் இடர்கள் மத்தியிலும் சளைக்காமல் திட்டமிட்டதனைவிடக் கூடுதலான நிதி தேவைப்பட்ட போதும் தேவையான நிதியை அவ்வப்போது வழங்கி இச்சங்கம் உலகின் பல பழைய மாணவர் சங்கங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது வரலாறு. அக்காலப்பகுதியில் இச் செயற்றிட்டம் அகத்திற்கும் புறத்திற்குமான உறவுக்கு முன்னுதாரணமாகப் பேசப்பட்டது.

கலையரங்கம் மட்டுமல்ல, ஏனைய நிகழ்வுகளும் பொன்விழாவை வன்னியின் பெருவிழாவாக அடையாளம் காட்டியிருந்தது. புதுக்குடியிருப்புக் கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது. பொன்விழாவுக்கான ஆயத்த வேலைகளில் அந்நாட்களின் கதாநாயகர்களான அதிபர் திரு க. சிவலிங்கம் மற்றும் ஆசிரியர்களுடன், பெற்றோர், பழைய மாணவர்கள், புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த பழைய மாணவர்கள், மற்றும் நலன்விரும்பிகள் என எல்லோரும் பூரிப்புடன் ஒன்று கூடிச் செயற்பட்டனர்.

பொன்விழா எந்தவித இடையூறுகளுக்கும் உட்படாமல் நடைபெற வேண்டும் என்பதில் பொறுப்பாக நின்று செயற்பட்டவர்கள் உறுதியாகவிருந்தனர்.

இவர்களுள், இன்று நாம் வைரவிழாவினைக் கொண்டாடும் போது எம்முடன் இல்லாத அமரர் உயர்திரு க. சரவணபவன், ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் மலர்க்குழுவிற்குப் பொறுப்பாக இருந்தாலும் பொன்விழா தொடர்பான சகல திட்டமிடல்களிலும், செயற்பாடுகளிலும் தன்னைப் பூரணமான ஈடுபாட்டுடன் அர்ப்பணித்து செயற்பட்டவர். உற்சாகத்துடன் செயற்பட்ட பழைய மாணவர்களுக்கு மூத்த பழைய மாணவனாக இருந்து வழிகாட்டியவர். பொன்விழாவின் ஞாபகார்த்த சின்னமாக கலையரங்கம் ஒன்றை அமைக்கலாம் என்ற முன்மொழிவை ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்திற்கு முதலில் வழங்கியவர்.

பொன்விழா நிகழ்வு தினத்து அன்று அந்நிகழ்வின் முக்கிய பாத்திரத்தினை ஏற்றிருப்பினும் ஏனைய பெரியோர்களுடன் தானும் மேடையில் வீற்றிருக்காமல் சபையில் எம்மில் ஒருவராக அமர்ந்திருந்து நிகழ்வை நெறிப்படுத்திய எளிமையானவர். அவரிடம் கல்வி பயின்று, அவரது வழிகாட்டலில் செயற்பட்ட எமக்குள் அவர் தொடர்பாக உள்ள பெருமதிப்பு பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதற்காக இக்கட்டுரையில் அழுத்திக் குறிப்பிடப்படுகிறது.

திரு. க. பார்த்தீபன்
பழைய மாணவன்
சுவிஸ்

# மு / புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி



திரு.சி. சுப்பிரமணியேஸ்வரன்
(2013)
சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருது



திரு.ச. தயாபரன்
(2013)
சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருது



திரு.தா.மங்களரூபன்
(2014)
சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருது



மத்திய கல்லூரியின் கடினப்பந்து துடுப்பாட்ட அணி - 2014

# இளைய சமுதாயமும் வழிகாட்டல் ஆலோசனையும்

அறிமுகம்

விரைவாகஏற்பட்டு வரும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களால் எமது இளைய சமுதாயம் குறிப்பாக மாணவ சமுதாயம் வழிதவறிப் போவதற்கான சந்தர்ப்பங்கள் முன்னைய காலங்களை விட அதிகமாக உள்ளன. இந்த ஆபத்தை உணர்ந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினர், சமய மற்றும் சமூக நிறுவனங்கள் என்பவற்றுடன் சமூகத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனும் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. தற்காலத்தில் மாணவர்களைச் சூழவுள்ள ஆபத்துக்களாக பின்வருவன உள்ளன. கட்டாயமாகவுள்ளது. தற்காலத்தில் மாணவர்களைச் சூழவுள்ள ஆபத்துக்களாக பின்வருவன உள்ளன.

1. புகைத்தல், மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை
2. பாலியல் நெறிபிறழ்வுகள்
3. குழுச்சண்டைகள்
4. அதிகரித்த மற்றும் முறையற்ற கைத்தொலைபேசிப் பாவனை
5. இணையம் சார்ந்த குற்றங்கள்
6. சினிமா மற்றும் தொலைக்காட்சி மோகம்
7. வெளிநாட்டு மோகம்
8. தவறானவர்களால் பிழையாக வழிநடத்தப்படுதல்

இவ்வாறான ஆபத்துக்களால் மாணவர்களின் கல்வி பாழடிக்கப்படுகின்றது. கல்வி அடைவுகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. இதற்குப் பிரதான காரணம் மாணவர்களுக்குக் கல்வியின் மீதான நாட்டம் குன்றிச் செல்வதுடன், மாணவர் ஒழுக்கப் பண்புகளும் வீழ்ச்சி அடைந்து செல்வதாகும்.

## கைத்தொலைபேசி, இணையம் என்பவற்றால் ஏற்படும் பிரச்சினைகள்.

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் பல நன்மைகளை ஏற்படுத்திய போதும், அவை மாணவர்கள் மத்தியில் சில சிக்கல்களையும் ஏற்படுத்தி வருகின்றன. இலங்கையில் அதிகளவிலான கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் உள்ள மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டமே உள்ளது. கைத்தொலைபேசிகளைப் பாடசாலை மாணவர்கள் துஸ்பிரயோகம் செய்வதாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். தலைநகரின் பிரபல பாடசாலையொன்றின் மாணவி ஒருத்தி கையடக்கத் தொலைபேசியின் தீய கலாசாரம் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். கிராமப்புறங்களில் கூட வெளிநாட்டுப் பாணியிலான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

சில பாடசாலைகளில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியிலுள்ள புகைப்படக் கருவியால் ஆசிரியைகளையும், மாணவிகளையும் படம் எடுத்ததாகவும், அவற்றை இணையத்தளம் ஊடாகப் பயன்படுத்துவதாகவும் புகார்கள் வந்துள்ளதாகப் பொலிஸார்

தெரிவிக்கின்றனர். பாடசாலைகளில் கைத்தொலைபேசிகள் முற்றாகத் தடை செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆபாச இணையத்தளங்களை அரசாங்கம் தடை செய்துள்ளது.

## பாலியல் சார் நெறிபிறழ்வுகள்

முன்னாள் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. "இளம் வயதில் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்குமிடையில் இடைவெளி ஏற்படுகின்றது. பெற்றோர்கள் பாலியல் பாதுகாப்புத் தொடர்பாகவோ, பழக்கவழக்கங்கள் தொடர்பாகவோ பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்குவதில்லை. முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது பெண் பிள்ளைகள் மிக இளவயதில் பூப்படைகின்றனர். அதேவேளை காலம் தாமதித்தே திருமணம் செய்துகொள்கின்றனர். இதற்கு இடைப்பட்ட காலங்களில் அவர்கள் வழிதவறிப் போகாதிருக்கவும், வயதுவரும் வரை திருமணத்தையும், கர்ப்பத்தையும் தாமதப்படுத்தவும், எச்.ஐ.வி. தொற்றுவதைத் தடுக்கவும், மற்றும் வாழ்க்கைத் திறன்களை கட்டியெழுப்பவும் வழிகாட்ட வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றார்.

## வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் தேவை

தற்கால ஆபத்தான சூழலில் முறையான வழிகாட்டல் ஆலோசனை வழங்க வேண்டியது அவசியமாகவுள்ளது. பின்வரும் பிரிவுகளில் துறைசார் வழிகாட்டல்களை அவ்வவ்துறை சார் நிபுணர்கள் வழங்கி எமது எதிர்கால சமுதாயத்தை வளமுள்ளதாக்க வேண்டும்.

## உளவளத்துணை / சீர்மியம் / ஆலோசனை கூறல் (Counselling)

2007ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி இலங்கையின் 69,025 மனநோயாளர்கள் இருப்பதாகவும், இவர்களில் 37,181 பேர் ஆண்கள் எனவும், 31,845 பேர் பெண்கள் எனவும் சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மனநோய் காரணமாக 251 பேர் தற்கொலை செய்து கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கின்றது.

இலங்கைச் சனத்தொகையில் பத்து சதவீதமானவர்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இரண்டு சதவீதத்தினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக இன்னொரு கணக்கெடுப்புத் தெரிவிக்கின்றது.

நீண்டகாலமாக எமது நாட்டில் நடைபெற்ற யுத்தம், அதன் தொடர்ச்சியான நிவாரணக் கிராம வாழ்க்கை என்பவற்றால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். உயிரிழப்புக்கள், உறவுகள், உடைமைகளின் இழப்புகள், எதிர்பார்ப்புக்களின் சிதறடிப்புக்கள் என்பன ஆழமான மனவடுக்களை ஏற்படுத்தி விட்டது. இடையில் திடீரென ஏற்பட்ட சுனாமியும், இனம், மொழி, மதம் எனப் பாராது எமதுநாட்டு மக்கள் அனைவரையும் உளரீதியாகவும் பாதித்துள்ளது. சமகால சூழ்நிலை, சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான பாதிப்புக்கள், மன அழுத்தங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளில் மாணவர்களின் உளவள மேம்பாட்டிற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உளவியலாளரின் கருத்துப்படி மனிதன் இயற்கையாகவே உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றான். அவன் வாழும் குடும்பம், சூழ்நிலை, செய்யும் தொழில், வருமானம் கிடைக்கும்

முறை எனப் பலவகைகளில் உளரீதியான பாதிப்புக்குள்ளாகின்றான். தான் பிறக்கும் முன்பே தாய் உட்கொள்ளும் மருந்துகளினால் கூட உளப்பாதிப்புக்கு உட்படலாம். ஆயினும் கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் இயற்கையான ஆசைகள் ஹோர்மோன்களால் உந்தப்படும் போது அதற்குரிய சரியான வழிகாட்டலும், ஆலோசனைகளும் வழங்கப்படாவிட்டால் உளப்பாதிப்புக்கு உட்படலாம்.

உளவளத்துணை என்றால் என்ன? அது யாருக்கு செய்ய வேண்டும்? யாரால் செய்யப்பட வேண்டும் என்ற தெளிவு, விழிப்புணர்வு எம்மவர் மத்தியில் ஏற்படவில்லை. இதனைச் சடுதியாக ஏற்படுத்தி விட முடியாது. உளவளத்துணையானது உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. உளப் பாதிப்புக்கு உட்பட்டவர்கள் உளவளத்துணை நிபுணர்களிடம் சென்று பெற்றுக்கொண்ட நன்மைகளைப் பகிரங்கப்படுத்துவதனூடாகவும், மனரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலைகளை நாடிச் செல்லும் போது அவர்களை உளவளத்துணையாளர்களை நோக்கி செல்லுமாறு ஆலோசனை கூறுவதன் மூலமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

## இலங்கையிப் பாடசாலைகளில் வழிகாட்டலும், ஆலோசனைகளும் சேவை

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும், வழிகாட்டலும், ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமெனக் கல்வி அமைச்சு வெளியிட்ட 2001.06.20 ஆம் திகதி 2001/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படியும் 2003/38 ஆம் இலக்கச் சுற்றறிக்கையிலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பாடசாலைகள் தோறும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 300 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் பாடசாலைகளில், ஒரு ஆசிரியரை முற்றாக வகுப்பறைக் கடமைகளில் இருந்து விடுவித்தும், 300 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகளில் ஒரு ஆசிரியரை பத்து மணித்தியாலங்கள் [பகுதி நேரமாக] வகுப்பறைக் கற்பித்தல் கடமைகளில் இருந்து விடுவித்தும் ஆசிரியர்களை வழிகாட்டல் ஆலோசனைச் சேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

2005 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரிய நியமனங்களில் தேசிய பாடசாலைகளிலும் மாகாணப் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனைக்கெனத் தனியாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை மேம்படுத்துவதற்கு வசதியாக வலயரீதியில் 24 ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டு இருந்தனர். இவர்களில் உத்தியோகபூர்வ பயன்பாட்டுக்கென வெளிநாட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்று மோட்டார் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

சமகால சூழலைப் கருத்திற்கொண்டு சிறுவர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டல் முன்னெடுக்கப்பட வேண்டும். பாடசாலைச் சமூகத்தினர் மத்தியில் இது தொடர்பான பூரண விளக்கம் இன்னும் ஏற்படவில்லை. வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பான ஆசிரியர் மட்டுமே இதற்குப் பொறுப்பானவர் என எண்ணுகின்றனர். இது தவறானது. ஒவ்வொரு

ஆசிரியரும் இதில் பங்கெடுக்க வேண்டும். ஆசிரிய வகிபாகத்தில் சீர்மியர் (Counselor) வழிகாட்டி (Guide) என்பனவும் முக்கியமானவையாகும்.

இன்றைய காலகட்டத்தில் சகல ஆசிரியர்களும் உளவளத்துறையைப் பயிற்சிகளை மேற்கொள் வேண்டியது கட்டாயமாகும். யுத்த அனர்த்தத்தினாலும், சுனாமி மற்றும் வேறு காரணங்களாலும் உளநிலை பாதிப்படைந்து அல்லலுற்றிருக்கும் மாணவர்களின் உளவளப் பாதிப்புக்களை இனங்கண்டு அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும்.

## தொழில் வழிகாட்டல் (Vocational / Career Guidance)

வேலையில்லாப் பிரச்சினை என்பது உலகளாவிய பாரிய நெருக்கடியாகும். எமது நாட்டிலும் வேலையற்றோர் சதவீதம் அண்மைய ஆண்டுகளில் குறைவடைந்து செல்கின்ற போதும் இது முடிவுறும் பிரச்சினையாக இல்லை 22.07.2009 நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதிநிதியமைச்சர் றஞ்சித் சிலாம்பலப்பிட்டிய ஆற்றிய உரையின்போது வெளியிட்ட புள்ளிவிபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | வேலையற்றோர் சதவீதம் |
|---|---|
| 1990 | 16.0% |
| 2005 | 7.7% |
| 2006 | 7.5% |
| 2007 | 6.0% |
| 2008 | 5.2% |

தொழிற்துறைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதிகளற்ற உயர்கல்வி கற்றோர் தொகையினரே பெரும்பாலும் வேலையற்றோராக உள்ளனர். முறையான தொழில் வழிகாட்டல் இன்றித் தாம் கற்றகல்விக்கு எதுவித தொடர்புமற்ற தொழில்களில் முடக்கப்பட்டு, மனக்கவலையுடனும், விரக்தியுடனும் காலத்தைக் கழிப்போரும் பலர் உள்ளனர்.

பாடசாலையில் கற்கின்ற போது உயர்தரம் முடிந்தபிறகு நிச்சயமாக தமக்கு உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்புக் கிட்டுமென்று நம்பியிருக்கின்றனர். இதனால் கல்வியிலேயே முழுக்கவனத்தையும் குவித்துச் செயற்படுகின்றனர். இவ்வாறு கல்வியில் கண்ணாயிருத்தல் என்பது கல்வியின் வெற்றிக்கு அவசியம்தான். ஆயினும் துரதிஷ்டவசமாகப் பல்கலைக்கழக அனுமதி கைநழுவிப்போய் விடுமாக இருந்தால் நம் இளைஞர்கள் வாழ்க்கையே தொலைந்தது போல் முடங்கி விடுவதுமுண்டு.

## பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல்

பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஆரம்ப இடைநிலை மட்டங்களில் உள்ள மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்கள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு தொழில்களுக்கும் பிரவேசிப்பதற்கான கல்வித் தகைமைகள் தொழில்சார் தகைமைகள் பற்றி மாணவர்களுக்கு தெரியப்படுத்தப் பட வேண்டும்.
- பல்வேறு தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள், மற்றும் தொழிற்சாலைகள் என்பவற்றைத் தரிசிப்பதற்காக மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட வேண்டும்.
- மாவட்ட தொழில் திணைக்களம் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை என்பவற்றுடன் இணைந்து தொழில் வழிகாட்டல் தொடர்பான கருத்தரங்குகளை பாடசாலையில் ஒழுங்குசெய்ய வேண்டும்.
- பல்வேறு தொழில்களிலும் உள்ள கஷ்ட, நஷ்டங்களை விளங்கிக் கொள்வதற்காகக் களப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- எல்லாத் தொழில்களையும் சமனாக மதிக்கும் திறன் செய்யும் தொழிலைத் தெய்வமாகப் போற்றும் திறன் மற்றும் செய்யும் தொழிலைப் பயன்படுத்தி முறையற்ற விதத்தில் நன்மையடையாமை போன்ற தொழில்சார் நற்பண்புகளை மாணவரிடம் வளர்க்க வேண்டும்.
- பல்கலைக்கழகங்களிலும், தற்போது தொழில் வழிகாட்டல் அலகுகள் (Career Guidance units) சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளன. அவற்றினூடாகப் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.
- தொழில் தொடர்பான அறிவித்தல்களை / தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளல்.
- சிறப்பான சுய விபரக்கோவையை எவ்வாறு தயார் செய்தல்.
- தகவல் தொழில் நுட்ப அறிவு, ஆங்கில அறிவு என்பவற்றை எவ்வாறு வளர்த்து கொள்வது பற்றிய நுட்பங்கள்.
- ஆளுமை விருத்தி நுட்பங்கள்
- குழுவாகச் செயற்படல் திறன்கள்
- தலைமைத்துவப் பண்பு, மேம்பாடு போன்ற நவீன காலத்து தொழில்களுக்குத் தேவையான திறன்களை உள்ளடக்கியதாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் அமைகின்றது.

பண்டைய காலத்தில் பெற்றோருடைய தொழில்களையே பெரும்பாலும் பிள்ளைகள் செய்தனர். அத்துடன் தற்காலத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான தொழில்களே இருந்தன. இதனால் தொழில் வழிகாட்டலுக்கான அவசியம் மிகவும் குறைவாகவே இருந்தது. தற்காலத்தில் தொழில்கள் பல்கிப் பெருகியுள்ளன. மேலும் உலக மயமாக்கலின் விளைவாக எமது நாட்டு இளைஞர்கள் ஏனைய நாட்டினருடன் போட்டி போட்டுக் கொண்டு தொழில்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு முறையான தொழில் வழிகாட்டல் அவசியம். வளர்ச்சியடைந்த நாடுகளிலும் எமது நாட்டின் தலைநகரிலும் மிகவும் சிறப்பாக செயற்படும். தொழில் வழிகாட்டல் நிறுவனங்கள் (Career guidance Institutions) உண்டு.

## கல்வி வழிகாட்டல்கள்

கல்விசார் வழிகாட்டலினை பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்கள் ஆகியோர் மாணவர்களுக்கு பாரம்பரியமாக வழங்கி வருகின்றனர். இருந்தபோதும் பின்வரும் விடயங்களில் துறை தேர்ந்தவர்கள் வழிகாட்டும் போது மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் கல்வியின் மீதான நாட்டமும் அதிகரித்துச் செல்லும். இதன்மூலம் மாணவனது அடைவுமட்டமும் அதிகரித்துச் செல்லும்.

- பாடத்தெரிவுகள் [Choice of subjects]
- நூலகப் பயன்பாடு [Use of Library]
- கற்றல் பழக்கங்கள் [Study habits]
- மதிப்பீட்டு நுட்பங்கள் [Evaluation techniques]
- பாடசாலை வாழ்க்கையிலிருந்து ஏனைய செயற்பாடுகளுடன் இணங்கிப் போதல். [Adjustment of school life to other activities]

## பாடத்தெரிவு

பாடத்தெரிவு எனப்படும் போது, அழகியல் பாடங்களின் தெரிவு, தொழில் நுட்பப் பாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக்குரிய பாடங்களின் தெரிவு என்பவை இடைநிலை வகுப்புக்களில் முக்கியம் பெறுகின்றன. இப்பாடத் தெரிவுகளின்போது மாணவனின் விருப்பு, ஆற்றல், குடும்பப்பின்னணி என்பவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண்டும். துரதிஷ்டவசமாக சில சமயங்களில் பாடசாலைக் கற்பித்தல் வள ஆளணி மற்றும் பௌதிக காரணிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகளும் செல்வாக்கு செலுத்தி விடுகின்றன.

ஆரம்ப காலந்தொட்டு க.பொ.த உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்தபின் பாடத்துறை மாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத்துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லற்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த [சா.த] சித்தியடைந்து உயர்தரம் நுழையும் மாணவர்களுக்குப் பாடத்தெரிவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இருந்தும் பிழையான தெரிவுகள் இடம்பெற்று விடுகின்றன.

கல்வியியல் கல்லூரிகளுக்கான விண்ணப்பம் நிரப்புதல் மற்றும் பாடத்தெரிவுகளின் போதும், பல்கலைக்கழக அனுமதிப்படிவம் பூரணப்படுத்தும்போதும் கல்வி வழிகாட்டல் மிக அவசியமானதாகும். சர்வதேச ரீதியிலான கற்கை நெறிகளுக்கும் [CIMA, AAT, IELTS] முறையான கல்வி வழிகாட்டல் அவசியம். உயர்தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடத்தப்படும் பயனுள்ள கற்கைநெறிகள் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் அக்கற்கை நெறிகளைத் தொடர ஆவன செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் போது, தொழிற்சந்தையில் கேள்வியுள்ள பாடத்துறைகளைத் தேர்வுசெய்து கற்க வேண்டும். அத்துடன் தமது இலக்குகளையும் கருத்திற்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது. கல்வித்துறையில் பாரிய வளர்ச்சியை கண்டுள்ள இந்தியாவில், மாணவர்கள் பத்தாம் தரத்தில் சித்தியடைந்ததும் தமது உயர்கல்வியைத் தொடரும் முகமாக "வழிகாட்டலும் ஆலோசனையும்" [Carer guidance and counseling] வகுப்புக்கள் ஒன்றரை மாதங்கள் வரையில் நடைபெறுகின்றன. இவ்வகுப்புக்களில் உயர்கல்வி தொடர்பான பூரண விளக்கம் வழங்கப்படுகின்றது. இதனால் மாணவனின் உயர்கல்வித் தெரிவு இலகுவாக்கப்படுவதுடன்,

பிழையற்ற தெரிவுகளும் தவிர்க்கப்படுகின்றன. +1, +2 நிலையைக் கடந்து உரிய தகுதிப்புள்ளிகளுடன் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களை அரவணைத்துக் கொள்ள அரசு பல்கலைக்கழகங்களின் நேரடிப் பார்வையின் கீழ் தனியார் கல்லூரிகள் காத்திருக்கின்றன.

இந்திய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கண்டு அவுஸ்திரேலிய மாணவர்களும், அமெரிக்க மாணவர்களும் கலங்கிப் போயுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி பராக்ஒபாமா அமெரிக்க மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டலொன்றை வழங்கியுள்ளார். "இந்திய மாணவர்களும், சீன மாணவர்களும் கணினிகளில் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்துகொண்டிருக்க, அமெரிக்க மாணவர்கள் கணினிகளில் வீடியோக்கேம்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை அக்கறையாகப் படிக்குமாறும்" குறிப்பிட்டிருந்தார்.

## ஒழுக்க / அறநெறி வழிகாட்டல் (Moral Guidance)

மாணவர்களின் ஒழுக்கம் தற்காலத்தில் பெருமளவில் குறைவடைந்து செல்வதாக பலராலும் குற்றம்சாட்டப்படுகின்றது. தற்கால ஒழுக்கக் குறைபாடுகளாக, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களை மதியாமை, பொய்பேசுதல், களவெடுத்தல், தத்தமது சமயநெறிகளைப் பின்பற்றாமை, பொறாமைப்படுதல், வன்முறைக் கலாசாரம், தகாத வார்த்தைப் பிரயோகங்கள், புகைப்பிடித்தல், மதுவுக்கு அடிமையாதல், போதைப்பொருள் பாவனை, பாலியல் நெறிபிறழ்வுகள், கணினி மற்றும் இணையம் சார் குற்றங்கள் (Cyber Crimes), பரீட்சை முறைகேடுகள் என்பன காணப்படுகின்றன.

இத்தீய நடத்தைகளில் மாணவர்கள் ஈடுபடாது தடுக்கக் குடும்பம், சமூகம், பாடசாலை தனியார் கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட வேண்டும். மற்றும் இதனுடன் தொடர்புடைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸாருடன் ஒத்துழைத்துச் செயலாற்றுவதன் மூலம் எமது மாணவர்களை நல்வழிப்படுத்தலாம்.

### முடிவுரை

மாணவர்களுக்கும் இளைய சமுதாயத்துக்கும் பொருத்தமான உளமேம்பாடு, தொழில், கல்வி மற்றும் அறநெறி வழிகாட்டல்களை வழங்குவதனூடாக எதிர்கால சமுதாயத்தை வளமுள்ளதாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

ஆ. நித்திலவர்ணன்
விரிவுரையாளர்,
கல்வியற்றுறை,யாழ். பல்கலைக்கழகம்.

## 1. சிறந்த வழி

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி

- ஸ்ரீ அன்னை

## 2. பெருந்தன்மையே முதல் படி

1) இதயத்தில் பெருந்தன்மை இருந்தால், அது, நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்!.

2) நற்பண்புகளில் அழகு இருந்தால், அது இல்லத்தில் இணக்கமுடன் வாழத் தூண்டும்!.

3) இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும்.

4) தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

- சீனப் பழமொழி

## 3. பயப்படாதீர்கள்

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்!
தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

- நெப்பொலியன் ஹில்

## 4. மூன்று ஆயுதம் நம்மிடம்

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும்.

- கன்ஃபியூஷியன்

## 5. துணிவே துணை

ஜூலியஸ் சீசர் போல ரோமப்பேரரசராக உயர வேண்டுமா? அல்லது உங்களுக்குள்ளேயே சிறைப்பட்ட ஒரு பறவையாக வாழ வேண்டுமா? என்பது உங்களின் துணிச்சலைப் பொறுத்தே அமையும். இந்த இரண்டு முடிவுகளும், வெற்றிகளும் உங்களுக்குள்ளேயே தான் இருக்கிறது. எதைத் தேர்வு செய்து தன்முனைப்புடன் உங்களை நீங்களே வழி நடத்திச் செல்கிறீர்களோ, அது போலவே - நீங்கள் எண்ணியது போலவே - உருவாகி விடுவீர்கள். துணிச்சலுடன் உயர்ந்த இலட்சியங்களை அடைய எப்பொழுதும் முன்னோக்கியே செல்லுங்கள்.

-ஸர் டி. ப்ரௌன்

## 6. வெற்றிக்கு முதல்படி எது?

மாபெரும் செயல்களைச் செயல் வகையில் செய்து முடிக்க உறுதி எடுக்க வேண்டும் என்றால், உங்களுக்கு இன்றியமையாத முதல் மூலப் பொருளான, வெற்றிக்குத் தேவையான முதல் கூறான தன்னம்பிக்கை நெஞ்சில் பொங்கி வழிய வேண்டும். தடைகளையும், அவமதிப்புகளையும், தன்னம்பிக்கைதான் சமாளித்து அடித்துத் துரத்தி பொன்னாக நம்மை உருவாக்கும். நேர் வழி பாதுக்காப்பானது என்பதை உணர்ந்தும், தன்னம்பிக்கையுடன், செயல்படுங்கள் அனைத்தையும் துணிச்சல்தான் சாதிக்கும்.

- டாக்டர் ஜான்சன்

# மாணவர் சாதனைகள்



செ. சுபரஞ்சினி
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கணிதப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
நான்காம் இடம் பெற்றார்.



2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
உயிரியல்பிரிவில்
மாவட்டமட்டத்தில்
முதல் இடம் பெற்றார்.



செ. செல்வலோஜினி
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
இரண்டாம் இடம் பெற்றார்.



தெ. மதுஜா
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில்
முதல் இடம் பெற்றார்.



அ. ஜிறோந்தினி
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
வர்த்தகப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
மூன்றாம் இடம் பெற்றார்.



ஜெ. ஜெயவதனி
2014ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில்
மாவட்டமட்டத்தில்
இரண்டாம் இடம் பெற்றார்.



செ. பிரணவன்
2014ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கணிதப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
முதல் இடம் பெற்றார்.



அ. திருக்குமரன்
2013ம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
9A பெற்றார்.



சி. தர்சிகன்
2014ம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
9A பெற்றார்.




சி. அபிசாளினி
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
உயிரியல்பிரிவில்
நான்காம் இடம் பெற்றார்.



கி. சிந்துஜன்
2014ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
நான்காம் இடம் பெற்றார்.



பா. விஜயபிரதாபன்
2014ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
வர்த்தகப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
இரண்டாம் இடம் பெற்றார்.



த. மதுறன்
2014ம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
9A பெற்றார்.



ச. விதுஸ்ரன்
2014ம் ஆண்டில் 400m
தடைதாண்டுதல்
முதலாவது இடம் புதிய சாதனை
தேசிய வர்ணச் சான்றிதள் பெற்றமை



நா. எழில்
வடமாகாணத்தில் அரச கரும
மொழிகள் ஆணைக்குழுவினால்
நடாத்தப்பட்டவிவாதப்
போட்டியில் சிறந்த பேச்சாளர்
விருதினைப் பெற்றவர்



சா. டென்சி
2013ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
வணிகப்பிரிவில் மாவட்டமட்டத்தில்
இரண்டாம் இடம் பெற்றார்.



செ. சுபநேத்திரா
2013ம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
9A பெற்றார்.



க. அம்சவதனி
2014ம் ஆண்டு க.பொ.த
உயர்தரப் பரீட்சையில்
கணிதப்பிரிவில்
மாவட்டமட்டத்தில்
ஐந்தாம் இடம் பெற்றார்.



த. சாகித்தியன்
2013ம் ஆண்டு
சுற்றாடல் தின
ஓவியப் போட்டியில்
தேசிய மட்டத்தில்மூன்றாம் இடம்



க. சகானா
2013ம் ஆண்டு க.பொ.த
சாதாரணதரப் பரீட்சையில்
9A பெற்றார்.

## பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டோர் - 2012

| கணிதப்பிரிவு | மாவட்ட நிலை |
|---|---|
| செல்வநாயகம் தாராங்கன் | 01 |
| கமலநாதன் சஜீவன் | 02 |
| யோகரட்ணம் கஜன் | 09 |
| நந்தகுமார் யதீசன் | 04 |
| சத்தியமூர்த்தி துர்த்திகா | 19 |
| விமலேந்திரன் மேனுகா | 15 |
| கெங்காதரன் விதுர்னன் | 08 |
| தனபாலசிங்கம் யெக்தன் | |

உயிரியல்பிரிவில்

| | |
|---|---|
| தேவகுமார் தேனுகா | 23 |
| சகாயரூபன் ஜனார்த்தனா | 11 |
| தனபாலசிங்கம் பிரதீபா | 09 |
| சிவபாலன் அரவிந்தன் | 08 |
| வசந்தகுமார் சதீஸ்வரன் | 22 |
| மனோகரன் நியூசிகன் 20 | |
| சிவலிங்கம் சாமினி | 01 |
| அழகேந்திரம் லாவண்யா | 12 |
| ஆனந்தசிவம் உமாரதி | 03 |

வணிகம்

| | |
|---|---|
| சின்ராசா தனஞ்சிகன் | 05 |
| ஸ்ரீதரன் யதீசன் | 18 |
| அரசரட்ணம் சுகிர்தன் | 07 |
| மாணிக்கராசா கயல்விழி | 09 |
| அமிர்தநாதன் மேரி அனித்தா | 13 |

கலைப்பிரிவு

| | |
|---|---|
| சத்தியமூர்த்தி சதீஸ்குமார் | 08 |
| எட்வேட் மரியநாயகம் மனோஜா | 03 |
| அரியரட்ணம் மேகலன் | 49 |

## பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டோர் - 2013

### உயிரியல்

| | | |
|---|---|---|
| அமிர்தநாதன் பிரவீன் | - மருத்துவம் | 01 |
| கனகசுந்தர சுவாமி அமிர்தவர்சினி | - விவசாயம் | 29 |
| பாலகிருஸ்ணன் நூர்தர்சினி | | 41 |

### கணிதம்

| | | |
|---|---|---|
| செல்வநாயகம் சுபரஞ்சினி | பொறியியலாளர் | 04 |
| சண்முகநாதன் புறுசாந் | | 15 |
| குணபாலசிங்கம் பராத்ரமணன் | | 20 |
| ராசரத்தினம் மகிழினி | | 23 |

### வர்த்தகம்

| | | |
|---|---|---|
| சாள்ஸ் ஜோசப் யூஜின் டென்சி | - முகாமைத்துவம் | 02 |
| அருள்நாயகம் ஜிரோந்தினி | - முகாமைத்துவம் | 03 |
| ராசேந்திரம் ஜெகதீஸ்வரி | - முகாமைத்துவம் | 10 |
| நாகராஜா விணேஸ் | - முகாமைத்துவம் | 13 |
| விஜயகுமார் ஜனனி | - வசதிகள் முகாமைத்துவம் | 18 |
| கனகேந்திரம் பிரியந்தி | - முகாமைத்துவம் | 03 |
| பாலகிருஸ்ணன் லாவண்யா | - நகரத்திட்டமிடல் முகாமைத்துவம் | 23 |

### கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| தட்சணாமூர்த்தி மதுஜா | - கலை | 01 |
| செல்வநாயகம் செல்வலோஜினி | - கலை | 02 |
| யோகராசா யோகதர்சினி | - கலை | 13 |
| நவரத்தினராஜா சர்மியா | - கலை | 14 |
| கனகசுந்தரம் கஜீபன் | - கலை | 24 |
| பத்மநாதன் செந்தூரன் | - கலை | 25 |
| நவரத்தினம் பிரியா | - கலை | 27 |
| சுந்தரலிங்கம் தர்சிகன் | - கலை | 30 |
| சவுந்திரராஜா தீபனா | - நுண்கலை | 53 |
| கந்தசாமி திலக்சி | - நுண்கலை | 68 |
| அமலராஜ் வரின்டன் | - கலை | 118 |

# காணி அன்பளிப்பு

**பொன்விழா மண்டபம்.**

1. ஆறுமுகம் - நாகமணி
2. சுப்பிரமணியம் - சிவானந்தம்
3. சந்திரசேகரம் - சபாரத்தினம்
4. கணபதி - கண்ணகை

**பாடாசாலை இருக்கும் இடம்.**

1. வினாயகம் - சந்திரசேகரி
2. சின்னத்தம்பி - சின்னப்பு
3. ஆறுமுகம் - கண்ணகை
4. தம்பையா - வேலுப்பிள்ளை
5. சேஸ்ஐயர் - திருஞானசம்பந்த சர்மா
6. கந்தையா - தெய்வானை
7. சின்னர் - சின்னத்துரை
8. ஆறுமுகம் - குமாரசாமி

**விளையாட்டு மைதானம்.**

1. சிதம்பரப்பிள்ளை - சிவகுரு
2. சந்திரவி - வேலுப்பிள்ளை
3. சின்னத்தம்பி - கந்தையா
4. சின்னையா - சின்னம்மா
5. அம்பலவர் - செல்லையா
6. சின்னத்தம்பி - தம்பிப்பிள்ளை
7. கதிர்காமு - உமையாத்தை
8. தம்பையா - சின்னத்தம்பி
9. காத்தார் - கந்தையா
10. தாமோரம்பிள்ளை - கணேப்பிள்ளை
11. கணபதிப்பிள்ளை - திருநாவுக்கரசு
12. சண்முகம் - செல்லையா
13. கணபதி - வேலுப்பிள்ளை
14. நாகநாதி - வேலுப்பிள்ளை
15. நாகநாதி - செல்லையா
16. முத்தையா - கண்ணகை
17. சின்னையா - பார்பதி
18. தம்பையா - பொன்னம்பலம்
19. கதிரவேலு - கந்தையா
20. நாகராணி - நல்லதம்பி
21. அருணா - கணபதிப்பிள்ளை
22. வேலுப்பிள்ளை - கணபதிப்பிள்ளை
23. தோரணியம் - செல்லையா

# தமிழ் மன்றம்

## கனிஸ்ர மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ம. கீர்த்தி |
| செயலாளர் | - | ஆ. சுபவர்சனா |
| பொருளாளர் | - | த. சனோஜன் |
| பத்திரிகையாளர் | - | த. சாகித்தியன் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. ம. சத்தியமூர்த்தி |

## சிரேஸ்ட மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பீ. டேனுஜன் |
| செயலாளர் | - | க. லேசிகன் |
| பொருளாளர் | - | த. கபில்ராஜன் |
| பத்திரிகையாளர் | - | வி. பிருந்தாப் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. ம. மங்களகுமாரன் |

# கணித விஞ்ஞான மன்றம்

## கனிஸ்ர மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பி. பிரணவி |
| செயலாளர் | - | உ. இனியவன் |
| பொருளாளர் | - | S. நிருஷனா |
| பத்திரிகையாளர் | - | A. அபிசாந் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. ப. செல்வநாயகம் |

## சிரேஸ்ட மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ச. யுவன்சன் |
| செயலாளர் | - | ம. பவித்திரன் |
| பொருளாளர் | - | K. அங்கயன் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. ஸ்ரீ. அழகேந்திரம் |

# ஆங்கில மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | சி. சனோமி |
| செயலாளர் | - | அ. சுஜீவன் |
| பொருளாளர் | - | ஜெ. துஷாளினி |
| பொறுப்பாசிரியர் | - | திரு. ப. தயாளதாசன் |

## இந்துமா மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | வீ. நேயனா |
| செயலாளர் | - | க. வினோதினி |
| பொருளாளர் | - | செ. மேனகன் |
| பத்திரிகையாளர் | - | க. மதியந்தி |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. ச. நவரட்ணம் |

## கிறிஸ்தவ மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | வி.குபேரன் |
| செயலாளர் | - | யெ.டனிஸ்ரலா |
| பொருளாளர் | - | Y. றோசன் |
| பொறுப்பாசிரியர் | - | செல்வி. சி. ஆன் சோபிகா |

## வணிக மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ம.கனுஜன் |
| செயலாளர் | - | வி. குபேரன் |
| பொருளாளர் | - | ஜெ. டிலக்ஷனா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. செ. டயோனியஸ், லெஸ்லி ஸெராட் |

## உயர்தர மாணவ மன்றம்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | சா. பிரசாத் |
| செயலாளர் | - | செ. சுபநேந்திரா |
| பொருளாளர் | - | ம. கனியன் |
| பொறுப்பாசிரியர் | - | திரு. க. சுதாகரன் |

# இதயக் குளிர்மையுடன் இதழ்கள் சொல்லும் நன்றிகள்

வளங்கொழிக்கும் வன்னித் திருநாட்டின் கலைகள் களித்தாடும் கலைச் சோலையாகிய புதுவைப் பதிதனிலே வைர விழா ஆண்டில் புது வைரமாகச் சுடர்விட்டிலங்கும் இம்மலர், முழுமை பெறுவதற்காய் உழைத்தவர்கள் யாவரும் நன்றிக்குரியவர்களே. இந்த வகையில் மலரின் முகிழ்ப்புக்கு அடித்தளமிட்டு, அதன் செல்நெறியினைத் திசைப்படுத்திய எமது கல்லூரி அதிபர் அவர்கட்கு முதற்கண் நன்றிகள். இம்மலருக்கான ஆக்கங்களைத் தந்துதவிய துறைசார் வல்லுநர்களுக்கும், ஆசிச் செய்திகளை வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எம் இதயங் கனிந்த நன்றிகள், அத்துடன் இம்மலருக்குரிய புகைப்பிடிப்பு முதல் நூல் உருவாக்கம் வரையான முயற்சியில் அரும்பாடுபட்ட ஆசிரியர் திரு க. சுதாகரன் அவர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும். இம்மலருக்கான கவினுறு முகப்போவியத்தை வரைந்த எமது சித்திர பாட ஆசிரியர் திரு. ப. இராகுலன் அவர்களுக்கும் இந்நூலினை அழகிய முறையில் பதிப்பித்துத் தந்துதவிய எவகிறீன் பிறின்டஸ் பதிப்பக உரிமையாளருக்கும், பணியாளருக்கும் நன்றிகள் பல.

'புதுவைரம்' சஞ்சிகை மலர சகல வழிகளிலும் ஒத்துழைத்த அதிபர், ஆசிரியசமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பழைய மாணவர்கள், புலம்பெயர் உறவுகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் வைரவிழா மலர்க்குழுவினரின் மனமார்ந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

# Sathees photo

**Digital colour Lab & Photography**

Hello-0778004112,0778889422

Sathees.photo12@gmail.com

Sathees Photos

௨௨ வருட காலத்தின் முதன்மையான
சேவைகளுடன் நாங்கள்

# சதீஸ் போட்டோ

முல்லை மாவட்டத்தின் முதலாவது
டிஜிற்றல் கலர் லாப்

You Can Get
Passport Photos With In
10 Mins

**Our Following Services For You**

Digital Photo Print
Album making (Synthetic Album,Karizma Album)
Quick Service In Passport photos
Visa Photos & B/w photo
Digital Imaging
Creative Designing
Out Door Photo Graphy
Full Hd Video Graphy
Duro Framing/Crystal framing



முல்லை வீதி;புதுக்குடியிருப்பு

FUJIFILM

# தீன்சுவை வெதுப்பகம்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு.

## மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வைரவிழா வாழ்த்துச் செய்தி

இன்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1955 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியானது இன்று வைரவிழாக் கொண்டாட்டத்திற்கு ஆயத்தமாகிறது. வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி முகாமையாளர்கள், ஆசிரியர்கள் என சகல துறைகளிலும் உத்தியோகத்தர்களை உருவாக்கிவிட்ட உயர்ந்த கல்லூரி எங்கள் மத்திய கல்லூரி. இன்னும் நீருழி காலம் அளப்பரிய சேவையாற்ற வேண்டி தீன்சுவை உரிமையாளர், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வாழ்த்துகின்றோம்.

உங்களுக்குத் தேவையான பாண், பணிஸ் வகைகள், மற்றும் கேக் வகைகள், உள்நாட்டு வெளிநாட்டுச் சொக்லட் வகைகள், குளிர்பான வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் தீன்சுவை வெதுப்பகம்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்குமான வெதுப்பகப்பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பூந்திலட்டு மற்றும் மிக்சர் போன்றவற்றை முற்கூட்டியே ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம்.

கற்றாய்ந்தொழுகுக

பு.ம.க 15.01.1955

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# 28.07.2015

# புதுவையின் அறிவூற்றே! அகவைகள் ஆயிரம் காண்க!

# வைரவிழாக் காணும் வல்லோய் வாழி! வாழி! வாழி!

- எவறெடி பதிப்பகத்தினர் -

EVEREADY PRINTERS

புதுக்குடியிருப்பின் அச்சுக்கலை வரலாற்றில் முதன்முதலாக...

எம்மிடம் டிஜிட்டல் பிறின்ட், பெனர், ஸ்ரிக்கர்களை உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

## எவறெடி பதிப்பகம்

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.



மலிவான விலையில்

தரமான பிறின்டிங்

இருபது நிமிடத்தில் * நிபந்தனைக்குட்பட்டது

TP : 077-9605119

# AMMAN HARDWARE

DEALERS & SUPPLIERS OF ALL KINDS OF BUILDING MATERIALS,PAINTS & ELECTRICAL ITEMS.

MULLAI ROAD, PUTHUKKUDIYIRUPPU, MULLAITIVU. TEL : 077-3400770



சகல விதமான கட்டடப் பொருட்களையும் குறைந்த விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

## அம்மன் ஹாட்வெயர்

முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

உரிமையாளர் – தியாகராசா . நிசாந்தன்


## மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வைரவிழா வாழ்த்துச் செய்தி

1955 ம் ஆண்டு ஸதாபிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியானது இன்று வைரவிழாக் காண்கிறது. இக் கல்லூரியானது பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி முகாமையாளர்கள், ஆசிரியர்கள் என சகல துறைகளிலும் உத்தியோகத்தர்களை உருவாக்கி உயர்ந்து நிற்க்கும் எமது கல்லூரி மேலும் வளர வாழ்த்கின்றோம்


28.07.2015
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
PUTHUKKUDIYIRUPPU CENTRAL COLLEGE
வைரவிழாவில்
வாழ்த்துகின்றோம்.
றதீசன் மின்னொட்டுத் தொழிலகம்
றதீசன் மின்னொட்டுத் தொழிலகம்
சகலவிதமான ஒட்டுவேலைகளுக்கும் மற்றும்
கேற், கிறில் அத்துடன் றஸ் வேலை
விளையாட்டு உபகரணங்களையும் ஓடர் மூலம்
செய்து பெற்றுக் கொள்ளலாம்.
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.


கதிரவன் போட்டோ & வீடியோ
மணப்பந்தல் சேவை
வைரவிழா காணும் எமது மத்தியகல்லூரி
மேன்மேலும் வளர்ந்திட வாழ்த்துகின்றோம்.
கதிரவன் வீடியோ
0772661405
உங்கள் இல்லங்களில் இடம்பெறுகின்ற அனைத்துவகையான நிகள்வுகளையும்
சிறத்தமுறையில் நடாத்தி மகிழ்ந்திடவும், குறைத்த கட்டணத்தில் நிறைந்த
சேவைகளை ஒரே இடத்தில் பெற்றிடவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் கதிரவன் ஸ்ருடியோ
தேவிபுரம் புதுக்குடியிருப்பு
kp.kathiravan@gmail.com
Facebook:-kp kathiravan
0772661405
0778477520






புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்
சங்கத்தினரால் பொன்விழா ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டது.
கலையரங்கம்.
AUDITORIUM.
CONSTRUCTED BY THE PUTHUKKUDIYIRUPPU CENTRAL COLLEGE OLD STUDENTS'
ASSOCIATION OF THE UNITED KINGDOM IN MEMORY OF THE GOLDEN JUBILEE.
Evergreen Printers, 693, K.K.S Road, Jaffna. Tel: 021 2219893